திருவருட்பிரகாச

# வள்ளலார் உபதேசம்

## வசன பாகம்

சிதம்பரம்
இராமலிங்கம்

(பதிவுற்றது)

CONTRIBUTED BY VALLALAR GROUPS

**அருட்பெருஞ்ஜோதி**

அகத்தே கருத்து புறத்தே வெளுத்திருந்த உலகாரனைவரையும் ஜகத்தே திருத்தி சன்மார்க்கர்களாக அடைவித்திட இந்த யுகத்தே அவதரித்தவரே நமது திரு அருட்பிரகாச வள்ளலார் என்னும் சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள். எல்லா உயிர்களும் இன்புற்று வாழ வழிவகுத்து பாடியருளியது திரு அருட்பா - உலகப் பொது மறை. அதன் உண்மை நாளுக்கு நாள் விளங்கிக் கொண்டு வருவது நாம் அறிந்த உண்மை.

வள்ளலார் தமது விவகார காலத்தில் வாரி வழங்கிய அறவுரைகள் எண்ணற்றவை. அன்று அதனை போற்றிலர் பலர். இன்று போற்ற முற்படுபவர் சிலர். அன்றிருந்த அன்பர்கள் அவரது அறிவுரைகளில் சிலவற்றையே குறித்துவைத்தனர். விடுபட்டன எத்தனையோ! எனினும் கிடைத்தமட்டிலும் தொகுத்து இந்நூலில் வெளியிட்டுள்ளோம். அன்பர்கள் பெற்று பயன் அடைய எல்லாம் வல்ல அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் அருள்புரிவாராக.

CONTRIBUTED BY VALLALAR GROUPS

## வடலூர் தைப்பூசம்

தை மாதம் பூச நட்சத்திரம்
பௌர்ணமியுடன் கூடிய
சுபதினத்தில்
வடலூரில் வள்ளலாரால்
நிறுவிய
சத்தியஞான சபையில்
அருட்பெருஞ்ஜோதி தரிசனம்
**காணத் தவறாதீர்கள்!**

## வள்ளலார் பிறந்த நாள்

புரட்டாசி மாதம்
சித்திரை நட்சத்திரம்
கூடிய நன்னாள்
அந்நாள்
**உலக ஒருமைப்பாடு தினம்**

CONTRIBUTED BY VALLALAR GROUPS

# பொருளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1 | சமரச சுத்தசன்மார்க்க சங்க சத்திய விண்ணப்பம் | .. | 1 |
| 2 | சமரச சுத்தசன்மார்க்க சத்தியப் பெரு விண்ணப்பம் | .. | 3 |
| 3 | சமரச சுத்தசன்மார்க்க சத்திய ஞான விண்ணப்பம் | .. | 11 |
| 4 | சமரச சுத்தசன்மார்க்க சத்தியச் சிறுவிண்ணப்பம் | .. | 15 |
| 5 | அற்புதப் பத்திரிகை (வள்ளலார் திருக்காப்பிட்டுக் கொண்டதினம் வெளியிட்டது) | .. | 19 |
| 6 | உண்மைப் பத்திரிகை | .. | 21 |
| 7 | சமரச வேத பாடசாலை | .. | 22 |
| 8 | ஞானசபை விளக்கப் பத்திரிகை | .. | 23 |
| 9 | சத்தியஞானதீப விளக்கம் (சித்திவளாகம்) | .. | 25 |
| 10 | எச்சரிப்புப் பத்திரிகை | .. | 26 |
| 11 | சமாதி வற்புறுத்தும் பத்திரிகை | .. | 27 |
| 12 | சமரச சுத்த சன்மார்க்க சத்திய ஞானசாரம்—சுத்ததேகம் | | 29 |


### சமரச சுத்த சன்மார்க்கத்

## திருநெறிக் குறிப்புகள்


| | | | |
|---|---|---|---|
| 1 | ஷடாந்த சமரச சுத்தசன்மார்க்க சங்கம் | .. | 30 |
| 2 | நித்திய ஒழுக்கம் என்னும் உலகியல் | .. | 34 |
| 3 | திருவருளை எவ்வாறு பெறக்கூடும்? | .. | 42 |
| 4 | மெய் மொழியும் ஒழுக்கமும் | .. | 46 |
| 5 | உபதேசம் | .. | 50 |
| 6 | சுப்பிரமணியம் | .. | 59 |
| 7 | சங்கல்பம்—சன்மார்க்கக் கொள்கை | .. | 65 |
| 8 | ஒளிநிலையும் சுத்தஞானியும் | .. | 67 |
| 9 | சுத்த சன்மார்க்கத்திற்கு உரியவர்கள் | .. | 68 |
| 10 | சுத்த சன்மார்க்க ஆகாரம் | .. | 69 |
| 11 | சுத்த சன்மார்க்க ஆகார விலக்கு | .. | 70 |
| 12 | சமயமத சன்மார்க்கமும் சுத்தசன்மார்க்கமும் | .. | 70 |
| 13 | சுத்த சன்மார்க்க சாதனம் | .. | 71 |
| 14 | சுத்த சன்மார்க்கத்தின் மரபு | .. | 71 |
| 15 | சுத்த சன்மார்க்க வழி[illegible] | .. | 73 |
| 16 | சுத்த சன்மார்க்கத்தில் [illegible] | .. | 74 |
| 17 | சுத்த சன்மார்க்கப் பிரார்த்தனை | .. | 74 |





| | | | பக்கம் |
|---|---|---|---|
| 18 | சுத்த சன்மார்க்க உபதேசம் | .. | 74 |
| 19 | சுத்த சன்மார்க்க தியானம் | .. | 76 |
| 20 | சமய சூக்கும பஞ்சாக்ஷரம் | .. | 77 |
| 21 | ஞானசபையும் நடராஜரும் | .. | 79 |
| 22 | அருள் வெளி | .. | 80 |
| 23 | சுத்த சன்மார்க்கக் கொடி | .. | 81 |
| 24 | மாயா திரைகள் ஏழு | .. | 81 |
| 25 | சிவகுணம் 8; ஜீவகுணம் 8 | .. | 82 |
| 26 | ஓங்காரம் | .. | 82 |
| 27 | ஜீவகாருண்யமே முத்திக்கு முதற்படி | .. | 83 |
| 28 | பக்தி | .. | 84 |
| 29 | திரயோதச நிலைகளும் தாழுங்குணமும் | .. | 84 |
| 30 | தமிழ் | .. | 85 |
| 31 | தன்மை, முன்னிலை, படர்க்கை | .. | 87 |
| 32 | அகரம் | .. | 88 |
| 33 | வந்தன முறை | .. | 91 |
| 34 | பிண்டானுபவ லக்ஷணம் | .. | 94 |
| 35 | சிருட்டி ஞாயம் | .. | 97 |
| 36 | எழுவகைப் பிறவி | .. | 98 |
| 37 | பஞ்ச அமுத ஸ்தானங்கள் | .. | 99 |
| 38 | பிண்டாண்ட கிரகண சித்தாந்தம் | .. | 100 |
| 39 | சுக்கிலம் | .. | 102 |
| 40 | சுக்கில சுரோணிதம் | .. | 102 |
| 41 | கரு உண்டாகும் விதம் | .. | 102 |
| 42 | சப்த தாதுக்களின் விவரம் | .. | 103 |
| 43 | ஆண் பெண் பருவம் | .. | 103 |
| 44 | ஜீவன் இருக்கின்ற ஸ்தானம் | .. | 104 |
| 45 | ஆணுக்குள் பெண் பெண்ணுக்குள் ஆண் | .. | 105 |
| 46 | பெண்களின் சமத்துவம் | .. | 105 |
| 47 | உரோம தத்துவமும், பிந்துஸ்தானமும் | .. | 106 |
| 48 | உடம்பின் அருமை | .. | 109 |
| 49 | காயமே கோயில் | .. | 109 |
| 50 | சித்திவகை மூன்று | .. | 110 |
| 51 | சகலர், விஞ்ஞானகலர், பிரளயாகலர் | .. | 111 |
| 52 | தேக வகை மூன்று | .. | 111 |
| 53 | சுவர்ண தேகிகளின் ஆயுள் | .. | 112 |
| 54 | அணுபக்ஷ சம்புபக்ஷ அநுபவ விவரம் | .. | 112 |


VALLALAR GROUPS

| | | பக்கம் |
|---|---|---|
| 55 | சிருஷ்டிகளும் பக்ஷிபேதங்களும் .. | 113 |
| 56 | தேகம் நீடிப்பதற்குத் தீபப் பிரமாணம் .. | 114 |
| 57 | தேக நஷ்டத்தின் முக்கிய காரணங்கள் .. | 115 |
| 58 | இல்வாழ்வானுக்கு ஞாயம் .. | 115 |
| 59 | ஞானம் .. | 116 |
| 60 | முக்குணம் .. | 117 |
| 61 | ஆணவமல நிவர்த்திக்கு வழி .. | 118 |
| 62 | தர்மம் .. | 118 |
| 63 | குளிகைமணி ஒன்பது .. | 119 |
| 64 | பஞ்ச மகா பாதகங்கள் .. | 120 |
| 65 | பஞ்ச கவ்யத்தின் உண்மை .. | 121 |
| 66 | காயத்ரி .. | 121 |
| 67 | சூரியன், சந்திரன். அக்னி இவற்றின் கலைகள் .. | 122 |
| 68 | மழை .. | 123 |
| 69 | தயவுக்குத் தடைகள் - ஜாதி சமயங்கள் .. | 125 |
| 70 | சந்நியாசம் - காவி வேஷ்டி .. | 125 |
| 71 | வேதாகம புராணங்கள் .. | 126 |
| 72 | சமய நூல்களில் பிழை .. | 126 |
| 73 | புராணங்களின் உண்மை .. | 126 |
| 74 | தத்துவம் .. | 130 |
| 75 | ரசவாதம் - உபரசவாதம் .. | 132 |
| 76 | ஔடதங்கள் .. | 132 |
| 77 | வாட்டம் ஏன் .. | 134 |
| 78 | கலியுக முடிவு .. | 134 |
| 79 | வேதாந்த தேசிகர் குறட்பா .. | 134 |
| 80 | கடிதத் திருநெறிக் குறிப்புகள் .. | 137 |
| 81 | ஒஷதியின் குணானுபவம் .. | 150 |


அருட்பெருஞ்ஜோதி

## வள்ளலார் சரித்திரக் குறிப்புகள்

| | |
|---|---|
| இயற்பெயர் : | இராமலிங்கம் |
| சிறப்புப் பெயர் : | திரு அருட்பிரகாச வள்ளலார் |
| பிறப்பு : | 5—10—1823, சுபானுஸு, புரட்டாசி மீ 21. ஞாயிற்றுக் கிழமை [உலக ஒருமைப்பாடு தினமாகக் கொண்டாடப் படுகிறது] |
| பிறந்த ஊர் : | மருதூர், (சிதம்பரம் வட்டம், தென்னார்க்காடு மாவட்டம்), வடலூரிலிருந்து சுமார் 7 மைல் |
| பெற்றோர் : | இராமையா பிள்ளை<br>சின்னம்மையார் |
| உடன்பிறந்தோர் : | சபாபதிப் பிள்ளை, பரசுராமப் பிள்ளை, சுந்தரம் அம்மையார், உண்ணாமுலை அம்மையார் |
| மனைவி : | தனக்கோடி அம்மாள் |
| வாழ்ந்த இடங்கள் : | சென்னை 1825—1858<br>கருங்குழி 1858—1867<br>வடலூர் 1867—1870<br>மேட்டுக்குப்பம் 1870—1874 |
| சித்தி : | 30—1—1874 ஸ்ரீமுகஸு, தை மீ, 19, வெள்ளிக்கிழமை |

## வள்ளலார் கொள்கைகள் சில.

1. புலால் உண்ணலாகாது.
2. சிறு தெய்வ வழிபாடு கூடாது.
3. கடவுள் ஒருவரே.
   அவர் அருட்பெருஞ்ஜோதி ஆவார்.
4. தெய்வங்கள் பெயரால் உயிர்ப்பலி கூடாது.
5. சாதி, சமய. மத, வேறுபாடுகள் கூடாது.
6. எவ்வுயிரையும் தம்முயிர்போல் எண்ணும் ஆன்மநேய ஒருமைப் பாட்டுரிமையைக் கடைப் பிடித்தல் வேண்டும்.
7. ஏழைகளின் பசி தவிர்த்தலாகிய சீவகாருண்ய ஒழுக்கமே பேரின்ப வீட்டின் திறவுகோல்.
8. இறந்தவரை சமாதி செய்ய வேண்டும். எரிக்கக் கூடாது.
9. எதிலும் பொது நோக்கம் வேண்டும்.

VALLALAR GROUPS

VALLALAR GROUPS

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

அருட்பெருஞ்ஜோதி

# திரு அருட்பா

## வசன பாகம்

சமரச சுத்தசன்மார்க்க சங்க

### 1. சத்திய விண்ணப்பம்

அருட்பெருஞ்ஜோதி

**உத்தரஞான சித்திபுரமென்றும்**, உத்தரஞான சிதம்பரமென்றும் திருவருளாலாக்கப்பட்ட ஆக்கச் சிறப்புப் பெயர்களும், பார்வதிபுரமென்றும், **வடலூரென்றும்** உலகியலாற் குறிக்கப்பட்ட குறிப்புப் பெயர்களும் பெற்று **விளங்குகின்ற** தெய்வப் பதியினிடத்தே, **இயற்கை விளக்க நிறைவாகி**யுள்ள ஓர் சுத்த சிவானுபவ **ஞானசபையில்**, இயற்கையுண்மை நிறைவாகிய, **திருவுருவைத் தரித்து**, **இயற்கையின்ப நிறைவாகிய** சிவானந்த **ஒருமைத் திருநடச்** செய்கையை, எவ்வுயிரும் **இன்பமடைதற்** பொருட்டே செய்தருளுகின்ற,

**எல்லாம்வல்ல தனித்தலைமைக் கடவுளாகிய**

**அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரே !**

**தேவரீரது திருவருட் சமுகத்தில் யான் செய்து கொள்ளுகின்ற சமரச சுத்த சன்மார்க்க சங்க சத்திய விண்ணப்பம் :—**

இவ்வுலகினிடத்து ஆறறிவுள்ள உயர்வுடைத்தாகிய தேகத்தைப் பெற்ற யான், இத்தேகத்திற்கு இடைக்கிடை நேருகின்ற மரணம், **பிணி, மூப்பு**, பயம்



துன்ப முதலிய அவத்தைகளெல்லாவற்றையும் நிவர்த்தி செய்து இத்தேகத்தையே நித்திய தேகமாக்கிக்கொண்டு, எக்காலத்தும், எவ்விடத்தும், எவ்விதத்தும் எத்துணையும் தடைபடாத பேரின்ப சித்திப் பெருவாழ்வைப் பெற்று வாழ்தல் வேண்டுமென்பதே,—எனது **சத்தியமான** அதிதீவிர விருப்ப முயற்சியாக இருக்கின்றது.

எனது விருப்ப முயற்சி இங்ஙனமாக, அவத்தைகளெல்லாவற்றையும் நீக்கி, இத்தேகத்தை நித்திய தேகமாக்கி, எக்காலத்தும் அழியாத பேரின்ப சித்திப் பெருவாழ்வைப் பெற்று வாழ்தல், எதனாற் பெறுதல் கூடுமென்று அறியத் தொடங்கிய தருணத்து :—

வேறு எந்த வழியாலும் பெறுதல் கூடாது, **எல்லாமுடைய கடவுளது திருவருட் சுதந்தரம்** ஒன்றாலே பெறுதல் கூடுமென்று தேவரீர் திருவருளால் அறிவிக்க உள்ளபடி யறிந்தேன்.

பின்னர் திருவருட் சுதந்தரம் நமக்கு எந்த வழியாற் கிடைக்குமென்று அறியத் தொடங்கிய தருணத்து :—

எனது யானென்னும், தேக சுதந்தரம், போக சுதந்தரம், ஜீவ சுதந்தரம் என்னும் மூவகைச் சுதந்தரங்களும் நீங்கியவிடத்தே கிடைக்குமென்று **தேவரீர் திருவருளால் அறிவிக்க** உள்ளபடி அறிந்தேன். ஆதலில், எனது சுதந்தரமாகக் கொண்டிருந்த தேக சுதந்தரத்தையும், போக சுதந்தரத்தையும், ஜீவ சுதந்தரத்தையும், தேவரீர் திருவருட்கே சர்வ சுதந்தரமாகக் கொடுத்துவிட்டேன். கொடுத்த தருணத்தே, இத்தேகமும், ஜீவனும், போகப் பொருள்களும், சர்வ சுதந்தரராகிய கடவுள் பெருங் கருணையாற் கொடுக்கப் பெற்றன மன்றி, நமது சுதந்தரத்தாற் பெற்றன வல்ல வென்னும் உண்மையை அருளாலறிவிக்கவும் அறிந்துகொண்டேன். இனி, இத் தேகத்தினிடத்தும் ஜீவனிடத்தும் போகப் பொருள்களிடத்தும், **தேவரீர் திருவருள் சாட்சியாக** எனக்கு எவ்விதத்தும் யாதோர் சுதந்தரத் தோற்றமும் தோற்ற மாட்டாது.

தேவரீர் திருவருட் சுதந்தரத்தை என்னிடத்தே வைத்தருளி, **மரணம், பிணி, மூப்பு, பயம், துன்ப** முதலிய அவத்தைகளெல்லாவற்றையுந் தவிர்த்து **இத்தேகத்தையே** நித்திய தேகமாக்கி, எக்காலத்து மழியாத பேரின்ப சித்திப் பெரு வாழ்வில் **என்னை வாழ்வித்தல் வேண்டும்.**

**இத் தேகத்தைப் பெற்ற எல்லாச் சீவர்களுக்கும் எனக்கறிவித்த வண்ணமே அறிவித்து அவரவர்களையும், உரிமையுடையவர்களாக்கி வாழ்வித்தல் வேண்டும்.**

**தேவரீர் பெருங்கருணை ஆட்சிக்கு வந்தனம் ! வந்தனம் !!**

**அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை.**

**திருச்சிற்றம்பலம்**

VALLALAR GROUPS



உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

அருட்பெருஞ்ஜோதி

## சமரச சுத்தசன்மார்க்க சத்தியப்

# 2. பெரு விண்ணப்பம்

அருட்பெருஞ்ஜோதி

இயற்கை யுண்மை நிறைவாகியுள்ள ஓர் சுத்த சிவானுபவ வெளியில் இயற்கை விளக்க நிறைவாகி விளங்கிய **அருட்பெருஞ்ஜோதி சொரூப ராய்**, இயற்கை யின்ப நிறைவாகி யோங்கிய, சிவானந்த ஒருமைத திருநடச் செய்கையை, எல்லா உயிர்களும் இன்பமடைதற் பொருட்டுத் திருவுளக் கருணையாற் செய்தருளுகின்ற,

### சர்வ வல்லபராகிய தனித்தலைமைக் கடவுளே !

[சிற்றணுப் பசு]

**அறிவென்பது** ஓர் சிறிதுந்தோற்றுத அஞ்ஞான மென்னும் பெரிய பாசாந்த காரத்தில் நெடுங்காலம் **சிற்றணுப்பசுவாகி** அருகிக் கிடந்த அடியேனுக்குள் உள்ளொளியாகி யிருந்து, அப்பாசாந்தகாரத்தி னின்றும் எடுத்து, எல்லாப் பிறப் புடம்புகளிலும் உயர்வுடைத்தாகிய ஆறறிவுள்ள இம்மனிதப் பிறப்புடம்பில் என்னை விடுத்துச் சிறிது அறிவு விளங்கச் செய்த தேவரீரது திருவருட் பெருங் கருணைத் திறத்தை எங்ஙனம் அறிவேன் ! எவ்வாறு கருதுவேன் !! என்னென்று சொல்வேன் !!!

### எல்லாம்வல்ல இயற்கை யுண்மைக் கடவுளே !

[பகுதிப் பேரணு உரு]

உபசாரத்தாற் பெற்ற தந்தையென்பான் ஒருவனது சுக்கிலத் துளியின் கண் என்னை ஓர் பகுதிப் பேரணு வுருவிற் பெருகி வெளிப்பட விருத்திய காலத்திலும் எனக்குள் உள்ளொளியாகி யிருந்து அப்பகுதிப் பேரணிவுருவைச் சிருட்டித் தருளினீர். அன்றிப் புறத்தில் யாவராலுஞ் சகிக்கப் படாத அதன் அருவருப் பையும் அசுத்தத்தையும் தீ நாற்றத்தையும் சகித்து, அச் சுக்கிலத் துளி யினிடத்து ஓர் ஆவியுருவாகியிருந்து அத்துளியின் கண்ணுள்ள பல்வகை விரோத தத்துவங்



களாற் சிறிதுந் தடைபடாமல் என்னுருவையும் காத்தருளினீர். அன்றி, அங்ஙனம் அரும்பிய ஆன்ம சத்திக் கலைகள் வெளிப்பட விளக்கி வளர்த்தும் அருளினீர்.

உபசாரத்தாற் பெற்ற தாயென்பாள் ஒருத்தியின் சோணிதத் திரளில், என்னுருவைச் சேர்க்கும் வரையில், அப்போதப்போது என்னுருவைச் சிதைப் பதற்கு எதிரிட்ட துரிசுகளெல்லாவற்றையும் நிக்கிரகஞ் செய்தருளினீர். இங்ஙனம் புரிந்த தேவரீரது திருவருட் பெருங்கருணைத் திறத்தை எங்ஙனமறிவேன் ! எவ்வாறு கருதுவேன் !! என்னென்று சொல்வேன் !!!

### எல்லாமுலடய இயற்கை விளக்கக் கடவுளே !

[பூதப் பேரணு உரு]

**தாய்** கருப்பையிற் சோணிதத் திரளிற் சேர்த்து, என்னை ஓர் பூதப் பேரணு வுருவிற் பெருகி வெளிப்பட இருத்திய காலத்திலும் எனக்குள் உள்ளொளியாகி யிருந்து அப்பூதப் **பேரணுவுருவைச்** சிருட்டித்தருளினீர். அன்றிப் புறத்தில் எவராலுஞ் சிறிதுஞ் சகிக்கப்படாத அதன் அசுத்தம், அருவருப்பு, துர்க்கந்த முதலியவற்றைப் பொறுத்து அச்சோணிதத்திரளுள் ஓர் ஆவி யுருவாகி யிருந்து, அத்திரளிலுள்ள பல்வகை விரோத தத்துவங்களாற் சிறிதுந் தடைபடாமல் என்னுருவைக் காத்தருளினீர், அன்றியும், அவ்விடத் தெதிரிட்ட துரிசுகளெல்லா வற்றையும் நிக்கிரகஞ் செய்தருளினீர். அன்றி, அங்ஙனம் பூத்த **ஆன்ம சத்திக் கலைகள்** வாட்ட மடையாது வெளிப்பட்டு விளங்க வளர்த்தருளினீர்.

[பவுதிக பிண்ட வடிவு]

**அன்றியும்**, தாய் கருப்பையி னிடத்தும் பூதப் பேரணுவுருவிற் கிடந்த என்னை, அக்கருப்பையிற் **பவுதிக பிண்ட வடிவில்** இருத்தும் வகையில், நச்சுக் கிருமி, நச்சுக்காற்று, நச்சுச்சுவாலை முதலிய வுற்பாத வகைகளால் எனது பூதப் பேரணுவுருச் சிதறி வேறுபடாமலும் காத்தருளினீர். அன்றியும், தாய் கருப் பையிற் பவுதிக பிண்ட வடிவில் என்னை யிருத்திய காலத்திலும், எனது இச்சை ஞானக் கிரியைகளை வெளிப்படுத்துதல், முதலிய உபகரிப் பதிகரிப்புகளுக்குரிய உபயோக தத்துவ வுறுப்புக ளெல்லாவற்றையும் குறைவின்றி வகுத்து அமைத்து வளர்த்துக் காத்தருளினீர். அன்றியும், அடியேன் தாய் கருப்பையிற் பிண்ட வடிவிற் கிடந்தகாலத்து, இரும்பிற் பெரிதுங் கடினமுடையதாய், இருட்குகையிற் பெரிதும் இருளுடையதாய், மிகவுஞ் சிற்றளவுடையதாய், அசுத்த முதலியவற்றால் நிரம்பிய அக்கருப்பையினுள் நெருக்கத்தாலும் வெப்பத்தாலும் புழுங்கிய புழுக் கத்தினால் வருந்தி வருந்தி களைத்த போதெல்லாம், அங்ஙனம் **அமுதக்காற்றை**, அடிக்கடி மெல்லென வீசுவித்து, அவ்வருத்தமுங் களைப்புந் தவிர்த்துக் காத் தருளினீர்.

VALLALAR GROUPS



**அன்றியும்**, தாய் கருப்பையிற் பிண்டவடிவிற் கிடந்து பசியினாற் பரதவித்து மூர்ச்சித்த போதெல்லாம் பூதகாரிய அமுதத்தை எனக்கு ஊட்டுவித்துப் பசியை நீக்கி மூர்ச்சை தெளிவித்தருளினீர். அன்றியும் தாய் கருப்பையிற் பிண்ட வடிவிற் கிடந்து, பேய்வெருட்டாலும், பேரிருட்டாலும், பயந்தபோதெல்லாம் **நாதவொலியாற்** பேய் வெருட்டையும், **விந்து விளக்கத்தால்**, பேரிருட்டையுந் தவிர்த்து, என் பயத்தை நீக்கியருளினீர். அன்றியும், தாய் கருப்பையின்கண் நேரிட்ட பெருந்தீ, பெருங்காற்று, பேரோசை, பெருவெள்ளம், பெரும் புழு முதலிய உற்பாத துரிசுகள் அனைத்தையும் தவிர்த்துக் காத்து அப்பிண்ட வடிவில் எனக்கு ஓரறிவையும் விளக்கி யருளினீர்.

**அன்றியும்**, உலகினிடத்தே பிறந்து அனுபவிப்பதற்குரிய சுகவனு பவப் பெருக்கம், ஆயுட் பெருக்கம் முதலிய நன்மைகளையும் எனக்கு அப்பிண்ட வடிவின்கண்ணே அமைத்தருளினீர்.

**அன்றியும்**, சோணிதக்காற்றின் அடிபடல், யோனி நெருக் குண்ணல் முதலிய அவத்தைகளால் அபாயம் நேரிட வொட்டாமற் காத்து இவ்வுலகனிடத்தே தோற்றுவித் தருளினீர். இங்ஙனம் புரிந்த தேவரீரது திருவருட் பெருங்கருணைத் திறத்தை எங்ஙனமறிவேன்! எவ்வாறு கருதுவேன்!! என்னென்று துதிப்பேன்!!!

### எல்லாமாகிய இயற்கை யின்பக் கடவுளே!

**தந்தை** யென்பவனது சுக்கிலப் பையின்கண், யான் வந்தமைந்த கணப்போது தொடங்கி, தாயென்பவளது சோணிதப் பையின்கண், சென்றடைந்த கணப்போதிற்கு, முன்கணப்போது வரையுமாக என்னாலொருவாறு அளவிடப்பட்ட ஒரு கோடி ஒன்பது லக்ஷத் தறுபதினாயிரங் (1,09,60,000) கணப்போது பரியந்தம் எவ்வகைத் தடைகளும் வாராதபடி பகுதிப் பேரணுவுருவிற் கிடந்த, எனது அகத்தினும், புறத்தினும், அருவாகியும், உருவாகியும் சலித்தன் முதலிய வின்றி, அன்பொடும் அருளொடும் பாதுகாத்திருந்த தேவரீரது திருவருட் பெருங் கருணைத் தன்மைக்கு — இவ்வுலகில் ஒருவாறு ஒரு கணப்போது பாதுகாத்தலிற் சலிப்படைந்தும், தளர்ச்சியடைந்தும், அருவருப்புற்றும், சுதந்தரமற்றும், பராக்கிலிருந்துந் தடைபடுகின்ற தந்தை முதலிய ஜீவர்கள் கருணைத் தன்மையை, ஒப்பென்று சொல்வதற்கு எவ்விதத்தினுஞ் சிறிதாயினும் மனந்துணியாமையால், அங்ஙனம் உபசரியாதவனாகி யிருக்கின்றேன். ஆகலின் தேவரீர் திருவருட் பெருங்கருணையை யென்னென்று கருதுவேன்! என்னென்று துதிப்பேன்!!

### அருட்பெருஞ்ஜோதித் தனித்தலைமைக் கடவுளே!

**தாயென்பவளது** சோணிதப்பையின்கண், யான் வந்தமைந்த கணப்போது தொடங்கி, இவ்வுலகிற் றோன்றிய கணப்போதிற்கு, முன் கணப்போது வரையு



மாக என்னாலொருவாறு அளவிடப்பட்ட ஆறுகோடி நாற்பத்தெட்டு லக்ஷங் (6,48,00,000) கணப்போது பரியந்தம், எவ்வகைத் தடைகளும், எவ்வகை ஆபத்துக்களும் வாராதபடி, பூதப் பேரணு வுருவிலும், பிண்டப் பெருவடிவிலும் கிடந்த எனதகத்தினும் புறத்தினும், அருவாகியும், உருவாகியும், சலித்தன் முதலிய வின்றிப் பெருந்தயவினோடு பாதுகாத்திருந்த தேவரீர் திருவருட் பெருங் கருணைத் தன்மைக்கு — இவ்வுலகில் ஒருவாறு ஒரு கணப்போது, பாதுகாத்தலிற் சலித்தும், தளர்ந்தும், அருவருத்தும் பரதந்திரித்தும், பராக்கடைந்தும் தடைபடுகின்ற, **தாய்** முதலிய ஜீவர் கருணைத் தன்மையை ஒப்பென்று சொல்வதற்கு, எவ்வகையினும், எத்துணையும் மனந் துணியாமையால் அங்ஙனம் உபசரியாத வனாகியிருக்கிறேன். ஆகலின், தேவரீரது திருவருட் பெருங்கருணையை என்னென்று கருதுவேன்! எங்ஙனந் துதிப்பேன்!!

**யாவராலும்** பிரித்தற்கொரு வாற்றானுங் கூடாத **பாசமென்னு மகாந்தகாரத்தில்**, யான் அதுவென்னும் பேதந்தோற்றாது அருகிக் கலந்து அளவிறந்த காலம் முன்பின்னென்பதின்றி மூர்ச்சித்துக் கிடந்த என்னை, அம் மகாந்தகாரத்தி னின்றும் ஓர் கணப் பொழுதினுள், அதிகாரணக் கிரியையால், அதிகாரணப் பகுதி யுருவிற் பிரிதெடுத்தருளிய '**தேவரீரது திருவருட் பேராற்றலை**' என்னென்று கருதி! என்னென்று துதிப்பேன்!!

### சத்திய ஞானானந்தத் தனித்தலைமைக் கடவுளே!

**காரணக் கிரியையாற்** காரணப்பகுதி யுருவினும், அதிசூக்குமக் கிரியையால் அதிசூக்குமப் பகுதியுருவினும், சூக்குமக் கிரியையாற் சூக்குமப் பகுதியுருவினும், பரத்துவ சத்தி சத்தரால் பூதவுருவினும், பரத்துவ சத்தி சத்தரால் பவுதிக வடிவினும் ஓர் கணப் போதினுள் என்னைச் செலுத்தாமற் செலுத்திய தேவரீரது திருவருட் பேராற்றலை என்னென்று கருதி! என்னென்று துதிப்பேன்!!

### அகண்ட பூரணானந்தராகிய

### அருட்பெருஞ்ஜோதிக் கடவுளே!

**ஜீவனை** ஆதரிப்பிக்கும் பூதப் பிருதிவித் தோற்றமும், ஜீவனை விருத்தி செய்விக்கும் பூதநீர்த் தோற்றமும், ஜீவனை விளக்கஞ் செய்விக்கும் பூதாக்கினித் தோற்றமும், ஜீவனை யதிகரிப்பிக்கும் பூதவாயுத் தோற்றமும், ஜீவனை வியாபகஞ் செய்விக்கும் பூதவெளித் தோற்றமும், உபப்பிருதிவி, உபநீர், உபாக்கினி, உபவாயு முதலிய தோற்றங்களும்; அவைகளிருக்கு மிடங்களும், தொழிலிடமுதலிய விடங்களும்; ஒலி யறிவு, உருவறிவு, சுவையறிவு, நாற்றறிவு, பரிசவறிவு என்னும் ஐவகைக் குணவறிவுகளும்; அவைகளிருத்தற்குரிய செவி, கண், நாக்கு, மூக்கு மெய்யென்னும் உள்ளிடப் பொறிகளும்; அவைகள் உத்தியோகித்

VALLALAR GROUPS



தற்குரிய வெளியிடப் பொறிகளும்; வசனித் தறிதல், நடந்தறிதல், கொடுத்தெடுத் தறிதல், மலம் விடுத்தறிதல், ஜலம் விடுத்தறிதல் என்னும் ஐவகைத் தொழி லறிவுகளும்; அவைகளிருத்தற்குரிய வாக்கு, பாதம், கை, நீர்வாயில், அமான வாயில் என்னும் கரும உள்ளிடப் பொறிகளும்; அவைகள் தொழிற்படற் குரிய கருமப் புறவிடப் பொறிகளும்;

**நினைத்தல்,** விசாரித்தல், நிச்சயித்தல், அகங்கரித்தல் என்னும் சூக்கும கரணத்தொழில்களும்; அவைகளை யியற்றும் மனம், புத்தி, சித்தம், அகங்கார மென்னும் சூக்குமக் கரணங்களும்; அவைகளை யியற்று விக்கும் அதிசூக்குமக் கரணங்களும்; அக்கரணங்களின் உப கரணங்களாகிப் பலபல பேதப் பட்டு விரிந்த சத்துவம், ராஜசம், தாமச முதலிய குணங்களும்; அவை களிருத்தற்கும் உத்தியோகித்தற்கும் இடங்களும், பருவஞ் செய்தல், தருதி செய்தல், இச்சை செய்தல், தெளிவு செய்தல், அதிகாரஞ் செய்தல், 'காரணஞ் செய்தல், காரியஞ் செய்தல் முதலிய இடைப்பாட்டுத் தொழில்களும்; அவைகளை யியற்றும்பொழுது, இயைபு, இச்சை, அறிவு முதலிய கருவிகளும்; அக்கருவிகளுக்குரிய இடங்களும்; அவைகள் உத்தியோகித்தற்குரிய இடங்களும்;

**துரிசு நீக்குவித்தல்,** சுகம் விழைவித்தல், தூய்மை செய்வித்தல், இன்ப மடைதற்கு வழியாயிருத்தல், துணையாயிருத்தல் முதலிய பரத்துவத் தொழில் களும்; அவைகளை இயற்றுதற்குரிய தத்துவங்களும்; அவைகளிருத்தற்குரிய இடங்களும்; பிரேரித்தற்குரிய இடங்களும்; அறிதல், அறிவித்தல், அனுப வித்தல், அனுபவிப்பித்தல் முதலிய தொழில்களும்; அவைகளை இயற்றுகின்ற சத்திசத்தர்களும்; அவர்களிருத்தற்குரிய இடங்களும்; அவர்கள் அதிகரித்தற் குரிய இடங்களும்;

**வாதவிருத்தி,** பித்தவிருத்தி, சிலேட்டும விருத்திகளும்; அவைகளிருக்கு மிடங்களும்; உத்தியோகிக்கு மிடங்களும்; சூரியசத்தி, சந்திரசத்தி, அக்னிசத்தி, தாரகசத்தி, பிரமசத்தி, மாயசத்தி, ருத்திர சத்தி முதலிய சத்திகளும்; அவர்களி ருத்தற்கும், அதிகரித்தற்கும் உரிய இடங்களும்; அச்சத்திகளை நடத்துஞ் சத்தர் களும்; அவர்களிருத்தற்கும் அதிகரித்தற்கும் உரிய இடங்களும்;

**நனவு,** கனவு, சுழுத்தி முதலிய அவத்தைகளும்; அவைகளிருத்தற்குரிய இடங்களும்; இங்ஙனம் இன்னும் பற்பல அகவுறுப்புக்களும்; அகப்புறவுறுப்பு களும்; மீத்தோல், புடைத்தோல், வன்தோல், மென்தோல் முதலிய தோல்வகை களும்; வெண்ணரம்பு, செந்நரம்பு, பசுநரம்பு, சிறுநரம்பு, பெருநரம்பு முதலிய நரம்பின் வகைகளும்; பேரென்பு, சிற்றென்பு, நீட்டென்பு, முடக்கென்பு முதலிய என்பின் வகைகளும்; நல்லிரத்தம், புல்லிரத்தம், கலவையிரத்தம், கபிலை யிரத்தம் முதலிய இரத்தவகைகளும்; மெல்லிறைச்சி, கல்லிறைச்சி, மண் ணிறைச்சி, நீரிறைச்சி முதலிய இரத்த வகைகளும்; மேனிலைச் சுக்கிலம், கீழ்



நிலைச் சுக்கிலம் முதலிய சுக்கில வகைகளும்; ஓங்கார மூளை, ஆங்கார மூளை முதலிய மூளைவகைகளும்; தலையமுதம் இடையமுதம் முதலிய அமுத வகை களும்;

**வெண்மை,** செம்மை, பசுமை, கருமை, பொன்மை என்னும் வண்ண வகைகளும்; **வெண்மையிற்** செம்மை, வெண்மையிற் பசுமை, வெண்மையிற் கருமை, வெண்மையிற் பொன்மை; **செம்மையில்** வெண்மை, செம்மையிற் பசுமை, செம்மையிற் கருமை, செம்மையிற் பொன்மை; **பசுமையில்** வெண்மை, பசுமையிற் செம்மை, பசுமையிற் பொன்மை, பசுமையிற் கருமை; **கருமையில்** வெண்மை, கருமையிற் செம்மை, கருமையிற் பசுமை, கருமையிற் பொன்மை; **பொன்மையில்** வெண்மை, பொன்மையிற் செம்மை, பொன்மையிற் பசுமை, பொன்மையிற் கருமை என்னும் வண்ணபேத வகைகளும்;

**இவைகள்** இருத்தற்குரிய இடங்களும், செயல் வகைகளும், பயன் வகை களும்; இங்ஙனமின்னும் பற்பல புறவுறுப்புகளும், புறப்புற வுறுப்புகளும்; எனக்கு உபகரிக்கும் பொருட்டு, இப்பவுதிக வடிவின்கண் ஒருங்கே உண்ணின்று தோன்ற உண்ணின்று தோற்றுது தோற்றுவித்த, தேவரீரது திருவருட் பேராற்றலை எங்ஙன மறிந்து! எவ்வாறு கருதி!! என்னென்று துதிப்பேன்!!!

## சுத்தசன்மார்க்க லட்சிய சத்தியஞானக் கடவுளே !

[உயர் பிறப்பாகிய மனிதப்பிறப்பு]

**ஜீவர்களாற்** கணித்தறியப்படாத பெரிய உலகின்கண்ணே பேராசை, பெருங்கோபம், பெருமோகம், பெருமதம், பேருலோபம், பேரழுக்காறு, பேரகங் காரம், பெருவயிரம், பெருமடம், பெருமயக்க முதலிய பெருங் குற்றங்களே பெரும்பாலும் விளைவதற் குரிமையாகிய மற்றையிடங்களிற் பிறப்பியாமல், குணங்களே பெரும்பாலும் விளைவதற்குரிமையாகிய இவ்விடத்தே உறுப்பிற் குறைவுபடாத **உயர் பிறப்பாகிய இம்மனிதப் பிறப்பில்** என்னைப் பிறப்பித்தருளிய '**தேவரீரது பேரருட் பெருங் கருணைத் திறத்தை** என்னென்று கருதி! என்னென்று துதிப்பேன்!!

## அருட்பெரு வெளியின் கண்ணே அருட்பெருஞ்ஜோதி வடிவராகி விகற்பமில்லாது விளங்குகின்ற மெய்ப்பொருட் கடவுளே !

[சிசு முதல் — குமார பருவம்]

**சிசுப்பருவந்** தொடங்கிக் குமார பருவம் வரையில் பேய்வெருட்டல், தோஷந்தாங்கல், பாலெதிரெடுத்தல், சவலைக்குருந்தாதல், நோய்ப்பிணிப் புண்டல், பசியாலரற்றல், பயத்தாலுலம்புதல், உண்டியுவட்டல், உடம்பொடு நேர்தல் முதலிய எவ்வகைத் தடைகளாலும் தடைபடாமல் எனதகத்தும் புறத்தும் காத்திருந்து வளர்த்தருளிய தேவரீரது பேரருட் பெருங்கருணைத் திறத்தை என்னென்று கருதி! என்னென்று துதிப்பேன்!!

VALLALAR GROUPS



**அறிவாரறியும் வண்ணங்க ளெல்லாமுடைய பேரருட்
பெருஞ்ஜோதிப் பெருந்தகைக் கடவுளே !**

[குமார பருவம்]

குமார பருவத்திற்றானே உலகிற் சிறுவர்களுடன் கூடிச் சிறு விளையாட்டி யற்றல், சிற்றுண்டி விழைதல், சித்திரம் பயிற்றல், அதிசயம் பார்த்தல், அசங்கியம் பேசல், ஆவலித்தழுதல், சிறுசண்டை செய்தல், சிறு குறும்பியற்றல், நன்வசத்துழலல், தாய் வயிற்சலித்தல் முதலிய குற்றங்களில் என்னைச் சிறிதும் செலுத்தாமல், ஓர் சிறிது அறிவு விளங்கப் புரிந்து இடந்தனித்திருத்தல், இச்சை யின்றி நுகர்தல், ஜெபதபஞ் செய்தல், தெய்வம்பராவல், பிறவுயிர்க்கிரங்கல், பெருங்குணம் பற்றல், பாடிப் பணிதல், பத்திசெய் திருத்தல் முதலிய நற்செய்கை களில் என்னைச் செலுத்திய தேவரீரது பேரருட் பெருங்கருணைத் திறத்தை என்னென்று கருதி! என்னென்று துதிப்பேன் !!

**எல்லாமானவராயும், ஒன்றுமல்லாதவராயும், எல்லா அண்ட சராசரங்களின்
அகத்தும் புறத்தும் நிறைந்து விளங்குகின்ற,**

## தனித் தலைமைக் கடவுளே !

**[ஆசிரியரின்றி கல்விப் பயிற்சி]**

குமார பருவத்தில் என்னைக் கல்வியிற் பயிற்றும் ஆசிரியரை யின்றியே என்றாத்திற் பயின்றறிதற்கருமையாகிய கல்விப் பயிற்சியை எனதுள்ளகத்தே யிருந்து பயிற்றுவித் தருளினீர்.

**[தென்மொழி — தமிழ்]**

**இடம்பத்தையும்**, ஆரவாரத்தையும், பிரயாசத்தையும், பெரு மறைப்பையும், போதுபோக்கையும் உண்டுபண்ணுகின்ற **ஆரிய** முதலிய பாஷைகளில் எனக்கு ஆசை செல்ல வொட்டாது, பயிலுதற்கும், அறிதற்கும் மிகவும் இலேசுடையதாய், பாடுதற்கும் துதித்தற்கும் மிகவும் இனிமையுடையதாய், **சாகாக் கல்வியை** இலேசில் அறிவிப்பதாய்த் **திருவருள்** வலத்தாற் கிடைத்த **தென்மொழி** யொன்ற னிடத்தே மனம் பற்றச் செய்து அத்தென் மொழிகளாற் பல்வகைத் தோத்திரப் பாட்டுகளைப் பாடுவித்தருளினீர்.

**[பொய்யுலகாசாரம்]**

**அச்சிறு** பருவத்திற்றானே ஜாதியாசாரம், ஆசிரம ஆசாரம் என்னும் பொய் யுலகாசாரத்தைப் பொய்யென்றறிவித்து, அவைகளை யனுட்டியாமற் றடை செய் வித்து ; அப்பருவம் ஏறுந்தோறும், ஏறுந்தோறும் எனதறிவை விளக்கஞ் செய்து என்னை மேனிலையில் ஏற்றி நிலைக்க வைத்தருளினீர்.

**[விடய இச்சை]**

**வாலிபப்பருவம்** அடுக்குந் தருணத்திற்றானே, அப்பருவத்திற்கு மிகவும் உரிய விடய இச்சைகளைச் சிறிதுந் தலையெடுக்க வொட்டாது அடக்குவித் தருளினீர்.





**[மெய் அறிவு சமய - மத - மார்க்கங்கள்]**

**அவ்வாலிபப்** பருவந் தோன்றுவதற்கு முன்னரே, எல்லா உயிர்கட்கும் இன்பந் தருவதற்கு, அகத்தும் புறத்தும் விளங்குகின்ற, அருட்பெருஞ்ஜோதி உண்மைக் கடவுள் ஒருவரேயுள்ளார் என்றறிகின்ற மெய்யறிவை விளக்குவித் தருளினீர். வாலிபப் பருவந் தோன்றியபோதே, சைவம், வைணவம், சமணம், பவுத்த முதலாகப் பல பெயர்கொண்டு, பலபட விரிந்த அளவிறந்த சமயங்களும், அச்சமயங்களிற் குறித்த சாதனங்களும், தெய்வங்களும், கதிகளும், தத்துவ சித்தி விகற்பங்களென்றும், அவ்வச் சமயங்களிற் பலபட விரிந்த வேதங்கள், ஆகமங்கள், புராணங்கள், சாத்திரங்கள் முதலிய கலைகளெல்லாம் தத்துவசித்திக் கற்பனைக் கலைக ளென்றும் ; உள்ளபடியே எனக்கறிவித்து, அச்சமயாசாரங் களைச் சிறிதும் அனுட்டியாமற் றடைசெய்வித்தருளினீர். அன்றியும் வேதாந்தம், சித்தாந்தம், போதாந்தம், நாதாந்தம், யோகாந்தம், கலாந்தம் முதலாகப் பல பெயர் கொண்டு பலபட விரிந்த மதங்களும், மார்க்கங்களும், சுத்தசன்மார்க்கா னுபவ லேச சித்தி பேதங்களென் றறிவித்து, — அவைகளையும் அனுட்டியாதபடி தடை செய்வித் தருளினீர்.

**[உண்மைப் பேரனுபவம்]**

**அங்ஙனம்** செய்வித்ததுமன்றி, உலகியற்கண் பொன் விஷய இச்சை, பெண் விஷய இச்சை, மண் விஷய இச்சை முதலிய எல்லாவிஷய இச்சைகளிலும் என்னறிவை ஓரணுத்துணையும் பற்றுவிக்காமல், எவ்வுயிர்களையும் பொதுமையில் நோக்கி, எல்லா உயிர்களையும் இன்பமடைதல் வேண்டுமென்னுங் கருணை நன் முயற்சியைப் பெறுவித்துச் சுத்தசன்மார்க்கத் தனிநெறி யொன்றையே பற்று வித்து, எக்காலத்தும் நாசமடையாத சுத்ததேகம், பிரணவதேகம், ஞானதேகம் என்னுஞ் சாகாக் கலானுபவ தேகங்களும் ; தன் சுதந்தரத்தால் தத்துவங்க ளெல்லாவற்றையும் நடத்துகின்ற தனிப்பெரு வல்லபமும் ; கடவுளொருவரே என்றறிகின்ற உண்மை ஞானமும், கருமசித்தி, ஞானசித்தி முதலிய எல்லாச் சித்திகளும் பெறுகின்ற, அருட்பேறும் பெற்று, வாழ்கின்ற பேரின்பப் பெரு வாழ்வில் என்னை அடைவிப்பதற்குத் திருவுளங் கொண்டு அருட்பெருஞ்ஜோதிய ராகி, நான் எவ்விதத்தும் அறிதற்கரிய உண்மைப் பேரறிவை யறிவித்தும் ; நான் எவ்விதத்தும் காண்பதற்கரிய உண்மைப் பெருங் காட்சிகளைக் காட்டுவித்தும் ; நான் எவ்விதத்தும் செய்தற்கரிய உண்மைப் பெருஞ்செயல்களைச் செய்வித்தும் ; நான் எவ்விதத்தும், அடைதற்கரிய உண்மைப்பெரு நன்மைகளை அடைவித்தும் ; நான் எவ்விதத்தும் அனுபவித்தற்கரிய உண்மைப் பேரனுபவங்களை அனுபவிப் பித்தும் ; எனது அகத்தினும் புறத்தினும், இடைவிடாது காத்தருளி, — எனது உள்ளத்திருந்து உயிரிற்கலந்து பெருந்தயவால் திருநடஞ் செய்தருளுகின்றீர்.

**இங்ஙனம் செய்தருளுகின்ற தேவரீரது திருவருட் பெருங்கருணைத் திறத்தை
என்னென்று கருதி! என்னென்று துதிப்பேன் !!**

**அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை.**

VALLALAR GROUPS



உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

அருட்பெருஞ்ஜோதி

திருவருட்சமுக விசேஷ விண்ணப்ப மென்னும்

சமரச சுத்தசன்மார்க்க சத்திய

# 3. ஞான விண்ணப்பம்

திருச்சிற்றம்பலம்

இயற்கை விளக்கமென்கின்ற சத்தியஞான சபைக்கண்ணே இயற்கை யுண்மையென்கின்ற சத்தியத் திருவுருவினராய், இயற்கை யின்பமென் கின்ற சத்தியத் திருநடஞ் செய்தருள்கின்ற,

## இயற்கைத் தனிப்பெருங் கருணைத் தனிப்பெரும் பதியாகிய தனித்தலைமைக் கடவுளே !

தேவரீர் திருவருட்சமுகத்தை யடைந்த உண்மை ஞானிகளின் சித்திவல்லப தரத்தைப் பகுத்தறிந்து, வாழ்த்துதுமென்று அளவிகந்த முகங்களைக் கொண்டு, அளவுகடந்த நெடுங்காலம், தத்தம் அளவைகளால் தனித்தனி யளந்தளந்தும், ஒருமித் தளந்தளந்தும் ஒருவாற்றினும் முடிவு தோற்றாமையின், வேதா கமங்க ளனைத்தும் ஆங்காங்குக் *கோடித் ததிசயிக்கின்றன வென்றும், அண்ட சராசரங்க ளெல்லாவற்றையும், படைத்தல், காத்தல், துரிசுநீக்கல் முதலிய தொழில்களால் நிகழ்த்துகின்ற அதிகாரத் தலைவர்களும், எவ்வகைத் தத்துவங்களையும், காரண காரிய திறத்தால் நடத்துகின்ற சத்தி சத்தர்களும், உணர்ந்துணர்ந்தும், உணர்ச்சி செல்லாமையின் முயற்சி பற்றாது மயங்குகின்றனரென்றும், பேரறிவாற் சிறந்த பெரியர்களெல்லாம் வியந்து விளம்புகின்றனர். அதனால் "திருவருட்" சமுகத்தை யடைந்த உண்மை ஞானிகளின் சித்திவல்லப தரத்தை, ஒருவராலும் ஒருவாற் றானும் உணர்ந்துகொள்ளுதல் கூடாவென்று ஐயுறவின்றி அறிந்து கொண்டேன்.

இங்ஙன மறிந்து கொண்ட சிறியேன் அவ்வுண்மை ஞானிகளுக்குச் சித்தி வல்லப தரத்தைக் கொடுத்தருளிய திருவருட் சமுகத்தி னியற்கை யுண்மை விளக்கத் தரத்தை எங்ஙனமறியத் தொடங்குவேன்! மலத்திற் புழுத்த புழுவினுஞ் சிறியேன், பொய்யறிவாற் புனைந்துரைத்த பொய்யுரைகளையும் மெய்யுரைகளாகக் கருணையினாற் கடைக்கணித் தருளிய,

* கோடித்து என்பது — அலங்கரித்து



## அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரே!

தேவரீரது திருவருட் சமுகத்தின் இயற்கைப் பெருங்கருணைப் பெருந்தன் மையைக் கருதுதற்கு விரும்பிய ஐந்தொழிற் கர்த்தர் முதலியோர், தூய்மை யுடைமை, அன்புடைமை முதலிய சுபகுணங்களைக் கருதுதற்குக் கருவியாய, தமது கரணங்கள் முற்றப் பெற்றிலவென்று கருதுதலின்றி எண்ணியெண்ணி இரங்கு கின்றனரென்று, அறிவுடையோர் வியந்துரைத்தலைப் பலகாற் பயின்று கேட்டறிந்தேன், இங்ஙனம் கேட்டறிந்த சிறியரிற் சிறியேன், அத்திருவருட் சமுகத்தின் இயற்கைப் பெருங்கருணைப் பெருந்தன்மையைக் காமம், வெகுளி முதலிய அவகுணங்கட்கெல்லாம் வைப்பிடமாகிய, பராய் முருட்டன்ன, கருங்கற் கரணத்தால் எங்ஙனங் கருதத் தொடங்குவேன்! நாயிற்கடையேன் செய்த குற்றங்களை யெல்லாம், குணங்களாகக் கொண்டு, என்னுள்ளகத்தே யமர்ந்து,

'உயிரிற்கலந்த பெருங்கருணைப் பெருமானே !'

தேவரீரது திருவருட்சமுகத்தின் இயற்கைப் பெருங்குணப் பெரும்புகழைத் துதித்தற்கு விரும்பிய, மூர்த்திகள் முதலியோர் துதித்தற் கருவியாய தத்தஞ் செந்நாவுறுப்புகள், வாய்மைகூறல், இன்சொற் புகறல் முதலிய ஒழுக்கங்களிற் சான்றில வென்று துதித்தலின்றி அச்சுற்று நிற்கின்றனரென்று, அறிஞருண்மை வாசகத்தா லறிந்தேன். இங்ஙனமறிந்த கடையேன், பொய்யுரைத்தல், பயனிலை கூறல் முதலிய தீமைக்கட் பயின்று தடித்த, எனது அசுத்த நாவினால் தேவரீர் திருவருட் சமுகத்தின், இயற்கைப் பெருங்குணப் பெரும்புகழை, எங்ஙனந் துதிக்கத் தொடங்குவேன்! அண்டபிண்ட முதலிய எல்லாவற்றிற்கு மகத்தும் புறத்தும் நிறைந்து விளங்குகின்ற,

'அருட்பெருஞ்ஜோதித் தனிப்பெரும் பதியாய பூரணரே !'

தேவரீர் திருவருட் சமுகத்தின் இயற்கை யுண்மைத்தரத்தை அறிதல் வேண்டுமென்றும், இயற்கைப் பெருங்கருணைப் பெருந்தன்மையைக் கருதுதல் வேண்டுமென்றும், இயற்கைப் பெருங்குணப் பெரும்புகழைத் துதித்தல் வேண்டு மென்றும் எனதுள்ளகத்தே ஓவாதுறைந் தூற்றெழுந்து, விரைந்து விரைந்து மேன் மேற்பெருகுகின்ற பேராவசப் பெருவெள்ளம் அணைகடந்து செல்கின்றதாகலின், அறிவாரறிகின்ற வண்ணங்களும், கருதுவார் கருதுகின்ற வண்ணங்களும், துதிப்பார் துதிக்கின்ற வண்ணங்களும், ஆகிய எல்லா வண்ணங்களையுமுடையவர் அருட்பெருஞ்ஜோதித் தனிப்பெருங் கடவுள் என்ற சத்திய ஞானிகளது உண்மை வாசகத்தைப் பற்றுக்கோடாகக் கொண்டு தன்மை சாலாத் தமியேன் அறிதற்கும், கருதுதற்கும், துதித்தற்குந் தொடங்கினேன். இங்ஙனந் தொடங்குதற்கு முன்னர், எனதறிவிற்குங் கருத்திற்கும் நாவிற்கும் இயல்வனவாகத் தோற்றிய வண்ணங் களுள், ஒன்றேனும் ஈண்டு இயற்படத் தோற்றாமையின் 'அருட்பெருஞ்ஜோதித் தனிப்பெருங் கடவுளே !' தேவரீர் திருவருட் சமுகத்தின் இயற்கைவண்ணங்கள், எத்தன்மையவோ! எத்தன்மையவோ! என்று உணர்ந்துணர்ந்து கருதிக் கருதி

VALLALAR GROUPS



உரைத்துரைத்து அதிசயிக்கின்றவனுனேன். இயற்கையுண்மைத் தனிப்பெரும் பொருளாயும், இயற்கை விளக்கத் தனிப்பெரும் பதமாயும், இயற்கை யின்பத் தனிப்பெருஞ் சுகமாயும் பிரிவின்றி நிறைந்த பெருந்தன்மையராய

## அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரே !

**தேவரீர்** திருவருள் வலத்தால் பொறி, புலன், கரண முதலிய தத்துவங்களனைத்தையும் வென்று நின்மலராகித் தத்துவாந்தத்தில் நின்று, தம் முண்மையுணர்ந்து, இயற்கை யுணர்ச்சியைப் பெற்று, இயற்கை யுண்மைக்கண், இயற்கை யின்பானுபவஞ் செய்கின்ற, சுத்த யோகாந்தர்களும், சுத்த கலாந்தர்களும், சுத்த போதாந்தர்களும், சுத்த நாதாந்தர்களும், சுத்த வேதாந்தர்களும், சுத்த சித்தாந்தர்களுமாகிய **சத்த சன்மார்க்க ஞானிகளின்** திருக்கூட்டங்களை, நன்முயற்சியாற் றனித்தனி யடைந்து பத்தியாற் பணிந்து ''அற்புதப் பெருஞ்செயல் புரிகின்ற ஐயர்களே !

**அருட்பெருஞ்ஜோதித்** தனிப்பெரும் பதியாய கடவுளின் இயற்கைத் திருவருட்சமுகம் இருந்தவண்ணம் உள்ளம் உவந் துரைத்தருளல் வேண்டும்'', என்று விண்ணப்பிக்கின்றதோறும், எல்லாப் பொருள்கட்கும், எல்லாக் குணங்கட்கும், எல்லாச் செயல்கட்கும், எல்லாப் பயன்கட்கும், எல்லா அனுபவங்கட்கும், மற்றெல்லா வற்றிற்கும், உருவ, சொரூப, சுபாவ முதலிய இலக்கணங்களனைத்தும் தாமேயாகியும், தாமல்லராகியும், தாக்கியும், தாக்கற்றும், அகத்தும், அகப்புறத்தும், புறத்தும், புறப்புறத்தும், நீக்கமின்றி, நிறைந்து விளங்குகின்ற இயற்கை உண்மைக் கடவுளது, இயற்கைத் திருவருட் சமுக மிருந்த வண்ணம் அந்தோ! அந்தோ! எங்ஙன மறிவோம்! எவ்வாறு கருதுவோம்!! என்னென்று கூறுவோம் !' என்று அவ்வக் கூட்டங்களினுந் தனித்தனி உரைத்துரைத்து, நெகிழ்ந்து நெகிழ்ந்து, நெட்டுயிர்க்கின்றார்களென்றும் ;

எல்லாத் தத்துவங்களையும் எல்லாத் தத்துவிகளையுந் தோற்றுவித்தலும், இயக்குவித்தலும், அடக்குவித்தலும், மயக்குவித்தலும், தெளிவித்தலுமாகிய தொழில்களை எளிதிற் கொடுத்தற்குரிய பூரண சுதந்தரத்தவர்களாய், இயற்கைச் சத்திய ஞான சுகானுபவ பூரண சொரூப சாத்தியர்களாய், எக்காலத்தும், எவ்விடத்தும், எவ்விதத்தும், தடைபடாத, நித்திய, சுத்த, சத்த, ஞான தேகிகளாய், பூதசித்தி, கரணசித்தி, இந்திரியசித்தி, குணசித்தி, பிரகிருதிசித்தி, புருடசித்தி, விந்துசித்தி, பரசித்தி, சுத்தசித்தி, காலசித்தி, கலாசித்தி, விசுவசித்தி, வியோமசித்தி, பிரமசித்தி, சிவசித்தி முதலிய பிண்டசித்தி, அண்டசித்தி, பகிரண்டசித்தி, அண்டாண்டசித்தி என்கின்ற அந்தரங்க, பகிரங்க, தத்துவ, தத்துவி சித்திகளெல்லாவற்றையும், திருக்கடைக்கணிப்பாற் செய்ய வல்லவராய், நடாந்த சமரச சத்தியராய் விளங்குகின்ற சமரச சுத்தசன்மார்க்க ஞானிகளது, சித்திவிலாசத் திருச்சபைக் கண்ணே, புண்ணியவசத்தாற் புகுதப்பெற்று, மனங் கனிந்து வணங்கி நின்று **''சர்வ சுதந்தரராய சத்தியர்களே !''**



''இயற்கையுண்மைத் தனிப்பெரும் பதியாகிய கடவுளின் இயற்கைத் திருவருட் சமுக மிருந்தவண்ணம் திருவுளம் பற்றித், திருவாய்மலர்ந்து திருவார்த்தை யளித்தருளுதல் வேண்டும்'' என்ற விண்ணப்பிக்குந்தோறும், திருவார்த்தை யளித்தலின்றிப் பெருங்கருணைத் திருக்கண்களில் ஆனந்தநீர் பொழிந்து சும்மா யிருக்கின்றன ரென்றும்; உணர்ந்தோர் வியந்துரைப்பக் கேள்வியுற்று 'இயற்கைத் திருவருட் சமுகமிருந்த வண்ணம் என்னையோ! என்னையோ !! வென்று குலாவிக் குலாவிக் கூவுகின்றவனுனேன்.

''அடிநிலைக் கரும ஞானசித்தி யனுபவங்களினும், முடிநிலைக் கரும ஞானசித்தி யனுபவங்களினும், அடிநிலை யோக ஞானசித்தி யனுபவங்களினும், முடிநிலை யோக ஞானசித்தி யனுபவங்களினும், அடிநிலைத் தத்துவ ஞானசித்தி யனுபவங்களினும், முடிநிலைத் தத்துவ ஞானசித்தி யனுபவங்களினும், அடிநிலை ஆன்ம ஞானசித்தி யனுபவங்களினும், முடிநிலை ஆன்ம ஞானசித்தி யனுபவங்களினும், சுத்தஞான சித்தி யனுபவங்களினும், சமரச சுத்த ஞானசித்தி யனுபவங்களினும், அதுவதுவாகி நிறைந்தும், அதுவதுவாகி விளங்கியும், அதுவதுவாகி யினித்தும், ஆங்காங்கு அதீதமாகிக் கலந்தும், இவை யனைத்துமாகி ஒருமித்தும், அதீதாதீதமாகித் தனித்தும் வயங்குகின்ற,

## 'பெருங்கருணைப் பெரும்பதியாகிய கடவுளே!'

எல்லாச் சத்திகளுக்கும், எல்லாச் சத்தர்களுக்கும், எல்லா மூர்த்திகளுக்கும், எல்லா மூர்த்தர்களுக்கும், எல்லாத் தேவிகளுக்கும், எல்லாத் தேவர்களுக்கும், எல்லாச் சாதனர்களுக்கும், எல்லாச் சாத்தியர்களுக்கும், எல்லா வுயிர்களுக்கும், எல்லாத் தத்துவங்களுக்கும், எல்லாப் பொருளகளுக்கும், எல்லாக் குணங்களுக்கும், எல்லாச் செயல்களுக்கும், எல்லா அனுபவங்களுக்கும், மற்றெல்லா வற்றிற்கும் முதற் காரணமாயும், நிமித்த காரணமாயும், துணைக்காரணமாயும், இவையல்லவாயும் விளங்குகின்ற ''திருவருட்சமுக மிருந்தவண்ணம்'' அறிந்து கொள்ளுதலிங்ஙனமாளுல், ''திருவருட்சமுகப் பெருங் கருணைப் பெரும் பதியாய தேவரீர்'' இயற்கைத் திருவண்ணமறிந்து கொள்ளுதல் எங்ஙனமோ! எங்ஙனமோ !!

## 'ஓ! ஒப்புயர்வின்றி விளங்குகின்ற ஒருவரே!'

**தேவரீர்** திருவண்ணமும், திருவருட்சமுகத் திருவண்ணமும் அறிதற்கும், கருதுதற்கும், துதித்தற்கும், எத்திறத்தானும் கூடாவாயினும அடிமையளவிற் கியன்றபடி அறியாதறிந்தும, கருதாது கருதியும் துதியாது துதித்தும், எனது உரிமையை ஊற்றஞ் செய்கின்றவனுனேன். வந்தனம்! வந்தனம் !!

**திருச்சிற்றம்பலம்**

இங்ஙனம்,

**அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை**

VALLALAR GROUPS



உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

அருட்பெருஞ்ஜோதி

சமரச சுத்தசன்மார்க்க சத்தியச்

# 4. சிறு விண்ணப்பம்

திருச்சிற்றம்பலம்

இயற்கை யுண்மையரென்றும், இயற்கை யறிவின ரென்றும், இயற்கை யின்பின ரென்றும், நிர்க்குண ரென்றும், சிற்குண ரென்றும், நித்தியரென்றும், சத்தியரென்றும், ஏகரென்றும், அநேகரென்றும், ஆதியரென்றும், அநாதியரென்றும், அமலரென்றும், அருட்பெருஞ் ஜோதியரென்றும், அற்புதரென்றும், நிரதிசயரென்றும், எல்லாமான வரென்றும், எல்லாமுடையவ ரென்றும், எல்லாம் வல்லவ ரென்றும், குறிக்கப் படுதன் முதலிய, அளவுகடந்த திருக்குறிப்புத் திருவார்த்தைகளால், சுத்த சன்மார்க்க ஞானிகள் துதித்தும், நினைத்தும், உணர்ந்தும், புணர்ந்தும் அநுபவிக்க விளங்குகின்ற,

தனித்தலைமைப் பெரும்பதியாகிய பெருங்கருணைக் கடவுளே!

தேவரீர் திருவருட் சமுகத்தில் துரும்பினுஞ் சிறியேமாகிய யாங்கள் சிற்றறி வாற் செய்துகொள்ளுஞ் சிறு விண்ணப்பங்களைத் திருச்செவிக்கு ஏற்பித்தருளி எங்களை இரக்ஷித்தருளல் வேண்டும்.

எல்லாச் சத்திகளும், எல்லாச் சத்தர்களும், எல்லாத் தலைவர்களும், அறிந்துகொள்ளுதற்கு மிகவும் அரியதாய், எல்லாத் தத்துவங்களுக்கும், எல்லாத் தத்துவிகளுக்கும், அப்பாலப்பாலாய் விளங்கும் ஓர் சுத்த ஞானவெளியில், நமக்கு ஒருவிதத்தாலும் ஒப்புயர்வு சிறிதுங் குறிக்கப்படாத "தனிப்பெருந் தலைமை அருட்பெருஞ்ஜோதியராகி விளங்குகின்ற தேவரீரது தனிப்பெருந் தன்மைக்கு" மெய்யறிவுடையோரால் விதிக்கப்பட்ட வேதாகமங்களும், பெருந் தகை வாசகத்தைப் பெறாது சிறுதகை வர்க்கங்களைப் பெற்றுத் திகைப்படை கின்றனவென்றால், மலத்திற் புழுத்த புழுவினுஞ் சிறியோமாகிய யாங்கள், திருச் சமுகத்தில் விண்ணப்பித்தற்குரிய பெருந்தகை வாசகத்தை எவ்வாறறிவோம்! எங்ஙனஞ் செய்வோம்!! ஆகலில்,

'கருணாநிதியாகிய கடவுளே!'

யாங்கள் விண்ணப்பிக்கின்ற அற்ப வாசகத்தில் உரிமை நோக்காது அங்கீகரித்தருளி எங்களைக் காத்தருளல் வேண்டும்.



'தாயினுஞ் சிறந்த தயவுடைக் கடவுளே!'

இயற்கையே அஞ்ஞான இருளில் அஞ்ஞான உருவில், அஞ்ஞானிகளாய், அஞ்ஞானத்திற் பயின்று, ஏதுந் தெரியாது கிடந்த எங்களைத் 'தேவரீர் பெருங் கருணையால்' பவுதிக வுடம்பிற் சிறிது அறிவு தோற்றுவித்து விடுத்த, அஞ்ஞான்று தொட்டு இஞ்ஞான்று வரையும், அது கொண்டு அறிவே வடிவாய், அறிவே உருவாய், அறிவே பொறியாய், அறிவே மனமாய், அறிவே அறிவாய், அறிவே அநுபவமாய், அநுபவிக்கத் தெரிந்து கொள்ளாது; குற்றமே வடிவாய்க், குற்றமே வுருவாய்க், குற்றமே பொறியாய்க், குற்றமே மனமாய்க், குற்றமே அறிவாய்க், குற்றமே யநுபவமாய் அநுபவிக்கின்ற சிறியேங்கள், திருச் சமுகத்தில் விண்ணப்பிக்கின்ற விண்ணப்பமும், குற்றமே வடிவாய்க் குற்றமே குறிக்குமென்று அறிந்தோமாயினும், குற்றங் குறியாதவகை விண்ணப்பஞ் செய்தற்கு, ஒருவாற்றானும் உணர்ச்சியில்லோம். ஆகலின், துணிவுகொண்டு விண்ணப்பிக்கின்றேம். குற்றங்களையே குணங்களாகக் கொள்ளுதல் "தேவரீர், திருவருட் பெருமைக்கு" இயற்கையாதலின், இவ்விண்ணப்பங்களிற் குற்றங் குறையாது கடைக்கணித்தருளிக் கருணை செய்தல் வேண்டும்.

அஞ்ஞான இருளில் ஒன்றுந் தெரியாது உணர்ச்சியின்றிக் கிடந்த காலம் போக அவ்விருளைவிட்டு நீங்கிய காலத்தே, இவ்வுலகினிடத்து புல், நெல், மரம் செடி, பூண்டு முதலியவாகவும், கல், மலை, குன்று முதலியவாகவும், பிறந்து பிறந்து, களையுண்டல், அறுப்புண்டல், வெட்டுண்டல், கிள்ளுண்டல், உலர்ப் புண்டல், உடைப்புண்டல், வெடிப்புண்டல் முதலிய பலவேறு அவத்தைகளால் இறந்திறந்து, அத்தாபர யோனிவர்க்கங்களெல்லாஞ் சென்று சென்று, உழன்று உழன்று, அலுப்படைந்தோம்.

பின்னர், எறும்பு, செல், புழு, பாம்பு, உடும்பு, பல்லி முதலியவாகவும்; தவளை, சிறுமீன், முதலை, சுறா, திமிங்கல முதலியவாகவும்; பிறந்து பிறந்து தேய்ப் புண்டல், நசுக்குண்டல், அடியுண்டல், பிடியுண்டல் முதலிய பலவேறு அவத்தைகளால் இறந்திறந்து, அவ்வூர்வன, நீர்வாழ்வன யோனி வர்க்கங்க ளெல்லாஞ் சென்று சென்று, உழன்று உழன்று அலுப்படைந்தோம்.

பின்னர் ஈ, வண்டு, தும்பி, குருவி, காக்கை, பருந்து, கழுகு முதலியவாகப் பிறந்து பிறந்து, அடியுண்டல், பிடியுண்டல், அலைப்புண்டல், உலைப்புண்டல் முதலிய பல்வேறு அவத்தைகளால் இறந்திறந்து, அப்பறவை யோனிவர்க்கங்க ளெல்லாஞ் சென்று சென்று, உழன்று உழன்று அலுப்படைந்தோம்.

பின்னர், அணில், குரங்கு, நாய், பன்றி, பூனை, ஆடு, மாடு, யானை, குதிரை, புலி, கரடி முதலியவாகப் பிறந்து பிறந்து, பிடியுண்டல், அடியுண்டல், குத்துண்டல், வெட்டுண்டல், தாக்குண்டல், கட்டுண்டல், தட்டுண்டல் முதலிய பல்வேறு அவத்தைகளால் இறந்திறந்து, அவ்விலங்கு யோனி வர்க்கங்களெல்லாஞ் சென்று சென்று, உழன்று உழன்று அலுப்படைந்தேம்.

VALLALAR GROUPS



**பின்னர்,** பசாசர், பூதர், இராக்கதர், அசுரர், சுரர் முதலியராகப் பிறந்து பிறந்து; அலைப்படுதல், அகப்படுதல், அகங்கரித்தல், அதிகரித்தல், மறந்து நிற்றல், நினைந்து நிற்றல், மயக்குறுதல், திகைப்புறுதல், போரிடுதல், கொலைப் படுதல் முதலிய பல்வேறு அவத்தைகளால் இறந்திறந்து, அத்தேவ யோனி வர்க்கங்க ளெல்லாஞ் சென்று சென்று, உழன்று உழன்று, அலுப்படைந்தேம்.

**பின்னர்,** காட்டகத்தார், களவுசெய்வார், கொலை செய்வார் முதலியராகப் பிறந்து பிறந்து, பயப்படல், சிறைப்படல், சிதைப்படல் முதலிய அவத்தைகளால் இறந்திறந்து, அந்நரக யோனிவர்க்கங்க ளெல்லாஞ் சென்று சென்று, உழன் றுழன்று அலுப்படைந்தேம், அங்ஙனம் யாங்கள் அப்பிறவிகள் தோறும் அடைந்த அலுப்பும் அச்சமும், அவலமும், களைப்பும், துன்பமுந் திருவுளத் தடைத்து, இரங்கியருளி, அழியாப் பெருவாழ்வைப் பெறுதற்குரிய உயரறிவுடைய இம் மனிததேகத்திற் செலுத்தியருளிய **தேவரீரது பெருங்கருணைக்கு** யாங்கள் செய்யும் கைம்மாறு ஒன்றுந்தெரிந்தோமில்லை. உயிர்களின் அகத்தும், புறத்தும் அகப்புறத்தும், புறப்புறத்தும், நீக்கமின்றி, நிறைந்து விளங்குகின்ற,

## அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரே !

இம்மனித தேகத்திற் செலுத்திய காலத்தும், தாய்வயிற்றிலும், சிசு பருவத் திலும், குமார பருவத்திலும், பல்வேறு அவத்தைகளால், அறிவின்றியிருந்தோம். ஆகலின், **'தேவரீர் பெருங்கருணைத் திறத்தை'** அறிந்துகொள்ளாமல் **வீண்** போது கழித்தோம். அப்பருவங் கழிய இப்பருவத்திலிடத்தே, எல்லா அண்டங் களையும், எல்லா உலகங்களையும், எல்லா உயிர்களையும், எல்லாப் பொருள்களையும், மற்றை எல்லாவற்றையும் தோற்றுவித்தும், விளக்கஞ் செய்வித்தும், துரிசு நீக்கு வித்தும், பக்குவம் வருவித்தும், பலந் தருவித்தும், எங்கும் **'பூரணராகி விளங்கு கின்ற ஓர் உண்மைக் கடவுள் உண்டென்றும்.'** அக் கடவுளை உண்மையன்பால் கருத்தில் கருதி வழிபாடு செய்யின் **'அக்கடவுள் திருவருள்'** நமது கருத்தின் கண் வெளிப்பட்டு **விளங்குமென்றும்,** அத்திருவருள் விளக்கத்தால் மரணம், பிணி, மூப்பு, பயம், துன்பம் முதலிய அவத்தைகள் எல்லாவற்றையும் தவிர்த்து எக்காலத்தும், எவ்விடத்தும் எவ்விதத்தும், எவ்வளவும், தடைபடாத பேரின்ப சித்திப் பெருவாழ்வை அடைதல் கூடுமென்றும், எங்களறிவில் தேவரீர் திருவருளால் உண்மைப்பட உணர்த்தி அருளப்பெற்றேம். அவ்வுணர்ச்சியைப் பெற்றது தொடங்கிக் **"கடவுள் வழிபாடு எஞ்ஞான்று செய்வோம்? கடவுள் திருவருள் விளக்கம் எந்நாளடைவோம்?** மரணம், பிணி, மூப்பு முதலிய **அவத் தைகள் எப்போது நீங்கும்? என்றும் அறியாத பேரின்ப சித்தி எக்காலங் கிடைக்கும்?" என்று எண்ணியெண்ணி, வழிதுறை** தெரியாமல் **வருந்திநின்ற** தருணத்தே,

## 'களைப்பறிந் துதவும் கருணைக்கடலாகிய கடவுளே !'

தேவரீர் 'நெடுங்காலம் மரண முதலாகிய அவத்தைகளால், துன்பமுற்றுக் களைப்படைந்த உங்களை அவ் வவத்தைகளினின்றும், நீக்கி, களைப்பும் கலக்கமுந் தவிர்த்து, அழியாத பேரின்பசித்தியை அடைவித்தற் பொருட்டாகவே, **பூர்வ ஞான சிதம்பரத்தின் வடபால் பார்வதி புரமென்று** குறிக்கப்படுகின்ற **உத்திர ஞான சித்திபுரத்தில்,** யாம் அளவுகடந்த நெடுங்காலஞ் சித்தியெலாம் விளங்கத்





**திருவருள் நடஞ்** செய்வோ' மென்றும், 'அது தருணம் மிகவும் அடுத்த சமீபித்த தருண' மென்றும், அப்பதியினிடத்தே, யாம் அருள்நடம் புரிதற்கு அடையாள மாக **ஓர் ஞானசபை** காணுதல்வேண்டு' மென்றும், திருவருட் குறிப்பால் அறிவித்தது மன்றி, அருளுருவாகி எங்களகத்தும் புறத்தும் அமர்ந்தருளி யாதோர் தடைகளுமின்றி அத் திருஞானசபையும் தோன்றி விளங்கச் செய்வித் தருளிய, **தேவரீர் பெருங்கருணையைக் கருதுந்தோறும் பெருங்களிப் படை கின்றேம்** இனி, அத்திரு ஞான சபையை அலங்கரித்தல் வேண்டுமெனக் குறிப்பித்த வண்ணம் அலங்கரிக்கத் தொடங்குகின்றேம்.

## அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரே !

**தேவரீர்** அருளுருவாகி எங்களகத்தும் புறத்தும் அமர்ந்தருளி, **யாங்கள்** செய்யும் இவ்வலங்காரத **திருப்பணியில்** எவ்விதத்தாலும் யாதொரு தடையும் வாராதவண்ணம் செய்வித்து, அவ்வலங்காரத **திருப்பணியை** முற்றுவித்திருளல் வேண்டும்.

## '.சர்வ வல்லபராகிய தனித்தலைமைக் கடவுளே !'

**அத்திருவலங்காரத்** திருப்பணி முற்றிய தருணத்தே தேவரீர் அமர்ந்தருளி அற்புதத் திருவருள் விளக்கத்தால் எங்களையும், **இவ்வுலகில் இத்தேகத்தைப்** பெற்ற, மற்றவர்களையும் **உண்மையடியார்களாக்கி,** உண்மையறிவை **விளக்கி,** **உண்மை இன்பத்தை யளித்துச்** சமரச சுத்தசன்மார்க்க நிலையில் **வைத்துச்** சத்திய வாழ்வை யடைவித்து, **நித்தியர்களாக்கி,** வாழ்வித்தல் **வேண்டும்.**

## 'எல்லாமுடைய அருட்பெருஞ்ஜோதி அற்புதக் கடவுளே !'


**இதுதொடங்கி** எக்காலத்தும் சுத்தசன்மார்க்கத்தின் முக்கியத் தடைகளாகிய **சமயங்கள், மதங்கள்,** மார்க்கங்கள், என்பவற்றின் ஆசார சங்கற்ப விகற்பங் **களும்;** வருணம், ஆசிரமம் முதலிய உலகாசார சங்கற்ப விகற்பங்களும்; **எங்கள்** மனத்திற் பற்றாதவண்ணம் அருள் செய்தல் வேண்டும். சுத்த சன்மார்க் கத்தின் முக்கிய லட்சியமாகிய ஆன்மநேய ஒருமைப் பாட்டுரிமை, எங்களுக்குள், எக்காலத்தும், எவ்விடத்தும், எவ்விதத்தும், எவ்வளவும் விலகாமல் நிறைந்து விளங்கச் செய்வித்தருளல் வேண்டும்.

**எல்லாமாகிய தனிப்பெருந் தலைமை**

## 'அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரே!'

**தேவரீர்** திருவருட் பெருங்கருணைக்கு வந்தனம்! வந்தனம்!

இப்படி,



**அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை**

VALLALAR GROUPS



உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

அருட்பெருஞ்ஜோதி

வள்ளலார் திருக்காப்பிட்டுக் கொண்ட தினம் வெளியிட்ட

# 5. அற்புதப் பத்திரிகை

திருச்சிற்றம்பலம்

உலகத்தினிடத்தே பெறுதற்கு மிகவும் அருமையாகிய
மனித தேகத்தைப் பெற்ற நண்பர்களே !

**அறிவுவந்த** காலமுதல், அறிந்தறியாத அற்புத அறிவுகளையும், அடைந்தறியாத அற்புதக் குணங்களையும், கேட்டறியாத அற்புதக் கேள்விகளையும், செய்தறியாத அற்புதச் செயல்களையும், கண்டறியாத அற்புதக் காட்சிகளையும் அனுபவித்தறியாத அற்புத அனுபவங்களையும் இது தருணந்தொடங்கிக் கிடைக்கப் பெறுகின்றேனென்று உணருகின்ற ஓர் **சத்திய**வுணர்ச்சியாற் பெருங் களிப்புடையேனாகி யிருக்கின்றேன்.

நீவிர்களும், அவ்வாறு பெற்றுப் பெருங்களிப்பு அடைதல் வேண்டுமென்று, எனக்குள்ளே நின்று, நிறைந்து எழுந்து வெளிப்பட்ட எனது சுத்த சன்மார்க்க லக்ஷியமாகிய, **ஆன்மநேய வொருமைப்பாட்டுரிமைப் பேராசைப் பற்றியே இதனைத் தெரிவிக்கின்றேன்.**

இயற்கையிற் றானே விளங்குகின்றவரா யுள்ளவ ரென்றும், இயற்கையிற்றானே யுள்ளவராய் விளங்குகின்றவரென்றும், இரண்டுபடாத பூரண இன்ப மானவரென்றும், எல்லா அண்டங்களையும், எல்லா உலகங்களையும், எல்லாப் பதங்களையும், எல்லாச் சத்திகளையும், எல்லாச் சத்தர்களையும், எல்லாக் கலைகளையும், எல்லாப் பொருள்களையும், எல்லாத் தத்துவங்களையும், எல்லாத் தத்துவிகளையும், எல்லா உயிர்களையும், எல்லாச் செயல்களையும், எல்லா இச்சைகளையும், எல்லா ஞானங்களையும், எல்லாப் பயன்களையும், எல்லா அனுபவங்களையும், மற்றெல்லா வற்றையும் தமது **திருவருட் சத்தியால்**, தோற்றுவித்தல், வாழ்வித்தல், குற்றம் நீக்குவித்தல், பக்குவம் வருவித்தல், விளக்கஞ் செய்வித்தல் முதலிய **பெருங்கருணைப்** பெருந் தொழில்களை யியற்றுவிக்கின்றவரென்றும், எல்லா மானவரென்றும், ஒன்றுமல்லாதவ ரென்றும், சர்வ காருணியரென்றும், சர்வவல்லப ரென்றும், எல்லாம் உடையராய்த் தமக்கு ஒருவாற்றானும் ஒப்புயர் வில்லாத் தனிப்பெருந்தலைமை அருட்பெருஞ்ஜோதிய ரென்றும், சத்திய அறிவால்



**அறியப்படுகின்ற உண்மைக்கடவுள் ஒருவரே** அகம்புற முதலிய எவ்விடத்தும் நீக்க மின்றி நிறைந்த சுத்த மெய்யறி வென்னும் பூரணப் பொதுவெளியில், அறிவாரறியும் வண்ணங்க ளெல்லாமாகி விளங்குகின்றார்.

அவ்வாறு **விளங்குகின்ற** 'ஒருவரேயாகிய கடவுளை, இவ்வுலகினிடத்தே ஜீவர்கள் அறிந்து அன்புசெய்து, அருளை யடைந்து, அழிவில்லாத சத்திய சுகபூரணப் பெருவாழ்வைப் பெற்றுவாழாமல், பலவேறு கற்பனைகளாற் பலவேறு சமயங்களிலும், பலவேறு மதங்களிலும், பலவேறு மார்க்கங்களிலும், பலவேறு லக்ஷியங்களைக் கொண்டு நெடுங்காலமும் பிறந்து பிறந்து அவத்தை வசத்தர்களாகிச் சிற்றறிவுமின்றி விரைந்து விரைந்து பலவேறு ஆபத்துகளினால் துன்பத்தில் அழுந்தி இறந்திறந்து வீண் போகின்றார்கள்.

**இனி**, இச்சீவர்கள் விரைந்து விரைந்து, இறந்து இறந்து, வீண்போகாமல், உண்மையறிவு, உண்மையன்பு, உண்மை இரக்கம் முதலிய சுபகுணங்களைப் பெற்று, நற்செய்கையுடையராய், எல்லாச் சமயங்களுக்கும், எல்லா மதங்களுக்கும், எல்லா மார்க்கங்களுக்கும், உண்மைப் பொது நெறியாகி விளங்குஞ் **சுத்த சன்மார்க்கத்தைப் பெற்றுப், பேரின்பசித்திப் பெருவாழ்வில் பெருஞ் சுகத்தையும் பெருங் களிப்பையும் அடைந்து** வாழும் பொருட்டு மேற்குறித்த **உண்மைக் கடவுள்** தாமே **திருவுள்ளங்** கொண்டு சுத்தசன்மார்க்கத்தின் முக்கிய லக்ஷியமாகிய உண்மை விளக்கஞ் செய்கின்ற ஓர் ஞானசபையை இங்கே தமது **திருவருட்** சம்மதத்தாலியற்றுவித்து, **"இக்காலந் தொடங்கி அளவு குறிக்கப் படாத நெடுங்காலம், அளவு குறிக்கப்படாத அற்புத சித்திகளெல்லாம் விளங்க, யாமே அமர்ந்து விளையாடுகின்றோம்"** என்னுந் திருக்குறிப்பை வெளிப்படுத்தி, **அருட்பெருஞ்ஜோதியராய்** வீற்றிருக்கின்றார். ஆகலின், அடியிற் குறித்த தருணந்தொடங்கி வந்து வந்து, தரிசிக்கப் பெறுவீர்களாயிற் கருதிய வண்ணம் பெற்றுக் களிப்படைவது மன்றி, இறந்தவர் உயிர்பெற்றெழுதல், மூப்பினர் இளமையைப் பெற்றுநிற்றல் முதலிய பலவகை அற்புதங்களைக் கண்டு பெருங் களிப்பும் அடைவீர்கள்.

இப்படிக்கு,

சிதம்பரம்

இராமலிங்கம்

சென்னைப்பட்டணம் இராஜதானியைச்
சார்ந்த கூடலூர் ஜில்லா, ஷை தாலுகா
பார்வதிபுரம் அல்லது வடலூர்
ஸ்ரீ முகஸூ தைமீ 19உ சுக்கிரவாரம்
பௌர்ணமி புனர்பூச நக்ஷத்திரம்.
1874

அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை

VALLALAR GROUPS



உ

சிவமயம

திருச்சிற்றம்பலம்

அருட்பெருஞ்ஜோதி

# 6. உண்மைப் பத்திரிகை

திருச்சிற்றம்பலம்

சுத்தசிவ சன்மார்க்கம் ஒன்றே இனி எல்லா உலகத்தும் வழங்கும். இதற்கு எவ்விதப்பட்ட தடைகளும் இல்லை. தடையற்ற பெருநெறி வழக்கம் இக்காலந் தொட்டு, அளவிறந்த நெடுங்காலம் வரையில் வழங்கும். அதன் மேன் மேலும் வழங்கும்.

பலவகைப்பட்ட சமய பேதங்களும், சாத்திர பேதங்களும், ஜாதி பேதங்களும், ஆசார பேதங்களும் போய். **சுத்தசன்மார்க்கப் பெருநெறி ஒழுக்கம்** விளங்கும். அது கடவுள் சம்மதம். இது 29—வருஷத்திற்குமேல், (கலி 5000-க்கு மேல்.)

**இப்போது** வருகிற நமது கடவுள் இதற்கு முன் சமய சாத்திர புராணங்களில் வந்ததாகச் சொல்லுகின்ற பலவகைப்பட்ட ஏற்பாட்டுக் கர்த்தர்கள், மூர்த்திகள், கடவுள், தேவர், அடியார், யோகி, ஞானி முதலானவர்களில் ஒருவரல்ல. இப்படி சொல்லப்பட்ட எல்லா மூர்த்திகளும், எல்லாத் தேவர்களும், எல்லாக் கடவுளரும், எல்லாத் தலைவர்களும், எல்லா யோகிகளும் எல்லா ஞானிகளும் தாங்கள் தங்கள் அனுபவங்களைக் குறித்து எதிர் பார்க்கின்றபடி எழுந்தருளுகின்ற **தனித்தலைமைப் பெரும்பதி.**

இது உண்மையாயின், அந்தப் பதியின் அருளை நான் பெறுவேன்! பெறுகின்றேன்!! பெற்றேன்!!! **என்னை அடுத்தவர்களும்** பெறுதற்கு, யாதொரு **தடையுமில்லை. பெறுவீர்கள்!** பெறுகின்றீர்கள்!! பெற்றீர்கள்!!! அஞ்ச வேண்டாம்.

இப்படிக்கு,

**பிரஜோத்பத்தி ஞு**
**சித்திரை மீ 1 வ.**
**சித்திவளாகம்**
**1871.**

சிதம்பரம்
இராமலிங்கம்

**அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை.**



உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

அருட்பெருஞ்ஜோதி

# 7. சமரச வேத பாடசாலை

திருச்சிற்றம்பலம்

**இதில் வாசிக்க** விரும்புகின்றவர்கள் பதினைந்து வயதிற்கு மேற்பட்டவர்களாகி, நல்லறிவு, கடவுள்பத்தி, உயிரிரக்கம், பொது நோக்கம், திரிகரணவடக்கம் முதலிய நற்குண வொழுக்கங்களையும், உண்மையுரைத்தல், இன்சொல்லாடல் உயிர்க்குபகரித்தல் முதலிய நற்செய்கையொழுக்கங்களையும் பெற்று சுத்த சன்மார்க்கத்திற்குரியவர்களாயிருத்தல் வேண்டும்.

**இதில்** வாசிக்கின்றவர்களுக்கு சிலகாலம் வாசித்து ஒருவாறு வாசிப்பிற் பயிற்சி நேரிட்டால், **அந்தப் பயிற்சிக்கும் அவரவர்கள் குடும்பத்திற்கும் தத்கபடி** மாதந்தோறும் பொருளுதவி செய்யப்படும். காலை மாலை சுமார் ஐந்தைந்து நாழிகை வாசித்தல் வேண்டும்.

இப்படி,

**சித்திவளாகம்,**
**பிரமோதூத - ஞு**
**மார்கழி மீ 21 வ.**
**1871.**

சிதம்பரம்
இராமலிங்கம்

**அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை**

VALLALAR GROUPS



உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

அருட்பெருஞ்ஜோதி

சமரச சுத்தசன்மார்க்க சத்திய

# 8. ஞான சபை

## விளக்கப் பத்திரிகை

திருச்சிற்றம்பலம்

அன்புடைய நம்மவர்களுக்கு வந்தனம்!

இன்று தொடங்கி, சபைக்கு சமரச சுத்தசன்மார்க்க சத்திய **ஞானசபை** யென்றும், சாலைக்கு சமரச சுத்தசன்மார்க்க சத்திய தருமச்சாலை யென்றும், சங்கத்திற்கு **சமரச சுத்தசன்மார்க்க சத்திய சங்க** மென்றும் பெயர் வழங்குதல் வேண்டும்.

**இன்று தொடங்கி,** அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரது அருட்பெருஞ் சித்தி வெளிப்படும் வரைக்கும், ஞானசபைக்குள்ளே **தகரக் கண்ணாடி** விளக்கு வைத்தல் வேண்டும். பித்தளை முதலியவற்றால் செய்த குத்து விளக்கு வேண்டாம். மேலேற்றுகிற 'குளோப்பு' முதலிய விளக்குகளும் வேண்டாம். தகரக்கண்ணாடி விளக்கு வைக்குங்காலத்தில் தகுதியுள்ள நம்மவர்கள் தேகசுத்தி, கரணசுத்தி உடையவர்களாய் திருவாயிற்படிப் புறத்தி லிருந்துகொண்டு விளக் கேற்றி பன்னிரண்டு வயதுக்குட்பட்ட சிறுவர் கையில் கொடுத்தாவது, எழுபத் திரண்டு வயதுக்கு மேற்பட்ட பெரியர் கையில் கொடுத்தாவது, உட்புற வாயில் களுக்குச் சமீபங்களில் வைத்துவரச் செய்விக்கவேண்டும்.


**நாலு நாளைக்கொருவிசை காலையில்,** மேற்குறித்த சிறியரைக் கொண்டாயினும், பெரியரைக் கொண்டாயினும், உள்ளே தூசு துடைப் பிக்கவேண்டும். தூசு துடைப்பிக்கப் புகும்போது நீராடிச், சுத்த தேகத்தோடு கால்களில் வத்திரம் சுற்றிக்கொண்டு புகுந்து, முட்டிக் காலிட்டுக் கொண்டு, தூசு துடைக்கச் செய்விக்க வேண்டும். விளக்கு வைக்கின்றபோதும் இங்ஙனமே செய்விக்க வேண்டும்.



**விளக்கு** வைத்தற்கும் தூசு துடைத்தற்கும் தொடங்குகின்ற பன்னிரண்டு வயதுக்குட்பட்ட சிறுவரும் எழுபத்திரண்டு வயதுக்கு மேற்பட்ட பெரியரும், பொருள், இடம், போகம் முதலியவற்றில் இச்சை சிறிதும் இல்லாதவர்களாய், தெய்வ நினைப்புள்ளவர்களாய், அன்புடையவர்களாயிருத்தல் வேண்டும். விளக்கு வைக்கும்போதும், தூசு துடைக்கும்போதும், நம்மவர்களில் நேர்ந்தவர்கள், புறத்தில் நின்று பரிசுத்தராய் மெல்லெனத் **துதிசெய்தல் வேண்டும்.** யாரும் யாதொரு காரியங் குறித்தும் தற்காலம் உள்ளே புகுதல்கூடாது. **ஞானசபைத் திறவுகோல்** ஒருவர் கையிலும் வெளிப்பட இருத்தல் கூடாது. அத்திறவுகோலை வேறொரு பெட்டிக்குள் வைத்து அப்பெட்டியைப் பூட்டி பொற்சபைக்குள் வைத்து அப்பெட்டித் திறவுகோலை ஆஸ்தான காவலுத்தரவாதியா யிருக்கின்றவர் கையில் ஒப்புவித்தல் வேண்டும்.

**தொடர்ச்சி, காலம்நேர்ந்த தருணம் எழுதுகிறேன்.**

இப்படி,




ஆங்கீரச - ஹு
ஆடி - மீ 5உ
1873.

அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை



VALLALAR GROUPS



உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்
அருட்பெருஞ்ஜோதி

## மேட்டுக்குப்பம் சித்திவளாகத் திருமாளிகை சத்திய

# 9. ஞானதீப விளக்கம்

திருச்சிற்றம்பலம்

ஸ்ரீமுகஞூ கார்த்திகைமீ புனர்பூச நட்சத்திரத்தில் உள்ளிருந்த விளக்கைத் திருமாளிகைப் புறத்தில் வைத்து **"தடைபடாது ஆராதியுங்கள்"** இந்தக் கதவை சார்த்திவிடப் போகிறோம். இனி கொஞ்சகாலம் எல்லோரும், ஆண்டவர் இப்போது தீபமுன்னிலையில் விளங்குகிறபடியால் உங்களுடைய காலத்தை வீணிற் கழிக்காமல்,

நினைந்துநினைந்து உணர்ந்துணர்ந்து நெகிழ்ந்துநெகிழ்ந்து அன்பே
நிறைந்துநிறைந் தூற்றெழுங்கண் ணீரதனா லுடம்பு
நனைந்துநனைந் தருளமுதே நன்னிதியே ஞான
நடத்தரசே யென்னுரிமை நாயகனே யென்று
வனைந்துவனைந் தேத்துதுநாம் வம்மினுல கியலீர்!
மரணமிலாப் பெருவாழ்வில் வாழ்ந்திடலாங் கண்டீர்
புனைந்துரையேன் பொய்புகலேன் சத்தியஞ்சொல் கின்றேன்
பொற்சபையிற் சிற்சபையிற் புகுந்தருண மிதுவே.

என்னும் 28 பாசுரங்களடங்கிய பாடலிற்கண்டபடி, தெய்வ பாவனையை இந்தத் தீபத்தில் செய்யுங்கள். நாமிப்போது இந்த உடம்பிலிருக்கிறோம். இனி எல்லா உடம்பிலும் புகுந்து கொள்வோம் :—

**ஸ்ரீமுக வருஷம் தைமீ வள்ளலார் திருக்காப்பிட்டுக் கொள்ளுந் தருணம் வெளியிட்டவை :—**

"நாம் உள்ளே பத்துப்பதினைந்து தினமிருக்கப் போகிறோம். பார்த்து அவநம்பிக்கை யடையாதீர்கள். ஒருகால் பார்க்க நேர்ந்து பார்த்தால் யாருக்குந் தோன்றாது வெறுவீடாகத்தா னிருக்கும்படி ஆண்டவர் செய்விப்பார். என்னைக் காட்டிக் கொடார். **சுத்த பிரணவ ஞான** தேகத்துடன் வெளிப்படுவோம். நாம் திருக்கதவை மூடியிருக்குங்கால் அதிகாரிகள் திறக்கும்படி ஆக்ஞாபிக்கின் ஆண்டவர் அருள்செய்வார்"

அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை



உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்
அருட்பெருஞ்ஜோதி

## சித்திவளாகம், தருமச்சாலை, சன்மார்க்க சங்க

### அன்பர்கள் பரஸ்பரம் பழகுவதற்கு

# 10. எச்சரிப்புப் பத்திரிகை

திருச்சிற்றம்பலம்

ஆண்டவர் ஒருவர் உள்ளாரென்றும், அவர் பொதுப்பட உலகத்துள்ளார் யாவரும் சன்மார்க்கப் பெரும் பயன் பெற்று, நித்திய வாழ்வு வாழ்தற்பொருட்டு வெளிப்படக் காரியப்படுகின்றனர் என்றும், அது காலையில் நாமும் ஆன்ம லாபத்தைப் பெற்றுக் கொள்ளுவோ மெனவும் நம்பி, இங்கே வசிக்கும் யாவரும், வழிபாடு விஷயத்தில் ஒரு தடையும் சொல்லாது ஒத்து இருத்தல் அவசியம். அன்றியும் காலபேதத்தால் அல்லது மற்ற வகையால் அவ்வத்திருணங்களில் நேரிடும் குரோதத்தால் விளையும் துவேஷாதிகள் உண்டானாலும், அல்லது உண்டாகிறதா யிருந்தாலும், உடனே ஜாக்கிரதைப்பட்டு அதை முற்றிலும் மறந்துவிடல் வேண்டும். அப்படி யிருத்தல் மேல் வினையை உண்டுபண்ணுதிருக்கும் அப்படி இனிமேல், ஒருவரை யொருவர் அதிக்கிரமித்த வார்த்தைகளால் சண்டை விளையத் தக்கதாக வைதாலும் அப்படி வைதவர்களையும் அந்த வைதலைக்கேட்டு சகிப்பவர்களோடு, மறுத்தபடி அத்துவேஷத்தை ஒருங்கேவிட்டு மறந்து மனக்கலப்புடன் மருவுதல் வேண்டுவது. அப்படி மருவாதவர்களையும், உடனே ஒதுக்கிவிட வேண்டுவது. அல்லது குரோதத்தால் விளையும் அக்கிரம அதிக்கிரம வார்த்தைகளைக் கேட்டுத் தாங்கள் எதிர்த்து வார்த்தையாடாமல் கூட்டத்தாரில் அப்போது இருக்க வாய்ந்த இரண்டொருவருக்குத் தெரிவித்தல்வேண்டும். அப்படித் தெரிவிக்காதவர்களும் எதிர்த்துச் சண்டை தொடுப்பவர்களும் இங்கிருத்தல் அனுவசியம். அப்படிப்பட்டவர்களை ஒரு பேச்சுமில்லாமல், இந்த இடம் விட்டுப் போய்விடத்தக்க முயற்சி ஒவ்வொருவரும் செய்தல் வேண்டும்.

ஆங்கீரசஞூ கார்த்திகைமீ 12உ 1873
அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை

VALLALAR GROUPS



உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

அருட்பெருஞ்ஜோதி

# 11. சமாதி

## வற்புறுத்தும் பத்திரிகை

**(சாலை சம்பந்தம் உடையவர்களுக்கு மாத்திரம்)**

திருச்சிற்றம்பலம்

அன்புள்ள நீங்கள் சமரச வேத சன்மார்க்க சங்கத் தருமச் சாலைக்கு மிகவும் உரிமையுடையவர்களாயின் உங்களுக்கு உண்மையுடன் அறிவிப்பது :

**நீங்களும் உங்களை அடுத்தவர்களும் சிற்றம்பலத் தந்தையார் திருவருளால் சுகமாக வாழ்வீர்களாக.**

கர்மகால முதலிய பேதங்களால் யாருக்காயினும் தேக ஆனி நேரிட்டால் [1]**தகனம் செய்யாமல் சமாதியில் வைக்கவேண்டும்.**

இறந்தவர்கள் திரும்பவும் எழுந்து திரும்ப நம்முடன் இருக்கப் பார்ப்போமென்கிற முழு நம்பிக்கையைக்கொண்டு எவ்வளவுந் துயரப் படாமலும், அழுகூல்செய்யாமலும் சிற்றம்பலக் கடவுள் சிந்தனையுடனிருக்கவேண்டும். புருடனிறந்தால் மனைவி தாலி வாங்குதல் வேண்டாம், மனைவி இறந்தால், புருடன் வேறு கல்யாணப் பிரயத்தனம் செய்யவேண்டாம். பிள்ளைகளிறந்தால் சஞ்சலிக்க வேண்டாம். கர்ம காரியங்கள் ஒன்றும் செய்யவேண்டாம். தெரிவிக்கத் தக்கவர்களுக்குத் தெரிவித்து ஒரு தினத்தில் நேரிட்டவர்களுக்கு நேரிட்ட மட்டில் **அன்ன விரயம் செய்யவேண்டும்.** இவ்வாறு உண்மையாக நம்பிச் செய்யுங்கள். செய்திருந்தால் சமரசவேத சன்மார்க்க சங்கமும் மேற்படி தருமச்சாலையும் நிலைபெற விளக்கஞ் செய்யும்பொருட்டாகவும் கருணைகூர்ந்து **எனது தந்தையாராகிய எல்லாம்வல்ல திருச்சிற்றம்பலக்கடவுள்** பார்வதிபுரம் சமரசவேத சன்மார்க்க சங்கத் தருமச்சாலைக்கு எழுந்தருளிக் காட்சி கொடுக்குந்தருணம் மிகவும் அடுத்த

[1]**பரனளிக்குந் தேகமிது சுடுவது அபராத மெனப் பகர்கின் றேனீர்**
**சிரனளிக்கச் சுடுகின்றீர் செத்தவர்கள் பற்பலருஞ் சிதத சாமி**
**உரனளிக்க வெழுகின்ற திருநாள்வந் தடுத்தனவீ துணர்ந்து நல்லோர்**
**வரனளிக்கப் புதைக்க நிலை காணீரோ கண்கெட்ட மாட்டி னீரே.**

**(ஆறுவது திருமுறை 111-ம் பதிகம் கவனிக்கவும்)**



சமீபமாக இருக்கின்றது. அந்தத் தருணத்தில் **சாலைக்கு உரியவர்களாக** இருந்து இறந்தவர்களை யெல்லாம் எழுப்பிக்கொடுத்தருளுவார். இது சத்தியம், சத்தியம்.

இந்தக் கடிதம் வெளிப்பட்டறிந்து கொள்ளாமுன் இறந்து தகனமானவர்களையும் எழுப்பியருளுவார். இது வெளிப்பட்டறிந்தபின் **தகனம் செய்யக் கூடாது அது சன்மார்க்கச் சங்கத்திற்குத்** தக்கதல்ல. ஆகலில் மேற்கண்டபடி உண்மையான நம்பிக்கையுடன் வாழ்வீர்களாக.


எனக்கு உலகு அறிவு தெரிந்ததுதொட்டு, எனது தந்தையார் திருவருளை நான் அடையும்வரையில், என்னுடன் பழகியும், என்னை நம்பியடுத்தும், என்னைக் கேள்வியால் விரும்பியும், எனக்குரிமைப்பட்டும் இருந்து இறந்தவர்களை யெல்லாம் எழுப்பிக்கொடுத்து சமரச சன்மார்க்க சங்கத்தை விருத்தி செய்விக்கத் திருவுளத்துக்கருதிய, **பெருங்கருணை வள்ளல்** சாலைக்குரியவர்களாகி இருந்தும் அவநம்பிக்கையுடனிருக்கின்றவர்கள் விஷயத்திலும், இந்த உபகாரஞ் செய்தேயருளுவார். ஆனல், அவர்கள் சன்மார்க்க சங்கத்திற்கு மாத்திரம் அருகராகார்கள்.

**ஆகலில் நம்பிக்கையுட னிருங்கள்.**

**பெரிய களிப்பை அடைவீர்கள். இது சத்தியம் சத்தியம்.**

சாலை சம்பந்தமில்லாதவர்களுக்கு இந்தக் கடிதத்தைத் தெரிவிக்கவேண்டாம்.

இப்படி,



பிரமோதூத - ஸூ
பங்குனி-மீ 18உ
1871

அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை

VALLALAR GROUPS



உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்
அருட்பெருஞ்ஜோதி

சமரச சுத்தசன்மார்க்க

## 12. சத்திய ஞானசாரம்

### சுத்ததேகம்

திருச்சிற்றம்பலம்

இதுவரையில் கர்மசித்தருடைய காலம். அதனால் சமயங்களும், மதங்களும், பரவி யிருந்தன. இப்போது வரப்போகிறது ஞான சித்தருடைய காலம். இனி ஜாதி, சமய முதலான ஆசாரங்க ளெல்லாம் போய், சமரச சுத்தசன்மார்க்க சத்திய ஞான ஆசாரம் ஒன்றே விளங்கும். சமய மதங்களில் சொல்லுகிற கர்த்தர்கள், மூர்த்திகள், ஈசுரன், பிரமம், சிவம் முதலிய தத்துவங்கள் காலப் பிரமாண பரியந்தம் இருப்பதே யொழிய அதற்கு மேலிராது.

சமய மதங்களில் சொல்லுகிற கர்த்தர்களுடைய சித்திகள், சர்வ சித்திகளுடைய கடவுளின் சித்தியின் லேசங்கள், அந்த சர்வசித்தியையுடைய கடவுளுக்கு ஒப்பாகார்கள். கோடி கோடி பங்கு தாழ்ந்ததரத்திலிருக்கிறார்கள். இப்போதிருக்கும் வேதாகம புராணங்களிலும் சமய மதங்களிலும் லட்சியம் வையாதீர்கள். வைத்தால் சமரச சுத்த சன்மார்க்கத்தில் உங்களுக்கு லட்சியம் வராது. வராவிட்டால் நீங்கள் அடையப் போகிறது ஒன்றுமில்லை. ஆதலால் அதுகளெல்லாம் பற்றறவிட்டு, சர்வ சித்தியையுடைய கடவுள் ஒருவருண்டென்றும், அவர் ஒருவரே யென்றும், அவரை உண்மையன்பால் வழிபாடு செய்யவேண்டும்.

அப்படிப்பட்ட சமரச சுத்த சன்மார்க்கத்திற்குரிய கடவுளை வழிபாடு செய்வதற்குச் சாதனம் இருவகை: 1. பர உபகாரம், 2. சத்விசாரம்: பர உபகாரமென்பது :—தேகத்தாலும், வாக்காலும், திரவியத்தாலும், உபகாரஞ் செய்வது. சத்விசாரமென்பது : – நேரிட்ட பக்ஷத்தில் — ஆன்ம நேய சம்பந்தமான தயாவிசாரத்தோடு இருப்பது. கடவுளது புகழை விசாரித்தல், ஆன்மாவின் உண்மையை விசாரித்தல், தன் சிறுமையைக் கடவுளிடத்தில் விண்ணப்பித்தல் இந்த மார்க்கத்தால்தான் சுத்த தேகம் பெறவேண்டும்.

அருட்பெருஞ்ஜோதி

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்
அருட்பெருஞ்ஜோதி

# திரு அருட்பா

## சமரச சுத்தசன்மார்க்கத் திருநெறிக் குறிப்புகள்*

### 1. ஷடாந்த சமரச சுத்தசன்மார்க்க சங்கம்

திருச்சிற்றம்பலம்

சமரச வேத சன்மார்க்க சங்கம். என்பதற்குப் பொருள் :—

எல்லாச் சமயங்களுக்கும் பொதுவாகிய அறிவுநூல் முடிபான நான்காவது மார்க்கத்தை அநுஷ்டிக்கின்ற கூட்டமென்று கொள்க.

மேற்படி மார்க்கம் நான்காவன :— 1. தாசமார்க்கம், 2. சற்புத்திர மார்க்கம். 3. சகமார்க்கம், 4 சன்மார்க்கம் என நான்கு.

**ஷடாந்த சமரச சுத்த சிவ சன்மார்க்கம் என்பதில் ஷடாந்தம் என்பது யாது?**

வேதாந்தம், சித்தாந்தம், போதாந்தம், நாதாந்தம், யோகாந்தம், கலாந்தம் ஆக ஆறு. மேற்படி அந்தங்களின் அநுபவம், காலம், இடம், முதலிய வேறுபாடுகளால் ஏறிக் குறையும். ஆதலால் ஷடாந்தமும் வியாபக மில்லாமல் வேதாந்த சித்தாந்தத்தில் நான்கந்தமும் வியாப்பியமா யிருக்கின்றன

*இத் திருநெறிக் குறிப்புகள் திருவருட்பிரகாச வள்ளலார் வடலூரில் சத்திய தருமச்சாலையிலும், சித்திவளாகத்திலும் தமது அன்பர்களுக்குச் சன்மார்க்க போதனை செய்த காலங்களில் அன்பர்கள் குறித்துவைத்த குறிப்புகளில் இப்பொழுது கிடைத்தவை.

VALLALAR GROUPS



**மேற்படி அந்தம் நான்கின் ஐக்கிய விபரம் :—**

வேதாந்தத்தில் போதாந்த யோகாந்தமும், சித்தாந்தத்தில் நாதாந்த கலாந்தமும்., அடங்கியிருக்கின்றன. இந்த ஐக்கியம்பற்றி வேதாந்த சித்தாந்தமே இப்போது அனுபவத்தில் சுத்த வேதாந்த, சுத்த சித்தாந்தமாய் வழங்குகின்றன.

இவற்றிற்கு அதீதமாகிய சுத்த வேதாந்த சித்தாந்த அந்தாந்தமாகிய **சமரச சுத்த சன்மார்க்கமே — நித்திய மார்க்கம்.** மேற்குறித்த மார்க்கத்திற்குச் சமய மதங்களாகிய சன்மார்க்கங்கள் அநந்நியமாய் விளங்கும் ; அந்நியமல்ல.

**மேற்படி சமயமத மார்க்கங்கள் எவை ? எனில் :—**

சமய சன்மார்க்கம், மத சன்மார்க்கம் என இரண்டு. இவற்றுள் அடங்கிய சன்மார்க்கம் அநந்தம். அதில் சமய சன்மார்க்கத்தின் வகை ஆறு, தொகை முப்பத்தாறு. விரிவு அறுகோடி, இதுபோல் மதத்திலும் வகை தொகை விரிவு உள்ளன. மேற்குறித்த சமயமத சன்மார்க்கங்களில், வகரவித்தை தகரவித்தையுள. அவை அவ்வச் சமயமத சன்மார்க்கங்களின் தலைமையாகிய கர்த்தா, மூர்த்தி. ஈசுரன், பிரமம், சிவம் முதலிய தத்துவங்களின் காலப்பிரமாண பரியந்தமிருக்கும்; அதற்கு மேலிரா,

**மேற்படி சமயமத சன்மார்க்கங்களில் ஷடாந்த சமரச முளதோ வெனில் :—**
உளது. யாதெனில் :

**வேதாந்த** சித்தாந்த சமரசம் : யோகாந்த கலாந்த சமரசம் : போதாந்த நாதாந்த சமரசம் ; இதற்கு அதீதம் **ஷடாந்த சமரசம்.** இதற்கு அதீதம் **சன்மார்க்க சமரசம்.** இதற்கு அதீதம், சுத்த சமரசம். ஆதலால் சுத்த சமரசத்தில், சன்மார்க்கத்தைச் சேர்க்க. சுத்த சமரச சன்மார்க்கமாம். இது பூர்வோத்தர ஞாயப்படி, கடைதலைப் பூட்டாகச் சமரச சுத்த சன்மார்க்கம என மருவியது.

**இதன் தாத்பரியம் யாதெனில் :—**

**1. சமரசம் என்பதற்குப் பொருள் :—**

எல்லா அந்தங்களினது அந்தமும் தனக்குப் பூர்வமாக்கித் தானுத்தரத்தில் நின்று மருவியது சமரசம். இதற்கு அனுபவம் குருதுரிய ஸ்தானம்.

**2. சுத்த சமரச மென்பதற்கு ஞாயம் :—**

விந்து, பரவிந்து. இரண்டையும் மறுக்கச் சுத்தவிந்து வந்தது போலும் : சிவம், பரசிவம், இரண்டையு மறுத்தது சுத்தசிவம போலும் ; சன்மார்க்கம், சிவசன்மார்க்கம் இரண்டையும் மறுத்தது சுத்த சன்மார்க்கம.

பூர்வத்தில் நின்ற சமயமத சன்மார்க்கங்களை மறுப்பது சுத்த சன்மார்க்கம். இதன் பொருட்டு **ஷடாந்த சமரச சுத்த சன்மார்க்க** மென்றே மருவியது, ஒருவாது. ஷடாந்தங்களின் பொதுவாகிய, ஷடாந்த சன்மார்க்கம் ஒன்று; இதன்



பூர்வத்தில் சமரச சன்மார்க்கம் ஒன்று ; இதன் உத்தரத்தில் சுத்த சன்மார்க்கம் ஒன்று; ஆதலால் ஷடாந்த சமரசம். ஆன்மாவுக்கு அருள் எப்படி அநந்நியமோ, அதுபோற் சுத்த சன்மார்க்கத்திற்குப் பூர்வத்தில் சொன்ன சன்மார்க்கங்கள் யாவும் அநந்நியம்.

**சன்மார்க்கம் என்பதில் வகை தொகை விரிவு அனந்தம்.**
**இதன் தாத்பரியம் யாதெனில் :—**

**சமய சன்மார்க்கத்தின்** பொருள் குணத்தினது லட்சியத்தை அனுசந்தானஞ் செய்வது.

**குணமென்பது யாது ?**

**சத்துவ குணம் :** இயற்கை உண்மை எகதேசமான சத்துவ குணத்தின் சம்பந்தமுடைய மார்க்கமே சமய சன்மார்க்கம்.

**சத்துவ சம்பந்தமுடைய மார்க்கம் யாதெனில் ;**

**சத்போதம்,** சத்கர்மம், சத்சங்கம், சத்காலம், சத்விசாரம், சத்பாத்திரம், சற்சனம், சற்செய்கை முதலியனவும் சத்துவ சம்பந்தம் உடையன.

**இதன் இயல்பாவன :—**

**கொல்லாமை பொறுமை, சாந்தம், அடக்கம், இந்திரிய நிக்கிரகம்** ஆன்ம இயற்கைக் குணமாகிய **ஜீவகாருண்யம்.** இது சத்துவ குணத்தின் வாச்சியார்த்தம், இவ்வண்ணம் வாச்சியானுபவம் பெற்றுச் சொருபானு பவமாகிய சாதனமே சமய **சன்மார்க்கம்.**

**சமயாதீதமாவது : மதம்,** மத சன்மார்க்கத்தின் பொருள் : நிர்க்குண லக்ஷியஞ் செய்வது.

**நிர்க்குணமாவது :—** பூர்வ குணமாகிய சத்துவத்தின் வாச்சியானுபவம் பெற்று லட்சியானுபவம் பெறுதல், யாதெனில் :

**சோகம், சிவோகம், தத்துவமசி, சிவத்துவமசி** என்னும் வாக்கியத்தின் முக்கியானுபவம்.

**சத்துவகுண நிர்க்குண லட்சியத்திற்கு மார்க்கம் நான்கு எவை எனில் :—**

சத்துவகுணத்தின் முதல் விளைவு, தன்கூடிமையாகப் பலரையும் பாவித்தல், இரண்டாவது புத்திரனாகப் பாவித்தல், மூன்றாவது சிநேகிதனைப்போலப் பாவித்தல், நான்காவது தன்னைப்போலப் பாவித்தல், இது ஜீவ ஞாயம், இவ்வாறே தான் **கடவுளுக்கு அடிமையாதல், புத்திரனாதல், சிநேகனாதல், கடவுளே தானாதல்.** இது சத்துவகுண லட்சியார்த்தமாகிய **மத சன்மார்க்க முடிபு.**

சத்துவகுண விளைவு என்பதற்குப் பொருள் :—சத்துவ குணத்தின் முக்கிய லட்சியமாகிய எல்லாம்வல்ல சர்வசித்தியோடு ஞானசித்தியைப் பெறுதல்,

VALLALAR GROUPS



'நெல்லை விளைத்தான்' என்பதன் பொருள் — உழுதல் தொடங்கிக் கிருகத்தில் சேர்த்து அனுபவிக்கிற பரியந்தம் — அடங்கியிருப்பதுபோல் சன்மார்க்கம் என்பது : சாதாரணம் முதல் அசாதாரணம் ஈறாக அடங்கிய பொருளெனக் கொள்க

குண நிர்க்குண வாச்சிய லட்சியார்த்தமாகிய சமய மதத்தின் அனுபவ மல்லாதது சுத்தசன்மார்க்கம். இம்மார்க்கத்திற்கு மேற்குறித்த மார்க்கங்கள் அல்லாதனவே யன்றி இல்லாதன வல்ல.

**சுத்த சன்மார்க்கந்தான் யாதெனில் :**

சுத்தம். என்பது. ஒன்றுமல்லாதது. சுத்தம் என்பது சன்மார்க்க மென்னுஞ் சொல்லுக்குப் பூர்வம் வந்ததால். மேற்குறித்த சமய மதானுபவங் களைக் கடந்தது.

சத்மார்க்கம் என்னும் பொருட்கு அர்த்தம் நான்குவகை :— அஃது பூர்வாதி உத்தரோத்ர பரியந்தம். இதின் முக்கிய லட்சியம் சுத்தசன்மார்க்கம். அனுபவ ஸ்தானமாகிய, சுத்த சிவ துரியாதீத நிலை பெறில் விளங்கும்.

**ஏகதேசத்தில் ஒருவாறு பூர்வம் என்பதற்குப் பொருள் :—**

சிருஷ்டியாதி அனுக்கிரக மீறாகச் செய்யும். பிரமாதி சதாசிவ மீறாகவுள்ள பஞ்சகிருத்திய கர்த்தர்களி லொவ்வொரு கிருத்தியத்தின் விரிவு ஐந்தாக விரிந்த கர்த்தர் பேதம் (25) இருபத்தைந்தாக விரிந்த மஹா சதா சிவாந்த அனுபவ காலத்தை, அறுபத்து நாலாயிரத்தில், (64,000) பெருக்கிய கால அளவு எவ்வளவோ, அக்கால அளவு சுத்த மகா சதா சிவானுபவத்தைப் பெற்றுச் சுத்த தேகியா யிருப்பது. சத் தென்பது பரிபாஷை. அது அனந்த தாத்பர் யங்களைக் கொண்டு ஓர் வாக்கியபதமாய் நின்றது. மார்க்கம் என்பது யாதெனின் :— துவாரம். வழி. வழி யென்பது :— சத்தென்னும் பொருளின் உண்மையைத் தெரிவிக்கிற மார்க்கம். ஆதலால் எவ்வகையிலும் உயர்வுடையது— பாவனாதீதாதீதம், குணாதீதாதீதம், லட்சியாதீதா தீதம். வாச்சியா தீதா தீதம் : ஆகிய சுத்த சன்மார்க்கம்.

**மேற்படி மார்க்கத்தின் ஏகதேசம் அடியிற் குறிக்கும் அனுபவங்கள் :—**

எக்காலத்தும் எவ்விடத்தும் எவ்விதத்தும் எவ்வகைத் தடையும் வாராத சுத்தமாதி ஞானதேக சித்தியும். அண்ட பிண்ட தத்துவங்களைச் சுதந்தரத்தில் நடத்தும் தனிப்பெரும் வல்லபமும், ஏமசித்தி. பிரேதஜீவிதாதி சித்தியும், வஸ்துப் பிரத்தியக்ஷானுபவ சித்தியும் — ஆகிய இவற்றை ஒருங்கே அடைவது மேற்குறித்த மார்க்கத்தின் முடிபு ஒருவாறு.

சத் என்னும் சொல் பரிபாஷை என்பதற்குக் குழூஉக் குறியாக இதன் கீழ்வரும் சில மந்திர வாசக பத வர்ணாதிகளை உணர்க.



காரண மாத்திரமாய் விளங்கா நின்ற — விந்து நாத முதலியனவும் : காரிய காரணமாத்திரமாய் விளங்கா நின்ற — அம் அங் சிங் வங் மங் சிவா வசி ஓம் முதலியனவும் : காரிய மாத்திரமாய் விளங்கா நின்ற — ஹரி, சச்சிதானந்தம். பரிபூரணம். ஜோதியுட ஜோதி. சிவயவசி. சிவயநம, நமசிவய, நாராயணாயநம, சரவணபவாயநம முதலியனவும் :— இவ்வண்ணம் குறித்த பரிபாஷைகளின் உண்மை ஆன்ம அனுபவத்திலும் வகர தகர வித்தையினும் விளங்கும்.

மேலும், மேற்குறித்த வண்ணம் தத்துவங்களை உபாசித்தும், அர்ச்சித்தும். தத்துவா தீதா தீதத்தைத் தியானித்தும், இடையில் ஜபித்தும், கரண லயமாகச் சமாதிசெய்தும், தத்துவச் சேட்டைகளை அடக்கா நின்ற விரதமிருந்தும், சாதாரண யோகபாகத்தில் மூச்சடக்கியும், சாதகர்கள் — மேற்குறித்த வண்ணம் — செய்வார்கள். சாத்தியர்கட்கே — **கேட்டல், சிந்தித்தல் தெளிதல், நிஷ்டை கூடல்** என்னும் நான்கும் கடந்து அவர்கள் ஆரூடராக நிற்பதால் — **சாதன மொன்றும் வேண்டுவதில்லை.** மேற்படி **சாத்தியர்களே சுத்த தேகிகள்.** அவர்கள் அனுபவத்தை விரிக்கில் பெருகும்.

## 2. நித்திய ஒழுக்கம் என்னும் உலகியல்

### 1. சாதாரண நித்திய கரும விதி

**காலைக்கடன்**

**திருச்சிற்றம்பலம்**

சூரியோதயத்திற்கு முன் நித்திரை நீங்கி எழுந்து. விபூதி தரித்துச் சிறிது நேரம் உட்கார்ந்து கடவுளைத் தியானஞ் செய்தல் வேண்டும்.

பின்பு. களிப்பாக்கு மிகுதியாகவும் வெற்றிலை சுண்ணம்பு குறைவாகவும் போட்டுக்கொண்டு, முன் ஊறுகிற ஜலத்தை உமிழ்ந்து. பின்வரும் ஜலத்தை யெல்லாம் உட்கொள்ளல் வேண்டும். பின்பு எழுந்து உள்ளே சற்றே உலாவுதல் வேண்டும். பின் மல ஜல உபாதிகளைக் கழித்தல் வேண்டும். மலங் கழிக் கின்றபோது வலது கையால். இடது பக்கம் அடிவயிற்றைப் பிடித்திருத்தல் வேண்டும். ஜலங் கழிக்கும்போது, இடது கையால் வலது பக்கம் அடிவயிற்றைப் பிடித்திருத்தல் வேண்டும் மலமாவது ஜலமாவது பற்றறக் கழியும் வரையில். வேறு விஷயங்களைச் சிறிதும் நினையாமல், மலஜல சங்கற்பத்தோடு இருக்கவேண்டும். மலம் பின்னுந் தடைபடுமானல், இடது பக்கமாகச் சற்றே படுத்துப் பிராண

VALLALAR GROUPS



வாயுவை வலத்தே வரும்படி செய்துகொண்டு, மல சங்கற்பத்தோடு மலவுபாதி கழித்தல்வேண்டும். ஜலம் தடைபட்டால், வலது பக்கமாகச் சற்றே படுத்துப் பிராணவாயுவை இடது பக்கம் வரும்படி செய்து கொண்டு, ஜல சங்கற்பத்தோடு ஜலவுபாதி கழித்தல் வேண்டும்.

மலஜல வுபாதி கழிந்தபின் செவிகள், கண்கள், நாசி, வாய், தொப்புள் இவைகளில் அழுக்கு, பீளை, சளி, ஊத்தை என்கின்ற அசுத்தங்களையும், கை கால் முதலிய உறுப்புக்களிலுள்ள அழுக்குகளையும் வெந்நீரினால் பற்றறத் துடைத்தல் வேண்டும். பின் வேலங்குச்சி, ஆலம் விழுது — இவைகளைக் கொண்டு பல்லழுக்கெடுத்து. அதன்பின் கரிசலாங் கண்ணித் தூள்கொண்டு உள்ளே சிறிது சாரம் போகும்படி பல்லில் தேய்த்து வாயலம்பின பின்பு,

### காலை ஆகாரம்

பொற்றலைக் கையாந்தகரை இலை அல்லது கரிசலாங்கண்ணி இலை ஒரு பங்கு, — தூதுளையிலை, முசுமுசுக்கையிலை கால்பங்கு, — சீரகம் கால்பங்கு — இவைகளை ஒன்றாகச் சேர்த்துச் சூரணமாகச் செய்துகொண்டு அதில் ஒரு வராகனெடையை ஒரு சேர் நல்ல ஜலத்திற்போட்டு, அதனுடன் ஒரு சேர் பசுவின் பால்விட்டுக் கலந்து, அதிலுள்ள ஒரு சேர் ஜலமுஞ் சுண்டக் காய்ச்சி, அந்தப் பாலில் நாட்டுச் சர்க்கரை கலந்து சாப்பிடல் வேண்டும்.

### காலை வெய்யில் கூடாது

காலையில் இளம் வெய்யில் தேகத்திற் படாதபடி, பொழுதுவிடிந்து ஐந்து நாழிகை பரியந்தம் உடம்பைப் போர்வையோடு காத்தல் வேண்டும். பின்பு வெய்யிலில் நெடுநேரம் தேகமெலிவு வரத்தக்க உழைப்பை யெடுத்துக் கொள்ளாமல், இலேசான முயற்சியில் சிறிது வருத்தந்தோன்ற முயலுதல் வேண்டும். பின் **இளம்வெந்நீரில் குளித்தல் வேண்டும்.** விபூதி தரித்துச் சிவசிந்தனையோடு சிறிதுநேரம் இருத்தல் வேண்டும்.

### பகல் ஆகாரம்

பசி கண்டவுடன் தடை செய்யாமல் ஆகாரம் கொடுத்தல் வேண்டும். ஆகாரங் கொடுக்கும்போது மிகுந்த ஆலசியமுமாகாது. மிகுந்த தீவிரமுமாகாது. முதற்பக்ஷம் சீரகச்சம்பா அரிசி — அன்றிப் புன்செய் விளைவும். காரரிசியுந் தவிர — நேரிட்ட அரிசியின் வகைகள் — ஆகும். அது சாதமாகும்போது அதிக நெகிழ்ச்சியுமாகாது. அதிக கடினமுமாகாது. நடுத்தரமாகிய சோற்றை அக்கினி அளவுக்கு அதிகப்படாமலும், குறைவுபடாமலும் அறிந்துண்ணுதல் வேண்டும். ஆயினும் ஒருபிடி குறைந்தபக்ஷமே நன்மை. **போஜனஞ் செய்த பின்னர்** நல்ல நீர் குடித்தல் வேண்டும். **அந்த நல்ல நீரும் வெந்நீராதல் வேண்டும்.** அதுவும் அதிகமாகக் குடியாதிருத்தல் வேண்டும்.

### ஆகார வகை

கிழங்கு வகைகள் உண்ணாமல் இருக்கவேண்டும். அவற்றில் கருணைக் கிழங்கு மாத்திரம் கொள்ளுதல் கூடும். பழவகைகள் உண்ணாதிருத்தல்



வேண்டும். அவற்றில் பேயன்வாழைப்பழம் ரஸ்தாளி வாழைப்பழம் — இவ்வ நேர்ந்தால் சிறிது கொள்ளுதல் கூடும். **பழைய கறிகளைக் கொள்ளா திருத்தல் வேண்டும்.** பதார்த்தங்களில் **புளி, மிளகாய்** சிறிதே சேர்க்க வேண்டும். மிளகு, சீரகம் அதிகமாக சேர்த்தல் வேண்டும். கடுகு சேர்ப்பது அவசியமல்ல. உப்பு குறைவாகவே சேர்த்துக்கொள்ள வேண்டும் அன்றி, எந்த வகையிலும் **உப்பு மிகுதியாகக் கொள்ளாமல் உபாயமாகக் கொள்ளுவது தேகம் நீடிப்பதற்கு ஏதுவாம்.** தாளிப்பில் பசுவெண்ணெய் நேரிட்டால் தாளிக்கவேண்டும். நேராத பக்ஷத்தில் நல்லெண்ணெய் சிறிது சேர்க்கவுங்கூடும். வெங்காயம், வெள்ளைப் பூண்டு சிறிதே சேர்க்கவேண்டும். கத்தரிக்காய், வாழைக்காய், அவரைக்காய், முருங்கைக்காய், பீர்க்கங்காய், கலியாண பூசுணிக்காய், புடலங்காய், தூதுளங் காய், கொத்தவரைக்காய் — இவைகள் பதார்த்தஞ் செய்தல் கூடும். இவற்றினுள் முருங்கை, கத்தரி, தூதுளை, பேயன் வாழைக்காய் — இவைகளை அடுத்தடுத்துக் கறிசெய்து கொள்ளலாம் மற்றவைகளை ஏகதேசத்தில் செய்து கொள்ளலாம்.

வடை, அதிரசம், தோசை, மோதகம் முதலிய அப்ப வர்க்கங்கள் கொள்ளப் படாது; ஏகதேசத்தில் சிறிது கொள்ளவுங்கூடும். சர்க்கரைப் பொங்கல், ததியோதனம், புளிச்சாதம், முதலிய சித்திரான்னங்கள் கொள்ளப்படாது; ஏகதேசத்தில் சிறிது கொள்ளலாம்.

**புளியாரைத் துவையல் தினந்தோறும் கிடைக்கினும்** மிகவும் நன்று. கரிசலாங்கண்ணிக்கீரை, தூதுளைக்கீரை, முன்னைக்கீரை பசலைக்கீரை, முருங்கைக் கீரை இவைகளைப் பருப்போடு சேர்த்தும், மிளகோடு சேர்த்தும், புளி யிட்டும் தனித்தும் கறிசெய்துகொள்ளக் கூடும். மற்றைக் கீரைகள் ஏகதேசத்தி லேனும் சிறிது சேர்த்துக்கொள்ளவுங்கூடும். புளித்த தயிர் சேர்த்தல் கூடும். பருப்பு வகைகளில் — முளை கட்டாத துவரம் பருப்பு, அல்லது முளை கட்டின துவரம் பருப்பு மிளகு சேர்த்துக் கடைதல், துவட்டல், துவையல் செய்தல் குழம்பிடல், வேறொன்றில் கூட்டல் முதலியவாகச் செய்து, நெய் சேர்த்துக் கொள்ளுதல் கூடும். அந்த நெய்யை மிகவுஞ் சேர்க்கப்படாது. மற்றப் பருப்பு வகைகள் அவசியமல்ல. ஏகதேசத்தில் நேர்ந்தால் கொள்ளவுங் கூடும்.

### ஜலம்

சுக்கைச் சுண்ணாம்பு தடவிச் சுட்டு, மேல்தோலைச் சுரண்டிப் போட்டுச் சூரணமாக்கி வைத்துக்கொண்டு, நல்ல ஜலத்திற் கொஞ்சம் போட்டு, ஐந்து பங்கில் மூன்று பங்கு நீர் சுண்ட இரண்டு பங்கு நீர் நிற்கக் காய்ச்சி, அதைத் தாகங் கொள்ளுதல்வேண்டும். நேராதபக்ஷத்தில் வெந்நீராவது கொள்ளுதல் வேண்டு மேயன்றிக் குளிர்ந்த ஜலங் கொள்ளப்படாது.

VALLALAR GROUPS



### எந்தப் போஜனத்திலும் புலால் எந்த வகையிலும் புசிக்கப்படாது

எப்படிப்பட்ட போஜனமாயினும் சிறிது குறையவே புசித்தல் வேண்டும், எந்தக் காலத்திலும் பசித்தா லல்லது எந்த வகையிலும போஜனஞ் செய்யப் படாது வாதபித்த சிலேத்துமங்கள் அதிகரிக்கத்தக்க போஜனங்களை அறிந்து விடல் வேண்டும்.

### பகலில் நித்திரை கூடாது

பகலில் போஜனஞ் செய்தவுடன், சற்றே படுத்தெழுந்தல்லது வேறு காரியங்களில் பிரவேசிக்கப்படாது. ஆயினும், நித்திரை வரும்படி படுக்கப் படாது, பகலில் எந்த வகையிலும் நித்திரை யாகாது. சிறிது படுத்து எழுந்தபின் — பாக்கும் வெற்றிலையும் குறைவாகவும் — சுண்ணம்பு சிறிது அதிகமாகவும் — தாம்பூலம் பஞ்ச வாசங்களோடு தரித்து, முதலில் ஊறிய ஜலத்தைப் புறத்தில் உமிழ்ந்துவிடடுப் பின்பு ஊறுஞ் ஜலததை உட்கொள்ளல் வேண்டும். பகற் போஜனஞ் செய்த சுமார் பதினேழரை நாழிகைக்குப் பின்பு, பேயன் வாழைப் பழம், ரஸ்தாளி வாழைப்பழம், பங்களா வாழைப்பழம் சிறிது சர்க்கரை சேர்த்து சேர்ந்தால் சாப்பிடக் கூடும். காலையில் பால் சாப்பிடும்போது பசி அதிகரித் திருந்தால் இந்தப் பழங்களில் நெய் சர்க்கரை கலந்து சிறிது சாப்பிடக்கூடும்.

### பகலில் பெண்கள் தேகசம்பந்தங் கூடாது

பகற் போஜனஞ் செய்தபின், சற்று நேரங் கடவுளைத் தியானித்திருக்க வேண்டும் அதன்பின் எந்த வேலை செயினுந் தேக கரணங்களுக்கு மெலிவு உண்டுபண்ணுகிற வேலைகளாகச் செய்யப்படாது. செயினுஞ் சிறிது சிற் றாகச் செய்தல் வேண்டும்.

### மாலைக் கடன்

சாயங்கால வெய்யில் தேகத்திற் படும்படி சிறிது உலாவுதல் வேண்டும். காற்று மிகுந்தடிக்கில் அப்போது உலாவப்படாது. அன்றி கடின வெய்யில், பனி, மழை — இவைகள் தேகத்திற்பட உலாவப்படாது,

இராத்திரி முன் பங்கில் தேகசுத்தி செய்து, விபூதி தரித்துச் சிவத்தியானஞ் செய்தல், தோத்திரஞ் செய்தல், சாத்திரம் வாசித்தல், உலகியல் வியவகாரஞ் செய்தல் — இவை முதலியவை கூடும்.

பின் போஜனஞ் செய்தல் வேண்டும். இராப்போஜனம் பகற் போஜனத்தைப் பார்க்கிலும் அற்பமாகப் புசித்தல் வேணடும். இரவில் தயிர், கீரை, வாயுவான பதார்த்தம், குளிர்ச்சியான பதார்த்தம் சேர்க்கப்படாது. சூடான பதார்த்தங் களையே அறிந்து சேர்க்கவேணடும். அவை சிறு கத்தரி, முருங்கை, அவரை, வற்றல் முதலியவை யாம் : இரவில் போஜனஞ் செய்தபின், சிறிது உள்ளே



உலாவுதல் வேண்டும் பின்பு சிவத்தியானம் முதலியவை செய்தல்வேண்டும். சுமார் பன்னிரண்டு நாழிகைக்கு மேல் நாலைக்குச் சொல்லியபடியாவது தனித் தாவது பசுவின்பாலை நன்றாகக் காய்ச்சிக் குடித்தல்வேண்டும். பின் சிலநேரஞ் சென்று சுமார் பதினைந்து நாழிகையில் பாக்கும் சுண்ணம்பும் மிகவும் குறைய வெற்றிலை மிகவும் அதிகப்படக் கலந்து பஞ்ச வாசத்தோடும் போட்டுக்கொண்டு, முதற் ஜலத்தை யுமிழ்ந்து பின்வருஞ் ஜலத்தை உட்கொண்டு திப்பியை உமிழ வேண்டும். மற்ற வேளையும் தாம்பூலத்தின் திப்பியை உமிழுதல் அவசியம்.

### நித்திரை

பெண்களுடன் தேக சம்பந்தம் செய்யவேண்டில். முன் ஒரு நாழிகை பரியந்தம் மனத்தை தேகசம்பந்தத்தில் வையாது வேறிடத்தில் வைத்துப் பின் சம்பந்தம் செய்தற்குத் தொடங்கல் வேண்டும். தொடங்கியபோது அறிவு விகற்பியாமல் — மன முதலிய கரண சுதந்திரத்தோடு, தேகத்திலும் கரணங் களிலுஞ் சூடு தோன்றாமல், இடதுபுறச் சாய்வாகத் தேகசம்பந்தஞ் செய்தல் வேண்டும். புத்திரனைக் குறித்த காலத்தன்றி மற்றக் காலங்களில் சுக்கிலம் வெளிப்படாமலிருக்கத்தக்க உபாயத்தோடு தேகசம்பந்தம் செய்யவேண்டும். அவ்வுபாயமாவது : பிராணவாயுவை உள்ளேயும் அடக்காமல் வெளியேயும் விடாமல் நடுவே யுலாவச் செய்து கொள்ளுதலாம். ஒரு முறையன்றி, அதன் மேலுஞ் செய்யப்படாது. தேக சம்பந்தஞ் செய்தபின், தேகசுத்தி செய்து, திருநீறணிந்து சிவத்தியானஞ் செய்து, பின்பு படுக்கவேண்டும்.

### படுக்கும்போது, இடதுகைப் பக்கமாகவே படுத்தல் வேண்டும்

எந்தக் காலத்தில் எது குறித்துப் படுத்தபோதிலும், இடதுகைப் பக்க மாகவே படுத்தல்வேண்டும். பின்பு ஏழரை அல்லது பத்து நாழிகையளவு (3 அல்லது 4 மணிநேரம்) நித்திரை செய்தல் வேண்டும். அதன்பின் விழித்துக் கொண்டு நல்ல சிந்திப்புடனிருத்தல்வேண்டும். இரவில் தேக சம்பந்தம் நான்கு தினத்திற் கொருவிசை செய்தல் அதமபக்ஷம், எட்டு தினத்துக்கொருவிசை செய்தல் மத்திமபக்ஷம். பதினைந்து தினத்துக்கொருவிசை செய்தல் உத்தமபக்ஷம். அதன் மேற்படில் சுக்கிலம் ஆபாசப்பட்டு தானே கழியும் நான்கு தினத்திற் கொருவிசை செய்யில் சுக்கிலம் நெகிழ்ச்சி பட்டுச் சந்ததி விருத்தியைக் கெடுக்கும். ஆதலில், அதமபக்ஷமாயிற்று. இரவில் சொப்பனம் வராது மிருது வாகவே நித்திரை செய்து விழித்துக் கொள்ளல் வேண்டும்.

எப்போதும் பயத்தோடிருக்கப்படாது. பரிச்சேதம் பயம் இல்லாமலும் இருக்கப்படாது. எப்போதும் மன உற்சாகத்தோடிருக்கவேண்டும். கொலை, கோபம், சோம்பல், பொய்மை, பொறாமை, கடுஞ்சொல் முதலிய தீமைகள்

VALLALAR GROUPS



ஆகா, உரத்துப் பேசல், வேகமாக நடத்தல், ஓடி நடத்தல், வழக்கிடல், சண்டையிடல் கூடா. எந்த விதத்திலும் பிராண வாயு அதிகமாகச் செலவாகாமற்படி ஜாக்கிரதையோடு பழகுதல் வேண்டும்.

### தலை முழுகுதல்

பொற்றலைக் கையாந்தகரையை உலர்த்தித் தூள்செய்து வைத்துக் கொண்டு அதை நல்லெண்ணெயில் போட்டுக் காய்ச்சித் தலைக்கிட்டு நான்கு நாளைக்கு ஒருவிசை வெந்நீரில் முழுகவேண்டும். அன்றி, வாரத்திற்கு ஒருவிசையாவது முழுகுதல் வேண்டும். தூளில்லாத பக்ஷத்தில் நல்லெண்ணெயைக் காய்ச்சியே முழுகுதல் வேண்டும். புகைக்குடி. கஞ்சாக் குடி, கள்குடி, சாராயக்குடி முதலிய மயக்கக் குடிகளாகா.

1. மலஜலத்தைச் சிறிதும் அடக்கப்படாது.
2. சுக்கிலத்தைச் சிறிதும் வீணில் விடப்படாது.
3. துன்மார்க்கப் பழக்கஞ் செய்யக்கூடாது.

எந்த வேலை செய்யினும், எந்த விவகாரஞ் செய்யினும் சிவசிந்தனையோடு செய்து பழகுதல் வேண்டும்.

### தியானம்

இந்தத் தேகத்தின் புருவ மத்தியில், நமது ஆன்ம அறிவென்கின்ற கற்பூரத்தில் கடவுள் அருளென்கிற தீபம் விளங்குவ தாகப் பாவித்துப் பார்த்து, அதில் பழகிப் பழகிக் கடவுளிடத்தே உண்மையாகிய அன்பையும் — ஜீவர்களிடத்தே உண்மையாகிய காருணியத்தையும் — இடை விடாமல் வைத்து ஓங்கார பஞ்சாக்ஷர ஞாபகஞ் செய்தல் வேண்டும்! சிவ பஞ்சாக்ஷர ஞாபகஞ் செய்தல் வேண்டும் அவசியம்.

## 2. பொது விதி

1. ஆறு மாதம் அல்லது மூன்று மாதத்திற் கொருதரம் வெள்ளைக் காக்கட்டான் முதலானவைகளால் விரேசனம் வாங்கிக்கொள்ளுதல்.

2. நாலு மாதத்திற்கு ஒருதரம் மருக்காரை முதலியவைகளால் வமனத்திற்கு வாங்கிக்கொள்ளல்.

3. ஒரு வருடத்திற்கு ஒருதரம் முள்ளி, முதலானவைகளால் நசியஞ் செய்துகொள்ளல்.

4. நாலு நாளைக்கு ஒரு தரம், அத்தி முதலிய வஸ்துக்களால் செய் வகைப்படி செய்த மைகளால் கண்ணுக்கு அஞ்சனந் தீட்டல்.



5. ஒரு பக்ஷம் அல்லது ஒருவார வட்டத்திற்கு ஒருதரம், சாவதானமாக நல்ல நினைப்போடு தன் வசத்திலிருந்து மூச்சு அதிர்ந்து மேலிடாது மெல்லெனப் பெண்போகம் செய்தல் — இது விருத்தர்களுக்கு விதித்ததல்ல.

6. வாரவட்டம் அல்லது நாலுதினத்திற்கொருதரம் முலைப்பால் பொன்னுங் கண்ணி முதலிய தைல மிட்டுக்கொண்டு செம்பாகமான வெந்நீரில் மெல்லென முழுகல்.

7. இளவெய்யில், கடுவெய்யில், மழை, குளிர், காற்று, பனி — இவைகளால் உடம்பை வருத்தாமற் காத்துக்கொள்ளுதல்.

8. கடுநடை, ஓட்டம், பெருஞ்சொல், பேராசை, இசை பாடுதல், வழக்காடுதல், பெருநினைப்பு, பெருஞ்சிரிப்பு, பெருந்துயர், மிகுபார்வை, ஊன்றிக் கேட்டல், துர்க்கந்த நற்கந்த முகர்தல், சுவை விரும்பல், பேருண்டி, பெருந்தூக்கம்; வீண்செயல், பெருமுயற்சி, விளையாட்டு, மலமடக்கல், ஜலமடக்கல், தாகமடக்கல், பெருநீர் குடித்தல், சயனவுணர்ச்சி, பயம், அகங்காரம், இடம்பம், பேராசை, உலோபம், கோபம், மோகம், மதம் — இவை முதலிய தேகேந்திரிய கரண குற்றங்களடையா திருத்தல்.

9. பழஞ்சோறு, பழங்கறி, எருமைப்பால், எருமைத் தயிர் மோர், நெய்; செம்மறிப்பால், தயிர், மோர், நெய்; கேழ்வரகு, வரகு, தினை, சாமை, பருப்பு வகை, அதிரசம், அப்பம், சுகியம் முதலிய சிற்றுண்டி, தயிர்ச்சோறு, புளிச்சோறு முதலிய சித்திரான்னம்; காரசிச் சோறு, முளைக்கீரை, அகத்திக்கீரை, முன்னை முதலான இலைக்கறி; சுரை, பூசுணை, பறங்கி, பீர்க்கு, புடல், பாகல், கடுகு, நல்லெண்ணெய், புளி, புகையிலை, கள், சாராயம், கஞ்சா, புலால், மாமிசம் முதலிய விலக்குகளை நீக்கி, விதித்தவைகளை யனுசரித்தல்.

## 3. சிறப்பு விதி

1. நித்தியம் சூரியோதயமாக ஐந்து நாழிகைக்கு முன்னே நித்திரை நீங்கி எழுந்திருத்தல்.

2. எழுந்தவுடன் விபூதி தரித்துச் சற்றுநேரம் செவ்வையாக உட்கார்ந்து கடவுளை ஊன்றி நினைத்து எழுதல்.

3. அங்ஙனம் எழுந்து, சிறிதுந் தாமதியாமல், மவுனமாகச் சிறிது தூரம் நடந்து, எவ்விடத்தில் மலஜலவுபாதி நேரிடுகிறதோ, அவ்விடத்தில் அப்பொழுதே ஒன்றும் சேஷ்டையில்லாமல்; விரைவில்லாமல், இருந்து அற விடுதல்.

4. பொற்றலைக் கையாந்தகரை, கரிசலாங்கண்ணி — இவைகளில் ஒன்று கொண்டு, உள்ளே சிறிது சாரம் போகவும், கபநீர், பித்தநீர் வெளியாகவும் தந்த சுத்தி செய்தல்.

VALLALAR GROUPS



5. பின்பு, திருநீறு தரித்துக்கொண்டு ஏகாந்தமாக ஓரிடம் பற்றியிருந்து சூரியன் உதயமாகிற வரையில், கடவுளைத் தியானஞ்செய்து கொண்டிருத்தல்.

6. உதயந் தொடங்கிச் சுமார் ஜாம பரியந்தம் தக்க முயற்சியோடு பழகுதல்.

7. காலையில் உண்ணாமல், சுமார் பதினைந்து நாழிகைக்கு உண்ணுதல்.

8. காலையில் சூரியோதய மானவுடன் தூதுளை, பொன்னாங்கண்ணி, வில்வம், சீந்தில், பொற்றலைக்கையாந்தகரை, புளியாரை, வல்லாரை, நன்னாரி, கடுக்காய், மிளகு, அருகம்வேர் — இவைகளில் யாதாயினும் ஒன்றைப் பசும்பாலிற் சுத்திசெய்து சூர்ணமாக்கிக்கொண்டு சர்க்கரையிற் கலந்தாவது அல்லது சூரணமாகவாவது பசும்பாலில் அனுபானித்தாவது சிறிது சிறிதாக உண்ணுதல்.

9. சுமார் பதினைந்து நாழிகைக்கு உண்ணத் தொடங்கும்போது, முன் புசித்த போஜன முழுதுஞ் ஜீரணித்ததை நன்றா யன்றி யறிந்து, பின்பு ஜீரணித்த அக்கணமே, விருப்பால் ஏறாமலும், வெறுப்பால் குறையாமலும், தராசு முனைபோல் அளவறிந்து அந்த அளவின்படி, அதிக விரைவும் அதிக தாமதமு மில்லாதபடி, சமமாகப் புசித்தல்.

10. புசிப்பில் பச்சரிசிச் சாதம், பசும்பால், பசுநெய், முருங்கை, கததரி, முள்ளி, தூதுளை முதலிய இளங்காய்; பொன்னாங்கண்ணி தூதுளை முதலிய இளங்கீரை — இவைகளில் மிளகு ஒரு பங்கு. சீரகம் காலே அரைக் காற்பங்கு வெந்தயம் கால்பங்கு புளி வீசம் பங்கு, உப்பு வீசம் பங்கு, மிளகாய் வீசம் பங்கு, சேர்க்கப்பட்ட கறியமுது, குழம்பு, ரசம் முதலானவைகளைக்கொண்டு பெருங்காயம், வெங்காயம், வெள்ளைப் பூண்டு முதலானவைகளைத் தள்ளி புசித்தல்.

11. புசித்த பின்பு மத்தியானந் தொடங்கி இருபத்தைந்து நாழிகை பரியந்தம், சத்துவமான விவகாரங்களை மெல்லென இருந்தபடி நடத்தல், பிறர்க்கு விசேஷங் கேளாவகை படித்தல், மெல்லெனப் பேசல் — இவையன்றி நல்ல நினைப்போடிருத்தல்.

12. காலை, மத்தியானம், சாயங்காலம் — இப்போழுதுகளிலும் மத்தியிலும் நித்திரை செய்யாதிருத்தல்,

13. மத்தியான போஜனஞ் செய்கிறபொழுது, அடிக்கடி தாகநீர் குடியாமல், போஜனஞ் செய்தபின்பு, ஒருதரமாக இளஞ்சூடுள்ள வெந்நீரைக் கிரமமாகத் தாகத்துக்குக் கொண்டு, குளிர்ந்த ஜலம் சிறிதும் கொள்ளாது தள்ளுதல்.

14. மத்தியானத்தில் சுமார் ஐந்து நாழிகை பரியந்தஞ் செவ்வையாக ஓரிடத்தில் இருந்து, மனத்தை ஒருவழிப்படுத்தித் தெய்வ சிந்தனையோடிருத்தல்



15. காலைப்புணர்ச்சி, பகற்புணர்ச்சி, அந்திப் புணர்ச்சி, இரவு முன் பங்குப்புணர்ச்சி, காலைப் போஜனம், அந்திப்போஜன முதலானவையில்லா திருத்தல்.

16. சாயங்காலத்திலும் ஐந்து நாழிகை யாதொரு முயற்சியுமில்லாமல் ஓரிடத்தி லசையாதிருந்து தியானித்தல்.

17. இரவில் பத்து நாழிகைக்குள் மத்தியான போஜனத்துக்கு அரைத் தாமாகப் புசித்தல்.

18. அதற்குமேல் இராத்திரி பதினைந்து நாழிகை பரியந்தம் மனத்தை யடக்கித் தியானித்திருத்தல்.

19. பதினைந்து நாழிகை தொட்டு இருபத்திரண்டரை நாழிகை பரியந்தம் மெல்லெனத் தூங்கல்.

20. படுத்து விழிக்கிற பரியந்தம் இடக்கை கீழிருக்கச் செய்தல்.

21. ஆகாரம் அரை; நித்திரை அரைக்கால், மைதுனம் வீசம் பயம் பூச்சியம்; ஆகப்பெறுதல்.

---

**சாதம் வடித்துச் சாப்பிடுதல் நலமா? பொங்கிச் சாப்பிடுதல் நலமா? என்னில் :—**

வடித்துச் சாப்பிடுவது — அதிலுள்ள எண்ணெய் போய் விடுவதால் — நலம் பொங்குவதில் எண்ணெய் போகாது; தாமசகுணம் உண்டாகும். இது போலவே உப்பு, புளி, மிளகாய் முதலிய வஸ்துக்களின் எண்ணெய் போகச் சுடவைத்துச் சாப்பிடுகல் வேண்டும். பச்சரிசி என்பது இப்போது கொண்டு வருவது அல்ல. மேலும் உஷ்ணத்தை உண்டு பண்ணக்கூடிய ஆகாரங்கள் கொள்ளுதல் வேண்டும்.

அருட்பெருஞ்ஜோதி

## 3. திருவருளை எவ்வாறு பெறக்கூடும்?

திருச்சிற்றம்பலம்

**கடவுளது திருவருளை எவ்வாறு பெறக்கூடும்?**

அருளென்பது கடவுள் தயவு. ஜீவகாருண்யம் என்பது ஜீவர்கள் தயவு. ஆதலால், சிறு வெளிச்சத்தைக் கொண்டு பெரு வெளிச்சத்தைப் பெறுவதுபோல், சிறிய தயவாகிய ஜீவ தயவைக் கொண்டு பெருந்தயவாகிய கடவுளருளைப் பெறவேண்டும்.

VALLALAR GROUPS



**அக்கடவுள் தயவாகிய அருள் எத்தன்மை யுடையது?**

நமது ஆன்ம அறிவாகிய புத்தி தத்துவத்தினுக்கு நன்மை தீமையை விளக்கிக் காட்டுவதாயும், வேதாகம கலைகளைக்கொண்டு நன்மையாதிகளை விதிப்பதாயும், அறிபவர்களின் தரத்திற்கொத்ததாயும், அறிபவர்கள் எந்த வஸ்துவை அறிகின்றார்களோ அந்த வண்ணமாயும் உள்ளது.

**அத்தன்மையான அருள் — பிண்ட அண்டத்தில் எவ்வண்ணமாய் விளங்குகின்றது?**

காண்பார், காணுமிடம், காணப்படுமிடம்; அறிவார் அறியுமிடம், அறியப் படுமிடம், துண்டுவார், தூண்டுமிடம்; தூண்டப்படுமிடம்; சுவைப்பார், சுவைக்கு மிடம், சுவைக்கப்படுமிடம்; அனுபவிப்பார், அனுபவிக்குமிடம்; அனுபவிக்கப் படுமிடம்; கருதுவார், கருதுமிடம்; கருதப்படுமிடம்; முகருவார், முகருமிடம்; முகரப்படுமிடம்; கேட்பார், கேட்குமிடம், கேட்கப்படுமிடம் முதலியனவாய் விளங்கும்.

**இவ்வண்ணம் விளங்கும் அருளை, நாம் பெறுவதற்கு உபாயம் என்ன?**

புத்தி, தத்துவத்தால் நன்மை தீமையை விசாரித்து, நன்மையே உருவாய் விளங்கும் பெரியாரைத் துணைகொண்டு, அவரால் கட்டளையிடும் திருப்பணியைக் கைக்கொண்டு இடையறாது செய்யில் அவ்வருளைப் பெறலாம்.

**நன்மை தீமை என்பவை யாவை?**

நன்மை தீமை என்பவை **புண்ணிய, பாவம்.**

**புண்ணியமென்பது :—**

ஆரம்பத்தில் செய்வதற்கும், அனுபவிப்பதற்கும் முயற்சிப்பதற்கும் துக்க மாயும், பின் சுகமாயும் விளங்கும்.

**பாவமென்பது :—**

ஆரம்பத்தில் சுகமாயும், பின் துக்கமாயும் இருக்கும்.

**புண்ணிய பாவங்கள் நம்மை எவ்வாறு அடைகின்றன?**

மனம், வாக்கு, காயம் என்னும் மூன்றினாலும் அடையும். மேலும், மனத் தினிடத்தில் நால்வகையும், வாக்கினிடத்தில் நால்வகையும், சரீரத்தினிடத்தில் நால்வகையும், ஆகப் பனிரண்டு வகையாய் நம்மை அடையும்.

**அவை யாவன :—**

**பாவம்**

**மனத்தினால் :—** 1 பரதாரகமனம் பண்ண நினைத்தல்; 2. அன்னிய ருடைய சொத்தைத் திருடிக்க நினைத்தல். 3. அன்னியருக்குத் தீங்கு செய்ய நினைத்தல்; 4. முடியாத காரியங்களை நினைத்து, அக்காரியம் அன்னியர்களுக்கு முடிந்ததை நினைத்துப் பொறாமையடைதல். — இவை நான்கும் மனத்தினால் செய்யும் பாவங்கள்.



**வாக்கினால் :—** 1. பொய் சொல்லல்; 2. கோள் சொல்லல் 3. புறங்கூறல்; 4. வீணுக்கழுதல் இவை நான்கும் வாக்கினால் உண்டாகும் பாவங்கள்.

**தேகத்தினால் :—** 1. பிறர் மனைவியைத் தழுவுதல்; 2. புசிக்கத்தகாத; வேத விரோத ஆகாரங்களைப் புசித்தல்; 3. அன்னியர்களை இம்சை செய்தல், 4. தீங்கு செய்கிறவர்களைத் தடுக்காமல் அவர்களுக்கு உபகாரம் செய்தல்– இந்நான்கும் தேகத்தால் உண்டாகும் பாவங்கள்.

**இவை போன்றவைகளைத் தவிர்த்து.**

**புண்ணியம்**

**மனத்தினால் :—** 1. அன்னியர்களுக்கு நன்மை யுண்டாக நினைத்தல், 2. பொறாமை யடையாதிருத்தல், 3. அன்னியர் சொத்தைத் தனதாக்க எண்ணா திருத்தல், 4. தனது மனைவி தவிர அன்னியமான பெண்களைத் தாய், சகோதரி முதலியவைகளாகச் சிந்தித்தல், — இவை மனத்தால் வரும் புண்ணியங்கள்.

**வாக்கினால் :—** 1. பொய் சொல்லாமை, 2. கோள் சொல்லாமை, 3. இன் சொல்லாடல், 4, தோத்திரம் செய்தல் — இவை நான்கும் வாக்கினால் உண்டா கும் புண்ணியங்கள்.

**தேகத்தினால் :—** அன்னியர்களுக்குத் தீங்குண்டாகுங்கால் விலக்கல் முதலான நன்மையான கிருத்தியங்க ளெல்லாம் தேகத்தாலுண்டாகும் புண்ணி யங்கள்.

**அறிந்துசெய்த பாவங்களும் அறியாதுசெய்த பாவங்களும் எவ்வாறு நீங்கும்?**

அறிந்த பாவங்கள் செய்தபின், தனக்குப் பாவம் செய்ததாக எவ்வகை யிலாவது தெரிந்தபின், "நாம் பாவச் செய்கையை முன்னமே தெரிந்தும், மோகத்தாலும், மறதியாலும், அபிமானத்தாலும், அகங்காரத்தாலும், செல்வச் செருக்காலும், தாக்ஷண்ய உடன்பாட்டாலும், உணவு பற்றியும், புகழ்பற்றியும், வழக்கம் பற்றியும் செய்துவிட்டோமே என்று" பச்சாத்தாபப்பட்டுப் பெரியோர் களை யடுத்து, அவர்களால் நியமனம் செய்யப்படும் பிராயச் சித்தங்களைக் கைக்கொண்டு, அவ்வண்ணம் இச்சரீரத்தைத் தவத்தாலும் விரதத்தாலும் இளைக்கச் செய்வதுமன்றி யாத்திரையாதிய மேற்கொண்டு, புண்ணிய ஸ்தலங் களிற் சென்று வசித்து இயன்ற அளவில் அன்ன விரயஞ்செய்தால் நீங்கும். மேலும், சத்தியற்றவர்களாயும் வார்த்திகர்களாயு முள்ளவர்கள் மகான்களுக்குத் தொண்டு செய்தால் நீங்கும். மகான்கள் நேரிடாத பக்ஷத்தில், பச்சாத்தாபத் துடன் பாவ காரியங்களைச் செய்யாமலும், பாவிகளுடைய கூட்டத்தில் பழகாம லும், திருவருளைச் சிந்தித்து அவர்கள் தரத்திற்கொத்த தெய்வங்களைச் சிந்தித்துக் கொண்டிருந்தால் நீங்கும்.

VALLALAR GROUPS



**அறியாத பாவங்கள் யாவெனில். —**

நடக்குங் காலத்திலும், நீராடுங் காலத்திலும், சயன காலத்திலும் தனக்குத் தோன்றாமல் நேரிடும் பாவங்களாம். இதன்றி, அவை மனத்திற்குப் புலப்படாமலும் உண்டாகும். இவைகள் யாவும் — தினஞ் செய்யுஞ் ஜபத்தாலும், பாராயணத்தாலும், தோத்திரத்தாலும், விருந்துபசரித்தலாலும், தெய்வம் பராவலாலும் நீங்கும்.

**பிராயச்சித்தம் முதலியவைகள் செய்யாவிட்டால் பாவங்களா லடையுங் கதியென்ன?**

மனத்தால் செய்யும் பாவங்கட்குச் சண்டாளாதி சரீர முண்டாகும். வாக்காற் செய்யும் பாவங்கட்கு மிருகம் முதலான சரீர முண்டாகும். தேகத்தால் செய்யும் பாவங்கட்கு மரம் முதலான சரீரமுண்டாகும்.

**வேதாந்திகள் "பாவம் முதலிய கருமங்களும், புண்ணியம் முதலிய ஏதுக்களும் நமக்கில்லை ; நாம் சர்வ சாக்ஷி" என்கிறார்களே — அஃதென்ன?**

தேக வாசனை, இந்திரிய வாசனை, கரண வாசனை, பிராண வாயுவின் செயற்கையா லுண்டாகும் வேறுபாடு முதலிய நன்மைகளில் சலிப்பற்று, ஆகாரம், நித்திரை, பயம் முதலியவைகளில், நாம் சலித்தும், சோர்ந்தும், திடுக்கிட்டும் இல்லாமல், நிவாத தீபம் போல் விளங்கும் ஜீவன் முத்தர்கள் சமூகத்தில், பாப கிருத்தியங்கள் நடவா ; புண்ணியங்களும் பிரயோஜனம் பற்றிச் செய்யார்கள் ; **பொன்னும் ஓடும் சரியாகக் காண்பார்கள்.** அத் தன்மையுடைய நித்திய, முத்த, சுத்த, ஞான தேகசித்தர்கட்குப் பாவ புண்ணியமில்லை யென்று அவர்கள் சொல்ல வேண்டிய தில்லை ; நமக்கே தெரியும்.

**மேலும்,** அவர்கள் இந்தப் பவுதிக பூத சரீரத்தில் வசித்தாலும், சரீரமாகிய தத்துவ தாத்விகங்கள் இப்போது நமக்கு அசுத்த தேகமாயும் அசுத்தப் பொறியாயும், அசுத்தக் கரணமாயும், அசுத்த அறிவாயும், அசுத்த அனுபவமாயும் இருப்பது போல் இரா. சித்த படத்தைப் போல் காரியத்தில் இலதாயும், காரணத்தி லுளதாயும், அறிவே வடிவாய், அறிவே பொறியாய், அறிவே மனமாய், அறிவே அழகாய், அறிவே உருவாய், அறிவே உணர்வாய், அறிவே அறிவாய், அறிவே அனுபவமாய் விளங்கும்.

**திருச்சிற்றம்பலம்**



# 4. மெய்மொழியும் ஒழுக்கமும்

**அருட்பெருஞ்ஜோதி**

**உலகத்தினிடத்தே பெறுதற்கு மிகவும் அருமையாகிய மனித தேகத்தைப் பெற்ற நண்பர்களனைவரும் நாமும் அறிய வேண்டுவதும் ஒழுக வேண்டுவதும் யாதெனில் :—**

இயற்கையிற்றானே விளங்குகின்றவராய் உள்ளவ ரென்றும், இயற்கையிற்றானே உள்ளவராய் விளங்குகின்றவ ரென்றும், இரண்டுபடாத பூரண இன்பமானவ ரென்றும், எல்லா அண்டங்களையும், எல்லா உலகங்களையும், எல்லாப் பதங்களையும், எல்லாச் சத்திகளையும், எல்லாச் சத்தர்களையும், எல்லாக் கலைகளையும், எல்லாப் பொருள்களையும், எல்லாத் தத்துவங்களையும், எல்லாத் தத்துவிகளையும், எல்லா உயிர்களையும், எல்லாச் செயல்களையும், எல்லா இச்சைகளையும், எல்லா ஞானங்களையும், எல்லாப் பயன்களையும், எல்லா அனுபவங்களையும், மற்றை எல்லாவற்றையும் தமது திருவருட் சத்தியால் 1. தோற்றுவித்தல், 2. வாழ்வித்தல், 3. குற்றம் நீக்குவித்தல், 4. பக்குவம் வருவித்தல், 5. விளக்கஞ் செய்வித்தல் என்னும் ஐந்தொழில்கள் முதலிய பெருங்கருணைத் தொழில்களை இயற்றுவிக்கின்றவ ரென்றும், எல்லாம் ஆனவரென்றும், ஒன்றும் அல்லாதவ ரென்றும், சர்வ காருண்ய ரென்றும், சர்வ வல்லபரென்றும், எல்லாம் உடையராய்த் தமக்கு ஒருவாற்றானும் ஒப்பு உயர்வு இல்லாத தனிப்பெருந் தலைமை அருட்பெருஞ்ஜோதியர் என்றும் — சத்திய அறிவால் அறியப்படுகின்ற உண்மைக் கடவுள் ஒருவரே. அகம் புறம் முதலிய எவ்விடத்தும் நீக்கமின்றி நிறைந்த சுத்த மெய்யறிவு என்னும் பூரணப் பொது வெளியில், அறிவா ரறியும் வண்ணங்க ளெல்லாமாகி விளங்குகின்றார்.

அவ்வாறு விளங்குகின்ற ஒருவரேயாகிய கடவுளை, இவ்வுலகினிடத்தே ஜீவர்களாகிய நாம் அறிந்து, அன்புசெய்து, அருளை யடைந்து, அழிவில்லாத சத்திய சுகபூரணப் பெருவாழ்வைப் பெற்று வாழாமல், பலவேறு கற்பனைகளாற் பலவேறு சமயங்களிலும், பலவேறு மதங்களிலும், பலவேறு மார்க்கங்களிலும், பலவேறு லக்ஷியங்களைக் கொண்டு, நெடுங் காலம் பிறந்து பிறந்து, அவத்தை வசத்தர்களாகிச் சிற்றறிவுமின்றி, விரைந்து, விரைந்து பல்வேறு ஆபத்துக்களினால் துன்பத்திலழுந்தி, இறந்து இறந்து, வீண்போயினோம் : வீண்போகின்றோம்.

ஆதலால், இனிமேலும் ஜீவர்களாகிய நாம் விரைந்து விரைந்து, இறந்து இறந்து, வீண்போகாமல், உண்மை அறிவு, உண்மை அன்பு, உண்மை இரக்கம் முதலிய சுபகுணங்களைப் பெற்று, நற்செய்கை உடையவர்களாய், எல்லாச் சமயங்களுக்கும், எல்லா மதங்களுக்கும், எல்லா மார்க்கங்களுக்கும் உண்மைப் பொதுநெறியாகி விளங்கும், சுத்தசன்மார்க்கத்தைப் பெற்றுப் பேரின்ப சித்திப்

VALLALAR GROUPS



பெருவாழ்வில். பெருஞ் சுகத்தையும், பெருங்களிப்பையும், அடைந்து வாழும் பொருட்டு — மேற்குறித்த உண்மைக் கடவுள், தாமே திருவுளங்கொண்டு, சுத்தசன்மார்க்கத்தின் முக்கிய லக்ஷியமாகிய, உண்மை விளக்கஞ் செய்கின்ற, ஓர் ஞானசபையை, சித்திவளாகம் என்னும் இச்சந்நிதானத்திற் கடுத்த உத்தர ஞான சிதம்பரம் அல்லது ஞான சித்திபுரம் என்று குறிக்கப்படுகின்ற வடலூர் பார்வதிபுரத்தில் தமது திருவருட் சம்மதத்தால் இயற்றுவித்து **"இக் காலந் தொடங்கி அளவு குறிக்கப்படாத நெடுங்காலம் அற்புத சித்திகள் எல்லாம் விளங்க யாமே அமர்ந்தருளித் திருவிளையாடல் செய்தருள்கின்றோம்"** என்னும் திருக்குறிப்பை இவ்விடத்தே, தாயினுஞ் சிறந்த பெருந்தயவுடைய நமது கருணையாங் கடலாராகிய அருமைத் தந்தையார் அருட்பிரகாச வள்ளலார் முன்னிலையாகப் பலவாற்றானும் பிரசித்தப்பட வெளிப்படுத்தி அருட்பெருஞ்ஜோதி சொருபராய் அப்பெருங்கருணை வள்ளலாரது உடல் பொருள் ஆவிகளைக்கொண்டு; பொற்சபை, சிற்சபைப் பிரவேசஞ் செய்வித்தருளி, அரிய அவரது திருமேனியில் தாம் கனிவுறக் கலந்தருளிய எல்லாம் வல்ல சித்தத் திருக்கோலங்கொண்டு, அருளாட்சித் திருமுடி பொறுத்து அருள்விளையாடல் செய்தருள நிமித்தம் ஈரேழு பதினன்கு உலகங்களிலுள்ளவர்கள் யாவரும் ஒருங்கே, இஃது என்னை! இஃது என்னை! என்று அதிசயிக்கும்படி வெளிப்பட எழுந்தருளும் தருணம் அடுத்த அதிசமீபித்த தருணமாயிருத்தலினால், அங்ஙனம் வெளிப்படுந்திருவரவு பற்றி எதிர்பார்த்தலாகிய விரதங் காத்தலில் நிற்கும் அல்லது நிற்கவேண்டிய, நாம் எல்லவரும் மேற்குறித்த அசிந்திய அற்புதத் திருவரவு நேரிட்ட கணத் திற்றானே, சுத்த சன்மார்க்க அரும் புருஷார்த்தங்களின் பெரும் பயன்களாகிய எக்காலத்தும் நாசம் அடையாத சுத்தம் அல்லது சுவர்ண தேகம், பிரணவ தேகம், ஞானதேகம் என்னும் சாகா கலானுபவ சொரூப சித்தித் தேகங்களும்; தன் சுதந்தரத்தால் தத்துவங்கள் எல்லாவற்றையும் நடத்துகின்ற தனிப்பெரு வல்லபமும், கடவுள் ஒருவரே என்றறிகின்ற உண்மை ஞானமும், கருமசித்தி, யோகசித்தி, ஞானசித்தி முதலிய எல்லா சித்திகளும் பெறுகின்ற அருட்பேறும் பெற்று வாழ்கின்ற பேரின்ப சித்திப் பெருவாழ்வை அடைவதற்கான சுத்த சன்மார்க்கத் தனிப்பெரு நெறியைப் பற்றுவதற்குரிய உண்மை ஒழுக்கங்களில் நாமெல்லவரும் தனித்தனி ஒழுகவேண்டியது அவசியமாதலில், அவ்வொழுக்கங் கள் இவை என உணரவேண்டுவது இன்றியமையாததாகும்.

### சன்மார்க்கப் பெருநெறியின் ஒழுக்கங்கள் :—

1. **இந்திரிய ஒழுக்கம், 2 கரண ஒழுக்கம், 3. ஜீவ ஒழுக்கம், 4. ஆன்ம ஒழுக்கம் என நான்கு வகைப்படும். அவற்றுள்.**

**1. இந்திரிய ஒழுக்கம்**

நாத முதலிய தோத்திரங்களை உற்றுக்கேட்டல், மற்றவை கேளாதிருத்தல், கொடுஞ்சொல் முதலியவை செவிபுகாமல் நிற்றல், அசுத்தங்களைத் தீண்டா



திருத்தல், கொடூரமாகப் பாராதிருத்தல், ருசியின்மீது விருப்பமின்றி யிருத்தல், சுகந்தம் விரும்பாதிருத்தல் என்னும் ஞானேந்திரிய ஒழுக்கமும் : இனிய வார்த்தை யாடுதல், பொய் சொல்லாதிருத்தல், ஜீவஹிம்சை நேரிடுங்கால் எவ்விதத் தந்திரத் திலாவது தடைசெய்தல், பெரியோரிடத்திற் செல்லுதல் — என்றால், சாதுக்களிடம் பரிச்சயம் பண்ணுதல், உயிர்க்கு உபகரிக்கு நிமித்தம் சஞ்சரித்தல், உயிர்க்கு உபகார நிமித்தம் கையால் உபகரித்தல், மலஜல உபாதைகள் அளவு மீறுமலும் கிரமங் குறையாமலும், அளவைப்போல் தந்திர ஔஷதிகளாலும் ஆகாரப் பக்குவத் தாலும், பவுதிகப் பக்குவத்தாலும் செய்வித்தல் என்னும் கருமேந்திரிய ஒழுக்கமும் ஆகும்.

**2. கரண ஒழுக்கம் ;**

சிற்சபையின்கண் மனதைச் செலுத்துவது தவிர மற்றெந்த வகை ஆபாசத் திலும் செலுத்தாமல் இழுத்து மேற்குறித்த இடத்தில் நிறுத்தல், பிறர் குற்றம் விசாரியாதிருத்தல், **தன்னை** மதியாதிருத்தல், செயற்கைக் குணங்களால் உண்டாகிய கெடுதிகளை நீக்கி இயற்கையாகிய சத்துவமயமாயிருத்தல், பிறர் மேல் கோபியாதிருத்தல், தனது சத்துருக்களாகிய தத்துவங்களைக் கோபித்தல், அக்கிரம அதிக்கிரமப் புணர்ச்சி செய்யாதிருத்தல் முதலியனவாம்.

**3. ஜீவ ஒழுக்கம் :**

எல்லா மனிதரிடத்தும் ஜாதி, சமயம், குலம், கோத்திரம், சூத்திரம், சாத்திரம், தேசம், மார்க்கம், உயர்வு, தாழ்வு முதலிய பேதமற்றுத் தானாக நிற்றல், முதலியனவாம்.

**4. ஆன்ம ஒழுக்கம் :**

எண்பத்து நான்கு நூறாயிரம் யோனி பேதங்களிடத்தும் உள்ள ஆன்மாக் களிடத்தும் இரங்கி, ஆன்மாவே சபையாகவும், அதன் உள்ளொளியே பதியாக வும் கண்டு கலந்து பூரணமாக நிற்றல் முதலியனவாம்.

இங்ஙனங் கூறிய ஒழுக்கங்களுள்ளே இந்திரிய ஒழுக்கம், கரண ஒழுக்கம் என்னுமிவற்றை நாம் ஒவ்வொருவரும் உண்மை யுணர்ச்சியுடன் மேற்கொண்டு ஒழுகவேண்டும் : ஜீவ ஒழுக்கம், ஆன்ம ஒழுக்கம் என்னும் இரு வகையான அரிய ஒழுக்கங்கள் திருவருள் துணைபெற்ற பின்னரன்றிக் கைகூடா ; ஆதலால், அவ்வொழுக்கங்களைப் பெற்று ஒழுகவேண்டு வதற்கும் ஆன நன்முயற்சி களில் பழகவேண்டும் அன்றியும் ;

இவ்வண்ணமான ஒழுக்கங்களில் இயன்றமட்டில் ஒழுகப்பெற்று, இடந் தனித்திருத்தல், இச்சையின்றி நுகர்தல், தெய்வம் பாடல், பிறவுயிர்க்கிரங்கல்: பெருங்குணம் பற்றல், பாடிப் பணிதல், பத்திசெய் திருத்தல் முதலிய நற்செய்கை களில் பலகால் முயன்று பழகிப் பழகி இருத்தல் வேண்டும். அன்றியும் :—

சைவம் வைணவம் சமணம் பவுத்தம் முதலாகப் பல பெயர் கொண்டு பலபட விரிந்த அளவிறந்த சமயங்களும், அச்சமயங்களிற் குறித்த சாதனங் களும், தெய்வங்களும், கதிகளும், தத்துவ சித்தி விகற்ப பேதங்களென்றும்

VALLALAR GROUPS



அவ்வச்சமயங்களிற் பலபட விரிந்த வேதங்கள் ஆகமங்கள் சாத்திரங்கள் புராணங்கள் முதலிய கலைகள் எல்லாம் தத்துவ சித்திக் கற்பனைக் கலைகளென்றும், வேதாந்தம், சித்தாந்தம் முதலாகப் பல பெயர் கொண்டு பலபட விரிந்த மதங்களும் மார்க்கங்களும் சுத்தசன்மார்க்கானுபவ லேச சித்தி பேதங்களென்றும், கேள்விப்பட்டிருக்கின்றனம். ஆகலில், அத்திரு வார்த்தைகளில் உண்மையான நம்பிக்கை கொண்டு, அவ்வவற்றின் உண்மைகளை உள்ளபடியே உணர்த்தப் பெற்று அவைகளின் அனுபவங்களை அடைதல் வேண்டுவது பற்றி, அவ்வச் சமய மதாசாரங்களைச் சிறிதும் அனுட்டியாது நிற்றலும், அவற்றில் சத்தியவுணர்ச்சி கொள்ளாமல் விடுதலும் வேண்டும். அன்றியும்,—

உலகியற்கண் பொன் விஷய இச்சை, பெண் விஷய இச்சை, மண் விஷய இச்சை முதலிய எவ்விஷய இச்சைகளிலும், நமது அறிவை ஓர் அணுத்துணையும் பற்றுவிக்காமல், பொதுப்பட நல்லறிவு, கடவுள் பக்தி, உயிரிரக்கம், பொது நோக்கம், திரிகரண அடக்கம் முதலிய நற்குண ஒழுக்கங்களில் நின்று, **உண்மையுரைத்தல், இன்சொல்லாடல், உயிர்க்குபகரித்தல்** முதலியவாகக் குறித்த **நற்செய்கைகளையும்** உள்ளபடி பெற்று, **சித்திவளாகம்** என்னும் இம்மஹா சந்நிதானத்திற்றானே **தரிக்கப்பெறவும்**, உலக முகப்பட்ட பராக்கினால் விலகி ஏமாந்து விடாமலும்; நமது **எல்லாம்** வல்ல ஆண்டவனார் அற்புதத் திருவரவு குறிக்கும் வெளிப்படுகைக்கு எதிர் பார்க்கும் நிலையினராய், எல்லா அண்ட சராசரங்களையும் தமது **தனித் திருவருட் செங்கோல்** கொண்டு நடாத்துவித் தருளும் பேரருட் பெருங்கருணை வாய்ந்த தனிப்பெருந் தலைவனது அரிய திருவருகைச் சம்பந்தமான வழிபடுகை அல்லது மங்கலம் புனைதல், முதலிய திருப்பணியினிடம் நமது கரணேந்திரியங்களை விடுத்துக் குதூகலத்துடன் விந்து விளக்கம், நாத ஒலி என்பவற்றால் புறக்கடையில் விலகப்படாமலும், ஆண்டவனாரது அருளற்புத ஞான சித்தத் திருமேனியின் மங்கலத் திருக்கோலத்தைக் கண்காட்சியாக, உடல் குழைய, உள்ளங் குளிர, ஆனந்தக் கண்ணீர்கொண்டு, பரவசத்துடன், **தரிசிக்கப்பெறும்**, பெரும் புண்ணியமுடையவர்களாய் எதிர்ப்பட வாய்க்கப் பெறவும் நின்றோமேயானால்,—

நாம் எல்லவரும் சுத்தசன்மார்க்கத்திற்கு உரிமை யுடையவர்களாகி, அறிவு வந்த கால முதல் கண்டறியாத அற்புதக் காட்சிகளையும், கேட்டறியாத அற்புதக் கேள்விகளையும், அறிந்தறியாத அற்புத அறிவுகளையும், அடைந்தறியாத அற்புதக் குணங்களையும் செய்தறியாத அற்புதச் செயல்களையும், அனுபவித்தறியாத அற்புத அனுபவங்களையும், வெளிப்படத் தரிசிக்கும் அதே கணத்தினுள்ளே பெற்றுப் பெருங்களிப்புடன் எக்காலத்தும், எவ்விடத்தும், எவ்விதத்தும் தடைபடாத சத்திய சுகபூரணப் பெருவாழ்வு என்னும் **பேரின்ப சித்திப் பெருவாழ்வில் வாழப் பெறுவோம்.**

**இது சத்தியம், சத்தியம், சத்தியம்.**

அருட்பெருஞ்ஜோதி



கொடியேற்று விழாவில் திருவாய் மலர்ந்தருளிய

# 5. உபதேசம்

அருட்பெருஞ்ஜோதி

**இங்குள்ள நீங்கள் எல்லவரும் இதுவரையில் இருந்தது போல் இனியும் வீண்காலம் கழித்துக் கொண்டிராதீர்கள்.**

இதுமுதல் சாலைக்கு ஆண்டவர் போகிற — பத்துத் தினமாகிய கொஞ்ச காலம் — வரையில், நீங்க ளெல்லவரும் நல்ல விசாரணையில் இருந்துகொண்டிருங்கள்; அந்த விசாரணை எது என்றால் :— நம் நம்முடைய நிலை எப்படிப்பட்டது? நமக்குமேல் நம்மை அதிஷ்டிக்கின்ற தெய்வத்தினுடைய நிலை எப்படிப்பட்டது? என்று விசாரிக்க வேண்டியது. அதற்குத் தக்கபடி நீங்கள் ஒருமித்தாவது அல்லது தனித்தனியாகவாவது, உங்களறிவிற்கும் ஒழுக்கத்துக்கும் ஒத்தவர்களுடன் கூடியாவது, அல்லது — **வேலாயுத முதலியாரைக் கேட்டால் மனுஷ்யதரத்தில் போதுமான வரையில் சொல்லுவார்** — அவரிடம் அப்படிக் கேட்டாவது நல்ல விசாரணையி லிருங்கள்.

இவ்விசாரணை முகத்திலிருந்தால், நமது ஆன்ம அறிவை விளக்கமின்றி மூடிக்கொண் டிருக்கின்ற அனந்தத் திரைகளில் அழுத்தமா யிருக்கின்ற முதல் திரையாகிய பச்சைத் திரை முதலில் நீங்கிவிடும். அது நீங்கினால், மற்றத் திரைகள் அதிக விரைவில் நீங்கிப் போய்விடும். அந்தப் பசுமை வர்ணம் எப்படிப்பட்ட தென்றால், கருமைக்கு முதல் வர்ணமான பசுமையாக இருக்கின்றது. இப்படிப்பட்ட அழுத்தமான திரை நீங்க வேண்டுமென தோத்திரித்தும், தெய்வத்தை நினைத்தும், நமது குறையை உன்னியும், இவ் வண்ணமாக இருக்கின்ற போதும், படுக்கின்ற போதும், இடைவிடாதும், இவ்விசாரத்தோடும், ஆண்டவர் நமக்கு உண்மை தெரிவிக்கவேண்டு மென்கின்ற முயற்சியுடனிருந்தால், தெரிய வேண்டியதைத் தெரிந்து கொள்ளலாம்.

அவ்விசாரம் — பரம், அபரம் என்று இரண்டு வகையா யிருக்கின்றது. இவற்றில், பரம் — பரலோக விசாரம்; அபரம் — இகலோக விசாரம், இவ்விரண்டில் இகலோக விசாரம் விசாரமல்ல. சாதாரணமாக ஒருவன் விசாரம் செய்து கொண்டிருக்கின்றானே யென்றால், அவ்விசாரம் விசாரமாகாது; உண்மை விசாரமு மல்ல. ஏனெனில் :— விசார மென்கின்றதற்குப் பொருள்:— வி — சாரம்

---

1874 ஸ்ரீமுக வருஷம் ஐப்பசி 7உ, புதவாரம், பகல் 8 மணிக்கு, மேட்டுக்குப்பமென்னும் சித்திவளாகத் திருமாளிகையில் முதல் முதல் கொடி கட்டினவுடன் நடந்த விவகாரத்தின் குறிப்பு.

VALLALAR GROUPS



என்பதில் வி சாதாரண உலக விசாரத்தை மறுக்க வந்தது. அது மேலும் — பரலோக விசாரத்தையே குறிக்கும் பொருட்டு வந்தது. மேலும் ஜலத்தி லிருக்கின்ற பாசியை நீக்குவது போல், நமது ஆன்மாவைத் தெரிய வொட்டாமல் மூடியிருக்கின்ற பச்சைத் திரையாகிய இராகாதிகளை, விசார அதியுஷ்ணத்தா லல்லது, மற்ற உஷ்ணங்களால் நீக்கமுடியாது. அந்த உஷ்ணம் யோகிகளுடைய அனுபவத்தில் தெரியும். அதை மனுஷ்ய நாத்தில் உண்டுபண்ணுவதற்குத் தெரியாது. அந்த விசாரத்தைவிட ஆண்டவரை தோத்திரம் செய்கின்றதிலும், தெய்வத்தை நினைக்கின்றதிலும், அதிக உஷ்ணம் உண்டாகும். யோகிகள், வனம், மலை, முழை முதலியவைகளில் போய் நூறு, ஆயிரம் முதலிய வருஷகாலம் தவஞ்செய்து இவ்வுஷ்ணத்தை உண்டுபண்ணிக் கொள்ளுகிறார்கள்.

இப்படித் தவம் செய்து உஷ்ணத்தை உண்டுபண்ணிக்கொள்ளுகிறதைப் பார்க்கிலும், தெய்வத்தைத் தோத்திரம் செய்கின்றதிலும், நினைக்கின்றதிலும் — இதைவிடக் — கோடிப்பங்கு பத்துக் கோடிப் பங்கு அதிகமாக உஷ்ணம் உண்டு பண்ணிக்கொள்ளலாம். எவ்வாறெனில் — ஒரு ஜாமநேரம், மனத்தில் இகவிசார மன்னியில் பரவிசாரிப்பும் அத்துடன் ஆன்ம நெகிழ்ச்சியுடன் தெய்வத்தைச் சிந்தித்துக்கொண்டாவது, அல்லது தோத்திரம் செய்துகொண்டாவதிருந்தால் நாம், பெறவேண்டியதைப் பெற்றுக்கொள்ளலாம். ஆதலால், இவ்வுலகில் வி — சார மென்கின்ற உண்மை தெரியாது, விசாரமென்று வழங்கி, அதைத் துக்கமென்றே சொல்லுவார்கள். நாம் அப்படி அர்த்தம்பண்ணக்கூடாது. அவர்கள் பண்ணு கின்றது — துக்கமே விசாரமென்றது; அது தப்பு; சாரம் என்றால் துக்க நிவர்த்தி. வி—உபசர்க்கம், சாரம் என்கின்ற துக்கத்தை நிவர்த்தித்தது வி. ஆதலால், விசாரமென்கின்றது முன்குறித்தபடி பரலோக விசாரத்தையே குறிக்கின்றது. ஆதலால், இடைவிடாது விசாரவசத்தரா யிருக்கவேண்டும். மேலும், வி — சாரமென்பது : வி — விபத்துசாரம் — நீக்குதல், நடத்தல். ஆதலால் இடைவிடாது நன்முயற்சியின்கண் பயிலுதல் வேண்டும்.

மேலும், சிலர், "இது ஆண்டவர் வருகின்ற தருணமாக இருக்கின்றதே! இத்தருணத்தில் முயற்சி செய்வானேன்? ஆண்டவர் வந்தவுடனே பெறவேண்டியதைப் பெற்றுக்கொள்ளப்படாதோ?" என்று வினவலாம். ஆம், இஃது — நாம் வினவியது நலந்தான். ஆண்டவர் வரப்போகின்றது சத்தியந்தான், நம்மவர்களின் திரை நீங்கப் போகின்றதும் சத்தியந்தான். நீங்கள் எல்லோரும் பெறவேண்டியதைப் பெற்றுக்கொள்ளுகின்றதும் சத்தியந்தான், ஆனால், முன்சொன்ன பச்சைத்திரை இரண்டு கூறாக இருக்கின்றது. யாவெனில் — அசுத்த மாயா திரையென்றும் சுத்த மாயா-திரையென்றும் இரண்டு இவை கீழ்ப்பாகத்தில் ஒரு கூறும் மேல்பாகத்தில் ஒரு கூறுமாக இருக்கும். கீழ்ப்பாகத்திலுள்ளது அசுத்த மாயா திரை. மேல்பாகத்தில் உள்ளது சுத்த மாயாதிரை. இவற்றில் அசுத்த மாயாதிரை — இகலோகபோக லக்ஷியமுடையது. சுத்த மாயாதிரை — பரலோக



சாத்தியத்தையுடையது; இவற்றில் — ஆண்டவர் வந்து சாதாரணமாக அனுக் கிரகஞ் செய்கின்றபோது, முயற்சியில்லாத சாதாரண மனுஷ்யர்களுடைய கீழ்ப் பாகத்திலுள்ள அசுத்த மாயை யென்னும் பச்சைத்திரையை மாத்திரம் நீக்குவார். ஆதலால், கூடியவரையில் அக்காலத்தில் நாம் அத்திரை நீங்கியவுடன் சுத்தமாய்ப் புனிதர்களாக இருக்கலாமே யல்லது, பெறவேண்டியதைப் பெற்றுக்கொள்ளு தற்குக் கூடாது. மேலும், பஞ்சகிருத்திய விபவங்களும் இதர சித்தி முதலியவை யும், ஆன்மானுபவத்தையும், செய்யவும், பெறவும் கூடாது. பின்னும் நன்முயற்சி செய்தே மேலேறவேண்டியது.

மேலும், இத்தருணம் இங்கு உண்டாகும் கூச்சல், முதலியவையும் அடுத்தவர்களுக்குப் பக்குவம் வருவிக்கவும் பாவிகளை விலக்கவும் உண்டாயின. ஆதலால், நாம் எல்லவரும் இத்தருணம், இப்போதே, விசேஷ நன் முயற்சி யுடனே இருந்தால், ஆண்டவர் வருகிறபோது நம் கீழ்ப்பாகத்திலுள்ள அசுத்த மாயா திரையோடு கூடி மேற்பாகத்திலிருக்கிற சுத்த மாயையினுடைய பச்சைத் திரையும் நீங்கிப் போய்விடும், கருமையிற் பச்சை வர்ணமுடையது — அசுத்த மாயாதிரை. பொன்மையிற் பச்சை வர்ணமுடையது சுத்த மாயாதிரை. கருமையிற் பச்சை வர்ணமுடைய அசுத்த மாயா திரை நீங்கினபிறகு மற்ற எட்டுத் திரை களும் அதிக விரைவில் நீங்கிப் போய்விடும். (இத்திரைகளின் விவரத்தை ஆறுவது திருமுறை அருட்பெருஞ்ஜோதி அகவலில் பக்கம்-24 கண்டுணர்க.) மேலும் இது நீங்கினவுடனே அவன் பஞ்சகிருத்திய முதலானதுஞ் செய்வான். ஆதலால், முயற்சியுடனே இருந்தால், அதற்கு தக்க லாபத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

இதற்கு மேற்பட, நாம் நாமும், பார்த்தும், கேட்டும், **லக்ஷியம் வைத்துக் கொண்டிருந்த வேதம், ஆகமம், புராணம், இதிகாசம் முதலிய கலைகள் எதனிலும் லக்ஷியம் வைக்கவேண்டாம்**. ஏனென்றால், அவைகளின் ஒன்றி லாவது குழூஉக்குறி யன்றியில் தெய்வத்தை இன்னபடி என்றும், தெய்வத்தி னுடைய உண்மை இன்னதென்றும், கொஞ்சமேனும் புறங்கவியச் சொல்லாமல், மண்ணைப்போட்டு மறைத்துவிட்டார்கள். அணுமாத்திரமேனுந் தெரிவிக்காமல், பிண்ட லக்ஷணத்தை அண்டத்தில் காட்டினார்கள். யாதெனில் :— கைலாசபதி என்றும், வைகுண்டபதி என்றும், சத்திய லோகாதிபதி என்றும் பெயரிட்டு, இடம், வாகனம், ஆயுதம், வடிவம், ரூபம் முதலியவையும் ஒரு மனுஷ்யனுக்கு அமைப்பது போல் அமைத்து உண்மையாக இருப்பதாகச் சொல்லியிருக் கின்றார்கள். "தெய்வத்துக்குக் கை, கால், முதலியன இருக்குமா?" என்று கேட்பவர்க்குப் பதில் சொல்லத்தெரியாது விழிக்கின்றார்கள். இஃது உண்மை யாக இருப்பதாகவே — முன்னும் பின்னும் உள்ள பெரியவர்களென்று பெயரிட்டுக் கொண்டிருந்தவர்களும், உண்மையை யறியாது அப்படியே கண்ணை மூடிக் கொண்டு உளறியிருக்கிறார்கள்; ஆனால், ஆதியிலே இதை மறைத்தவன் ஓர்

VALLALAR GROUPS



என்பதில் வி சாதாரண உலக விசாரத்தை மறுக்க வந்தது. அது மேலும் — பரலோக விசாரத்தையே குறிக்கும் பொருட்டு வந்தது. மேலும் ஜலத்திலிருக்கின்ற பாசியை நீக்குவது போல், நமது ஆன்மாவைத் தெரிய வொட்டாமல் மூடியிருக்கின்ற பச்சைத் திரையாகிய இராகாதிகளை, விசார அதியுஷ்ணத்தாலல்லது, மற்ற உஷ்ணங்களால் நீக்கமுடியாது. அந்த உஷ்ணம் யோகியினுடைய அனுபவத்தில் தெரியும். அதை மனுஷ்ய தரத்தில் உண்டுபண்ணுவதற்குத் தெரியாது. அந்த விசாரத்தைவிட ஆண்டவரை தோத்திரம் செய்கின்றதிலும், தெய்வத்தை நினைக்கின்றதிலும், அதிக உஷ்ணம் உண்டாகும். யோகிகள், வனம், மலை, முழை முதலியவைகளில் போய் நூறு, ஆயிரம் முதலிய வருஷகாலம் தவஞ்செய்து இவ்வுஷ்ணத்தை உண்டுபண்ணிக் கொள்ளுகிறார்கள்.

இப்படித் தவம் செய்து உஷ்ணத்தை உண்டுபண்ணிக்கொள்ளுகிறதைப் பார்க்கிலும், தெய்வத்தைத் தோத்திரம் செய்கின்றதிலும், நினைக்கின்றதிலும் — இதைவிடக் — கோடிப்பங்கு பத்துக் கோடிப் பங்கு அதிகமாக உஷ்ணம் உண்டுபண்ணிக்கொள்ளலாம். எவ்வாறெனில் — ஒரு ஜாமநேரம், மனத்தில் இகவிசாரமன்னியில் பரவிசாரிப்பும் அத்துடன் ஆன்ம நெகிழ்ச்சியுடன் தெய்வத்தைச் சிந்தித்துக்கொண்டாவது, அல்லது தோத்திரம் செய்துகொண்டாவதிருந்தால் நாம், பெறவேண்டியதைப் பெற்றுக்கொள்ளலாம், ஆதலால், இவ்வுலகில் வி — சாரமென்கின்ற உண்மை தெரியாது, விசாரமென்று வழங்கி, அதைத் துக்கமென்றே சொல்லுவார்கள். நாம் அப்படி அர்த்தம்பண்ணக்கூடாது. அவர்கள் பண்ணுகின்றது — துக்கமே விசாரமென்றது: அது தப்பு: சாரம் என்றால் துக்க நிவர்த்தி. வி — உபசர்க்கம், சாரம் என்கின்ற துக்கத்தை நிவர்த்தித்தது வி. ஆதலால், விசாரமென்கின்றது முன்குறித்தபடி பரலோக விசாரத்தையே குறிக்கின்றது. ஆதலால், இடைவிடாது விசாரவசத்தரா யிருக்கவேண்டும். மேலும், வி — சாரமென்பது: வி — விபத்துசாரம் — நீக்குதல், நடத்தல். ஆதலால் இடைவிடாது நன்முயற்சியின்கண் பயிலுதல் வேண்டும்.

மேலும், சிலர், "இது ஆண்டவர் வருகின்ற தருணமாக இருக்கின்றதே! இத்தருணத்தில் முயற்சி செய்வானேன்? ஆண்டவர் வந்தவுடனே பெறவேண்டியதைப் பெற்றுக்கொள்ளப்படாதோ?" என்று வினவலாம், ஆம், இஃது — தாம் வினவியது நலந்தான். ஆண்டவர் வரப்போகின்றது சத்தியந்தான். நம்மவர்களின் திரை நீங்கப் போகின்றதும் சத்தியந்தான். நீங்கள் எல்லோரும் பெறவேண்டியதைப் பெற்றுக்கொள்ளுகின்றதும் சத்தியந்தான், ஆனால், முன்சொன்ன பச்சைத்திரை இரண்டு கூறாக இருக்கின்றது. யாவெனில் — அசுத்த மாயா திரையென்றும் சுத்த மாயா- திரையென்றும் இரண்டு இவை கீழ்ப்பாகத்தில் ஒரு கூறும் மேல்பாகத்தில் ஒரு கூறுமாக இருக்கும். கீழ்ப்பாகத்திலுள்ளது அசுத்த மாயா திரை. மேல்பாகத்தில் உள்ளது சுத்த மாயாதிரை. இவற்றில் அசுத்த மாயாதிரை — இகலோகபோக லக்ஷியமுடையது. சுத்த மாயாதிரை — பரலோக



சாத்தியத்தையுடையது; இவற்றில் — ஆண்டவர் வந்து சாதாரணமாக அனுக்கிரகஞ் செய்கின்றபோது, முயற்சியில்லாத சாதாரண மனுஷ்யர்களுடைய கீழ்ப்பாகத்திலுள்ள அசுத்த மாயை யென்னும் பச்சைத்திரையை மாத்திரம் நீக்குவார். ஆதலால், கூடியவரையில் அக்காலத்தில் நாம் அத்திரை நீங்கியவுடன் சுத்தமாய்ப் புனிதர்களாக இருக்கலாமே யல்லது, பெறவேண்டியதைப் பெற்றுக்கொள்ளுதற்குக் கூடாது. மேலும், பஞ்சகிர்த்திய விபவங்களும் இதர சித்தி முதலியவையும், ஆன்மானுபவத்தையும், செய்யவும், பெறவும் கூடாது. பின்னும் நன்முயற்சி செய்தே மேலேறவேண்டியது.

மேலும், இத்தருணம் இங்கு உண்டாகும் கூச்சல், முதலியவையும் அடுத்தவர்களுக்குப் பக்குவம் வருவிக்கவும் பாவிகளை விலக்கவும் உண்டாயின. ஆதலால், நாம் எல்லவரும் இத்தருணம், இப்போதே, விசேஷ நன் முயற்சியுடனே இருந்தால், ஆண்டவர் வருகிறபோது நம் கீழ்ப்பாகத்திலுள்ள அசுத்த மாயா திரையோடு கூடி மேற்பாகத்திலிருக்கிற சுத்த மாயையினுடைய பச்சைத் திரையும் நீங்கிப் போய்விடும், கருமையிற் பச்சை வர்ணமுடையது — அசுத்த மாயாதிரை. பொன்மையிற் பச்சை வர்ணமுடையது சுத்த மாயாதிரை. கருமையிற் பச்சை வர்ணமுடைய அசுத்த மாயா திரை நீங்கினபிறகு மற்ற எட்டுத் திரைகளும் அதிக விரைவில் நீங்கிப் போய்விடும். (இத்திரைகளின் விவரத்தை ஆறாவது திருமுறை அருட்பெருஞ்ஜோதி அகவலில் பக்கம்-24 கண்டுணர்க.) மேலும் இது நீங்கினவுடனே அவன் பஞ்சகிர்த்திய முதலானதுஞ் செய்வான். ஆதலால், முயற்சியுடனே இருந்தால், அதற்கு தக்க லாபத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

இதற்கு மேற்பட, நாம் நாமும், பார்த்தும், கேட்டும், **லக்ஷியம் வைத்துக் கொண்டிருந்த** வேதம், ஆகமம், புராணம், **இதிகாசம் முதலிய கலைகள் எதனினும் லக்ஷியம் வைக்கவேண்டாம்**. ஏனென்றால், அவைகளின் ஒன்றிலாவது குழூஉக்குறி யன்றியில் தெய்வத்தை இன்னபடி என்றும், தெய்வத்தினுடைய உண்மை இன்னதென்றும், கொஞ்சமேனும் புறங்கவியச் சொல்லாமல், மண்ணைப்போட்டு மறைத்துவிட்டார்கள். அணுமாத்திரமேனுந் தெரிவிக்காமல், பிண்ட லக்ஷணத்தை அண்டத்தில் காட்டினார்கள். யாதெனில்:— கைலாசபதி என்றும், வைகுண்டபதி என்றும், சத்திய லோகாதிபதி என்றும் பெயரிட்டு, இடம், வாகனம், ஆயுதம், வடிவம், ரூபம் முதலியவையும் ஒரு மனுஷ்யனுக்கு அமைப்பது போல் அமைத்து உண்மையாக இருப்பதாகச் சொல்லியிருக்கின்றார்கள். "தெய்வத்துக்குக் கை, கால், முதலியன இருக்குமா!" என்று கேட்பவர்க்குப் பதில் சொல்லத்தெரியாது விழிக்கின்றார்கள். இஃது உண்மையாக இருப்பதாகவே — முன்னும் பின்னும் உள்ள பெரியவர்களென்று பெயரிட்டுக் கொண்டிருந்தவர்களும், உண்மையை யறியாது அப்படியே கண்ணை மூடிக் கொண்டு உளறியிருக்கிறார்கள்; ஆனால், ஆதியிலே இதை மறைத்தவன் ஓர்

வல்லவன். அவன் மறைத்ததை இதுவரைக்கும் ஒருவரும் சண்டபாடில்லை. அவன் பூட்டிய அந்த பூட்டை ஒருவரும் திறக்கவில்லை; இதுவரைக்கும் அப்படிப் பட்டவன் பூட்டிய பூட்டை உடைக்க ஒருவரும் வரவில்லை. அவைகளில் ஏகதேச கர்ம சித்திகளைக் கற்பனைகளாகச் சொல்லியிருக்கின்றார்கள். அதற்காக ஒவ்வொரு சித்துக்குப் பத்து வருஷம் எட்டு வருஷம் பிரயாசை எடுத்துக்கொண்டால், அற்ப சித்திகளை அடையலாம். அதற்காக அவற்றில் லக்ஷியம் வைத்தால், ஆண்டவரிடத்தில் வைத்துக்கொண்டிருக்கிற லக்ஷியம் போய்விடும். ஆண்டவரிடத்தில் வைத்த லக்ஷியம் போய்விட்டால். நீங்கள் அடையப்போகிற பெரிய பிரயோஜனம் போய்விடும். அல்லது, அதில் முயற்சிசெய்து, அவ்வளவுகாலம் உழைத்து அந்த அற்பபிரயோஜனத்தைத் தெரிந்துகொண்டு, அதனால் ஒரு லாபத்தை ஏகதேசம் அடைந்தால் முக்கிய லாபம் போய்விடும். ஆகையால், அவைகளில் லட்சியம் வைக்காமல், ஆண்டவரிடத்திலேயே லட்சியம் வைக்க வேண்டியது. முன் சொன்ன ஏகதேச சித்தி கற்பனை யென்கிறது நான் செய்த சத்தியப் பெரு விண்ணப்பத்தாலும், (வசனபாகம் பக்கம் 3)

இயல்வேதா கமங்கள்புரா ணங்களிதி காசம்
இவைமுதலா விந்திரசா லங்கடையா உரைப்பார்
மயலொருநூல் மாத்திரந்தான் சாலமென அறிந்தார்
மகனேநீ நூலனைத்துஞ் சாலமென அறிக
செயலனைத்தும் அருளொளியாற் காண்கவென எனக்கே
திருவுளம்பற் றியஞான தேசிகமா மணியே
அயலறியா அறிவுடையார் எல்லாரும் போற்ற
ஆடுகின்ற அரசேயென் அலங்கலணிந் தருளே.

என்ற அருள்விளக்கமாலை 87-வது பாசுரத்தாலு முணர்க. மேலும் அதிற் கண்ட குறிப்பையுந் தெரிந்துகொள்ளுங்கள்.

இதுபோல் வியாகரணம் — தொல்காப்பியம் — பாணிநீயம் — முதலியவைகளில் சொல்லியிருக்கின்ற இலக்கணங்கள் முழுவதும் குற்றமே. அவைகளில் குற்றமே சொல்லியிருக்கின்றார்கள். எவ்வாறெனில், — தொண்ணூறு, தொள்ளாயிரம் என்கிற கணிதத்தின் உண்மை நான் சொன்ன பிறகு தெரிந்துகொண்டீர்களல்லவா? இப்படியே ஒன்று, இரண்டு முதல் நூறு முதலான இலக்கங்களுக்கும் உகர இறுதி வருவானேன்? ஒருவாறு சித்தர்கள் காரணப்பெயராக இட்டிருக்கிறார்கள். தொல் — நூறு தொண்ணூறென்றும் தொல் — ஆயிரம் தொள்ளாயிரமென்றும் வழங்குகின்றன. தொல் என்பது ஒன்று குறையத் தொக்கியது. தொன்மை — தொல் லெனப் பிரிந்தது. வழக்கத்தில் தொள்ளாயிரம் தொண்ணூறு என மருவியது. இதற்குப் பத்திடத்திற்கு ஓரிடம் குறைந்த முன்ஆயிரமென்றும்,



ஒன்று குறைந்த பத்தென்றும் ஒருவாறு கொள்க. இப்படி நான் சொன்னதுபோல் சொன்னால், சிறு குழந்தைகள்கூட அறிந்து கொள்ளும்.

இதுபோல் சைவம், வைணவம் முதலிய சமயங்களிலும், வேதாந்தம், சித்தாந்தம் முதலிய மதங்களிலும் லக்ஷியம் வைக்கவேண்டாம். (அவற்றில் தெய்வத்தைப்பற்றி) குழூஉக் குறியாகக் குறித்திருக்கிறதேயன்றிப் புறங்கவியச் சொல்லவில்லை. அவ்வாறு பயிலுவோமானால் நமக்குக் காலமில்லை. ஆதலால் அவற்றில் லக்ஷியம் வைக்கவேண்டாம். ஏனெனில் அவைகளிலும் — அச்சமய மதங்களிலும் — அற்பப் பிரயோஜனம் பெற்றுக்கொள்ளக் கூடுமேயல்லது ஒப்பற்ற பெரிய வாழ்வாகிய இயற்கையுண்மை என்னும் ஆன்மானுபவத்தைப் பெற்றுக்கொள்ளுகிறதற்கு முடியாது. ஏனெனில் நமக்குக் காலமில்லை. மேலும் இவைகளுக்கெல்லாம் சாக்ஷி நானே யிருக்கின்றேன், நான் முதலில் சைவ சமயத்தில் லக்ஷியம் வைத்துக்கொண்டிருந்தது இவ்வளவென்று அளவுசொல்ல முடியாது. அது பட்டணத்துச் சுவாமிகளுக்கும் வேலாயுத முதலியாருக்கும் இன்னும் சிலர்க்குந் தெரியும். அந்த லக்ஷியம் எப்படிப் போய்விட்டது? பார்த்தீர்களா! அப்படி லக்ஷியம் வைத்ததற்குச் சாக்ஷி வேறே வேண்டியதில்லை. நான் பாடியிருக்கிற [1] திருவருட்பாவில் அடங்கியிருக்கின்ற பாடலையும், மற்றவர்கள் பாடலையும் சபைக்குக் கொண்டுவந்தால், அவைகளே சாக்ஷி சொல்லிவிடும். ஏன் அவ்வளவு மிகுந்த அழுத்தம் எனக்கு அப்போதிருந்ததென்றால், அப்போது எனக்கு அவ்வளவு கொஞ்சம் அற்ப அறிவாக இருந்தது.

இப்போது ஆண்டவர் என்னை ஏறாநிலைமே லேற்றியிருக்கின்றார். இப்போது எல்லாவற்றையும் விட்டுவிட்டதினால் வந்த லாபம் இது. ஆதலால் நீங்களும் விட்டுவிட்டீர்களானால், என்னைப்போல் பெரிய லாபத்தைப் பெறுவீர்கள். இதுவரைக்கும் விடாமல் வைத்துக்கொண்டிருந்தவர்கள் ஏதாவது லாபத்தைப் பெற்றுக்கொண்டார்களா? பெற்றுக்கொள்ளவில்லை. நான் அப்படி அந்தச் சமயத்தில் வைத்திருந்த லக்ஷியமே என்னை இந்த நிலையில் தூக்கிவிட்டதென்றாலோ, அந்த லக்ஷியம் தூக்கி விடவில்லை. என்னை இந்த இடத்திற்குத் தூக்கிவிட்டது யாதெனில்: — அக்காலத்திலேயே எனக்குத் தெரிவிக்கவேண்டியதைத் தெரிவித்தாரென்று [2] சத்தியப்பெரு விண்ணப்பத்திலும். [3] "எத்தே

1. அப்போது திருவருட்பாவில் அச்சாகி வெளியிடப்பட்டிருந்தவை முதல் நான்கு திருமுறைகள் மட்டுமே.
2. ஆறாவது திருமுறை வசன பாகம் பக்கம்-3
3. மாயையாற் கலங்கி வருந்திய போதும் வள்ளலுன் றன்னையே மதித்துன்
சாயையாய்ப் பிறரைப் பார்த்ததே யல்லாற் றலைவவே றெண்ணிய துண்டோ
தூய பொற் பாதமறியநா னறியேன் துயரினிச் சிறிதுமிங் காற்றேன்
நாயகா வெனது மயக்கெலாந் தவிர்த்தே நன்றருள் புரிவதுன் கடனே.
— ஆறாவது திருமுறை பதிகம் 70 பாட்டு-5

VALLALAR GROUPS



வரையும் நின் சாயையாய்ப் பார்த்ததேயன்றித் தலைவ வேறெண்ணியதுண்டோ'' எனவும். [1] ''தேடிய துண்டு நின துருவுண்மை'' என்னும் தொடக்கமுடைய பதிகத்திலும், விண்ணப்பித்திருக்கின்றேன். மேலும் அவர் தெரிவித்த உண்மைப் பெருநெறி ஒழுக்கம் யாதெனில் [2] ''கருணையும் சிவமே பொருளெனக் காணும் காட்சியும் பெறுக'' என்றதுதான் என்னை ஏழுநிலைமிசை யேற்றிவிட்டது. அது யாதெனில் தயவு, தயவு என்னுங் கருணைதான் என்னைத் தூக்கிவிட்டது.

அந்தத் தயவுக்கு ஒருமை வரவேண்டும். அந்த ஒருமை யிருந்தால்தான் தயவு வரும், தயவு வர்தால்தான் பெரிய நிலைமேல் ஏறலாம். இப்போது என்னுடைய அறிவு அண்டாண்டங்களுக்கு அப்பாலும் கடந்திருக்கிறது. அது அந்த ஒருமையினாலேதான் வந்தது. நீங்களும் என்னைப்போல் ஒருமையுட னிருங்கள். என்னிடத்தில் ஒருவன் வசப்படாத முரட்டுத்தனமாய் எப்படி யிருந்தாலும்,

**1. அவனுக்கு நல்ல வார்த்தை சொல்லுவேன் :**

**2. மிரட்டிச் சொல்லுவேன் :**

**3. தெண்டன் விழுந்து சொல்லுவேன் :**

**4. அல்லது பொருளைக் கொடுத்து வசப்படுத்துவேன் ;**

**5. அல்லது ஆண்டவரை நினைத்துப் பிரார்த்தனை செய்வேன் ;**

இப்படி எந்த விதத்திலேயாவது நல்ல வழிக்கு வரச்செய்து விடுவேன். நீங்கள் எல்லவரும் இப்படியே செய்தல் வேண்டும். இராத்திரி கூட ''நான் இல்லாமல் இந்த ஜனங்கள் க்ஷணநேரம் இருக்க மாட்டார்களே'' என்று ஆண்டவரிடத்தில் விண்ணப்பித்துக் கொண்டேன். அது இங்கே இருக்கிற ஜனங்கள்

---

1 தேடியதுண்டு நினதுருவுண்மை தெளிந்திடச் சிறிது நின்னுடனே
ஊடியதுண்டு பிறர்தமை யடுத்தே யுரைத்தது முவந்தது முண்டோ
ஆடியபாத மறியநா னறியேன் அம்பலத் தருட்பெருஞ் ஜோதி
கூடிய நின்னைப் பிரிகிலேன் பிரிவைக் கூறவும் கூசுமென் னாவே.

—ஆறாவது திருமுறை பதிகம் 70 பாட்டு-1

2. கருணையுஞ் சிவமே பொருளெனக்காணுங் காட்சியும் பெறுகமற் றெல்லாம்
மருணெறியெனநீ யெனக்கறிவித்த வண்ணமே பெற்றிருக்கின்றேன்
இருணெறி மாயை வினைகளாற் கலக்க மெய்தியதென்செய்வே னெந்தாய்
தெருணிலை யின்றிக் கலங்கினேனெனினுஞ் சிறுநெறிபிடித்ததொன் றிலையே.

—ஆறாவது திருமுறை பதிகம் 21 பாட்டு-90



மட்டில் மாத்திரமல்ல. **உலகத்திலிருக்கிற எல்லா ஜனங்களையும் குறித்தே விண்ணப்பித்துக் கொண்டேன்.** ஏனெனில் எல்லவரும் சகோதரர்க ளாதலாலும், இயற்கை யுண்மை யேகதேசங்க ளாதலாலும், ஆன்மநேய ஒருமைப் பாட்டுரிமை வைத்துக் கொண்டிருக்கிறேன்.

இப்போது நீங்கள் — இதுவரைக்கும் ஒழுக்கத்துக்கு வராமல் எவ்வளவு தாழ்ந்த மனுஷ்யர்களாயிருந்தாலும் — சாலைக்குப் போகக் கொஞ்சதின மிருக்கிறது — அதற்குள்ளாக நீங்கள், நீங்களும் நல்லொழுக்கத்திற்கு வருவதோடுகூட மற்றவர்களையும் நமது ஒழுக்கத்திற்கு வரும்படி எவ்விதத் தந்திரமாவது செய்து நம்மவர்களாக்கிக் கொள்ள வேண்டியது. நீங்கள் கொஞ்ச தினத்துக்கு அப்படிச் செய்து கொண்டிருங்கள். நானும் ஆண்டவரிடத்தில் இவ் வுலகத்திலுள்ள எல்லா ஜீவர்களும் நன்மை யடையப் பிரார்த்தித்தும், ஆண்டவரிடத்தில் கேட்டுக் கொண்டும் வருகின்றேன். ஆதலால், நீங்கள் அப்படிச் செய்து கொண் டிருங்கள்.

சமயந் தவிர மதங்களில் உள்ள வேதாந்தி, சித்தாந்தி என்று பெயரிட்டுக் கொண்ட பெரியவர்களும் உண்மை யறியாது. சமய வாதிகளைப் போலவே ஒன்று கிடக்க ஒன்றை உளறுகிறார்கள். ஆனதினால் நீங்கள் அஃது ஒன்றையும் நம்ப வேண்டாம். எவைகளிலும் தெய்வத்தைப் புறமுகமாகப் புலப்படச் சொல்ல வில்லை. தெய்வத்தைத் தெரிந்து கொள்ளாது இவ்வுலகத்தார் என்னைத் தெய்வ மெனச் சுற்றுகின்றார்கள். ஐயோ! நம் சகோதரர்கள் தெய்வத்தைத் தெரிந்து கொள்ளாததினாலே யல்லவா நம்மைச் சுற்றுகிறார்கள்!'' என்று நான் உள்ளும் புறமும் **பரிதாபப்பட்டுக் கொண்டே இருந்தேன் ; இருக்கின்றேன் ; இருப்பேன்.** தெய்வத்தை ஏன் தெரிந்துகொள்ளவில்லை யென்றால் : ஒரு பதார்த்தத்தை அனுபவித்தாலல்லது அந்தப் பதார்த்தத்தினுடைய ருசி தெரியாது. ருசி தெரியாத பதார்த்தத்தின்மேல் இச்சை போகாது. அதுபோல் தெய்வத்தை யுள்ளபடி அனுபவித்தாலல்லது தெய்வத்தினிடத்தில் பிரியம் வாராது. ஆதலால், தெய்வத்தைத் தெரிந்து கொள்ள வேண்டு மென்கிற முக்கிய லக்ஷியத்தில் இருந்து கொண்டு விசாரஞ் செய்து கொண்டிருங்கள்.

அந்த விசாரம் செய்வது எப்படியென்றால் :— அண்டத்தில் சூரியன் சந்திரன் நக்ஷத்திரங்கள் — இவைகள் எப்படிப்பட்டன? இவைகளினுடைய சொரூப ரூப சுபாவம் என்ன? இவை முதலான அண்ட விசாரமும் : பிண்டத்தில் நாம் யார்? இத்தேகத்தின்கண் புருவம் கைமூலம் - இவைகளிலும் இவைபோன்ற மற்ற இடங்களிலும் உரோமம் உண்டாவானேன்? நெற்றி முதலான இடங்களில் அது தோன்றா திருப்பதென்ன? கால் கைகளிலுள்ள விரல்களில் நகம் முளைத்தலும் அங்கம் வளர்தலும் — இவைபோன்ற மற்றத் தத்துவங்களினது சொரூப ரூப சுபாவங்களும் என்ன? என்ற பிண்ட விசாரமுஞ் செய்து கொண்டிருங்கள்.

VALLALAR GROUPS



இப்படி இடைவிடாது விசாரஞ் செய்துகொண்டிருந்தால், இவ்வுலகத்தின் கண் உள்ள ஜனங்கள் அதைக் குறித்து ஏளனமாகச் சொல்லுவார்கள். அப்படிச் சொல்லுவது அவர்களுக்குச் சுபாவம். ஏனெனில், அவர்களுக்கு உண்மை தெரியாது. ஆதலால் நீங்கள் அதை லக்ஷியம் செய்யக்கூடாது.

இப்படியே "காதில் இரண்டு பெரிய பொத்தல் செய்து வரவிடுத்தவர்—ஆணுக்குக் கடுக்கனிடுதலும், பெண்ணுக்கு மூக்குத்தி முதலியவை போடுதலும், தமக்கு சம்மதமானால்—காதிலும் மூக்கிலும் அதற்கு வேண்டிய பொத்தல் களிட்டு வரவிட்டிருக்கமாட்டாரா?" என்று விசாரித்துத் தெரிந்துகொள்ளுகிற பக்ஷத்தில், காதில் கடுக்கனிடவும் மூக்கு முதலியவற்றில் நகையிடவும் சம்மதம் வருமா? இப்படி விசாரித்துப் பிரபஞ்ச போகத்தின்கண் அலக்ஷியம் தோன்றினால் நிராசை உண்டாம். ஆதலால், சரியை முதலிய சாதகம் நான்கில், நான்காவது ஞானத்தில், சரியை, கிரியை, யோகம், ஞானம் என்கின்ற நான்கில், மூன்றாவது படி யாகிய ஞானத்தில் யோகம் செய்கின்ற பலனாகிய நிராசையென்னும்படி (பதினைந்தாம் படி) உண்டாகின்றது. ஆகையினாலே, இந்த விசாரத்திலிருந்து கொண்டிருங்கள்.

இவ்விசாரஞ் செய்துகொண்டிருந்தால், ஆண்டவர் வந்தவுடனே, கண்ட மாக உங்களுக்குத் தெரிவிக்க வேண்டியதைத் தெரிவிப்பார். மறுபடியும் உங்களுக்கு ஒருமை வந்தவுடனே அகண்டமாகத் தெரிவிப்பார். ஆதலால் நீங்கள் இந்த முயற்சியிலிருங்கள். இரண்டரை வருஷமாக நான் சொல்லிக் கொண்டு வந்தேன். இனிச் சொல்பவர்கள் சிலநாள் தடை பட்டிருப்பார்கள். இனி நீங்கள் இது வரைக்கும் இருந்ததுபோல் இராதீர்கள்.

## இது கடைசி வார்த்தை

இதுமுதல் — கொஞ்ச காலம் — சாலைக்குப் போகின்ற வரைக்கும், ஜாக்கிரதையாக மேற்சொன்ன பிரகாரம் விசாரம் செய்துகொண்டிருங்கள்.

மேலும், சமய மதங்களில் தெய்வத்தினது உண்மையைக் குழூஉக்குறியால் குறித்து, அக்குறிப்பையும் வெளிப்படையாகக் காட்டாது, சிவாயநம என்றும் இதுபோன்ற அனந்த வர்ணங்களைச் சேர்த்து, ஒன்று, இரண்டு, மூன்று, ஐந்து, ஆறு, எட்டு, பத்து, பதின்மூன்று, பதினைந்து, பதினாறு, இருபத்துநான்கு முதலிய சங்கையில் மந்திரங்களாய் அமைத்து வழங்கி வருவிக்க விட்டு நடந்து வருகின்றது. அவ்வவ் மந்திரங்களின் அர்த்தம் பலவாக விரியும். ஆதலால், நாம் அடைய வேண்டுவது முடிவான ஆன்ம லாபமாகிய சிவானுபவமே யன்றி வேறில்லை. இங்குள்ள எல்லவர்க்கும் சுவர்க்க நரக விசாரமில்லை. சுவர்க்க நரக விசாரமுள்ளவர்கள் தங்கள் கருத்தின்படி பலவகைச் சாதனங்களைச் செய்து



அற்ப பிரயோஜனத்தைப் பெற்று, முடிவில் தடைபட்டுத் திருவருட்டுணையால் கருணை நன்முயற்சி யெடுத்துக்கொண்டு, பின் முடிவான சித்தி இன்பத்தைப் பெறுவார்கள். அஃது அருமை.

இத்தருணம் ஆண்டவர் எல்லாவற்றையும் நீக்கி எல்லோரும் மேலான இன்பத்தை அடையும்பொருட்டு, முடிவான இன்பானுபவத்திற்குச் சாதக சகாய மான திருவருள் மகா வாக்கியத் திருமந்திரத்தை (த்தமது உண்மையை வெளிப் படக் காட்டும் மகா மந்திரத்தை) எனக்கு வெளியிட்ட அவ்வண்ணம், எனது மெய்யறிவின்கண் அனுபவித்தெழுந்த, உண்மையறி யனுபவானந்த இன்பத்தை, நீங்கள் எல்லவரும் என்போல் ஐயம் திரிபு மயக்கம் இன்றி அடைய என்னுள்ளே எழுந்து பொங்கிய ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமையைப் பற்றிக் குறிப்பித்தேன், குறிப்பிக்கின்றேன், குறிப்பிப்பேன். நமது ஆண்டவர் கட்டளையிட்டது யாதெனில் — நமக்கு முன் சாதனம் கருணை யானதினாலே, ஆண்டவர் முதற் சாதனமாக,

"அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி"

என்னும் திருமந்திரத்தை, வெளிப்படையாக எடுத்துக்கொண்டார். தயவு, கருணை, அருள் என்பவை ஒரு பொருளையே குறிக்கும். ஆதலால் பெரிய தயவுடைய அறிவே பூரண இன்பமாம் — அது ஒப்பற்ற பெருந்தயவுடைய பேரறிவேயாம். இஃது வாச்சியார்த்தம். இவ்வண்ணம் சாதனம் முதிர்ந்தால் முடிவான இன்பானுபவம் பெறுவதற்குத் தடையில்லை. [1] "சந்ததமும் வேத மொழி யாதொன்று பற்றின் அதுதான் வந்து முற்றும்" என்னும் பிரமாணத்தால் உணர்க.

மேலும், இதுகாறும் தெய்வத்தின் உண்மையைத் தெரியவொட்டாது, அசுத்தமாயா காரிகளாகிய சித்தர்கள் மறைத்துவிட்டார்கள். சுத்த மாயாகாரி யாகிய தெரிந்த பெரியோரும் இல்லை. சன்மார்க்கமும் இல்லை. சன்மார்க்கம் இருந்தால், அனுபவித்தறியாத அனுபவமும், கேட்டறியாத கேள்வியும், நாம் கேட்டிருப்போம். மேலும், இறந்தவர்கள் மீளவும் எழுந்து வந்திருப்பார்கள். ஆதலால், கேட்டறியாத கேள்விகளைக் கேட்கும்படி ஆண்டவர் செய்தது இத்தருணமே. ஆதலால், இத்தருணம் — இக்காலமே சன்மார்க்க காலம்.

---

[1] சந்ததமும் வேதமொழி யாதொன்று பற்றினது தான்வந்து முற்றும் எனலால்
சுகமீ திருந்தாலும் மரணமுன் டென்பது சதாநிஷ்டர் நினைவ தில்லை
சிந்தையறி யார்க்கீது போதிப்ப தல்லவே செப்பினும் வெகுதர்க்கமாம்
திவ்யகுண மார்க்கண்டர் சுகாதி முனிவோர்கள் சித்தாந்த நித்ய ரலரோ?
—தாயுமான சுவாமிகள்—கருணாகரக் கடவுள், 7-ம் பாட்டு

VALLALAR GROUPS



இதற்குச் சாக்ஷியாக இப்போதுதான் **சன்மார்க்கக்கொடி** கட்டிக் கொண்டது. அக்கொடி உண்மையில் யாதெனில் :—நமது நாபிமுதல் புருவ மத்தி ஈறாக ஒரு நாடியிருக்கின்றது ; அந்த நாடி நுனியில் புருவ மத்தியின் உட்புறத்தில் ஓர் சவ்வு தொங்குகின்றது ; **அதன் அடிப்புறம் வெள்ளை வர்ணம் ; மேற்புறம் மஞ்சள் வர்ணம் ;** அச்சவ்வின்கீழ் ஓர் நரம்பு ஏறவும் இறங்கவும் இருக்கின்றது. இக்கொடி நம் அநுவத்தின்கண் விளங்கும். இவ்வடையாளக் குறிப்பாகவே இன்றைய தினம் வெளிமுகத்தில் அடையாள வர்ணமான கொடி கட்டியது ; இனி எல்லவர்க்கும் நல்ல அனுபவம் அறிவின்கண் தோன்றும்.

**உண்மை சொல்ல வந்தனனே என்று உண்மை சொல்லப் புகுந்தாலும் தெரிந்துகொள்வாரில்லை.** கொடி கட்டிக்கொண்ட படியால், இனி எல்லோரும் உண்மையை அறிந்துகொள்வார்கள். முன்உள்ளவர்கள் உண்மையைத் தெரிய வொட்டாது மண்ணைப்போட்டு மறைத்துவிட்டார்கள். இத்தருணம் ஆண்டவரும் தெரிவித்தார், தெரிவிக்கின்றார், தெரிவிப்பார். நீங்கள் எல்லவரும் உண்மையைத் தெரிந்துகொள்ளுங்கள். இப்போது நான் சொல்லிவந்தபிரகாரம் ஜாக்கிரதையுடன் உண்மையறிவாய் விசாரம் செய்துகொண்டிருங்கள். அவசியம் இதற்குக் காரணமான தயவிருக்க வேண்டியது. அந்த தயவு வருவதற்கு ஏதுவான பொது உரிமையும் கூட இருக்கவேண்டும். இப்படி இருந்துகொண்டிருந்தால், ஆண்டவர் வந்தவுடனே எல்லா நன்மையையும் பெற்றுக்கொள்வீர்கள். எல்லோருக்கும், தாய், தந்தை, அண்ணன், தம்பி முதலான ஆப்தர்கள் செய்யப்பட்ட உதவி எவ்வளவோ, அதற்குக் கோடி கோடிப்பங்கு அதிகமாக உதவி கொடுக்கும் படியான இடம் இந்த இடம் ;

**இது சத்தியம், சத்தியம், சத்தியம். இஃது ஆண்டவர் கட்டளை.**

**திருச்சிற்றம்பலம்**

---

# 6. சுப்பிரமணியம்

**அருட்பெருஞ்ஜோதி**

**சுப்பிரமணியம் என்பது என்ன ?**

நமது புருவமத்தியில் ஆறு பட்டையாய் உருட்சியுள்ள **ஒரு மணி பிரகாசம்** பொருந்தி யிருக்கின்றது. இந்த **ஜோதி மணியை,** ஷண்முகமென்று பெரியோர்கள் சொல்லுவார்கள். இதன்றி, நமது மூலாதாரத்திற்கு மேல், மூன்றிடந் தாண்டி, விசுத்தியாகிய இருதய ஸ்தானத்தில் இடது புறத்தில் ஆறு தலையுடைய ஒரு நாடி யிருக்கின்றது. இதைச் சுப்பிரமணியம் என்று சொல்லுவார்கள். இந்தத் தேகத்திலுள்ள ஆறறிவும் ஒருங்கே சேர்ந்த சுத்த விவேகமென்பதையும் ஷண்முகமென்பார்கள். ஆறு ஆதாரங்களிலுள்ள ஆறு



பிரகாசத்தையும் ஷண்முகம் என்பார்கள். ஆயினும், சர்வ தத்துவங்களினது அந்தத்தில் உன்மனிக்கப்பால் சாந்த நிறைவாயுள்ள ஆறுதலாகிய சுத்த ஆன்ம அறிவாகிய உள்ளமே **சுப்பிரமணியம்.**

**முகம் ஆறு என்பது :—**

ஆறு ஜோதியாயும், ஆறறிவாயும், ஆறு தலையுடையதாயும் இருப்பதால் முகம் ஆறு.

**கால் இரண்டு என்பது :—**

தோன்றும் அறிவு — தோற்றுவிக்கும் அறிவு — என்னும் இரண்டறிவாகிய விஷய உணர்ச்சியும், நிர்விஷய உணர்ச்சியுமே யாம்.

**கை பன்னிரண்டு என்பது :—**

ஆறு ஆதாரங்களிலுள்ள பிரகாச — அப்பிரகாசமாகிய — பன்னிரண்டுமாம்.

**தசாயுதம் அபய வரத மென்பவை யாவெனில் :**

1. **வச்சிரம்** என்பது — தீக்ஷண்ணிய வுணர்ச்சி ;
2. **வேல்** என்பது — சத்தி ;
3. **அருள்** என்பது — அறிவு ;
4. **மணி** என்பது — ஆன்ம விளக்கமாகிய நாதம் ;
5. **த்வஜம்** என்பது — புகழாகிய கீர்த்தி ;
6. **ஸரஸிஜம்** என்பது — தயவு ;
7. **குக்குடம்** என்பது — மாச்சரியமில்லாத நிறைவு ;
8. **பராகம்** என்பது — பாச நீக்கம் ;
9. **தண்டம்** என்பது — வைராக்கிய அறிவு ;
10. **பாணம்** என்பது — அன்பு ;

**அபயம்** என்பது — சமாதான உணர்ச்சி ;
**வரதம்** என்பது — நிராபாரமாகிய ஆதரவென்னுஞ் சகிப்பு.
**கடப்பமாலை** என்பது — **சர்வ தத்துவ கண்டனம்**

**மயில் என்பது :**

பல வர்ணமுள்ளதும், விசித்திர வடிவமானதும், மறதி முதலிய குணங்களுக்குக் காரணமானதும், மாயைக்கு இருப்பிடமாயுள்ளதுமான மூலப்பிரகிருதியே மயில்.

**மயிலின்மேல் சுவாமி ஏறிக்கொண்டிருத்தல் முதலியவற்றிற்குக் காரணம் என்னவென்றால் :—**

பிண்டாண்டமாகிய இந்தத் தேகத்திலும் அண்டத்திலும், மூலாஞ்ஞான காரணமாயுள்ள கேவலமாகிய பிரகிருதி, மாயையின் அசுத்த கேவலமாகிய அசுத்தா சுத்த மகா அகங்காரமென்னும் இராக்ஷச அம்சமான சூர தத்துவம், அதின் சோதரமான மூவகைத் தத்துவத்தோடு, அஞ்ஞான தசையில், ஆன்ம அறிவையும், — பிண்ட விளக்கமான தேவர்களையும், — விஷய விளக்கமான

VALLALAR GROUPS



இந்திரியங்களையும், — நாடி விளக்கமான யந்திரங்களையும், பிராண விளக்கமான உயிரையும் — விழுங்கித் தன்னரசு செலுத்தும். அந்தச் சூர தத்துவத்தை வதைக்கும்போது, ஷை தத்துவம் மகா மாயையாகிய மாமரமாயும், மாச்சரியமாகிய **கோழியாயும்**, விசித்திர மாயையென்னும் மயிலாயும், மகாமதமாகிய **யானை முகமாயும்**, அதி குரோதமாகிய **சிங்கமுகமாயும்** விளங்கும்.

சர்வ தத்துவங்களையுந் தன்வசமாக்கி, அகங்காரக் கொடிகட்டி, அஞ்ஞான நாடகம் செய்த தத்துவ அகங்கரிப்பை அடக்கி, பதி, பசு, பாசம், அநாதி, நித்தியம் என்னும் சித்தாந்தத்தை விளக்கிக் காட்டுவதற்காக; மாச்சரிய குக்குடத்தைப் போதமாகிய கையால் அடக்கியும், — விசித்திர மாயையாகிய மயிலைக் கீழ்படுத்தி, மேலிருந்தடக்கியும், — ஆபாச தத்துவங்களைச் சம்மரித்தும், — சுத்த விஷய புவனமாகிய, தேவலோகத்தை நிலைபெறச் செய்தும், — இந்திர பதியான தேவேந்திரனுடைய பெண்ணாகிய தாந்தர தத்துவமென்னுந் தெய்வயானையை இடைப்பாலமைத்தும், — இந்திரியங்களாகிய வேடர்களின் கண்ணிற் புலப்பட்ட மானச மென்னும் மாவினது கர்ப்பத்திலுண்டான வள்ளியாகிய சுத்த மனதை வலத்தில் வைத்தும், — நவதத்துவ காரணமாகிய நவவைராக தத்துவமாகிய வீரர்களைச் சமீபத்தி லிருத்தியும், சகல கேவலங்களுக்கும் (நினைப்பு மறப்புக்கும்) இடையில் — விவேக வடிவாயும், — பாத முதல் நாபி வரையில் உஷ்ண உருவாயும், — நாபி முதல் கண்டம் வரையில் ஆதாரநாடி உருவாயும், — கண்டமுதல் புருவ மத்தி வரையில் **மணி** உருவாயும், — உச்சியில் **ஒளி** உருவாயும், — புத்தியில் **சுத்த அறிவாயும்**, அனுபவத்தில் **நித்தியமாயும்**, — எங்கும் **நிறைவாயும்**, — கோணத்தில் ஆறாயும், — எக்காலமும் மதங்களில் ஆறாயும், — சமயத்தில் ஆறாயும் — ஜாதியில் ஆறின் **கூட்டமாயும்** — விளங்குகின்ற **உண்மைக் கடவுளே சுப்பிரமணியம்.**

**சுப்பிரமணியம் ஒருமுகம் — மூன்று முகம், — நான்கு முகம், — ஆறுமுகம் — ஆனதற்குக் காரணம் :—**

ஒன்று மிரண்டு மல்லாத ஒப்பற்ற பரப்பிரம்ம சொருபம் நம் பொருட்டுக் குழூஉக்குறியாய் — பாவனைக்கு ஒன்றென்று நிச்சயிக்கும் பரகாரண நிமித்தமாகிய அறிவுருவமே ஒரு முகமென்று ஞானிகள் சொல்லுவார்கள். சுத்த ராஜசம், — சுத்த தாமசம், — சுத்த சாத்விகமாகிய மூன்று குணங்களின் கூட்ட விளக்கமாகிய முக்குண விளக்கமே மூன்று முகம். பசுமனம் — சுத்த மனம் — உன்மனம் — சங்கலித மனம் என்னும் **நான்கு** தத்துவங்களின் கூட்ட விளக்கமே **நான்கு முகம்** சத்தவறிவின் மூலம், — ஒளியறிவின்மூலம் — சுவையறிவின்மூலம், — பரிசவறிவின்மூலம், — வாசனையறிவின்மூலம், — ஆத்ம அறிவின்மூலம் — என்னும் ஆறு தத்துவங்களின் கூட்டறிவின் மூலகாரணப் பிரகாச விளக்கமே **ஆறுமுகம்.**

**மயிலின் காலின்கீழும் வாயிலும் பாம்பு இருப்பதென்ன ?**

விசித்திர மாயையின் காரிய வுருவமான **அகங்காரம்** தோன்றி வெளிப்படுங்கால், மூலாங்காரத்திலும் அதிகரிப்பிலும் பிராண வாயுவென்னும் பாம்பானது கீழும் மேலும் உண்டாயினும், அகங்காரத்தின் முகப்பாகிய மயில், வாய்மூலமாய்ப் பிராணவாயுவினது வேகத்தை அது விழுங்கிக்கொண்டிருப்பது இயற்கைதான்.



**படைவீடென்பதென்ன ?**

அடங்கி இருக்குமிடம் :—அடங்கியிருக்கும் ஸ்தானங்களே இயற்கை விளக்கம் தங்குமிடங்களாகும்.

**இவற்றிற்கு ஊர் — 6 — ஆவானேன் ?**

**1. ஏரகம்** என்பது :—அழகு பொருந்திய உள்ளமென்னும் இடம்.

**2. திருவாவினன் குடி** என்பது — திரு — ஆ இனன் — குடி : திரு — இலக்குமியாகிய சந்தோஷமும் : ஆ — பசுவாகிய விளக்கமென்னுஞ் ஜீவனும், இனன் — சூரியனாகிய புத்தியும் ஒன்றுகூடி விளங்கும் ஆன்ம அறிவின் சுத்த காரிய இடம்.

**3. பழமுதிர் சோலை என்பது** :—இந்திரிய — கரண — ஜீவ முதலிய அனுபவ பழங்களாகிய பிரயோசன வின்பங்கள் நீங்கிக் குறைவற்ற அறிவாய் விளங்கும் இடம்.

**4. திருச்சீரலைவாய், திருச்செந்தில், செயந்திபுரம் என்பன** :—சுத்த மனத்தின் முகத்தில் விஷயக் கடலின் அவாவாகிய அலை அடித்துக்கொண்டிருக்கும் இடமாகிய கரை, செந்துக்களினது இருதய ஸ்தானமாகிய மனம், அஞ்ஞான சூரனை நிவர்த்தித்துச் சந்தோஷகரத்தைப் பெற்ற பதிமனத்தின் விளக்கம்.

**5. திருப்பரங்குன்றம் என்பது** :—அசைதலில்லாத ஒன்றான விளக்கத்தையுடைய விவேக உல்லாச இன்ப நிறைவு.

**6. குன்று தோறாடல் என்பது** :—மலைதோறாடல். மலை என்பது — அலைவில்லாத உணர்ச்சிக்கு முதற்காரணமாயுள்ள துரிய நன்னிலை. இத்துரியம் — 1. ஜீவதுரியம், 2. பரதுரியம், 3. சுத்ததுரியம், 4. குருதுரியம், 5. சிவதுரியம், 6. சத்திதுரியம் முதலிய துரியமலைகள் அனுபவக் காட்சியில் அனந்தம் உண்டு. மேற்குறித்த அனுபவக் காட்சிகளுக்குத் தேகத்திலிடம்:—1. கோசத்தினடி, 2. தொப்புளின்கீழ், 3. தொப்புள், 4. வயிற்றில் தொப்புளுக்கு மேல் மார்புக்குக்கீழ், 5. மார்பு. 6. நெஞ்சு ஆக ஆறு.

**பிரமாவைச் சிறையில் வைத்ததென்பது யாது ?**

சுத்த மன சங்கல்ப சிருஷ்டித் தொழிலையுடைய பிரமாவாகிய மனத்தைக் கிரியையில் பிரவேசிக்கவொட்டாமல், சுத்த விளக்க விவேக நிறைவாயுள்ள சுப்பிரமணிய தத்துவத்தால் — சர்வ பிண்ட விஷயங்களாகிய (1) தோன்றல், (2) வளர்தல், (3) குற்றம் நீங்கல், (4) ஒன்றிடத்தில் மலைவடைதல், (5) தெளிதல் முதலிய பஞ்ச கிர்த்தியங்களை விவேக முன்னிலையில் நடத்துங்கால் — சலிப்பறப் பந்தித்து இருப்பதே சிறையிட்டது.

**ஈசுவரனுக்கு உபதேசித்ததென்ன :—**

உருத்திர தத்துவமாகிய — பிரேரக நிலையான காரண தத்துவ முடிவான — ஈசுவர தத்துவத்தினியற்கை ஞானம் ஏறிக் — கிரியை குறைந்திருப்பதால், கிரியா காரண பூதமாயும் — ஞான காரண அமிசமாயும் — விளங்கும் பிரணவமாகிய உண்மை நிறைவான கிரியையற்ற நிர்விஷய அனுபவம் ஈசுவர தத்துவத்திற்கு — நியதி செய்வது — சுத்த விவேக தத்துவ அதிர்ஷ்டாதாவான சுப்பிரமணியம் அன்றித் தோன்றாது. இதுபற்றி யுபதேசஞ் செய்தாரெனலாயிற்று.

VALLALAR GROUPS

கங்கை-நாணல் காடு



**கங்கையிலுள்ள நாணற்காட்டிற் பிறந்தது என்பது என்ன?**

ஆன்ம இயற்கைக் குணமாகிய **தயவே கங்கை.** ஆன்மாவின் அனுபவ மத்திய நிலையாகிய சகித்தலென்னும் — சர்வ விஷயங்களிலும் அகங்காரமென்னும் தலையெடாமல் — கீழ்ப்படிந்த குணமே நாணல். இவ்விரண்டின் மத்தியில், அனுபவத்திற்கு இயற்கை விளக்கமாய் விளங்கும் பகுத்தறிவாகிய விவேகம் தோன்றுவதே உற்பத்தியானது.

**பின் கார்த்திகை அரிவை பால்கொடுத்த தென்பதென்ன?**

விவேக விளக்கந் தோன்றுங்கால், பெண்பாலின் குணமாகிய சமனையென்னும் சத்தியின் விளக்கத்தால் இன்பமாகிய அமுத கிரணம் விவேகத்திற்கு ஊட்டுவதே பால் கொடுத்தல்.

**சுவாமி** அம்மையிடத்தில் குழந்தையைக் கொடுக்க அம்மை குழந்தை ஆறையும் ஒன்றாய்ச் சேர்த்துக் கையால் தடவ முகம் ஆறும் ஒன்றி வேறாயும், உடல் ஒன்றாயும், கால் இரண்டாயும் ஆனதென்ன?

பரமாத்மாவாகிய சுவாமி — அருளென்னுஞ் சத்தியுடன், — தயவென்னும் நதிக்கரையில்,—சகிப்பென்னும் நாணற் காட்டில்,—சமாதி முதலிய காலத்தில்—தோன்றி விளங்கும்போது, சுத்த வாசனா தோற்றமாகிய அறு பொறியாகிய குழந்தையை அருள் வசமாக்க, அருட்சத்தி விகாரமன்றி அவிகாரமாய் அறு பொறியையும் அருட் போதக் கையால் அடக்க, விஷயங்களை அறிந்து தோயாமலிருக்க அறுபொறிகள் ஒன்றாயும், குறி ஆறாயும், அனுபவ விளக்கம் சாதன விளக்க மிரண்டுந் திருவடியாயுந் தோன்றி, சமாதி நிலை விளங்குவதே.

**பிண்டத்தில் இவ்வண்ணமாக இருக்க, அண்டத்தில் இவற்றிற்கு ஊர், ஆலயம், மூர்த்தி, செய்கை முதலியன உண்டாவானேன்?**

ஆன்மாக்கள் புண்ணிய பாவ கருமங்களால் பேதப்பட்டு, மந்தம், மந்ததரம், ராஜசம், தாமசம், கருமம் முதலிய வேறுபாடுகளால் அனாதி தொடங்கி இன்றளவில் — உயிர்த்திறள் ஒன்றானாலும் — கரணக் கூட்டுறவால் வெவ்வேறு தன்மையாய் விளங்குகின்றன. ஆதலால், மா கருணையுடைய கிருபாநிதியாகிய சிவபெருமான் திருவருளை அங்கையிற்கனி யென வுணர்ந்த அனாதி, நித்திய முத்த சித்தராகிய, ஈசுவர தத்துவ புவனானுபவ ஈசுவரனால், நாம் உய்யும் பொருட்டு, உலகத்தின்கண் 1. பாசநூல், 2. பசுநூல், 3 பதிநூல், 4. அனுபவநூல், என்னும் 1. புராண, 2 வேத, 3. ஆகம; 4. உபநிஷத்துக்கள் உண்டு பண்ணப்பட்டிருக்கின்றன. அவற்றின் வாயிலாகக் கர்ம காண்டம், பத்திகாண்டம், உபாசனாகாண்டம், தந்திரகலை, மந்திரகலை, உபதேசக் கலை முதலிய பேதங்களும், இவற்றிற்கு முக்கியமான ஆசாரம், வருணம், ஆசிரமம் முதலியவைகளும், இவற்றிற்கு ஏதுவான சரியையாதி நான்கும், இவற்றிற்கு அடைவாகிய சாலோகாதி நான்கும், இவற்றிற்கு மார்க்கமாகிய தத்துவம், புவனம், பதம், வர்ணம், மந்திரம், கலை முதலியனவும் நிர்ணயித்து, பாபநாசத்திற்கு ஏதுவான அனசன, சாந்திராயண முதலிய பிராயச்சித்தங்களை விதித்து, இவைகள் செய்வதற்கு யோக்கியமான நதி முதலியவற்றையும், அவற்றிற்கு அங்கமான — தத்துவானுபவங்களாகிய உண்மை நாமங்கள் கெடாதிருக்க திருப்பெயர் முதலியவைகளை, மூர்த்தி ஸ்தல முதலியவைகளுக்கு ஏற்படுத்தி வழங்கச் செய்தார்கள்.

சரவணபவ-விளக்கம்.



உபாசிக்கின்றவர்களுக்குத் தத்துவ நாமங் கெடாமல் அருட்சத்தி தோன்றக் கிருத்திகையையும், வேதாந்த விளக்கத்திற்கு **விசாகத்தையும்**, சதாசுபத்தைக் குறிக்கச் **செவ்வாயையும்**, ஆறு குறியைக் குறிக்கச் **சஷ்டியையும்**, ஞான நிறைவைக் குறிக்கத் **தைப்பூசத்தையும்** சுட்டினார்கள். தத்துவங்களைக் கையிலெடுத்து ஆடுவதான போதமென்னுங் கையால், விஷய பலத்தைத் தத்துவமாகிய **காவடியில்** கட்டித், தானாகிய தோளிலேற்றித் தான்கெட்டுத் தான் அவனாகிப் போத வடிவனாய் சங்கல்ப தீவிரனாய், சுப்பிரமணிய தத்துவமாய் விளங்கும் திருவுருவ முன்னுக்கு விஷயாபாவ நியாயமே காவடி யெடுத்ததாயும், சுத்த வைராக்கிய நிச்சய சிவபோதமே **இடும்பனாயும்** குறிக்கப்பட்டிருக்கின்றன. இருதயாகாச ஷட்கோண வடிவமே யந்திரமாய், அதன் அங்க வேறுபாடே நாற்பத்து முக்கோணமாய் உபாங்கமே நவ கணடமாய், — உண்மையே **ச** கரமாய், — விஷய நீக்கமே **ர** கரமாய், — நித்திய திருப்தியே **வ** கரமாய், — நிர்விஷயமே **ண** கரமாய், — பாவ நீக்க ஏதுவே **ப** கரமாய், — ஆன்ம இயற்கைக் குணமே **வ** கரமாய் — விளங்குவதே **ஆறெழுத்து.** நமது சரீர இருதய ஸ்தானமே — கோயிலாய், மாயா விசித்திரமே — மயிலாய் நாபியந்தமே — பலி பீடமாய், உண்ணாவின் மேலந்தமே — கொடிமரமாய், பஞ்ச கோசங்களே — பிராகாரமாய், முக்குணங்களே — வில்வமரமாய், ஆன்ம தயையே — தடாகமாய், வாயே — வாசலாய், அனுபவ நிலையே — கோபுரமாய் விதிக்கப்பட்டிருக்கின்றன,

ஞானிகள், கடவுளை எங்கும் உபாசிப்பார்களென்றும், யோகிகள் இருதயத்தி லுபாசிப்பார்க ளென்றும், கர்ம காண்டிகள் அக்கினியில் உபாசிப்பார்களென்றும், பத்தி காண்டிகள் விக்கிரகத்தில் உபாசிப்பார்களென்றும் விதித்திருக்கிறது.

அதற்கு ஒத்தவண்ணம், தத்துவ விசாரத்தையே ஆலய மாக்கினார்கள். ஆலயத்தில் விளங்கும் மூர்த்தியின்பால் — பாசங்களில் செல்லும் ஆன்மாக்களை, சிவபாசத்தில் பாச நூலைக்கொண்டு அழுத்தி, பசு நூலைக் கொண்டு மேல்குறித்த தந்திர மந்திர கலைகளைக் குரு மூலமாய் உபதேச கலையால் விளக்கி, காண்டத்திரயத்தால் நிலைக்கப் பண்ணி, பதி நூலால் அறிவை விளக்கி, அனுபவ நூலால் சமாதியைத் தெரிவித்திருக்கிறது. இவற்றைச் சீவர்கள் மறவாதிருக்க மானைக் காட்டி மானைப் பிடிப்பதுபோல் ஆலயத்தில் மூர்த்தியாகிய சண்முகப் பெருமானைத் தத்துவ உருவமென்று விளக்கிக் காட்ட, அர்ச்சக வுருவமான ஆசாரியன, நமது அறிவாகிய கற்பூரத்தில், சுப்பிரமணிய உண்மையாகிய விளக்கமென்னும் பிரகாசத்தைக் கொண்டு, அசுத்த விஷய முதலிய எண்ணங்கள் நம்முடைய பொறிகட்குப் புலப்படாமலிருக்க உண்மை நாதக் குறியாகிய மணியொலியுடனே தரிசிப்பிக்கச் செய்தும்; வேறு பராக்கன்றித் ததாகாரமாய் நிறக, நமது தரத்திற் கொத்த உபசாரதியர்களால் வழிபடச் செய்தும் — தத்பலமடைய உத்தமர்கட்கு **அன்ன விநியோகம் செய்வது மார்க்கமென்று** சித்தாந்தம் பண்ணினார்கள்.

இவ்வண்ணமாய், அனாதி தொட்டு இன்றுவரை சென்ற நாட்களிலுள்ள அருணகிரியார், குமரகுருபரர் நக்கீரர் முதலிய மகான்கள் தொண்டு செய்து, உத்தம ஞானிகளாய் நித்திய முத்தர்களாய் விளங்குகின்றார்கள்.

VALLALAR GROUPS



ஆதலால், நாம் யாவரும் அவ்வுண்மைக் கடவுளை வேதாகம விதிப்படி உண்மையாய்ப் பத்திசெய்து, அவர் அருளைப் பெறவேண்டும்.

**சூரபத்ம சம்ஹாரம் என்பது :—**

பதுமாசுரன் என்பது :—பதுமம்—நாபி, அ — அவா, சுரன்—சுழித்து எழுதல் ; நாபியிவிடமாய் அடங்காமல் எழும்பும் குணத்தை அடக்கியும், தடைபடாதது பத்மாசுரனுகிய அவா. கஜமுகம் என்பது—மதம். சிங்க முகம் என்பது — மோகம். இவைகளை வெல்வது — ஐந்தறிவாலும் உபசத்தியான பஞ்ச சத்தியாலும் கூடாது. ஆதலால், சிவத்தால் தடைப்பட்டது.

**சுப்பிரமணியம் என்னும் ஷண்முகரால் சம்மரிக்க வேண்டியது எப்படி எனில் ?**

பஞ்ச சத்தியோடு அனன்னியமாகிய சம்வேதனை என்னும் அருட் சத்தியையுங் கூட்டிச் சுத்த அறிவே வடிவாகிய ஆறறிவென்னும் முகங்களோடு, சுத்த ஞானம், சுத்தக்கிரியை, என்னும் சத்தியுடன், கூர்மை பொருந்திய வேல், என்னும் விவேகத்தால், தயா வடிவாய் அவா மோக மதங்களை நாசஞ்செய்வது சூரசம்மாரம். மயில் என்பது— மேற்படி தத்துவங்கள் நஷ்டமானாலும் அவற்றின் அக்கிரமம், அதிக்கிரமம் கெட்டுக் கிரம மாத்திரம் இருப்பது. பூர்வ வாசனைகள் பல வண்ணமாய் விரிந்து ஆடுவது இயல்பாதலால், அவற்றை அசைய வொட்டாது மத்தியில் எறி இருப்பதாகிய சுத்த அறிவே ஷண்முகம். விகல்ப ஜாலமே மயில். இவ்வண்ணமே அண்டத்திலும் உண்டு. மேலும் நமது புருவ மத்தியில் — ஆறு பட்டையாய் மணிபோல் ஓர் ஜோதி யிருக்கிறது. அந்த ஜோதியே ஷண்முகம்.

**அருட்பெருஞ்ஜோதி**

# 7. சங்கல்பம் - சன்மார்க்கக் கொள்கை

**திருச்சிற்றம்பலம்**

**சங்கல்பத்தின் பொருளும் விரிவும் யாதெனில் :—**

சங்கல்பமாவது :— சம் — முடிவு ; கல்பம் — காலபேதம் ; காலமுடிவு.

விரிவாவது ஐந்து ; 1. நிர்விகல்பம், 2. சவிகல்பம், 3. சங்கல்பம், 4. விகல்பம், 5. கல்பம். இவற்றுள் நிர்விகல்பமாவது ; — கடவுளறிவு. மேற்படி அறிவின் வியாபகமே சவிகல்பம். சங்கல்ப மென்பது :—கரணம் யாதொன்றிலும் பற்றுமல் சுத்தமா யிருந்த காலத்தில் தோன்றிய அசைவே — சங்கல்பம் : ஒன்றிலும் பற்றாது அசைந்த மே லசைவென்னும் புடைபெயர்ச்சியே சங்கல்பம் : நாம் நஷ்டமடையோம் என்று உள்ளழுந்திய பிரக்ஞையே சங்கல்பம். விகல்ப மென்பது :—பிரம சதாசிவ கால அளவைக் குறித்தது. இதில் பலவாக விரிந்த அனுசந்தானங்கள் கல்பம். உள்ளழுந்தல், அதைச் சிந்தித்தல், சிந்தித்தலை விசாரித்தல் — இம்மூன்றுமே சங்கல்ப விகல்ப கல்பம்.



மேற்குறித்த சங்கல்ப மயமா யிருந்தால் சிவானுபவம் பெறலாம் : [1]"சந்ததமும் வேதமொழி யாதொன்று பற்றினது தான் வந்து முற்றும்" என்றபடி. சர்வசித்தியையுடைய தனித்தலைமைப் பதியாகிய ஆண்டவரை நோக்கி, அணுக்கள், தபசு செய்து சிருஷ்டியாதி பஞ்ச கிருத்தியங்களையும் பெற்றுக் கொண்ட மூர்த்திகளாகியவர் ஒரு தொழிலுடைய பிரமாவும், இரண்டு சித்தியையுடைய விஷ்ணுவும், மூன்று சித்தியையுடைய ருத்திரனும் — இது போன்ற மற்றையர்களும், மேல்குறித்த மூவரால் ஏற்படுத்திய தத்துவ சித்திக் கற்பனைகளாகிய சமய மத மார்க்கங்களை அனுஷ்டித்து அவர்களையே கர்த்தாக்களாக வணங்கி, வழிபாடு செய்துவருகிற இது வரையிலுமுள்ள அணுக்கள் மேல் குறித்தவர்களது பதப் பிராப்தியை, மேற்படி அணுக்கள், லேசம் பெற்றுக் கொண்டார்கள். ஆதலால் இவர்களை அசைப்பிடித்து அனுக்கிரகிக்கும் சர்வ சித்தியையுடைய தனித்தலைமைக் கடவுளின் சித்தியின் லேசங்கள் இவர்களுக்குள. ஆதலால் இவர்கள் அந்தச் சர்வ சித்தியையுடைய கடவுளுக்குக் கோடிகோடிப் பங்கு தாழ்ந்த தரத்தி லிருக்கின்றார்கள்.

ஆகவே சமயத் தேவர்களை வழிபாடு செய்வது அவசியமல்ல : மேல் குறித்தவர்கள் அற்ப சித்தியைப்பெற்று, அதில் மகிழ்ந்து அகங்கரித்து, மேல் படிகள் ஏறவேண்டியவைகளை யேறிப் பூரண சித்தியை யடையாமல் தடைபட்டு நிற்றல்போல், இங்கு மற்றவைகளை உன்னி அவலமடைந்து நில்லாமல், சர்வ சித்தியுடைய கடவுள் ஒருவருண்டென்று, அவரை உண்மை அன்பால் வழிபாடு செய்து, பூரண சித்தியைப் பெறவேண்டுவது சன்மார்க்க கொள்கை. மேலும், தனித் தலைவன் லக்ஷியந் தவிர அநித்திய சட துக்காதிகளைப் பொருட்படுத்தி உபாசனாதி மார்க்கமாய் வழிபடுவது கொள்கையல்ல. உபாசனை முதலியவற்றால் வழிபடுதலும் மேல்குறித்த தலைவனைக் குறித்ததே தவிர வேறில்லை.

**இதற்குப் பிரமாணம் :—**

**சன்மார்க்க சங்கத்தீர் சிற்றடியே னுமது**
**　தாள்வணங்கிச் சாற்றுகின்றேன் தயவினொடுங் கேட்பீர்**
**என்மார்க்கத் தெனைநுமக்கு ளொருவனெனக் கொள்வீர்**
**　எல்லாஞ்செய் வல்லநம திறைவனையே தொழுவீர்**
**புன்மார்க்கத் தவர்போலே வேறுசில புகன்றே**
**　புந்திமயக் கடையாதீர் பூரணமெய்ச் சுகமாய்த்**
**தன்மார்க்க மாய்விளங்குஞ் சுத்தசிவ மொன்றே**
**　தன்னுணை யென்னுணை சார்ந்தறிமி னீண்டே.**

**—ஆறுவது *திருமுறை*, பதிகம் 133, பாட்டு 53**

**அறங்குலவு தோழியிங்கே நீயுரைத்த வார்த்தை**
**　அறிவறியார் வார்த்தையெத னாலெனிலிம் மொழிகேள்**
**உறங்குவதும் விழிப்பதும்பின் உண்ணுவது மிறத்தல்**
**　உறுவதுடன் பிறத்தல்பல பெறுவதுமா யுழலும்**

---

[1] தாயுமான சுவாமிகள்—கருணாகரக்கடவுள்.

VALLALAR GROUPS



மறங்குலவு மனுக்கள்பலர் செய்தவிர தத்தால்
மதத்தலைமை பதத்தலைமை வாய்த்தனரங் கவர்பால்
இறங்கலிலென் பேசுதலா லென்பயனே நடஞ்செய்
இறைவரடிப் புகழ்பேசி யிருக்கின்றேன் யானே..

—ஆருவது திருமுறை, பதிகம் 84, பாட்டு 6.

என்னும் அருட்பாசுர உள்ளக் கிடையானும் பெரும்பதி தெரிவித்தார். இதன்றி, திருக்கதவந் திருக்காப்பிடுவதற்கு முந்தின இரவில், "இதுகாறும் என்னோடு நீங்கள் பழகியும் சன்மார்க்க ஒழுக்கம் இன்னதென்று தெரிந்து கொள்ளவில்லை. யாதெனில்:—இங்கிருக்கின்ற ஒன்றையும் பொருளாகக் கொள்ளாதீர்கள்; எல்லாப் பற்றுக்களுக்கும் காரணமான ஆசார வகைகளை விட்டுத் தலைவனையே தொழுவீர்கள்" என்ற திருவார்த்தை யதனால் தலைவனைத் தொழுவதே தொழிலாக வுடையது கடமை.

அருட்பெருஞ்ஜோதி

## 8. ஒளிநிலையும் சுத்தஞானியும்

திருச்சிற்றம்பலம்

இரவில் தீபமில்லாத இடத்தில் இருக்கக்கூடாது. ஏனெனில் — அஃது பிராண நஷ்டம் பண்ணும். ஆதலால், நமது கிருகத்தில் தீபம் வைத்து இருளைப் போக்கி, ஆனந்த மயமாய நித்திரை யில்லா திருந்தால், ஆயுள் விருத்தியாகும். இஃது சாத்தியனுக்கு சாதகன் ஒருவாறு நித்திரை செய்தல் வேண்டும். கிருகத்தில் இருளில்லாது எங்கும் பிரகாசமாய் தீபம் வைத்தால், மேற்படி இருள் அந்தத் தீபத்தில் அடங்கும். அதுபோல் ஜீவ தீபமாகிய நாம் வசிக்கிற கிருகத்தில் பிரகாச மில்லாவிட்டால், மேற்படி இருள் ஜீவப் பிரகாசமாகிய நம்மிடத்தில் சேர்ந்து, நஷ்டத்தைப் பண்ணும். அதுபோல் ஆன்ம வாசமாகிய இந்தத் தேகமாகிய கிருகத்தில், அருட்பிரகாசமில்லாது மருளாகிய அஞ்ஞான சம்பந்தமுடைய இருள் சேர்ந்தால், பிராண நஷ்டம் சீக்கிரமாம்.

ஆதலால், நாம் நெற்றியிலிருக்கும் நடுக்கண்ணை ஆசாரியார் அனுக்கிரகத்தால் திறக்கப்பெற்றுக்கொள்வது நலம். ஏனெனில், மேற்படி நெற்றிக் கண்ணைத் திறக்கப் பெற்றுக் கொண்டவனுக்கு எல்லா அனுபவங்களும் பட்டப் பகல்போல் தெரியும். அவன்தான் சுத்தஞானி, மேற்படி ஞானி தயவோடு ஒரு பிரேதத்தைப் பார்த்த மாத்திரத்தில் பிரேதம் உயிர் பெற்றெழும். மேற்படி ஞானிக்கு ஆன்மாக்களினது அபக்குவ பரிபாகத்தால் சினம் தோன்றினல், உடனே அந்த ஜீவன் பஸ்பமாகி விடுவான். மேற்படி ஞானிக்கு மேற்குறித்த அடையாளங்களுள. மேற்படி கண்ணைத் திறப்பதற்கு ஒரு கதவும், பூட்டு முளது. மேற்படி பூட்டை, அருளென்கிற திறவுகோலைக்கொண்டு திறக்க வேண்டும், ஆதலால் ஷை அருளென்பது ஆன்ம இயற்கையாகிய பெருந் தயவு. நாம் தயா வடிவமானல் மேற்படி அனுபவம் நேரும்.



மேலும் அந்த சுத்தஞானி இறந்த உயிர்களை எழுப்புவதற்குப் பிரமாணம் யாதெனில்:—

ஒருவாறு தீபப் பிரமாணத்தா லறிக. தீபப் பிரமாண மென்பது யாது? தீபத்தினிடத்தில் காரியவொளி, காரிய காரணவொளி, காரணவொளி, என மூன்று. மேற்படி ஒளியாவன:—ஒளி, சோபை, பிரகாசம் ஆதலால் கடவுள் காரியமாய் பிரகாசம்போல் சுவர்ண தேகியாய்த் தோன்றினல், — அதிதூரத்தி லிருக்கிற இருளென்னும் அஞ்ஞானத்தைப் போக்கி; ஆன்ம அனுபவத்தை வருவிப்பது பிரகாச மயம். அதுபோல், ஒளி மேற்படி பிரகாசத்தி லடங்கிச் சோபை — காரிய காரணமாய் இருக்கின்றது போல், ஆன்மாக்கள் அஞ்ஞானத்தில் கட்டுண்டு அறிவாகிய தீபத்தைக் கருதினல், மேற்படி அறிவாகிய தீபம் தோன்றின கணமே, அதின் மயமாவார்கள். அதுபோல், கடவுளின் சோபையைக் கண்டால், பஞ்ச கிருத்தியமுஞ் செய்யக்கூடும். ஒளியைத் தொட்டால் சுடுவது போல், இறந்த பிரேதத்தை அவர்களுக்குச் சமீபிக்கச் சேர்த்தால், தக்கணமே அது ஜீவிக்கும். மேலும், பிரகாசம் எங்குமுள்ளது. எந்த இடத்தில் புலை, கொலை அகற்றிய ஜீவர்கள் பிரார்த்தித்தாலும் தக்கணமே, அவரது காரண வுருவமாகிய பிரகாசத்தில் நின்று, காரிய உருவமாகிய, ஒளி வடிவாய்த் தோன்றி அருள் செய்வர்.

இதற்குப் பிரமாணம்:—

சித்தமார்க்கத்தி லுள்ள துரிசுச் சுண்ணத்தை — மஞ்சளில் தோய்த்த நூலை நெடுந்தூரங் கட்டி, அங்கங்கு காயாது உபகரணம் பூசி, மனிதர்களை நிற்க வைத்து, மேற்படி சுண்ணத்தை அடியில் காட்டின தக்கணமே நுனியில் சிவப்பேறும்.

## 9. சுத்த சன்மார்க்கத்திற்கு உரியவர்கள்

சுத்த சன்மார்க்கத்திற்கு முக்கிய தடையாகிய சமயம், மதம், முதலிய மார்க்கங்களை முற்றும் பற்றறக் கைவிட்டவர்களும்; காமக் குரோதம் முதலியவைகள் நேரிட்ட காலத்தில் ஞான அறிவினல் தடுத்துக் கொள்பவரும்; கொலை புலை தவிர்த்தவர்களும்: ஆகிய இவர்கள் தான், சுத்த சன்மார்க்கத்திற்கு உரியவர்கள் ஆவார்கள்; மரணம், பிணி, மூப்பு, பயம், துன்பம் — இவை முதலியவைகளைத் தவிர்த்துக் கொள்வார்கள். அதாவது — செயற்கையாகிய குணங்களை நன்முயற்சியால் தடுத்துக் கொள்பவர்களுக்குக் கேவலாதிகார மரணம் நீங்கும். அப்படி இல்லாது இவ்விடம் காத்திருப்பவர்கள் மரணத்தைத் தவிர்த்துக்கொள்ள மாட்டார்கள்; அருள் விளங்குங் காலத்தில் அவரவர்கள் பரிபாகத்துக்குத் தக்கதாக இகலோக போகத்தை மட்டும் அனுபவிக்கக்கூடும்; பரலோக போகமாகிய ஞான சித்திகளைப் பெறமாட்டார்கள்.

VALLALAR GROUPS



தக்கதாக இகலோக போகத்தை மட்டும் அனுபவிக்கக்கூடும்; பரலோக போகமாகிய ஞானசித்திகளைப் பெறமாட்டார்கள்.

**சாகாதவனே சன்மார்க்கி:** சன்மார்க்கத்தின் முடிபு சாகாத கல்வியைத் தெரிவிப்பதே யன்றி வேறில்லை. சாகிறவன் சன்மார்க்க நிலையைப் பெற்றவனல்லன். சாகாதவனே சன்மார்க்கி.

## 10. சுத்தசன்மார்க்க ஆகாரம்

மேலும், சுத்த சன்மார்க்க சாதகர்கள் எக்காலத்தும் **புழுக்காதிருக்கின்ற வஸ்துவைக் கொள்ளல் வேண்டும்.** புழுக்காத வஸ்துக்கள் யாவெனில் :—**சர்க்கரை, தேன், கற்கண்டு, வெல்லம், அயம்** முதலிய **செந்தூரம்; தாமிர** முதலிய **பஸ்பம்.** ஆதலால் அவசியம் ஆகாரத்திற்கு முக்கிய வஸ்து மேற்குறித்தவை. பரியாயத்தில் சர்க்கரையென்று லவணத்தைச் சொல்லுவதுமுண்டு. மேற்படி லவணத்தைத் துரிசு போக்கி, ஜய லவணமாய்க் கட்டி, ஆகாரத்தில் கொண்டால் தேகம் நீடிக்கும். இதன்றி சத்வ பதார்த்தத்தில் லவணம் சிறுகச் சேர்த்துக் கொள்ளவுங் கூடும்.

**கரிசாலையும், தூதுளையும் :**—கரிசாலையை—தினேதினே—பச்சையாகவாவது சமையல் செய்தல் முதலிய வகையாலாவது சாப்பிட்டு வர வேண்டும். பிரதம உள்ளுடம்பாகியதை நீடிக்கப் பண்ணும். மேல் குறித்த மூலிகையை **அலக்ஷியம் செய்யாது,** ஆசாரியான் திருவடியின் கண்ணே இலக்ஷியம் வைத்து எவ்வித தந்திரத்தினலாவது தினம் தினம் உட்கொண்டால் தேகக் கெடுதியாகிய அசத்தம் நீங்கி, தேகம் வலிவுள்ளதாய் நெடுநாளைக்கு இருக்கும். முக்தியடைவதற்கு சகாயமாயுமிருக்கும். மகான்களிடத்தில், அனந்த காலம் காத்தாலும், மேல் குறித்த மூலிகையின் பிரயோஜனத்தையும் உண்மையையும் அனுபவத்தையும் வெளியிடார்கள். பரம கருணாநிதியாகிய நம் தலைவனுல் கிடைத்தது. அசட்டையின்றி, உட்கொள்ளல் வேண்டும். மேல்குறித்த மூலிகை ஜலமில்லாத இடத்தில் இருக்கிறது விசேஷ நன்று. ஜலமுள்ள இடத்தில் உள்ளது காரமிராது. தந்த சுத்தி செய்து அண்ணாக்கில் தர்ஜனி விரலால் தேய்க்க—மேல்குறித்த மூலிகையால்—பித்தநீர் கபநீர் வெளியாகி, **கண்ணொளி விசேஷிக்கும்.** நேராத பக்ஷத்தில் பொற்றலைக் கையாந்தகரை கூடும். மேல்குறித்த மூலிகை செந்தூரம் செய்வதற்குச் சிறந்தது. உலர்த்திக் குழித்தைலம் வாங்கியும் செந்தூரம் செய்யலாம். அதுபோலவே, அறிவை விளக்குவதற்கும், கவனசக்தி உண்டுபண்ணுவதற்கும், கரணம் ஓய்வதற்கும், கபத்தை அரிப்பதற்கும் யோக்கியதை யுடைய ஒஷதி, **தூதுளை.** அதை மேல்குறித்தபடி அநுஷ்டித்தால் விசேஷ நன்மை செய்யும். கரிசாலை தந்த சுத்தியால் வசிகரமும் நேரிடும்; உண்மை.





## 11. சுத்தசன்மார்க்க ஆகார விலக்கு

சுத்தசன்மார்க்க சாத்தியர்கள் நெய் முதலிய வஸ்துக்கள் கொள்ளப் படாது. அதுபோல் சாதகர்களும் கொள்ளப்படாது. நேரிட்டால் ஒருவாறு கொள்ளப்படும். ஏனெனில், ஓர் தேகத்திலுள்ள தாதுக்களில் முதல் தாது கொழுப்பு. அதன் அமிசமே பால், அதன் அமிசம் நெய். மேற்படி ஆபாசம் மோர், தயிர். ஆதலால், மேற்படி கொழுப்பு வெளிப்பட்டால், மேற்படி பசுவின் கண் கெடுதியும் நேரும். ஆதலால் கொலை. கன்றுக்கு ஒருவாறு விட்டு மேற்படி பாலை கிரகிக்கலாம். ஆதலால் இஃதால் ஜீவ இம்சை நேருதலால், மேற்படி வஸ்துக்கள் கொள்ளலாகாது: நேராத பக்ஷத்தில் கொள்ளலாம்.

## 12. சமயமத சன்மார்க்கமும் சுத்தசன்மார்க்கமும்

சமயசன்மார்க்கமும், மத சன்மார்க்கம், ஆகிய இவற்றிற்குள் அடங்கிய சன்மார்க்கம் அனந்தம். அதில் சமய சன்மார்க்கம் 36. அதை விரிக்க ஆறு கோடியாம். இதுபோலவே மதத்தினும் 36. மேல்குறித்த சமய மதங்களிலும், **ஏமசித்தி, தேகசித்தி,** முதலியவை உண்டு. அவை சமய மதங்களில் சொல்லுகிற, **கர்த்தா, மூர்த்திகள், ஈசுவரன், பிரமம், சிவம்** முதலிய தத்துவங்களின் காலப் பிரமாண பரியந்தம் இருப்பதே யொழிய, அதற்குமேல் இரா.

**சமய மதங்களிலும் சமரசம் உண்டு.** வேதாந்த சித்தாந்த சமரசம்—யோகாந்த கலாந்த சமரசம்,—போதாந்த நாதாந்த சமரசம். இதற்கு அதீதம் ஷடாந்த சமரசம். இதற்கு அதீதம் சன்மார்க்க சமரசம். இதற்கு அதீதம் சுத்த சமரசம். ஆதலால், சுத்த சமரசத்தில் சன்மார்க்கத்தைச் சேர்க்கச் **சுத்த சமரச சன்மார்க்கமாம்.** இவை பூர்வோத்திர ஞாயப்படி, கடைதலைப் பூட்டாக, **சமரச சுத்தசன்மார்க்கமென** மருவின. இதற்குச் சாதனம் ஒருவாறு **ஷடாந்த சமரசம்.**

ஆன்மாவுக்கு அனன்னிய அருள் எப்படியோ, அதைப்போல் சுத்த சன்மார்க்கத்துக்கு அனன்னியமாக இருப்பது சர்வ சித்தியாம் சுத்த சன்மார்க்கத்துக்குப்படி மூன்று. ஷடாந்தங்களின் பொதுவாகிய **ஷடாந்த சன்மார்க்கம் 1, சமரச சன்மார்க்கம் 1. சுத்த சன்மார்க்கம் 1,** ஆக 3. ஆதலால் சுத்த சன்மார்க்கத்திற்குப் படிகள் **3 சிற்சபை 1, பொற்சபை 1. சுத்த ஞான சபை 1,** ஆக 3. இவைகள் மூன்றுந்தான் படிகளாக இருக்கும், சுத்த தேகத்தினுடைய அனுபவத்தை விரித்தால் விசேஷமாம். சுத்த சன்மார்க்கம் விளங்குங் காலத்தில் எல்லாம் ஆண்டவர் வெளிப்படையாய்த் தெரிவிப்பார்.

சமயமத சன்மார்க்கிகளில் **தாயுமான சுவாமிகளும்** இன்னும் அநேக பெரியோர்களும் சுத்தப் பரப் பிரமத்தினிடத்தில் இரண்டறக் கலந்துவிட்டதாக முறையிடுவது வாஸ்தவமா? அவாஸ்தவமா? என்றால், அவாஸ்தவம்.

VALLALAR GROUPS



சன்மார்க்கம் ஒன்றுக்கே சாத்தியம் கைகூடும்; என்றும் சாகாத நிலையைப் பெற்றுச் சர்வ சித்தி வல்லபமும் பெறக்கூடும். மற்றச் சமயமத மார்க்கங்களெல்லாம் சுத்த சன்மார்க்கத்துக்குச் செல்லக் கீழ்ப்படிகளாதலால், அவற்றில் ஐக்கியமென்பதே யில்லை. தாயுமானவர் முதலானவர்கள் சுத்த சன்மார்க்கிகள் அல்லர்; மத சன்மார்க்கிகள் என்று ஒருவாறு சொல்லலாம். இதில் நித்திய தேகம் கிடையாது. இது சாதக மார்க்கமே, அன்றிச் சாத்தியமல்ல. நாளைச் சுத்தசன்மார்க்கம் வழங்கும்போது, இவர்கள் யாவரும் உயிர் பெற்று மீள வருவார்கள். முன்னிருந்த அளவைக் காட்டிலும் விசேஷ ஞானத்தோடு சுத்த சன்மார்க்கத்துக் குரியவர்களாய் வருவார்கள்; சாத்தியர்களாய் இரண்டறக் கலப்பார்கள்.

## 13. சுத்தசன்மார்க்க சாதனம்

**சன்மார்க்க சாதனம் :**—*சாதனங்கள் ஒன்றும் வேண்டாம். ஏதாவது ஓர் சாதனம் சொல்லக்கேட்டு, அதன்படி நடந்தால் சிறு ஒளி உண்டாகும். அதைக்கண்டு பல்லிளித்து இறுமாந்து கெட நேரிடும். ஆதலால் காலந் தாழ்க்காது,* **எல்லா உயிரையும் தன்னுயிரைப் போலப் பார்க்கும் உணர்வை வருவித்துக்கொள்ளுதல் வேண்டும்.** *இதுவே சாதனம். இந்தக்குணம் வந்தவன் எவனோ அவன்தான் இறந்தவரை எழுப்புகிறவன்; அவனே ஆண்டவனுமாவான்.*

சுத்த சன்மார்க்கத்துக்கு முக்கிய சாதனம் என்னவென்றால்; எல்லா ஜீவர்களிடத்தும் தயவும் ஆண்டவரிடத்து அன்புமே முக்கியமானவை. உதாரணம் — அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் சொல்லியது :—" **கருணையுஞ் சிவமே பொருளெனக் காணும் காட்சியும் பெறுக மற்றெல்லாம் மருள்நெறி** என நீ எனக்கு அறிவித்த வண்ணமே பெற்றிருக்கின்றேன்."

—*ஆறுவது திருமுறை பதிகம் 21, பாட்டு 90.*

## 14. சுத்தசன்மார்க்கத்தின் மரபு

**சாகாத் தலை — வேகாக்கால் — போகப் புனல் — என்பவற்றிற்குப் பொருள் யாதெனில் :—**

**அடியில் வருவனவேயாம்.**

1. **சாகாத்தலை யென்பது :**—ருத்திரபாகம், ருத்திர தத்துவம், வித்தியாகலை, வஸ்து, அருளானந்தம், காரணாக்கினி, — சிவாக்கினி.

2. **வேகாக்கா லென்பது :**—மகேசுவரபாகம், மகேசுவர தத்துவம், சாந்திகலை, ஆன்மா, அன்பு, காரணவாயு.



3. **போகாப்புன லென்பது :**—சதாசிவ பாகம், சதாசிவ தத்துவம், பிரதிஷ்டாகலை, ஜீவன், இரக்கம், காரணோதகம்.

இவை மூன்றும் **சாகாக் கல்வியைத்** தெரிவிக்கும்.

ஆத்ம தத்துவாதி ஜீவகரணம் 36, நிர்மல குரு துரியாதீதம் 7: ஆக நிலைகள் 43, இந்த 43 நிலைகளில் ஒவ்வொரு நிலைகளிலும் மேற் குறித்தவை உள. மேலும், இவை மூன்றும் — பிண்டத்தில் நாலிடத்திலும் — அண்டத்தில் நாலிடத்திலும் உள. அவைகள் பிண்டாண்ட ருத்திர சதாசிவ பேதம். சாகாக் கல்வியைக் குறித்த 43 நிலைகளில் — முதல் நிலை அனுபவத்தைப் பெற்றுக் கொண்டவன் பிரமன். அவனது காலம் ஒரு கல்பம். இப்படி 43 நிலைகளையு மேறி அனுபவத்தைப் பெற்றவன் காலங்கடந்த காலாதீதன்; மேற்குறித்த மூன்றும், பரமார்க்கமாகிய ஞானயோகக் காட்சியில் உண்டாகும்.

**யோகானுபவங்களின் உண்மைப் பொருள் :**—அபர மார்க்கத்தில் சிலர் உப்பு வகைகளின் பேதமென்றும் — ஒஷதி பேதமென்றும் — பூத பேதமென்றும் — சொல்வது உபாய மார்க்கம். அக அனுபவமே உண்மை மார்க்கம். உபாய வகையாகிய அபரமார்க்கம் தேகபூஷணாதி காமிய சித்தியைத் தரும். உண்மை மார்க்கம். நீக்க மற்ற சொருப ஞானத்தைத் தருமென் றறிக. மேற்படி உபாயங்களை ஒருவாறு தெரிவிப்பதும் சைவ சமயங்கள் தவிர வேறு எவ்வித சமயங்களிலு மில்லை. 'அப்படி யிருப்பதாகச் சொல்லியிருப்பதும் ஏக தேச மென்றறியவும். மேற்படி ஏகதேசங்கள் மந்திரங்களிலும் மேற்படி மூன்றும் வழங்குகின்றபடியால், ஒன்பது மாற்றுக்கு மேற்பட்ட தங்க ரேக்கில் பஞ்சாக்ஷரத்தை யடைத்து விக்கிரகத்தின் அடியில் வைக்க, மகத்துவங்களுண்டாகும். மேலும், மேற்படி உயர்வுடைய தங்கத்தில் விக்கிரகஞ் செய்து வைத்து ஒஷதியாதி லவணங்களை அதற்குச் சேர்த்து வைத்தால் விசேஷ சித்தி விளங்கும். இஃது திரிசியக் காட்சி. சுத்த சன்மார்க்கத்திற்கு உபாய வகைகளான அபரமார்க்கக் காட்சி கூடாது. பரமார்க்கமாகிய அக அனுபவமே உண்மை மார்க்கம். மேற்படி மூன்றையும் லக்ஷியமாகவே கொள்க. உபாய வகையான வாச்சிய திரிசியக் காக்ஷிகள் பரோபகாரம். ஆதலால், சாகாத்தலை வேகாக்கால் போகாப்புனலென்பவை இரண்டு புறத்திலு முள. (**உபாய வகையை நம்புதல் கூடாது; உண்மையை நம்புதல் வேண்டும். இஃது ரகசியம்.**)

**சாகாக் கல்வி :** துக்கத்தை ஒழித்தால் ஆயுசு விருத்தியாகும். ஒருவன் ஒரு நாளைக்கு இரண்டரை நாழிகை தூங்கப் பழக்கஞ் செய்வானானால் அவன் ஆயிரம் வருடம் ஜீவித்திருப்பான். எப்போதும் மறப்பில்லாமல் ஆசானுடைய திருவடியை ஞாபகஞ் செய்து கொண்டிருப்பதே சாகாத கல்விக்கு ஏதுவாம்.

VALLAR GROUPS



சாகாத கல்வியே கல்வியொன் றேசிவம்
தானென அறிந்த அறிவே
தகுமறிவு மலமைந்தும் வென்றவல் லபமே
தனித்த பூரண வல்லபம்
வேகாத காலாதி கண்டுகொண் டெப்பொருளும்
விளையவிளை வித்த தொழிலே
மெய்த்தொழில தாகும்இந் நான்கையும் ஒருங்கே
வியந்தடைந் துலக மெல்லாம்
மாகாத ஓறவெலாம் வல்லசித் தாகிநிறை
வானவர மேஇன்ப மாம்
மன்னுமிது நீபெற்ற சுத்த சன்மார்க்கத்தின்
மரபென் றுரைத்த குருவே!
தேகாதி மூன்றுநான் றருமுனருள் செய்தெனைத்
தேற்றியருள் செய்த சிவமே
சிற்சபையில் நடுநின்ற ஒன்றான கடவுளே
தெய்வநட ராஜ பதியே.

— ஆறுவது திருமுறை, பதிகம் 100, பாட்டு 28.

## 15. சுத்தசன்மார்க்க லக்ஷியம்

இந்த மார்க்கத்தின் உண்மை தெரிய வேண்டுமாகில் **திருமந்திரத்தைக்** கவனிக்கில் விளங்கும்.

சுத்த சன்மார்க்க லக்ஷிய அனுபவ விருப்ப முடையவர்களுக்கு நனவினும் மண்ணாசை, கனவினும் பெண்ணாசை, சுழுத்தியினும் பொன்னாசை முதலிய மூன்றுங் கூடாவாம்.

**சன்மார்க்கத்தில் அவா :** இந்திரியக் காட்சி என்பது :—ஒரு வஸ்துவின் நாமருப மின்றிக் காணுதல் ; கரணக் காட்சி என்பது :—அந்த வஸ்துவைப் பற்றல், அதை அனுபவிக்க வேண்டுமென்கிற சித்தி விருத்தி உண்டாகிறது ஆசை என்னும் காமம் ; அதைத் தன் வசப்படுத்த எழுவது மோகம். ஆதலால் எந்த வஸ்துவினிடத்திலும் மோகம், காமம் முதலியவையின்றி அவாமாத்திரமா யிருத்தல் வேண்டும். சன்மார்க்கத்தில் அவாவும் ஏக தேசத்திலும் கூடாது

**பற்று வகை :** மனத்தின் கூறுபாடு 4 வகை :—அதாவது 1 ஜீவப் பற்று, 2. பந்துப்பற்று, 3. களத்திரப்பற்று, 4 தேகப்பற்று. தேகப்பற்றுகிய அகப்பற்று போயிருத்தல் சங்கல்பம்.





**ஜீவனுக்குப் புருஷன் எனப் பெயர் வருவானேன் ?**— வித்தியா தத்துவத்தில் புருஷன் என்பது.— விஷயத்தில் அழுந்தியிருக்கும் எட்டுக் குணங்களைக் குறிப்பிடுகின்றபடியால், தத்புருஷன், மத்திய புருஷன், புருஷன் என்று வழங்கியது. மேலும் சிவம் என்பது ஒன்றே.

**ஆன்ம லாபம் அடைவதற்கு ஞாயம் இரண்டு. என்னெனில் :**— பிபீலிகா ஞாயம், விகங்க ஞாயம். இவற்றுள் சிறந்தது விகங்கம். பலவகை இம்சையால் போகத் தடைப்பட்டுப் போவது பிபீலிகா மார்க்கம். (பிபீலிகம் என்பது — எறும்பு ; விகங்கம் என்பது — பட்சி.)

## 16. சுத்தசன்மார்க்கத்தில் இன்னிசை

வள்ளலாருடைய விவகார காலத்தில் சேர்ந்திருந்த கூட்டங்கள், பிடில், மத்தள முதலான கருவிகளுடன் தோத்திரஞ் செய்ய ஆரம்பித்தார்கள். **'' சன்மார்க்கத்திற்கு இப்படிப்பட்ட விநோதங்கள் வேண்டியதில்லை. மன நெகிழ்ச்சியோடு தோத்திரஞ் செய்வதுதான் வழிபாடு ''** என்றார்கள். வெடியும், மனத்தைப் பிரமிக்கும்படியான சப்தத்தைத் தருவதால் தேங்காய் உடைப்பது முதலியனவும் வேண்டியதில்லை யென்று இப்படிப்பட்ட ஆரவாரச் செய்கைகளை யெல்லாம் (ஐயா அவர்கள்) தடைசெய்து கொண்டிருந்தார்கள்.

## 17. சுத்தசன்மார்க்கப் பிரார்த்தனை

ஒருவன் பிரார்த்தனை செய்வதில் அவனுக்காக மட்டும் செய்வது சரியல்ல. இந்த உலகமெல்லாம் வாழும்படி பிரார்த்தனை செய்தல் வேண்டும். அப்படிச் செய்வதால், அதில் ஒருவனுக்கு வேண்டியவை எல்லாம் அடங்கிவிடுகின்றன. பிரார்த்தனை செய்யவேண்டுமாகில் இப்படித்தான் செய்யவேண்டும்.

'' பாதி இரவி லெழுந்தருளிப் பாவியேனை யெழுப்பியருட்
ஜோதி யளித்தென் னுள்ளகத்தே சூழ்ந்து கலந்து துலங்குகின்றாய்
நீதி நடஞ்செய் பேரின்ப நிதிதான் பெற்ற நெடும்பேற்றை
ஓதி முடியாது என்போலிவ் வுலகம் பெறுதல் வேண்டுவனே.

—ஆறுவது திருமுறை, பதிகம் 30, பாட்டு 10.

என்பதே என் பிரார்த்தனையாகும்.

## 18. சுத்தசன்மார்க்க உபதேசம்

இஃது திருவருட் பிரகாச வள்ளலார் கையெழுத்து— தொழுவூர் வேலாயுத முதலியார் புத்தகத்தில் எழுதியிருந்தது.

VALLALAR GROUPS



புருவமத்தியில் வெண்டாமரை மலர் மலர்ந்திருப்பதாக, அதன் மத்தியில்,

இந்த வடிவமைம் ஒரு பீடம்  இருப்பதாக, அதன் மத்தியில்

அசையாது விளங்குகின்ற ஒருதீபம் இருப்பதாக அந்தத் தீப நடுவில், கடவுள் இருப்பதாகப் பாவித்துக்கொண்டு 'சிவாயநம' என்று நாவசையாமல், நிலைக்கவேண்டும். சுத்த சன்மார்க்க யோகமாதி சித்தி யெல்லாம் கிடைக்கும், இதை நம்ப வேண்டும்.

அருட்பெருஞ்ஜோதி

1. உபதேசம் :-- படிகமேடை 1. ஆயிரத்தெட்டுக் கமல இதழ் 2. ஓங்கார பீடம் 3. குண்டலிவட்டம் 4. ஜோதிஸ்தம்பம் 5. சுத்த நடனம் 6.—இவற்றை அனுபவத்தினலறிக. இது சோதார லக்ஷணம்.

2. பக்குவரும் சூரிய கலையும் :— சாதாரண ஜீவர்கள் சந்திர கலையில் இறப்பதும் பிறப்பதும் இயற்கை. பக்குவர்கள் சூரிய கலையில் பிறப்பதும் இறப்பதும் இயற்கை. சூரியகலை அனுபவம் கிடைப்பது கஷ்டம். தினம் சூரிய கலையில் செல்லும்படி மனதை அந்தக் கண்களில் செலுத்தல் வேண்டும்.

3. அன்புருவம் :— கடவுளைக் காண உண்மையாய் விரும்பினல், அழுத கண்ணீர் மாறுமா? ஆகாரத்தில் இச்சை செல்லுமா?

4. அபேதம் :— நங்களைப் பார்க்க வேண்டுமானல் என்னைப் பாருங்கள்; என்னைப் பார்க்கவேண்டுமானல் தங்களைப் பாருங்கள். தங்களைப் பார்த்தால், என்னைப் பார்ப்பீர்கள் ; என்னைப் பார்த்தால் தங்களைப் பார்ப்பீர்கள்.

5. அகங்கார அழிவு :— தன்னைக்காட்டாது ஒளிக்க வேண்டும்.

6. சகஜ நிலை :— சமாதிப் பழக்கம் பழக்கமல்ல. சகஜப் பழக்கமே பழக்கம்.

7. சிவ சிந்தனை :— 'ஓம் சிவாயநம' என்று சதா சிந்தித்துக் கொண்டிருத்தல் வேண்டும். இவ்வுலகம் அருட் சத்தி, பொருட் சத்தி, கிரியா சத்தி, யோக சித்தி, ஞான சத்தி மயமாக இருப்பதாகப் பார்த்துக் கொண்டிருத்தல் வேண்டும். யோகம் செய்தல் வேண்டுவதில்லை அதில் அழுந்திவிட்டால் மீளுவது கஷ்டம். சதா சிவ கலப்பாய்க் கிடந்தாலும் மீளுதல் அருமை. மூடம் உண்டாகும் உண்மை.



8. சத்விசார மென்பது :-(1) கடவுளினது புகழையும், ஆன்மாவின் தரத்தையும், நமது சிறுமையையும், கடவுளின் தரத்தையும், இடைவிடாது விசாரித்து, (2) நமது குறையெல்லாம் கடவுளின் திருவடியில் விண்ணப்பிப்பது.

சிவானுபவமாகிய நேகத்திரயம் பெறுவதற்கு மேற்குறித்த இரண்டு துவாரந் தவிர வேறில்லை.

9. இகபர காமங்கள் :-- இகபர காமங்களை விரும்பாம லிருத்தல் வேண்டும்.

10. குடிலை என்பது :— மூலப் பிரகிருதி.

## 19. சுத்தசன்மார்க்கத் தியானம்

1. தியானஞ் செய்ய வேண்டுமானல், ஏதாவது ஓர் உருவத்தைத் தியானிக்க வேண்டும். நிஷ்களமா யிருக்கப்படாது. உருவமாக இருக்க வேண்டும். அருவமாகத் தியானிக்கப்படாது. பின் உருவங் கரைந்து அருவமாகும். துவைதமாக இருந்தால், அத்துவைதம் தானே ஆகும். எப்படி எனில் :—பார்க்கும் தான் கெடுவது அத்துவைதம் பார்க்கப்படும் பொருளும் கெடுவது அதிதம். சத்தியம்.

2. திசைகளும் பலனும் :—

(1) வடக்குப் பாகம், — நக்ஷத்திரப் பிரகாசம். (2) கிழக்குப் பாகம், — சந்திரப் பிரகாசம். (3) மேற்குப் பாகம், — சூரியப் பிரகாசம். (4) தெற்குப் பாகம், — அக்கினிப் பிரகாசம்.

கிழக்குத் திக்கை நோக்கித் தியானம் செய்வது — போக சித்தியைப் பெறுகிறதற்கு. மேலும், — மேற்படி சொற்ன சத்தியைப் பெறுகிறதற்கு. தெற்கு சாகாக்கலையை — நித்திய தேகத்தையும் ஞான சித்தியையும் — பெறுகிறதற்கு. வடக்கு, — சித்த சுத்தியைப் பெறுகிறதற்கு. வடக்கு — காற்புறம் ; தெற்கு — தலைப் பாகம். இதனல் தான் தெற்கு ஞானத்தில் சிறந்தது; வடக்கு அஞ்ஞானத்தில் அழுந்தியது.

தலை கீழ், கால் மேல் என்பதற்கு நியாயம், — அடி கீழ், முடி மேல் ; அடி தலை, முடி கால், தலை கிழக்கு, கால் மேற்கு ; கிழக்கு தாழ்ந்தது ; மேற்கு திக்கு உயர்ந்தது. மேலும் இவற்றை அனுபவத்தால் அறிக.

3. பிண்ட திசை :—

கிழக்கு மேற்கு தெற்கு வடக்கு என்பவற்றில், தலை — தெற்கு கால் — வடக்கு, நெற்றி — கிழக்கு, முதுகு — மேற்கு.

VALLALAR GROUPS



**4. ஆலமரத்தடியில் சூரியனை வணங்கள் :—**

ஆலமரத்தடியில் சூரியனை வணங்கவேண்டியது என்பது என்னெனில்—; சூரிய கலையில் தியானம் முதலிய செயல்கள் எல்லாம் செய்யவேண்டியது பற்றிச் சொன்னது.

## 20. சமயசூக்கும பஞ்சாக்ஷரம்

சமய சூக்கும பஞ்சாக்ஷரத்தின் தாத்பரியம் நான்கு. மேற்படி அக்ஷரம் 5 சிவாயநம — இதற்குத் தாத்பரியம் நான்காவன : **பூர்வம், பூர்வ பூர்வம், உத்திரம், உத்தரோத்தரம்** ஆக நான்கு.

இதில் பூர்வத்திற்கு அர்த்தம் :—சிவனை நமஸ்கரிக்கின்றேன்.

பூர்வ பூர்வத்திற்கு அர்த்தம் :—அநாதியில் மலமில்லாத எல்லாமுடைய சிவத்திற்கு என்னுடைய கரண உள்ளங்களைச் சமர்ப்பிக்கின்றேன்.

மற்ற இரண்டிற்கும் (உத்தரம், உத்தரோத்தரம்) அர்த்தம் :—அநுபவத்தால் தெரியலாம். இதுபோல் மத சன்மார்க்கத்திற்கும் மேற்படி அக்ஷரமே. அதற்கும் முன்போலவே நான்கு தாத்பரியமுள்ளது.

அதில் பூர்வத்திற்குத் தாத்பரியம் :—**சி** என்பது — பதி, **வா** என்பது — சத்தி, **ய** என்பது — ஜீவன், **ந** என்பது — திரோதை, **ம** என்பது — மா மாயை; ஆதலால் மா மாயை — திரோதை நீங்கி, ஜீவபோதமற்று அருள்வடிவாய்ச் சிவமாவது.

பூர்வ பூர்வத்தின் தாத்பரியம் ;—**சி** என்பது — எல்லாமுடையது, **வா** என்பது — அபின்னமாகிய அருள், **ய** என்பது ஆன்ம சிற்சாயை, **ந** என்பது — ஜீவன், **ம** என்பது பசு; ஆதலால், — பசுத்தன்மை கெட்டு, மூவபோதம் போய் ; ஆன்மவியற்கை வடிவாய்ச் சத்துவமயமாய், எல்லா முடையதுவாய், பூரணமாய் நிற்றல் ; ஒருவாறு அனுபவத்தில், பரவிந்து பரநாதம் — பரத்திலும் ; அபரவிந்து அபரநாதம் — பூர்வத்திலும் வழங்கும்.

இவ்வளவும், ஜெப மூலமாய்க் கரண சுத்தி வந்து, அசுர முன்னு தலைவிட்டு அறிவாகிருதியாய், **கருணையும் சிவமுமே** பொருளெனும்படி நிற்றற்கு முதற்றுவாரமாம். மற்ற உத்தரத்தில் ஏமசித்தியும் உத்தரோத்தரத்தில் தேக சித்தியும் சொல்லும் : இஃது மத சன்மார்க்க அனுஷ்டானம். இதுபோல் சமயத்திலும், தேக சித்தியும் ஏம சித்தியு முள. மேல்குறித்த சமய மதங்களின் விரிவு அனந்தகோடி. அந்த சித்திகள் யாவும், அவ்வச் சமய மதங்களின், கர்த்தா.



மூர்த்தி, தலைவன், தலைவி முதலியவர்கள் பதப்பிராப்தி வரையிலும் நிற்கும். ஆதலால் மேல்குறித்த இரண்டு சித்தியும், எக்காலத்தும் அழியாத திருப்பதமாகச் சொல்லுவது சுத்தசன் மார்க்கப் பூர்வோத்திரம்.

**ஏம சித்தி, தேக சித்தி** ஆகிய இவற்றை மேல்குறித்த சூக்கும பஞ்சாக்கரத்தில், சொல்லுவதற்குப் பிரமாணம் :—

"சிவாய நம வெனச் செப்பு பொன் னயிடும்" "சிவாய நம வெனச் சிந்தித்திருப்பார்க்கு அபாய மொரு நாளு மில்லை" ஆதலால், மேல்குறித்த அக்கரத்தை மகான்கள் குருஉக் குறியாக — வரிவடிவாய்ச் — சுட்டினார்கள். இதை **அக அனுபவிகள்** தத்துவங்களை அறிந்து, அனுசந்தானஞ் செய்வார்கள். சாதகர்களுக்கு நாவினுலன்றிக் கரண மேயந்தால், தந்துவானுசந்தானஞ் செய்யக் கூடும். உலகிகள் நாவினுலன்றித் தங்கள் மனோரதம் சிந்திக்கும். **வகரவித்தை** யுடையவர்கள் மேற்படி அக்கரத்தின் உண்மையைப் பவுதிகம், லோகம், ஓஷதி, லவணம் முதலியவற்றிற் சேர்த்து வகரத்தை முடிப்பார்கள். **தகரவித்தை** யுடையவர்கள், அது போலவே அமைத்துக் கொண்டு, தேகத்தை நீடிக்கச் செய்வார்கள். ஆதலால் மேல்குறித்த அக்கரங்கள் பரிபாஷை, இதனது உண்மையாவும் சுத்தசன்மார்க்க சகஜ, சாந்திய ஞானனுபவிக்கு விளங்கும்.

மேலும் சி என்னும் எழுத்துக்கு பொருள் ஒருவாறு :

இதிலடங்கிய பீஜம் 5. அவையாவன :—தோன்றி அசைதலாகிய விந்து 1. அதின் புடைபெயர்ச்சி ஒலியாகிய நாதம் 2. அதின் வன்னவடிவமாகிய வரி அக்கரத்தின் **சகரமெய்** யென்னும் ச் 3. அதனது குணங்களை வெளிப்படுத்தும் ஆதி அக்கரமாகிய **பிரணவ** மூல அகரம் 4. இதைத் தன் வன்னச் சுபாவத்தோடு வெளியில் தோன்றச் செய்வித்து விளக்கும் அருட்பிரணவமாகிய இகரம் 5. ஆகக் கூடிய விந்துக்கள் ஐந்தும், ஒருருவமாய்ச் **சிகரமாயிற்று.** இதன் இலக்கணம் விரிக்கிற் பெருகும், அனுபவத்தாலறிக.

**'சிவ என்பதற்குப் பொருள் :—**அநாதியாய் மலமில்லாத சர்வவல்லமை யுடையது. **சி** என்பதற்குப் பொருள் — அநாதியாய் மலமில்லாதது **வ** என்பதற்குப் பொருள் — சர்வ வல்லமை யுடையது.

**'சிவம்'** என்பதற்குப் பொருள் :—சச்சிதானந்தம். சச்சிதானந்த மென்பது — **சத்து, சித்து, ஆனந்தம்.** இதில் சிகரம் — சத்து, வகரம் — சித்து மகரம் — ஆனந்தம் ; சிகரம் — எல்லாமுள்ளதாய் விளங்குவது. வகரம் — எல்லாம் விளங்குவதாயுள்ளது, மகரம் — இரண்டிலும் நிரம்பிய இன்பம்.

VALLALAR GROUPS



# 21. ஞானசபையும் நடராஜரும்

(அண்ட பிண்ட பூர்ண பாவனுநுஷ்டான விதி)

**அண்டமும் பிண்டமும் :—**

அகம் 1, அகப்புறம் 2, புறம் 3, புறப்புறம் 4, என்கின்ற நாலிடத்திலும் கடவுட் பிரகாசமுள்ளது. அதனுள் காரியத்தாலுள்ள விபரம் :—

1. பிண்டத்தில் : —

1. **அகம் ஆன்மா :** ஒரு பொருளினது உண்மையை யறிதல் — ஆன்ம அறிவு.

2. **அகப்புறம் — ஜீவன் :** ஒரு வஸ்துவின் பிரயோஜனத்தை யறிந்த அறிவே — ஜீவ அறிவு.

3. **புறம் — கரணம் :** ஒரு வஸ்துவின் நாமருபத்தையும், குண குற்றங்களையும் விசாரித்தறிதல் — கரணமாகிய மன அறிவு.

4. **புறப்புறம் — கண் முதலிய இந்திரியங்கள் :** ஒரு பொருளினது நாமருப குண குற்றங்களை விசாரியாமல் அந்தப் பொருளைக் காணுதல் — இந்திரியக் காட்சி, இந்திரிய அறிவு. இதுபோலவே கரணக் காட்சி, ஜீவக்காட்சி, ஆன்மக் காட்சியுமுண்டு.

2. அண்டத்தில் :—

| | | | |
|---|---|---|---|
| 1. | அகம் | — | அக்கினி. |
| 2. | அகப்புறம் | — | சூரியன். |
| 3. | புறம் | — | சந்திரன். |
| 4. | புறப்புறம் | — | நக்ஷத்திரங்கள். |

ஆகவே — பிண்டத்தில் நாலிடம் ; அண்டத்தில் நாலிடம் — ஆக எட்டிடத்திலும் கடவுட் பிரகாசம் காரியத்தாலுள்ளது. காரணத்தாலுள்ள இடம் :— பிண்டத்தில் — புருவமத்தி ; அண்டத்தில் — பரமாகாசம். காரிய காரணமாயுள்ள இடம் 4. பிண்டத்தில் விந்து, நாதம், அண்டத்தில் மின்னல், இடி : சர்வயோனி யிடத்தும், விந்து விளக்கமாகிய மின்னலிடத்தும், நாத விளக்கமாகிய இடியிடத்தும் ; இதல்லாது "பாரொடு விண்ணாய்ப் பரந்ததோர் ஜோதி" என்னும் "ஜோதியுள் ஜோதியுள் ஜோதியாயும்" உளது.

மேல் குறித்த அகமாகிய ஆன்மப் பிரகாசமே — ஞானசபை, அந்தப் பிரகாசத்துக்குள்ளிருக்கும் பிரகாசம் — கடவுள் ; அந்த உள்ளொளியின் அசைவு — நடனம் இதுதான் – ஞானகாச நடன மென்றும், அசைவுற்றதே — நடராஜ நடனமென்றும், ஆனந்த நடனமென்றும் சொல்லுகின்றது.



ஆதலால் ஏமம் கனகம் ரஜிதம், ரௌப்பியம் முதலாகச் சொல்வதில் சூரியனிடத்தில் — கனகமும், சசியிடத்தில் — ரஜிதமும் இருப்பதுபோல், பிண்டத்தில் ஆன்மாகாசம் — பொற்சபை யென்றும் ; ஜீவாகாசம் — ரஜிதசபை யென்றும் சொல்லுவது ஆதலால் மேற்குறித்த இடங்கள் யாவற்றிலும் — கடவுள், பூரண இயற்கை விளக்கம், காரியமாயும், — காரணமாயும், — காரிய காரணமாயும், — இருக்கின்றது முக்கிய இடங்களாகிய பிண்டத்தில் நாலும், அண்டத்தில் ஐந்தும் ஆகிய 9 இடத்திலும் அருள், விளக்கம் விசேஷமுள்ளது. ஆதலால் நாம் தினம் ஆறுகாலத்திலும் மேல்குறித்த பிரகாசமே சபையாகவும், அதின் உள்ளொளியே பதியாகவும் வணங்க வேண்டும். எக்காலத்திலும் புருவமத்தியின் கண்ணே நம்முடைய கரணத்தைச் செலுத்த வேண்டும். மேல்குறித்த காலங்கள், சூரிய உதயம் 1. உச்சிப்போது 2, சாயரக்ஷை 3 மாலை 4, யாமம் 5, வைகறை 6 – ஆகிய 6 காலங்களில் எல்லாம் வல்ல தலைவனை வணங்குதல் வேண்டும்.

# 22. அருள் வெளி

அருள் வெளியில் சன்மார்க்கத்திலுள்ள அனுபவங்களைப் பெறலாம். இதற்கு அருட்சக்தி என்றும், அருள்வெளி என்றும், ரிஷபமென்றும், அதின் தன்மை என்றும், அனாதி இயற்கை என்றும் பரஞான மென்றும், பூரண நிஷ்டை என்றும், அகர உகர மென்றும், ஆன்ம நெகிழ்ச்சி என்றும், ஆன்ம அசை வென்றும் பலபட விரிந்த நாமங்கள் உண்டு. அருள்வெளியின் வடிவாய் உண்மை என்னும் சி காரமாகிய பதியோடு கூடி மௌனாந்தத்திலிருப்பதே உண்மை.

**ஆனந்தம் என்பது** — சதா சந்தோஷத்தோடு எதிரிட்ட ஜீவர்களைத் திருப்தியால் சந்தோஷிப்பித்துத் தான் அதிசயமின்றி நிற்றல்.

**சக்தியும் சிவமும் :**

சூரியன் அக்கினியோடு கூடியபோது சந்திரனாகும். சந்திரன் அக்கினியோடு கூடியபோது சூரியனாகும் சூரியன் ஆணாகவும் சந்திரன் பெண்ணாகவும் வலது பாகம் சிவமாகவும், இடது பாகம் சக்தியாகவும் வழங்கி வருவது மருட்டேகனாயம். வலது பாகம் சக்தியாகவும், இடது பாகம் சிவமாகவுமிருப்பது **அனுபவம்.**

**சபை ஐந்து :**

ஆண்டவ ரிருக்கும் பொது ஸ்தானங்கள் 5. இவைகள் பஞ்சசபைகளாகச் சொல்லப்பட் டிருக்கின்றன. (பிருதிவி) — பொற்சபை, (2) அப்பு — ரஜித சபை, (3) தேயு — தெய்வ சபை, (4) வாயு — சிர்ந்தசபை (5) ஆகாயம் — சிற்சபை.

VALLALAR GROUPS



## 23. சுத்தசன்மார்க்கக் கொடி

**உண்மையில் சுத்தசன்மார்க்கக் கொடி யாதெனில் :—**

நமது நாபிமுதல் புருவமத்தி ஈருக ஒரு நாடி இருக்கின்றது ; அந்த நாடி நுனியில் புருவமத்தியின் உட்புறத்தில் ஓர் சவ்வு தொங்குகின்றது ; அதன் அடிப்புறம் வெள்ளை வர்ணம் ; மேற்புறம் மஞ்சள் வர்ணம் ; அச்சவ்வின்கீழ் ஓர் நரம்பு ஏறவும் இறங்கவும் இருக்கின்றது. இக் கொடி நம் அனுபவத்தின் கண் விளங்கும். இவ்வடையாளக் குறிப்பாகவே இன்றைய தினம் வெளி முகத்தில் அடையாள வர்ணமான கொடி கட்டியது. இனி எல்லவர்க்கும் நல்ல அனுபவம் அறிவின்கண் தோன்றும்.

## 24. மாயா திரைகள் ஏழு

**இந்தப் பவுதிக உடம்பிலிருக்கிற நீ யாரெனில் :—**

நான் ஆன்மா. சிற்றணு வடிவன். மேற்படி அணு — கோடி சூரியப் பிரகாசமுடையது. லலாடஸ்தானம் இருப்பிடம் ; கால் பங்கு பொன்மை முக்கால் பங்கு வெண்மை கலந்த வண்ணம். இப்படிப்பட்ட ஆன்மப் பிரகாசத்தை மறைக்க மாயா சத்திகளாகிய 7 திரைகளுண்டு. அவையாவன :—1. கருப்புத் திரை — மாயாசத்தி ; 2. நீலத்திரை — கிரியாசத்தி ; 3. பச்சைத்திரை — பராசத்தி ; 4. சிவப்புத்திரை — இச்சாசத்தி ; 5. பொன்மைத்திரை — ஞான சத்தி ; 6. வெண்மைத்திரை — ஆதிசத்தி ; 7. கலப்புத்திரை — சிற்சத்தி.

**திரை விளக்கம் :—**

கரைவின்மா மாயைக் கரும்பெருந் திரையால்
அரைசது மறைக்கும் அருட்பெருஞ் ஜோதி
பேருறு நீலப் பெருந்திரை யதனல்
ஆருயிர் மறைக்கும் அருட்பெருஞ் ஜோதி
பச்சைத் திரையாற் பரவெளி யதனை
அச்சுற மறைக்கும் அருட்பெருஞ் ஜோதி
செம்மைத் திரையாற் சித்துறு வெளியை
அம்மையின் மறைக்கும் அருட்பெருஞ் ஜோதி
பொன்மைத் திரையாற் பொருளுறு வெளியை
அன்மையின் மறைக்கும் அருட்பெருஞ் ஜோதி
வெண்மைத் திரையான் மெய்ப்பதி வெளியை
அண்மையின் மறைக்கும் அருட்பெருஞ் ஜோதி
கலப்புத் திரையாற் கருதனு பவங்களை
அலப்புற மறைக்கும் அருட்பெருஞ் ஜோதி



## 25. சிவகுணம் 8 : ஜீவகுணம் 8 :

| சிவகுணம் 8. அவை :— | ஜீவகுணம் 8. அவை :— |
|---|---|
| 1. தன்வயத்தனுதல் | 1. பராதீனன் |
| 2. தூயஉடம்பினனுதல் | 2. துக்கதேகி |
| 3. இயற்கை யுணர்வினனுதல் | 3. செயற்கை உணர்வினன் |
| 4. முற்றும் உணர்தல் | 4. சிற்றுணர்வினன் |
| 5. இயல்பாகவே பாசங்களில் நின்றும் நீங்குதல் | 5. பந்தன் |
| 6. பேரருளுடைமை | 6. காடின்னியன் |
| 7. முடிவில் ஆற்றலுடைமை | 7. நிர்பவன் |
| 8. வரம்பிலின்ப முடைமை | 8. மலதேகி |

### 1. கடவுள் ஒன்றும் இரண்டும் ஆனுர்

**கடவுள் ஒன்றல இரண்டல ஒன்றுமிரண்டுமானுர் என்பதற்குத் தாத்பரியம் :—**

ஒன்றல. — கடவுளானவர் ஒன்ருகிய ஞானதேகியும் அல்ல ; இரண்டல ; — சுத்தப் பிரணவதேகியும் அல்ல. ஒன்றுமிரண்டு மானுர், — கடவுளானவர் தன்னருளைப் பெற்ற சுத்த ஞானிக்கு ஞான தேகத்தையும் சுத்தப் பிரணவ தேகத்தையுங் கொடுக்க முதற் கருவியாக இருக்கின்ருர். இதை அனுபவத்தால் குருமுகத்தில் உணர்க.

### 2. கடவுள் ஏகம் அனேகம்

**கடவுள் ஏகம் — அநேகம் என்பதற்குத் தாத்பரியம் :—**

சமயத்தில் சிவம் ஏகம், பிரமாதிகள் அனேகம். — மதத்தில் பிரமம் ஏகம், பரவிந்து பரநாதம் முதலியவை அனேகம். — சமயா தீதத்தில் சொல்லிய பிரமம் முதல் சுத்தப் பிரமம் வரையிலும் ஏகம், அதைப் பெற்றவர்க ளனேகம். — சாதாரண பாகத்தில் கடவுள் ஏகம், ஜீவர்கள் அனேகம். — சுத்தசன்மார்க்கத்தில் கடவுள் ஏகம், கடவுளருளால் சுத்தமாதி மூன்று தேகங்களைப் பெற்ற ஞானிகளனேகம்.

## 26. ஓங்காரம்

ஓம் என்னும் எழுத்து பிரணவம் என்று சொல்லப்படும். படைத்து அளித்து அழிக்க வல்ல தலைவன் என்பதே அந்த ஓங்காரத்தின் பொருள்.

VALLALAR GROUPS



பிரணவத்தின் ஐந்து' பாகம் யாவெனில் :—**அகரம், உகரம், மகரம், விந்து, நாதம்.** பஞ்சமி என்னும் வாக்கு பிரணவத்தின்கண் இருந்து தோன்றியது. அதற்கு ஸ்தானம் **மூலாதாரம்.** அதிலிருந்து தோன்றிய மற்ற நான்கும் 1. சூக்குமை, 2. பைசந்தி, 3. மத்திமை, 4. வைகரி. இவற்றிற்கு இடம், **1. நாபி, 2. இருதயம், 3. கண்டம், 4. லலாடம்.**

## 27. ஜீவகாருண்யமே முத்திக்கு முதற்படி

நம்முடைய தலைவராகிய கடவுளை நாமடைவதற்கு அவரெழுந்தருளி **யிருக்கும் கோட்டையின் சாவியாகிய அருள் வேண்டும்.** இவ்வருள் அன்பினு லல்லது வேறு வகையா லடைவதரிது. இவ்வன்பு ஜீவகாருண்யத்தா லல்லது வேறு வகையால் வராது. ஜீவகாருண்யத்தின் லாபமே **அன்பு.**

**இந்த ஜீவகாருண்ய முண்டாவதற்கு ஏது, அல்லது துவாரம் யாதெனில் :—**

கடவுளுடைய பெருமையையும் தரத்தையும் — நம்முடைய சிறுமை யையும் தரத்தையும் ஊன்றி விசாரித்தலே. அன்னிய உயிர்களுக்கு இம்சை உண்டாகாது நடத்தலே, ஜீவகாருண்யம். இதுதான் முத்தியடைவதற்கு முதற் படியாயிருக்கிறது. ஆதலால், இதைப் பாதுகாத்தல் வேண்டும்.

ஜீவகாருண்யத்தால் பிரமன் ஆயுசும், பாச வைராக்கியத்தால் விஷ்ணு ஆயுசும், ஈசுர பக்தியால் ருத்திரன் ஆயுசும், பிரம்ம ஞானத்தால் என்று மழியாத **சுவர்ண தேக** முதலியவைகளைப் பெற்றுக் கடவுள் மயமாகலாம்.

எப்படியெனில் ;—

கடவுள் சர்வஜீவ தயாபரன், சர்வ வல்லமை யுடையவன். ஆகையால் நம்மையும், சர்வஜீவ தயையுடையவர்களாய்ச் சர்வ வல்லமையையும் பெற்றுக் கொள்ளும்படி, மனித தேகத்தில் வருவித்தார். ஞானிக்குத் தயவு அதிகப்பட்டு இருக்கிறபடியால், கேளாத கேள்வி முதலிய மஹா அற்புதங்களான. **இறந்தா ரெழுதல்** முதலிய அற்புத வல்லமையைப் பெற்று இருக்கின்றார். **எந்த ஜீவர் களிடத்தில் தயாவிருத்தியாகிய அருள் விசேஷம் விளங்குகின்றதோ அந்த ஜீவர்களிடத்தில் கடவுள் விளக்கம் விசேஷமாயிருக்கும்.** மற்றவர்களிடத்தில் காரியப்படாது. ஆதலால் மலஜல சங்கல்ப காலங்கள் தவிர மற்றக் காலங்களில், கடவுளிடத்தில் பக்தியும் ஜீவர்களிடத்தில் அன்பும் செலுத்த வேண்டும்.

**கடவுள் தயவும் ஜீவ தயவும் :—**

தயவென்பது இரண்டு வகைப்படும் ; யாவெனில் :—**கடவுள் தயை, ஜீவ தயை** ஆகிய இரண்டு. **கடவுள் தயை** என்பது :—1. இறந்த **உயிரை** எழுப்புதல், 2. தாவரங்களுக்கு மழை பெய்வித்தல், 3. மிருக, பட்சி, ஊர்வனவாதிகளுக்கு ஆகாரம் நியதியின்படி, அருட்சத்தியால் ஊட்டி வைத்தல்,



4. சோம சூரியாக்கினிப் பிரகாசங்களைக் கால, தேச, வண்ணம் பிரகாசஞ் செய்வித்தல் 5. பக்குவிகளுக்கு அநுக்கிரகித்தல், 6. அபக்குவிகளைச் செய்யவேண்டிய அருள் நியதியின்படி, தண்டனை செய்வித்துப் பக்குவம் வரு வித்தல். — **ஜீவதயை யென்பது :**—தன் சத்தியி னளவு **உயிர்க்கு உபகரித்தல்,** அல்லது ஆன்மநேய சம்பந்தம் பற்றித் **தயாவடிவமாய் இருத்தல்.**

## 28. பக்தி

**பக்தி என்பது :**—மனநெகிழ்ச்சி, மனவுருக்கம், **அன்பு என்பது :**— ஆன்ம நெகிழ்ச்சி, ஆன்ம உருக்கம். எல்லா உயிர்களிடத்தும் கடவுள் வியாபித்து இருப்பதை அறிதலே ஈசுர பக்தியாம். அந்தக்கரண சுத்தியின் பிரயோசனம் பக்தியை விளைவிப்பது. ஜீவகாருண்ய முண்டானால் அருளுண்டாகும். அருளுண் டானால் அன்புண்டாகும். அன்புண்டானால் சிவானுபவம் உண்டாகும்.

**1. கலை அறிவும் — அருள் அறிவும் :—**

பத்து ஆள்சுமை ஒரு வண்டி பாரம் ; நானூறு வண்டிச் சுமை ஒரு சூல்வண்டி பாரம். சூல்வண்டி ஆயிரங்கொண்ட நூல்களை ஒரு ஜென்மத்தில் ஒருவன் அதிதீவிர ஜீவமுயற்சியால் படிக்கச் சிறிய உபாசனைச் சகாயத்தால் முடியும். அப்படிப்பட்டவன் ஆயிரம் **ஜென்மம்** எடுத்துப் படிக்கும் **கலை அறிவை,** ஒருவன் **அருள் முன்னிடமாகச் சுத்தசிவ நோக்கத்தால்** அறியத் தொடங்கினால், ஒரு **கணத்தில்** படித்துக் கொள்ளலாம். இது சத்தியம்.

**2. ஆண்டவர் சோதிக்கின்றார் என்பது :—**

பிணி, மூப்பு, பயம், பசி முதலியவற்றால் வருந்தச் **செய்விப்பதல்ல. மரணமடையச் செய்விப்பதுதான் சோதனை.**

## 29. திரயோதச நிலைகளும் தாழுங் குணமும்

**திரயோதச நிலைகள் யாவெனில் :**—பூதநிலை 1, கரணநிலை 2, பிரகிருதி நிலை 3, மோகினிநிலை 4, அசுத்த மாயாநிலை 5, அசுத்த மகா மாயாநிலை 6, சுத்த மாயா நிலை 7, சுத்த மகா மாயா நிலை 8, சர்வமகா மாயா நிலை 9, குண்டலி நிலை 10, பிரணவ நிலை 11, பரிக்கிரக நிலை 12, திருவருள் நிலை 13, ஆக பதின் மூன்று. இதற்கதீதத்தில் **சுத்தசிவ நிலை.** இதற்கு, — **சத்தி, ஆகாயம், நிலை,** வெளி, பிரகாசம், அனுபவம், பதம், இடம் முதலிய பெயருள்ளன.

மேலும், வர்ணமாகிய எழுத்தாலும், வண்ணமாகிய ருபத்தாலும், தொழி லாகிய பெயராலும், அனந்தமாக விரியும். இவை யாவும் **ராகமென்கிற திரை** நீங்கினால் ஒருவாறு தோன்றும்.

VALLALAR GROUPS



மேலும், இவைகள் படிப்பால் அறியக் கூடாது. அறிவது எப்படியெனில் :—ஒழுக்கம் நிரம்பிக் கருணையே வடிவாக நிற்கும் விசார சங்கல்பமுண்டானல் நாம் தாழுங் குணம் வரும். அத் தருணத்தில் திருவருட் சத்தி பதிந்து அறிவு விளங்கும். ஆதலால், இடைவிடாது நன்முயற்சியில் பழகல் வேண்டும்.

அருட்பெருஞ்ஜோதி

## 30 தமிழ்

திருச்சிற்றம்பலம்

தமிழ் என்பது :—த் + அ ; – ம் + இ ; – ழ் ; என்னும் ஐந்து அலகு நிலையுடைத்து.

த், ம், ழ் ; — ஜட சித் கலை.

அ, இ :— சித் கலை.

அ — அகண்டாகார சித்தை விளக்கும் ஓங்கார பஞ்சாக்கரத்துள் பதிநிலை அக்கரமாம்.

இ — பதியை விட்டு நீங்காத சித்தை விளக்கும் விவகாரத்தால் அனந்தாகார வியஷ்டி பேதங்காட்டும் ஜீவ சித்கலை யக்கரமாம்.

பதி — சிதாத்ம கலைகளுக் காதாரமாகி உயிரினுக்குடலை யொத்துக் குறிக்கப்படும்.

த், ம், ழ், எழுத்துக்களுக்கு உரை :—

த் — ஏழாவது மெய் ;

ம் — பத்தாவதாகும் :

ழ் — 15-வது இயற்கையுண்மைச் சிறப்பிய லக்கரமாம்.

ஐந் தலகு நிலையும், உபய கலை நிலையும், மூன்று மெய் நிலையும் அமைந்துள்ளதும், சம்பு பக்ஷத்தாரால் அனுதியாய் சுத்த சித்தாந்த ஆரிஷ ரீதிப்படி கடவுள் அருளாணையால் கற்பிக்கப் பட்டதும் — எப்பாஷைகளுக்கும் பிதுர் பாஷை என்று ஆன்றோர்களால் கொண்டாடப்பட்டதும், — இனிமை யென்று நிருத்தம் சித்திக்கப் பெற்றுள்ளதுமான,

தமிழ் என்னும் இயற்கை யுண்மைச் சிறப்பியல் மொழிக்குச் சுத்த சித்தாந்தப் பத உரை —

### த்+அ=த :—

த் :—தத்வரூபாதி, சிவபோகாந்தமான, தசகாரிய இயற்கையுண்மைக் கட்டளை நிலையில், முன் அலகு நிலைப் பொருள் கூறிய விடத்துக் குறித்த ஏழாவது நிலையாகிய த் என்பது சிவ ரூப இயற்கை யுண்மைக் கட்டளையாம்.



அ :—அகண்டாகார சித்கலா ரூப ஓங்காரத் துட்பொருட் பிரதம விலக்கிய வியக்தி யக்கரம். பன்னிருயிர் நிலையிற் றலையாய முத லக்கர மாதலில், அதுவே பிரமாதி பரசிவாந்த நவ நிலைக்கும் அனுதி யாதி காரணமாயுள்ள இயற்கை யுண்மைப் பொருளி லக்கரம். என்னவே, சிவ ரூபமாகும். தகராகாசத்தில் சுத்தசிவமாகும் அருட்ஜோதி யிணைந்துள்ள பூரணனந்த ஸ்வரூப பரபதி வியக்த மாயிற்று.

### ம்+இ=மி :—

சங்கார பிரணவமாகிய,

மகாரம் :—முக்தான்மாக்களுக்கு ஒளிவண்ணச் சதானந்த மாயும் — பெத்தான்மாக்களுக்கு இருள்வண்ண மல ரூபமாயும், — இருந்து, கற்பாந்தப் பிரளய முடிவின் சிருஷ்டி திதி யாதிகளில் சிதான்ம சக்தியாகிய ஜீவனுக்கு, அதிகரணமாகவும்—முற்குறித்த பத்தாவது நிலயமாகிய ஆன்மாதாரமாகியுமுள்ளதெனப்பொருளாம்.

இ :—பன்னிருயிர் நிலைகளில் மூன்றும் நிலையுயிராகிய இகாரம், திரிகலா ஆன்ம வருக்கத்தில் அபரமாகிய சகலாகலரையும், பரமாகிய பிரளயா கலரையும் கீழ்ப்படுத்தி அவ்விரு கூட்டத்தாருக்கும் மேற்பட்டு நின்ற சுத்த விஞ்ஞானகலராகிய சிதாத்மாக்களைச் சுட்டுகின்றதாம். என்னவே, ஆதார ஆதேயக் கூட்டுறவால் என்றுந் தோன்றி விளங்கும் சிதான்ம வருக்கங்கள் பரபதி லக்ஷியமாகிய பூரணனந்தத்திற்கு அனுபவிகளாக வுரியவர்களெனக் குறிக்கொள்ளல் வேண்டும்.

ழ் :—இந்தச் சிறப்பிய லக்கரம் பதினெண் மெய்களில் பக்ஷ முடிபின் எண் குறிப்பில் நின்று, சிவயோக பூமியாகிய—பரத கண்டத்தில் பௌராணிக தத்துவத்தாற் குறிக்கப்பட்ட ஐம்பத்தாறு தேசங்களுள் சுதேசந் தவிர மற்ற ஐம்பத்தைந்து தேச பாஷைகளிலு, மில்லாததாயும் பதினெண்ணிலமாகக் குறிக்கப்பட்ட செந்தமிழ், கொடுந்தமிழ் என்னும் இருமைக்கும் ஒற்றுமையுரிமையாயும், முத்துறைத் தமிழுக்குள் முதன்மைத் துறையானதும், இருக்கு, யஜுர், சாம மென்னும் சமஸ்கிருத வேதத்திரயப் பொருள் அனுபவத்தை யெளிதில் கற்றுணர்ந்து தெளிந்து அனுபவித்தற்குப் பரமேசுரனது திருவருளை பஞ்சாக்ஷர முத்தொழிற் காரியமான பஞ்சத சாக்ஷரியால் பிரத்தியக்ஷானுபவம் சித்திக்கச் செய்யும் நிலயமானதும், ஸ்ரீமணிவாசகர், சம்பந்தர், நாவரையர், சுந்தரர், திருமூலர் முதலிய மகா புருஷர்களால் சாத்திர தோத்திரங்களாக அருளிச் செய்யப்பட்டிருக்கும் திருவாசகம், தேவாரம், திருமந்திரம் என்னும் பர மார்த்த ரகசியங்களை யுடையதும், —பல நாள் நைஷ்டிக அதிகரணம் பூண்டு போதாகாசிரியர் சந்நிதியில், தாழ்ந்து சகபாடிகளோடு சூழ்ந்து, சுர, ஒலி, பேதங்களைத் தேர்ந்து, உழைப்பெடுத்து ஓதினலும், பாடமாவதற்கு அருமையாயும், பாடமானலும், பாஷியம், வியாக்கியானம், டீக்கா, டுக்கா, டிப்பணி

VALLALAR GROUPS



முதலிய உரைகோள் கருவிகளைப் பொருள் கொள்ளத் தேடவேண்டியதாயும், அவ்வகைகளையும் தேடிக் கைவரினும் அக்கருவிகளால் போதகம் பெற வேண்டியதற்குப் பாஷியக்காரர்கள், வியாக்கியான கர்த்தர்கள், டீக்கா வல்லபர்கள், டீக்கா சூசகர்கள் முதலிய போதக உப போதகாசாரியர்கள் கிட்டுவது அருமையில் அருமையாயும் இருக்கிற, ஆரியம், மகாராட்டிரம், ஆந்திரம், என்ற பற்பல பாஷைகளைப் போலாகாமல் — பெரும்பாலும் — கற்பதற்கு, — எண்ணளவு, சுருக்கமாயும் — ஒலி யிலேசாயும், — கூட்டென்னுஞ் சந்தி அதி சுலபமாயும், — எழுதவும் கவி செய்யவும் மிக நேர்மையாயும், — அக்ஷர ஆரவாரம், — சொல்லாடம்பரம், போதுபோக்கு பெருமறைப்பு முதலிய பெண்மை அலங்கார மின்றி எப் பாஷையின் சந்தங்களையும் தன் பாஷையுள்ளடக்கி ஆளுகையால் ஆண் தன்மையைப் பொருந்தியதுமான, — தற்பாஷைக்கே அமைவுற்ற ழ் — ற் — ன் என்னும், முடி — நடு — அடி சிறப்பிய லக்கரங்களில், முடிநிலை இன்பானுபவ சுத்த மோனாதீதத்தைச் சுட்டறச் சுட்டும் இயற்கை யுண்மைத் தலைமைப் பெருமைச் சிறப்பிய லொலியாம்.

உரை கூறிப்போந்த சுத்த சித்தாந்த ஆரிடரீஷ முப்பதவுரைப் பொழிப்பு: —

மருவியற்கை மல இருளைப் பரிபாக சத்தியால் அருளொளியாக்கி, அதற்குள்விடான சிதாத்ம சிற்கலாசத்தி யென்னும் சுத்த ஆன்மாவை தகர — ககன — நடன அருட்பெருஞ்ஜோதி யென்னுஞ் சுத்த சிவானந்த பூரணத்தைச் சுத்த மோனாதீத வியலால் அனுபவிக்கும் இயற்கை யுண்மையே தமிழ் என்னும் சொற்பொருள் சுட்டினவாறு காண்க.

இதன் கருத்து யாதெனில்: — தமிழ்ப் பாஷையே அதிசுலபமாகச் சுத்த சிவானுபூதியைக் கொடுக்கு மென்பதாம்.

இலைக்குளநீ ரழைத்தனில் இடங்கருற வழைத்த தன்வாய்த்
தலைக்குதலை மதலையுயிர் தழைப்பவழைத் தருளிய நின்
கலைக்கும்வட கலையின்முதற் கலைக்குமுறு கணக்குயர்பொன்
மலைக்குமனு நிலைக்குமுரு வன்றெண்டப் பெருந்தகையே.

— சுந்தரமூர்த்தி சுவாமிகள் துதி, திருவருட்பா 4-வது திருமுறை-பக். 433

## 31. தன்மை, முன்னிலை, படர்க்கை

**தமிழில் தன்மை, முன்னிலை படர்க்கை என்பவை யாவை? அவற்றின் கருத்து யாது?**

தன்மை — பண்புச் சொல். சார்பு மயமாய் இருத்தலைப்பற்றி — தனக்கு மேல் ஒன்றினைச் சார்ந்திருப்பதனால் — பண்புச் சொல் ஆகிறது. முன்னிலை என்பது - முன் + நிலை, முன் இடம் கூடினது. ஆனால் மூன்றும் இடத்திற்குப்

*இடங்கர் என்பது — முதலை.



படர்க்கை என்பது என்னெனில்: — படர் — படரும்படியான கை — இடம், நிலை — அகண்ட இடம். கை என்பது குறுகிய இடம், ஆதலால் பேதாபேதம் குறிக்கும் நிமித்தம் இரண்டாம் இடத்திற்கு முன்னிலை என்றும், மூன்றும் இடத்திற்குப் படர்க்கை என்றும் பெயர்கள் வந்தன என அறியவும்.

## 32. அகரம்




1. விந்தி — பெரிய வெளிச்சம், சூரிய வெளிச்சம்
2. நாதம் — பெரிய நாதம்
3. பரவிந்து — அதில் பாதிவெளிச்சம், சந்திரவெளிச்சம்
4. பரநாதம் — நாதம்
5. அபரவிந்து — வெளிச்சம், நக்ஷத்திர ஒளி
6. அபரநாதம் — நாதம்
7. திக்கிராந்தம் — அருகிய வெளிச்சம், மின்னல் ஒளி
8. அதிக்கிராந்தம் — சப்தம்
9. வாமசத்தி
10. ஜேஷ்ட சத்தி
11. ரௌத்திரி சத்தி
12. காளி சத்தி

VALLAALAR GROUPS



## அகரத்தைப் பற்றிய வினுக்கள்*

புலவர்கள் பலர், அகங்காரத்தால் நம்மை மதியாது இயலறியாது எழுதிய வாறே,—புலமையிற் பெரியோ மென்னுஞ் செருக்கின்றி, அறிவறிந்தடங்கியாரிற் சிலர், எழுதியவற்றிற் சில சில இடங்களில் வழுவினர். இவ்வழுக்கள் செருக் கால் வழுவியதன்று; விசாரத்தாலுஞ் சிவானுபவ மேலீட்டாலும் வழுவியது. இவற்றைத் — தேவாரந் திருவாசக முதலிய உண்மை முறைகளிற் காண் கின்றோம். இக்காலத்து எமது ஆசிரியரை வணங்கி.

"ஐயரே! தேவரீர் எழுதிய சில வாசத்தினுஞ் செய்யுளினுங் கருத்துக்கு விளங்கப் புலப்படாமை மயங்குகின்ற சொற்றொடர்கள் சில உளவென்று எமது மாட்டாமையாற்றோன்றுகிறது; இதற்கு யாது செய்வோம்?" என்று விண்ணப்பஞ் செய்ய, அவர்.—

"ஐய! நீர் அஞ்சற்க, யாம் எழுதிய வாசகத்தினுஞ் செய்யுளினும் அள விறந்த குற்றங்களிருக்கின்றன; என் செய்வோம் விசார வசத்தால் ஆங்காங்குந் தவறினேம். அதனைப் பெருங்கருணையுள்ள எமது கடவுள் மன்விப்பர். மற்றையரு மன்னித்தல் வேண்டும். யாம் யார்? எமக்கு யாது தெரியும்? புழுவினுங் கடைய புலையிற் சிறியேம். இதனல் நாணுதலுடையேம்" என்றனர்.

ஐயர் புகன்ற மாற்றம் எவ்வாறென் றெண்ணி நிற்குந் தருணத்து எம்மை ஆண்டு இருக்கப் பணித்து மீட்டுஞ் சொல்லுவர்.—

அகரவுயிர் என்பது யாது?

அகர உயிர்க்கு:—

1. வரி வரலாற்றின் இலக்கணம் என்னை?
2. ஒலி வரலாற்றின் இலக்கணம் என்னை?
3. தன்மை வரலாற்றின் இலக்கணம் என்னை?
4. உணர்ச்சி வரலாற்றின் இலக்கணம் என்னை?

அதன்,

5. உண்மை அனுபவ விலக்கணம் என்னை?

அகர வுயிர்க்கு,

6. வரி உரு இலக்கணம் என்னை?
7. ஒரு யுரு விலக்கணம் என்னை?
8. தன்மை யுருவி னிலக்கணம் என்னை?
9. உணர்ச்சி யுருவி னிலக்கணம் என்னை?
10. உண்மை யனுபவ வுருவி னிலக்கணம் என்னை?

*இஃது சுவாமிகளுக்கு ஆட்பட்ட சமரச வேத சன்மார்க்க சங்கத்து அறிஞர்களில் ஒருவராகிய, ஆனந்தநாத சண்முக சரணாலய சுவாமிகள் எழுதியவற்றுள் கண்டது.



அகர வுயிரின்,

11. வரிச் சொரூப விலக்கணம் என்னை?
12. ஒலிச் சொரூப விலக்கணம் என்னை?
13. தன்மைச் சொரூப விலக்கணம் என்னை?
14. உணர்ச்சிச் சொரூப விலக்கணம் என்னை?
15. உண்மை யனுபவச் சொரூப விலக்கணம் என்னை?

அகர வுயிர்க்கு,

13. வரிச்சுபாவ விலக்கணம் என்னை?
17. ஒலிச் சுபாவ விலக்கணம் என்னை?
18. தன்மைச் சுபாவ விலக்கணம் என்னை?
19. உணர்ச்சிச் சுபாவ விலக்கணம் என்னை?
20. உண்மை யனுபவச் சுபாவ விலக்கணம் என்னை?

அகர வுயிரின்,

21. வரிச் செயற்கை யிலக்கண மென்னை?
22. ஒலிச் செயற்கை யிலக்கண மென்னை?
23. தன்மைச் செயற்கை யிலக்கண மென்னை?
24. உணர்ச்சிச் செயற்கை யிலக்கண மென்னை?
25. உண்மைச் செயற்கை யிலக்கண மென்னை?

அகர வுயிரின்,

26. வரி அதிகார விலக்கணம் என்னை?
27. ஒலி யதிகார விலக்கணம் என்னை?
28. தன்மை யதிகார விலக்கணம் என்னை?
29. உணர்ச்சி யதிகார விலக்கணம் என்னை?
30. உண்மை யதிகார விலக்கணம் என்னை?

அகர வுயிரின்,

31. வரிப் பொது விலக்கணம் என்னை?
32. ஒலிப் பொது விலக்கணம் என்னை?
33. தன்மைப் பொது விலக்கணம் என்னை?
34. உணர்ச்சிப் பொது விலக்கணம் என்னை?
35. உண்மைப் பொது விலக்கணம் என்னை?

அகர வுயிரின்,

36. வரிச் சிறப் பிலக்கணம் என்னை?
37. ஒலிச் சிறப் பிலக்கணம் என்னை?
38. தன்மைச் சிறப் பிலக்கணம் என்னை?
39. உணர்ச்சிச் சிறப் பிலக்கணம் என்னை?
40. உண்மைச் சிறப் பிலக்கணம் என்னை?

அகர வுயிரின்,

41. வரிக் குண விலக்கண மென்னை?
42. ஒலிக் குண விலக்கண மென்னை?

VALLALAR GROUPS



43. தன்மைக் குண விலக்கண மென்னை ?
44. உணர்ச்சிக் குண விலக்கண மென்னை ?
45. உண்மைக் குண விலக்கண மென்னை ?

என்பன முதலாக இவ்வகர உயிர் ஒன்றிற்கே இன்னும் பற்பல இலக்கண நியாய விசார வினுக்கள் உளவாயின், எம்போல்வா ருணர்ச்சிக் கண் அவ்வினுக் களுக்கு விடை யெங்ஙனந் தோன்றும் ? ஒரெழுத்திற்கே யிங்ஙனமாளுல், பற்பல எழுத்துக்களுக்கும், அவ்வெழுத்துக்களா லாகிய சொற்களுக்குஞ், சொற்பொருள் களுக்கும் விடை கொடுப்பது எங்ஙனம்? ஆகலில், "கற்ருேமென்னுஞ் செருக்கை முழுதும் விடுத்து விசார வசத்தராகிச் சிவபெருமான் திருவருளைச் சிந்தித்திருத்தல் வேண்டும்" என்று எம்மை யோர் பொருளாகக் கருதி, இரக் கத்தால் இசைத்தனர். ஆகலின், கல்வியிற் செருக்கடைதல் எவ்வாற்ருனும் பொருந்தாது.

**அகரத்தின் லக்ஷணம் — 9 :**

**மூலாங்கப் பிரணவமாகிய அகர லக்ஷணம் ஒருவாறு :—**

அ

1. ஊன்றல் — வாமை
2. சுழித்தல் — ஜேஷ்டை
3. விசிரிம்பித்தல் — ரௌத்ரி
4. மடித்து மேலேறல் — காளி
5. அங்கிருந்து கீழ்வரல் — கலவி கரணி
6. மேல் புடைபெயர்த்தல் — பலவி கரணி
7. கீழ்த்தாழல் — பலப்பிரமதனி
8. கீழ் ஊன்றி நிற்றல் — சர்வபூத தமனி
9. வரிவடிவாதல் — மனேன்மணி

இதில் விந்து நாதம் முதலிய நவ நிலைகளு முள.

## 33. வந்தன முறை

ஆசாரியனுக்குச் சிஷ்யன் வந்தனஞ் செய்வதற்கும்,—பெரியவர்களுக்குச் சிறியவர் வந்தனஞ் செய்வதற்கும், — எல்லவர்க்கும் ஞானிகள், யோகிகள், சாந்தர்கள் வந்தனஞ் செய்வதற்கும் — காரணமும் அதன் பிரயோஜனமும் யாதெனில் :—

வந்தனஞ் செய்வது — ஆயுள் விர்த்திக்கும் அறிவு விளக்கத்திற்கும் ஆதாரமா யிருக்கின்றது. சிஷ்யனுக்கும் சிறியோருக்கும் — ஆசாரியனும் பெரி யோரும் வந்தனஞ் செய்தால், ஆயுள் விர்த்தியும் அறிவு விளக்கமும் குறை



வாகும். இதற்குச் சம்பந்தம் யாதெனில்: — ஒரு ஜீவனுக்கும் திருவிளக்குக்கும் சம்பந்த மிருக்கின்றது. எப்படியெனில் : —

ஒரு திருவிளக்கு எரிவதற்கு நல்ல உஷ்ண சம்பந்தமான தைலத்தை உதவுகிறதுபோல், ஒரு ஜீவனுக்கு, ஆன்ம விளக்கத்துக்கும் மலப்போக்குக்கும் ஆதாரமான நிரஹங்காரமென்கிற நல்ல உஷ்ண சமபந்தமான தைலத்தை ஊட்டி விளக்கு வைக்க வேண்டியது. ஆனல் மேற்சொன்ன இரண்டுஞ் சந்திக்கும் போது கோக்கமான கெட்ட உஷ்ணத்தைச் சம்பந்தப் படுத்தினல் லாபஞ் செய்யாதோ வெனின், செய்யாது. திருவிளக்கு ஜல உஷ்ணத்தையும் காற்றினு லுண்டாக வேண்டிய உஷ்ணத்திற்கு மேற்பட்ட அதிக உஷ்ணத்தையும் பெற்ருல் கெடும். அதுபோல் ஜீவனுக்கு மும்மலத் தாலாகிய உஷ்ணத்தையும் இன்னும் பற்பல பேதமுள்ள கெட்ட உஷ்ணத்தையும் சம்பந்தப்படுத்தினல், அது கெட்டுப் போய் விடும். இது யாவருக்கும் திருஷ்டாந்தமாயிருக்கிறது அல்லவா ?

இவற்ருல் ஆசாரியனையும், பெரியவர்களையும்,—சிஷ்யனும், சிறியவர்களும் வணங்கினல் **ஆயுள் விருத்தியும்,**—சிஷ்யனையும், சிறுவர்களையும்— ஆசாரியரும் பெரியவர்களும்—வணங்கினல் **ஆயுள் குறைவும்** உண்டாகுமென்ற சம்பந்தம் எப்படியெனில் :— திரு விளக்கு எரிய — சாதாரண காலத்தில் அதம பக்ஷத்துக் குரிய கொட்டை யெண்ணெய், இலுப்பை எண்ணெய் முதலியவற்ருல் விளக்கு வைக்கின்றதும், கொஞ்சம் விசேஷ காலத்தில் நல்லெண்ணெயினல் விளக்கு வைக்கின்றதும் ; கடவுள் சந்நிதானத்திலும், ஞானசாரியர் சந்நிதானத்திலும் பசுவின் நெய்யிட்டு விசேஷ விளக்கத்தையுடைய விளக்கு வைக்கின்றதும் போல், கொட்டையெண்ணெய் முதலாகியதற்கொப்பாகிய ஒரு ஜீவன் அதம பக்ஷம் மத்திம பக்ஷத்திற்குரிய ஒவ்வொரு மலத்தினலுண்டாகிய தோஷத்தைப் போக்கிக் கொள்வதில் ஆன்ம விளக்கத்திற்கு ஆதாரமாகிறதும், விசேஷமாய்க் கடவுளாதி ஆசாரியர் சந்நிதானத்தில் வைக்கும் நெய் விளக்குக்கு ஒப்பான மும்மலப் போக்கான சுத்த நிரஹங்கார மென்கின்ற தைலத்தை ஆன்மாவுக்கு உண்டாக்கி வைப்பதில் ஜீவ விர்த்தியு முண்டாகின்றது. **திருவிளக்கு** — அதன் உஷ்ண சம்பந்தமான தைலங்களை விட்டுக்கொண்டு வருவதில் விளக்கு எரிந்து கொண்டி ருப்பதுபோலும், அதில் நல்லெண்ணெய், நெய் முதலியவை விட்டெரிப்பதில் விசேஷப் பிரகாசமாய் விளக்கு எரிவது போலும்,—ஜீவனுக்கு அதன் உஷ்ண சம்மந்தமான மும்மலப் போக்கை யுண்டுபண்ணுவதில் ஜீவிப்பு விர்த்தியுண்டா கிறதும், விசேஷமாய் நிரஹங்கார மென்கின்ற சுத்த உஷ்ணத்தை யுண்டு பண்ணிக்கொண்டு வருவதில் ஜீவனுக்கு விசேஷ விளக்கத்திற்குரிய ஜீவிப்பி ருந்து கொண்டிருக்கின்றதும், இதனல்தான் தைலத்தை கொண்டிருக்கிற திரு விளக்கு விர்த்தியாவதுபோல் மும்மலப் போக்கைக் கொண்ட ஜீவனும் ஆயுள் விர்த்தி யடைகின்றது. ஆதலால் **ஆசாரியரையும் பெரியவர்களையும்** — சிஷ்யனும் சிறியோரும் வணங்குவதில் நிரஹங்கார சக்தி பெருவதனல் ஜீவனுக்கு ஆயுள் விர்த்தியுண்டாகின்றது.

VALLALAR GROUPS



சிஷ்யனையும் சிறியோரையும்—ஆசாரியரும் பெரியோரும், வணங்குவதில்
ஆயுட்குறைவு எப்படி யுண்டாவதெனின் :—

ஒருமணி வரையில் எரியத்தக்க எண்ணெயிட்டு எரிவித்திருக்கும் சிறிய
திருவிளக்குக்குச் சமீபத்தில், ஒரு பெரிய பந்தத்திற்கு ஒப்பான ஒரு பெரிய திரு
விளக்கு வைத்து எரித்தால் ஒருமணி நேரம் எரியத்தக்க அந்தத் தீப உஷ்ணத்
தைப் பெரிய தீபம் கிரஹித்துக் கொள்வதில் ஒரு மணி நேரம் எரியவேண்டிய
தீபம் அரைமணிக்குள் எரிந்து விடுவதுபோல், ஆசாரியனும் பெரியோரும் —
சிஷ்யனையும் சிறியோரையும் வணங்குவதில், பெரிய தீவர்த்திக் கொப்பான —
ஆசாரியர் பெரியோர் என்கிற யோக்கியதையோடு, நிர்மல ரஹிதமான நிரஹங்கார
மென்கிற மத்தாப்புக் கொப்பான விளக்கத்தைச் சிறிய விளக்கான — சிஷ்யன்
சிறியோர்—முன்னிலைக்கு விளக்கி வைப்பதில், சிறிய விளக்கடைந்த குறையைப்
போல் ஜீவனுடைய ஜீவவிர்த்தியைக் குறைக்கின்றது. இந்த ஞாயத்தால் ஆசாரி
யனும் பெரியோரும் — சிஷ்யனையும் சிறியோரையும் வணங்கினால், **ஆயுள்
குறைவை அடையுமென்று திருஷ்டாந்தமா யிருக்கிறது.**

ஆசாரியன், பெரியோர், ஞானி, யோகி இவர்கள் — சிறியோரையும் சிஷ்ய
ரையும் வணங்கினல் ஆயுள் குறைவு வரமாட்டாது என்ற தெப்படியெனில்:—

மேற்குறித்தவர்களது விளக்கத்துக்கு மேற்பட்ட விளக்கம் இவர்களுக்கு
அகத்திலுண்டாகுமானால், ஆயுள் விர்த்திக்குக் குறைவு வரமாட்டாது. இதற்கு
திருஷ்டாந்தம் :—சமயச் சார்பில் பரமசிவம் சுப்பிரமணிய சுவாமியிடத்சில் அநுக்
கிரகம் பெற்றிருப்பதும் ஞானிகள்மாட்டுச் சம்பந்த சுவாமிகளை அந்தச் சுவாமி
களின் தாய்தந்தையர் வணங்கியதும், அப்பர் சுவாமி முதலியோரும் வணங்கியது
முணர்க. மேலும் சமய மதாதீத ஞானிகளுக்கும், சமயமதங்கட் குட்பட்ட
பெரியோர்களுக்கும், இவ்வுலகத்தின் கண்ணுள்ள ஜீவராசிகளின் தேகமாதி
யாவும் தமது பதியின் தூல சூக்கும மாதலாலும், தமது பரிபூரண ஆன்ம அனுப
வத்தின்கண் தோன்றிய அனுபவங்களாகிய இயற்கையுண்மை ஏகதேசங்களாத
லாலும், எல்லாம் அவர்கட்குத் தாமன்றி யிரண்டற்றிருப்பதாலும், எல்லா
வற்றையும் இவர்கள் அத்துவிதத்தில் சிவமெனக் கண்டுணர்தலாலும், இவர்கள்
சென்றவிடமெல்லாம் கண்டு சிவமாயும் தாமாயும் நீக்கமறக் கை கூப்புவது
இயற்கை.

ஆதலால், மலசகிதர்களான ஜீவர்கள், மதிப்புடையவர்களாதலால்,
ஆசாரிய சிஷ்ய பாவத்தில் வணங்கலாதி தொழிலால் ஜீவிப் பின்மையும் விர்த்தியும்
உண்டாகின்றன. மகான்கள் கைகூப்புவதில் ஆன்மவிர்த்தி குறைவு படாது :
ஜீவர்களின் அறிவு விளங்கும். ஏனெனில் :—அவர்கள் சங்கல்பம் சுத்தமாதலால்,
இவர்களை மேலேற்றும்.



**மார்க்கடஞாயம் — மார்ச்சால ஞாயம் :**

சிஷ்யன் ஆசாரியனைத் தேடிப் பிடிப்பதான **மார்க்கடஞாயம்** போற் காட்டப்
பட்ட **கோன்கண்ட குடியாகியது சித்தாந்தம்.** இவ்வழி நின்று ஜீவ பேதம்
கெட்ட விடத்தில், ஆசாரியனே சிஷ்யனைப் பற்றி இழுப்பதான மார்ச்சால ஞாயம்
போல் ஊட்டப்பட்ட கோன் கொண்ட குடியாகியது வேதந்தமாகிய அத்வைதம்.
**(மார்க்கடம்** என்பது - குரங்கு ; **மார்ச்சாலம்** - என்பது பூனை.)

**அருட்பெருஞ்ஜோதி**

# 34. பிண்டானுபவ லக்ஷணம்

**திருச்சிற்றம்பலம்**

**மனித தேகத்தில்** கோசத்திற்கு $2\frac{1}{2}$ அங்குலத்திற்குமேல் நாற்சதுரமான
ஒரு பையுண்டு. அதில், 16 வயதளவும் உண்டாகும் இந்திரியம்,
ஜலமாகச் சேருகின்றது. அதைத்தான் மானச தடாகமென்று சொல்லு
கிறது. 16-க்கு மேல் சேரும் இந்திரியம், உறைந்த அந்த ஜலத்திற்கு
மத்தியில் சேருகின்றது. அப்படியாச் சேர்ந்து கொண்டுவரும்
**இந்திரியம் பொன் வர்ணமாகவிருக்கும். அது தாமரைப்பூ வென்று சொல்லப்
படும்.** அதன் மத்தியில் ஒரு ஆவி சாதாரண காற்றுக்கு நூற்றிலொரு பங்காக
வெகு நேர்மையாக இருக்கும். அதன் வண்ணம் பொன் மயமாயிருக்கும்.
அதற்கு அதிஷ்டான தெய்வம் பிரமனென்று சொல்லப்படும். அந்த ஆவி
உண்டாகுங்காலம் அவருக்குச் சகல காலம் — என்றும், அடங்குங் காலம் —
கேவல காலம் என்றும் சொல்லப்படும். அந்த ஆவி உண்டாகுங் காலத்தில்
செயற்கையால் கருத்தரிக்கும். அது சிருஷ்டி என்று சொல்லப்படும்.

அதில் ஆவி யுண்டாகத் **தொப்புளிலிருந்து** ஒரு நாடி தோன்றி அதன்
மத்தியில் முகந்துகொண் டிருக்கிறது. அதன் மூலமாய் அக்கினி யிருக்கின்றது.
அது மூலாக்கினி என்று சொல்லப்படும். அது தொப்புளிலிருந்து உண்டாவதால்
**விஷ்ணு தொப்புளிலிருப்பதாகச் சொல்லப்படுகிறது.** அதன்மேல் $2\frac{1}{2}$ அங்கு
லத்தில் உந்திக்கு நேராக உட்பாகத்தில் சதுரமாய் ஒரு பையுண்டு. புசித்த
அன்னத்தை ஐந்து நாழிகையில் பால்போன்ற ஜலமயமாய் ருத்திர பாகத்திலுள்ள
ஆவி பிரித்து அந்தப் பையில் சேர்க்கின்றது. அதை **க்ஷீராப்தி என்று சொல்லு
கிறது.**

அந்தப் பையிலிருக்கும் பால்போன்ற ஜலத்தின்மேல் **ஆலிலை** வடிவை
யுடைய வயிற்றி னுட்பாகம் படிவதனால் அதே வண்ணமாக ஓராடை கட்டி
யிருக்கும். அதை ஆலிலையென்று சொல்கின்றது. அந்த ஆடையின்மேல் ஒரு
நரம்பு வட்டமாய்த் தலைதூக்கி யிருக்கின்றது. அதைச் சேஷனென்று சொல்லு
கின்றது. அந்தக் குண்டலி வட்ட சேஷனென்னும் நாடி மத்தியில் செம்பினது

VALLALAR GROUPS



களிம்புபோன்ற பச்சைமேனியா யொரு சக்தியுண்டு. அதை **விஷ்ணுவென்றும்**, அச்சத்தியில் முன், பின், நடுவென்னும் இடத்தில் அதன் காரணச் சத்து. பொன் வண்ணமாயும் அரித்திரா வண்ணமாயும் குங்கும வண்ணமாயும் மூன்று உள்ளன. அவற்றைச் **சீதேவி, பூதேவி, நீலாதேவி** யெனச் சொல்லுகின்றது. மத்தியில் ஒரு சத்தியிருப்பதால் **விஷ்ணு மார்பில் லக்ஷ்மியை வைத்தாரென்பது**.

குண்டலி வட்டமான நாடி மத்தியிலுள்ள பச்சை வண்ணமான சத்தியிலிருந்து ஒரு நாடி உண்டாகி இரண்டு தலையாய் விரிந்து ஒரு தலை மேலும், ஒரு தலை கீழும் செல்லுகின்றது. இந்த நாடிகளின் மூலமாய் அந்தச் சத்து, மேலே செல்லும்போது பசுமை வண்ணமாகவும், கீழ்ச் செல்லும்போது பீதவண்ணமாகவும் செல்லுகின்றது. மேலே செல்வதினால், ஜீவர்களுக்கு ஜீவிப்பும், அதன் சாரம் கெட்டுக் கீழே செல்வதினால், ஜீவிப்பின்மையும் உண்டாகிறது. மேலே செல்வதில், ஜீவிப்புண்டாகுவதால் காத்தல் தொழிலை உணர்த்துகின்றது. மேலும், மேலே செல்லுகின்றதை, விஷ்ணு வைகுந்தம் போகின்றாரென்றும், கீழே செல்லுகின்றபோது க்ஷீராப்தியில் இருக்கிறாரென்றும் சொல்லுகின்றது. கீழே செல்லும் நாடி, முன் சொன்ன தொப்புள் நாடியுடன் கலப்புண்டாய் பிரமனுக்கு உஷ்ணத்தைத் தருகின்றது.

அன்றியும், இந்தச் சதுரமான பையின் வலப்பாகத்தில் ஒரு பையுண்டு. அந்தப் பையில் அக்கினி நிரம்பிக் காரணமாயிருக்கின்றது. அது புசித்த வஸ்துக்களின் சத்தைக் கிரகித்துக் கொண்டு அசத்தை மலமாக இடது பாகத்தில் சேர்த்து விடுகின்றது. கிரகித்த சத்தை முன் சொன்ன க்ஷீராப்திப் பையில் சேர்க்கின்றது. இதை **வடவாக்கினி** என்று சொல்லுகின்றது. மேலும் இந்த வெள்ளை ஜலத்தை அக்கிரமமின்றிச் சமப்படுத்தி பிரளயம் வாராது காத்துக் கொண்டிருக்கிறது. இந்த உதராக்கினி குறைவுபட்டு க்ஷீராப்தியின் ஜலத்தில் தரங்கெடுமானால் நோயுண்டு.

இந்தப் பையாகிய ஸ்தானத்திற்குமேல் 2½ அங்குலத்தில் இருதயத்தில் மலர்ந்த வாழைப்பூப் போல் ஒரு பையுண்டு. அது வெண்மையாயிருக்கும். இதைக் **கைலாய** மென்று சொல்லுகின்றது. இந்தப் பையின் முன்சொன்ன காற்றில் பதினாயிரங் கோடி பங்கி லொருபங்காக வெகு நேர்மையாய் அக்கினி மயமாம் ஒரு ஆவியிருக்கும். இதற்கு காரணாக்கினி என்று பெயர். இவ்வக்கினியைக் **கால சந்திர ருத்திர மூர்த்தி** என்பர். இப்பையின் அருகில் இடப்புறத்தில் மலர்ந்த தாமரைப் பூப்போல ஒரு பையுண்டு. அந்தப் பை பசுமை வண்ணமாயிருக்கும். அதற்கும் முன் சொன்ன வெண்மைப் பைக்கும் ஒரு நாடியுண்டு. அதன் மூலமாய்க் காரணாக்கினி அதிகப்படுத்தாமலும் குறைவு படுத்தாமலும் சமம்படுத்தி வைக்கும். இந்த மலர்ந்த பைக்கும் கீழிருக்கும் க்ஷீராப்திப் பைக்கும் ஒரு நாடியுண்டு. அதன் மூலமாய் அதற்கு உஷ்ணங் கொடுத்து நிலையில் வைக்கும். இதனால் ருத்திரனிடத்தில் விஷ்ணு பிறந்ததாய்ச் சொல்லுகின்றது.



இந்த நாடி மூலமாக விஷ்ணு இடமாகிய ஜலத்திலும், பிரமனிடமாகிய இந்திரியத்திலும் உள்ள குற்றங்களைக் கண்டிப்பதால் **ருத்திரனைச் சம்ஹார கர்த்தா வென்று சொல்வது**.

இந்த அக்கினிப் பையில், குண்டலி வட்ட நரம்பு ஒன்று உண்டு. அதில் மூன்றாகப் பிரியும் கிளையுண்டு. அது மூலமுதல் பிரமரந்திரம் வரையில் இடம், வலம், நடுவென்று கத்தரி மாறலாய்ப் பிராணபானனுக்கு இடங்கொடுத்து ஊடுருவி நிற்கும். இந் நரம்புகளுக்கு **சோம சூரி யாக்கினி** என்று பெயர்.

இஃதன்றி இக் குண்டலி வட்ட நரம்பி னடியில் நின்று இரண்டு நரம்பு—வலத்தில் அஞ்சு கவருடைய தலையாயும், இடத்தில் ஆறுதலை யுடைய கவராயும்—நிற்கின்றன. வலத்திலுள்ளது கணபதியென்றும், இடத்திலுள்ளது சுப்பிரமணியரென்றும், பெயர் சொல்லுவது. மேற்படி ஐந்து கவருடைய நரம்பிற்கு அடியில் தலையெடுப்பான நரம்பு கீழ் நோக்கி கிருஷ்ணவர்ணமா யிருக்கும். இந்த நரம்பு இடைவிடாது அசைந்து கொண்டிருக்கும். இந்த அசைவால் அக்கினிப் பைக்கு ஆதாரம் உண்டாவதால் இதற்குக் **கணபதி** என்று பெயர். மேற்படி ஐந்து கவருடைய நாடிக்கு இடம் வலம் இரண்டிலும் சித்தி தத்துவம், புத்தி தத்துவம் உண்டு. இடத்திலுள்ள ஆறு கவருடைய நாடிக்குக் கீழ் அனந்த வண்ணமான நாடி ஒன்றுண்டு. இதற்கு மயூரமென்று பெயர். இந்த நாடியின் அசைவால் எழுபத்தீராயிரம் (72,000) நாடியும் அக்கிரம மின்றி நிலைபெறுகின்றபடியால், இதற்குச் சேனாதிபதி என்று பெயர். மேலும் வலது புறத்து நாடிக்கு அறுபத்திரண்டு மாத்திரையும்—இடது புறத்து நாடிக்கு நாற்பது மாத்திரையும் அளவு வித்தியாசமிருப்பதால், இவர்களைச் சோதரர்களாகச் சொல்வதுமன்றி, மேற்படி ருத்திராம்சமாகவே சொல்லுகின்றது.

இருதயத்திற்குமேல் இரண்டரை அங்குல இடமான கண்டத்தில் **மகேஸ்வரனும்** அதற்குமேல் இரண்டரை அங்குல அண்ணாக்கில் **சதா சிவமும்**, அதற்குமேல் இரண்டரை அங்குல உயரத்தில் புருவ மத்தியில் **விந்துவும்**, அதற்குமேல் இரண்டரை அங்குலத்தில் நாதமும், அதற்குமேல் இரண்டரை அங்குலத்தில் **பரவிந்துவும்**, அதற்குமேல் இரண்டரை அங்குலத்தில் **பரநாதமும்**. அதற்குமேல் இரண்டரை அங்குலத்தில் **திக்கிராந்தம் அதிக்கிராந்தம துவாத சாந்தம்** முதலானவைகளும், அதீதத்தில் **சுத்த சிவமு** முள. மகேஸ்வரஸ்தான முதல் விந்து ஸ்தானம் வரையிலும் முன்போல் இடம், நாடி, தொழில், வண்ணம் முதலியவுமுள்ளன. நாத ஸ்தானந் தொட்டுத் துவாத சாந்தம் வரையில் அனுபவ வெளியாகிய ஆகாச பேதமயமா யிருக்கும். அதற்குமேல் அநிகாரண மாத்திரமாய் ஆன்மானுபவத்தில் விளங்கும்.

மேலும், பிரமஸ்தானந் தொடங்கிச் சுத்த சிவஸ்தானம் வரையில் ஒரு ஸ்தம்பம் இருதயம் வரையில் வாயுநாடி வண்ணமாயும் — அதற்குமேல் அக்கினி

VALLALAR GROUPS



வண்ணமாயும்—இருக்கும். இது அடியிற் பருத்து வரவர நேர்மையாய், இந்திரிய கரணங்களுக்குப் புலப்படாமல் அணுவுக்கணுவாய் ஜீவனுக்கும் புலப்படாமல் அகண்டமாய், ஆன்மக் காட்சியில் அருகித் தோன்றுவதாய், இரண்டற நிற்கும். இதற்குச் சிவாகாரண பூரண ஸ்தம்பம் என்று பெயர்.

முன் சொன்ன இருதயாக்கினிப்பை அக்கிரமாய் விரிந்து, விசேஷ அக்கினி ஜவாலை விசிரிம்பித்துக் கீழிருக்கும் க்ஷீராப்திப் பையிலிருக்கும் ஜலத்தைச் சுருட்டிக்கொள்ள, ஜீவனுக்கு மரண காலம் நேரிடும். மேற்படி பை விரிவதற்கு ஆதாரம் **அருந்தல் பொருந்தல் இவை சமமானால் மிருத்தியு வராது.**

**பிண்ட லக்ஷணம் :—**

**தலை — அண்டம்.** மார்பு முதலானவை — **பிண்டம்.** அண்டத்தில் பிண்டம் — புருவ மத்தி. அண்டத்திலண்டம் — பிரமரந்திரம். இதில் சோம, சூரிய, அக்கினி, பிரம விஷ்ணுக்கள் இருக்குமிடம் :— நேத்திரம், புருவமத்தி அண்ணு, பிரமரந்திரம். இதில் பிரகாசமாயும் அறிவாயும் பிராணவாயு வாயும் இருக்கின்றது. பிண்டத்தில் பிண்டம் — இடுப்புக்குக்கீழ் பாத பரியந்தம். பிண்டத்தி லண்டம்—பிஜம். பிண்டம்—வயிறு. மேற்படி பிண்டஸ்தானத்தில் கர்த்தாக்க ளிருக்குமிடம் கோசம், தொப்புள், மார்பு ; இவர்கள் வண்ணம், நாடி, உஷ்ணம், காற்று, குறி முதலிய பேதங்களாம். ஆதலால், பிரம விஷ்ணு ருத்திர பேதங்கள் அனந்தகோடி. அண்டத்தைப் பார்க்கிலும் பிண்டம் விசாலமுள்ளது. இதுபோலவே பிரமாண்ட ஞாயம்.

**பிண்ட ஞாயம்.** அண்டமென்பது :— கழுத்துக்குமேல் சிரம். பிண்டமென்பது—கழுத்துக்குக்கீழ் பாதம் வரையில். அண்டத்தில், சோமன், சூரியன், அக்கினி; பிரம்மா, விஷ்ணு, ருத்திரன் இருக்குமிடம்—நெற்றி. பிண்டத்தில் பிரமா, விஷ்ணு, ருத்திரன் இருக்குமிடம்—பிரஜாபதி, தொப்புள், மார்பு. இவர்கள் வாயு வடிவம். இதிற் பிரமபேத மனந்தம். விஷ்ணு ருத்திரபேத மனந்தம். அண்டத்தைப் பார்க்கிலும் பிண்டம் விசாலமுள்ளது. இதுபோலவே பிரமாண்ட ஞாயம்.

# 35. சிருட்டி ஞாயம்

ஆகாசம் அனாதி. அதுபோல் அதற்குக் காரணமான பரமாகாச சொருபராகிய கடவுள் அனாதி. அனாதியாகிய ஆகாசத்தில் காற்றும் அனாதி. அனாதியான வெளியில் காற்று எப்படி அனாதியோ அப்படிக் கடவுளிடத்தில் அருட்சத்தி அனாதியாய் இருக்கின்றது. ஆகாயத்தில் அணுக்கள், நீக்கமற நிரம்பியிருக்கின்றன. இதுபோல் கடவுள் சமூகத்தில் — ஆன்மாகாசத்தில் — அணுக்கள் சந்தான மயமாய் நிரம்பி யிருக்கின்றன. அந்த அணுக்களுக்கு ஆன்மா என்றே பெயர்,



பூதாகாயத்தி லிருக்கும் சாதாரண அசாதாரண அணுக்கள் எழு வகையாய்ப் பிரியும். அவையாவன :—1. வாலணு, 2. திரவவணு, 3. குருவணு, 4. லகுவணு, 5. அணு, 6. பரமாணு, 7. விபுவணு. மேற்படி அணுக்கள் அனந்தவண்ண பேதமாய் இருக்கும். இவற்றில், **1. காரிய வணு, 2. காரிய காரண வணு 3. காரண வணு,** என மூன்று வகையாய், பக்குவ, அபக்குவ, பக்குவாபக்குவ மென நிற்கும். இவைபோல் ஆன்மாகாயமான கடவுள் சமூகத்தில், ஆன்மாக்களும் மூவகையாய் நிற்கும். யாவையெனில்:—பக்குவ ஆன்மா, அபக்குவ ஆன்மா, பக்குவாபக்குவ ஆன்மா என மூவகைப்படும். ஆகாயத்திலிருக்கும் அணுக்கள் மூன்று விதமானதற்குக் காரணம் அங்குள்ள காற்றே யாம். அதுபோல் ஆன்மாக்கள் மூவிதமானதற்குக் காரணம் கடவுள் சமூகத்திலுள்ள அருட் சத்தியே யாம்.

அப்படி மூவகையான ஆன்மாக்களுக்கு :—அருட்சத்தியின் சமூகத்தில் தோன்றிய, இச்சை, ஞானம், கிரியை என்னும் பேதத்தால் ஆன்மாக்களுக்குத் தேகம் மூன்றுள, யாவையெனில் :—**கர்ம தேகம், பிரணவ தேகம், ஞான தேகம்** என மூன்று விதம்.

அப்படி மூன்று தேகம், உண்டானதற்குக் காரணம்—

பூத ஆகாயத்தி லுண்டான, வாயு பேதத்தினால் :— **சோம, சூரிய, அக்கினி** என மூன்று வகை நிற்பன போலுணர்க. அந்த ஆகாயத்தை விரிக்கில் அனந்த பேதமாம். வாயுவின் பேதம் அதுபோல் அனந்தம். ஒருவாறு அறுபத்து நான்கு கோடி பேதம். இவற்றில் **அமுத பாகம், விஷ பாகம், பூத பாகம் உஷ்ண பாகம்** எனப் பல பேதப்படும்.

மேற்படி அணுக்கள் அனந்தவண்ண மாதலால், அனந்த அணுக்கள் சேர்ந்து ஒரு வித்தாய், இவ்வித்து திரவ அணு சம்பந்தமாய் குரு அணுவோடு சேரும்போது, பூதகாரிய அணுவாகிய கிரண உஷ்ணத்தால் ஜீவிக்கும். ஜீவித்த ஒஷதி முதலியன இந்த ஞாயத்தால் வர்ணம் ருசி முதலியன பேதப்படுகின்றன. இவ்வண்ணமே பௌதிக பிண்டவணுக்கள் காரண சூரிய உஷ்ணமாகிய ஜீவ உஷ்ணத்தால் வடிவமாய், பரம காரண தயையால் ஜீவிக்கின்றன. சில காலத்தில் வித்துக்க ளாதியாம். சில காலத்தில் விருக்ஷமாதியாம். எல்லாவற்றிற்கும் ஆதியா யுள்ளது பூத காரிய அணுவாகிய சூரிய கிரணமே யாம்.

இவ்வண்ணமே, ஒரு காலத்தில் கடவுள் பிரேரகத்தில் அருட்சத்தி ஆன்மாகாசத்தில் விசிரிம்பிக்க, ஆன்மாக்கள் வெளிப்பட்டுப் பஞ்ச கிருத்தியத் தொழிற்படும். மேற்படி ஆன்மாக்கள் வெளிப்பட்ட அக்கணமே, மேற்படி ஆகாயம் சந்தானமாதலால், ஆன்மாக்கள் நிரம்பி நிற்கும். ஆதலால் பஞ்சகிருத்தியம் எக்காலத்தும் தடையுறாது. ஆன்மாக்கள் தாழ்ந்த கதியடைவது அனாதி யியற்கை யல்ல ; ஆதி செயற்கையே யாம். ஆணவம் அனாதி யியற்கையேயாம். இதன் ரஹஸ்யம் குருமுகமாயறிக.

VALLALAR GROUPS



## 36. எழுவகைப் பிறவி

இந்நத் தேகத்திற்குப் பிறப்பு ஏழு உண்டு. அதுபோல் எழுவகைப் பிறப்பிலும் ஒவ்வொரு பிறப்பிற்கும் எவ் வேழு பிறப்புண்டு. அந்த எவ்வேழு பிறப்பும் ஒவ்வொன்றில் அனந்தமாய் விரிந்த யோனி பேதங்களின் விரிவெல்லாம் தோன்றி மேலேறி மறு பிறவி உண்டாம். ஒவ்வொரு பிறவியும் எந்தக் கல்பத்தில் நஷ்ட மடைகின்றதோ அந்தக் கல்பகாலம் வரையில் தோற்றமில்லாமல் மண்ணில் மறைந்திருந்து, மறு கல்பத்தில் தோன்றி, இவ்விதமாகவே மற்ற யோனிகளிடத்திலும் பிறந்து, முடிவில் இத்தேகம் கிடைத்தது.

**இத்தேசத்திற்கும் ஏழு பிறவி உண்டு :—**

யாதெனில் :— கர்பத்தில் ஐந்து மாதம் வரையில் குழவியா யிருப்பது ஒன்று 1, அவயவாதி உற்பத்தி காலம் ஒன்று 2, பிண்டம் வெளிப்பட்ட காலமொன்று 3, குழந்தைப் பருவமொன்று 4, பாலப் பருவமொன்று 5, குமாரப் பருவமொன்று 6, விருத்தப் பருவமொன்று 7, ஆகப் பிறவி ஏழு. இவ்வாறே தாவர முதலியவற்றிற்கு முள. மேலும் ஸ்தூலப் பிறப்பு 7, சூட்சுமப் பிறப்பு 7, காரணப் பிறப்பு 7.

ஆதலால், மேற்குறித்த ஸ்தூலப் பிறப்பு, சூட்சுமப் பிறப்பு யாதெனில்:— 1. ஜாக்கிரம், 2. சொப்பனம், 3. சுழுத்தி, 4. ஜாக்கிரத்தில் சொப்பனம், 5. ஜாக்கிரத்தில் சுழுத்தி, 6. சொப்பனத்தில் சொப்பனம், 7. சொப்பனத்தில் சுழுத்தி—ஆகப் பிறப்பு 7. காரணப் பிறப்பு :— மனோசங்கல்பங்களெல்லாம் பிறவி. ஆதலால் மேற்குறித்த பிறவிக்குக் காரணம் நினைப்பு மறைப்பு. அது அற்றால் பிறவி இல்லை.

எப்படி அறு மெனில் :— பரோபகாரம், சத் விசாரம்—இவ் விரண்டாலும் மேற்குறித்தது நீங்கிச் சிவானுபவம் பெறலாம்.

## 37. பஞ்ச அமுத ஸ்தானங்கள்

**யோகானுக்கிரக பஞ்ச அமுத ஸ்தானங்கள்—5**

1-வது **அமுதம்** — நாக்கு நுனியில், ப்க்குவ ஞானத்தால், சிருஷ்டி வல்லபப் பிரஞ்ஞையால்.

2-வது **புவனமுதம்** — நாக்கு மத்தியில், பக்குவக் கிரியையால் ஸ்திதி பிரஞ்ஞை புணர்ச்சியால்.

3-வது **மண்டலாமுதம்** — நாக்கினடியில், பக்குவ இச்சை, சம்மார உணர்ச்சியின் தன்மையால்.

4-வது **ரகசியாமுதம்** — உள்நாக்கடியில், பக்குவ திரோபவம்.

5-வது **மௌனமுதம்** — உண்ணாக்குக்கு மேல், பக்குவ அனுக்கிரகம், அனுக்கிரகம், சுபாவத்தினது அனுபவம், துரியநிலை.



அமுதவகை ஐந்து:—

சுத்த அமுத ஸ்தானங்கள் 5. 1-வது அமுதம் நாக்கினடியில் இனிப்புள்ள ஊற்று ஜலம் போலிருக்கும். 2-வது அமுதம், உள் நாக்குக்கு மேல் இளகின இனிப்புள்ள சக்கரைப்பாகு போலிருக்கும். 3-வது அமுதம், மூக்கு முனையில் குழம்பிய சக்கரைப்பாகு போலிருக்கும். 4-வது அமுதம், நெற்றி நடுவில் முதிர்ந்த சர்க்கரைப்பாகு போலிருக்கும். 5-வது அமுதம், மகா இனிப்புள்ள மணிக்கட்டியாக விருக்கும் ; அதிக குளிர்ச்சியாகவு மிருக்கும்.

**இந்த 5-வது அமுதத்தை உண்டவர்கள் என்றும் அழியாத தேக சித்தியைப் பெற்றவர்கள்.**

**அண்ட பிண்ட அமுதம் :—**

அண்ட அமுதம் 4. அவை : 1. அக அமுதம். 2. அகப்புற அமுதம். 3. புற அமுதம். 4. புறப்புற அமுதம்—மழை. பிண்ட அமுதம் 4. அவை : 1. அக அமுதம், 2. அகப்புற அமுதம், 3. புற அமுதம், 4. புறப்புற அமுதம்—வெயர்வை. அண்ட அமுதம் மழை முதலாக 4,—பிண்ட அமுதம் வெயர்வை முதலாக 4.

## 38. பிண்டாண்ட கிரகண சித்தாந்தம்

இவ்வுலகமும் இவ் வுலகத்திலுள்ள சராசர பேதங்களில் முக்கியமாயுள்ள சாமாசிய ஜீவராசிகளும், கற்பபேதமும் தோன்றி உய்யும் பொருட்டு, அனேகவித வாயு பேதங்கள் அநாதியில் கடவுளால் உண்டு பண்ணப் பட்டிருக்கின்றன. அவற்றில் முக்கியமானவை **அமுதக்காற்றும், விஷக்காற்றும்.** அவை விசேஷ வியாபகமா யிருந்து கொண்டிருக்கின்றன.

**இவற்றில் அமுதக் காற்று :—**பிரமாண்ட பகிரண்ட கடாகத்தில்—விசேஷ வியாபகமாயும், இம்மகா அண்டத்திலும் பிண்ட ஜீவரிடத்திலும் ஏகதேச வியாபகமாயும் இருக்கின்றது.

விஷக்காற்று :—மேற்படி பிரமாண்டாதி கடாகத்தில்—ஏகதேசம் நிமிஷ காலம் அல்லது முகூர்த்தம், அசாதாரணத்தில் ஜாமம் வரையில்—வியாபகமாயும், இம்மகா அண்டாதி ஜீவராசிகளிடத்தில் விசேஷ வியாபகமாயும், இருந்து கொண்டிருக்கின்றது.

பிரம்மாண்டாதிகளில் அமுதக்காற்று விசேஷ வியாபகமா யுள்ளதால், அவ்வண்டங்களிலுள்ள சூரிய, சந்திர, உடுக்கள் முதலியவைகளும் சொல்ப காலத்தில் அழிவடைதலின்றி, இருக்கின்றன. விஷக்காற்று ஏகதேச வியாபகமாதலால் கற்பகாலத்தில் வியாப்பியமாயும், வியாபகமாயும் இருத்தலாலும் அந்தக் காலங்களில் அவை நஷ்டப்படுகின்றன.

VALLALAR GROUPS



**மேற்படி** விஷக்காற்று—கருமை வண்ணமாயும் செம்மை வண்ணமாயும் இரண்டு பாகமாய்ப் பிரியும். இவைகளை **இராகு கேதுக்கள்** என வழங்குகின்றனர். இது **ஒரு முகூர்த்தம் — ஒரு ஜாமம் இருக்கும்.** அதற்கு மேல் இவ்வண்ணமாய், இவ்வண்ட கணிதப்படி, அவ்வண்டங்களில் கணித காலத்தில் வியாபகமா யிருப்பதுதான் **சந்திராதித்த கிரகண தோஷ காலம்.**

**தோஷ காலம் என்பது :—** பிரகாசமின்றி இருள் வண்ணமாய்ச் சில காலத்தில் முற்றும் மறைந்தும், சில காலத்தில் ஏகதேசம் மறைந்தும் இருப்பதால், இவ்வண்ட புருஷனுக்குக் கரண ஸ்தானமாகிய சந்திரனும், ஜீவஸ்தானமாகிய சூரியனும், பிரகாசம் மழுங்குகின்றபடியால் தோஷம் எனப் பெயர். மேலும் தோஷம் என்பது இருள், அறியாமை, அஞ்ஞானம் விஷக்காற்று வியாபகமாயுள்ளது இவ்வண்டத்திலும் ஜீவர்களிடத்திலும், ஆதலால், ஜீவகோடிராசிகள் சொல்பத்தில் அடிக்கடி நஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

**அமுதக்காற்று** இவ்வண்டத்தில் இரவில் அருணோதயந் தொடங்கி உதய பரியந்தம் வியாபகமாய் இருக்கின்றது. அக்காலத்தில் ஜீவர்கள் நன்முயற்சியிலிருப்பது விசேஷ நலம். தேகாதி பிண்டத்தில் மேற்படி அமுதக்காற்று வியாப்பியமா யிருக்கும். ஒருகால் ஒரு க்ஷணநேரம் அந்தக் காற்று வியாபகமா யிருக்குங்கால் ஜீவர்களுக்கு இதுவரையில் தாங்களறியாததான கடவுள் விளக்கமுண்டாகும். மேற்படி காற்று வியாபகம் ஏக தேசமுமில்லாவிடில், ஜீவர்கள் விஷக்காற்றினுல் சதா வியாபகமடைதலில் இந்தச் சொல்ப ஜீவிப்பும் விர்த்திக்கு வரமாட்டாது. அமுதக் காற்று வியாப்பியமன்றி வியாபகமாயிருக்குங் காலத்தில், ஜீவர்களுக்கு அறிவு விளக்கம், மன நெகிழ்ச்சி, இந்திரிய அடக்கம், ஈசுர பக்தி முதலியனவும் விளங்கும். அக்காலத்தை **அமுதக் காற்றின் வியாபகக் காலம்** என்று அறியவேண்டும். இதன்றி, இருண்மயமாய் முன்பின் தோன்ருது அறிவின்றி யிருக்குங்காலம் **விஷக் காற்று வியாபகமாய்** இருக்குங் காலமென்றறிய வேண்டும்.

**அண்டத்தில்** சந்திராதித்த கிரகண தோஷம்போல் இப்பிண்டத்தில் கிரகண தோஷம் யாதெனில் :—

**பிண்ட** புருஷனுக்குப் புறமாகிய கரணமென்னும் சந்திரனுகிய தோற்றம் அறிவு, இரும்பில் துருசு ஏறுவதுபோல், விஷய வாசனையிலழுந்தி ஏகதேசப் பிரகாச விளக்கமுடையதுதான் **சந்திரகிரகணம்.** இஃதறியாமை, **சூரிய கிரகணம்** என்பது :— **அகப்புறமாகிய ஜீவனென்னும்** சூரியனுகிய தோற்றுவிக்கும் அறிவு, செம்பிற் களிம்பேறுவதுபோல, விஷய வாசனை மயமாய் யாதுந் தோன்ருது அறிவின்றி நிற்குங்காலம் **சூரிய கிரகணம்.** இஃது மாயா சிருட்டிக்கு இயற்கையானுலும், இரும்பையும் தாமிரத்தையும் பரிசனுதி வேதிகளால் ரவுப்பியாதி ஏமங்கள் செய்வதுபோல் நன்முயற்சியாகிய ஜீவகாருண்ய மயமாய் பரிச்சயஞ்செய்தால் மேற்படி துரிசு நீங்கும். மேலும் ஆசாரியர் அனுக்கிரகத்தாலும் நீங்கும், இது பிண்டாண்ட கிரகண சித்தாந்தம்.



## 39. சுக்கிலம்

**சுக்கிலம் உண்டாவதற்குக் காரணம் :—**

தினம் ஆகாரங் கொண்டால், அவ்வாகாரம் மார்பிடத்தில் ஓர் தட்டில் தங்கும். அந்தத் தட்டின்மேல், **கடவுள் கடவுளி** என்றிரண்டாகி யிருக்கிறது. உண்ட அன்னத்தை $2\frac{1}{2}$ நாழிகையில் — அந்த அன்னத்திலுள்ள அமுதைப் பிரித்து, ஊட்டவேண்டிய தத்துவத்திற்கு ஊட்டுகின்றது. மறுபடியும் ஐந்து நாழிகைக்குள் மேற்படி அன்னத்தினது மத்தியதரமாகிய நெகிழ்ச்சியைக் குறித்துச் சுக்கிலமாக்கி, $2\frac{1}{2}$ வராகனெடையில் கோசநுனியில் ஒன்றும்—நாபியில் ஒன்றும்—பிரமரந்திரத்தில் அரையுஞ்—சேர்த்து, மற்றவைகளைக் கொண்டு அங்கங்கு விளக்கத்தை யுண்டுபண்ணி ஈளை, குறும்பை, நகத்துரசு, தொப்புளழுக்கு, கண்பீளை முதலான அழுக்கை வெளிப்படுத்துகின்றது. மேற்படி அன்னத்தை $7\frac{1}{2}$ நாழிகைக்குள் — அதிலுள்ள திரவாம்சத்தைப் பிரித்து, உதிரமாக்கியூட்டுகின்றது, $7\frac{1}{2}$க்குமேல் மேற்படி சக்கையை மலபாகத்தில் தள்ளிவிடுகின்றது, இதுபோல் எந்த வஸ்துக்களையும் பிரிக்கின்றது. ஆதலால் ஆகாரங்கொண்ட $7\frac{1}{2}$ நாழிகைக்கு மேல் ஆகாரங் கொள்ளவேண்டும்.

## 40. சுக்கில சுரோணிதம்

**சுரோணிதப்** பையிடத்தில் **முன்றுமணி** சேர்ந்த கொத்து—1. வலது புறத்திலும், **நான்கு** மணி சேர்ந்த கொத்து 1—இடது புறத்திலும்,—இருக்கின்றன. சுரோணித **சுக்கிலம்** கலந்து கர்ப்பந்தரிக்கிற காலத்தில் மூன்று சேர்ந்த கொத்தில் சம்பந்தப்பட்டால் **ஆண்** குழந்தையும், நான்கு சேர்ந்த கொத்தில் சம்பந்தப்பட்டால் பெண் குழந்தையும் பிறக்கும். புணர்ச்சிக் காலத்தில் வலதுபுறம் சாய்வாகப் புணர்ந்தால் ஆணும் ; இடதுபுறம் சாய்வாகப் புணர்ந்தால் பெண் குழந்தையும் பிறக்கும்.

## 41. கரு உண்டாகும் விதம்

**மேற்படி கருத்தோன்றும் சுக்கில ஞாயம் யாதெனில் :—**

**மேற்படி சுக்கிலம்** இரண்டரை வராக னெடையளவா யிருக்கும். அதில் விஷபாகமாகிய சத்தி 1 ; சாதாரணமென்னும் பூதமாகிய அறிவு 1 ; அசாதாரண அமுதமாகிய விந்து $\frac{1}{2}$-ஆக $2\frac{1}{2}$. இதுபோல் பெண்பாலிடத்தும் சுரோணிதமுளது. மேல்கண்ட **சுக்கில சுரோணித** மிரண்டிலும் கடவுள் ஆவியுள்ளது. கோசத்தின் முன்விஷம், அதை அடுத்து பூதம், அதற்குமேல் அமுதம் உண்டு. இவ்வாறு பெண்பாலிடத்தும் உண்டு. முன்னுள்ள விஷபாகம் புணர்ச்சிக்காலையில் வெளிப்பட்டால் தேக நஷ்டம் ; **பூதம்** வெளிப்பட்டால் வியாதி ; அமுதம் வெளிப்பட்டால்

VALLALAR GROUPS



சந்ததி விர்த்தி. கடவுளருளால் காலச் சக்கரம்போல் ஏகதேசத்தில் கோச உபஸ்தங்களில் அமுதாக நாடியை முன்னே தள்ளி, விஷாதிகளைப் பின்னே சேர்ந்துக் கருத்தரிக்கச் செய்விப்பார். இந்த ஞாயத்தால் **இடைவிடாது புணருகிறவர்களுக்குக் கர்ப்பமில்லை** — மேலும், விந்துவளம், இடவளம், வன்னி, கிருமி, மோக விசேடம்— இவற்ருலுங் கர்ப்பமில்லை.

## 43. சப்த தாதுக்களின் விவரம்

**ஆணில் மூன்று பெண்ணில் நான்கு :**

**ஆணில் மூன்ருவன :**

**ஆகாசம்** 1, பிரகிருதி 2, ஆன்ம வுணர்ச்சி 3, இவைகள் ஒருமித்துச் சுக்கிலமாகத் தடித்துக் கோசத்தடியால் செம்பரத்தம் பூ விதழ் மூன்று மொன்ருயடுக்கியது போலிருக்கும்.

**பெண்ணிடத்தில் நான்காவன :**

**பிருதிவி** 1, அப்பு 2, தேயு 3, இயமானன் என்னும் வாயு 4, — ஆக நான்கும் ஒருமித்துப் பல்லி முட்டைபோல் நாலுபாகமாகப் பிரிந்து ஒரே வண்ணமாய் யோனிக்குள் இருக்கும், ஆக 7-ம் கூடி ஒருமித்துச் சுக்கில சுரோணித சம்பந்தப்பட்டுப் பிண்டமாம். இது சப்த தாது. மேற்படி தாதுக்களின் பெயர்— 1. தோல், 2. அஸ்தி, 3. தசை, 4. மூளை, 5. சுக்கிலம், 6. இரத்தம், 7. இரசம் — ஆக ஏழு. மேற்படி சத்துக்கள் ஆணிடத்திலுள்ள இடங்கள் 1. மூளை, 2. தொப்புள், 3. லிங்கத்தடி; பெண்ணுக்குள்ள இடங்கள் 1. மூளை, 2. தொப்புள், 3. உபஸ்தத் தடி, 4. ஸ்தனத்தின்கீழ் புணர்ச்சிக் காலத்தில் இந்தச் சத்துச் சேர்ந்து வெளிப்பட்டால் கர்ப்பமுண்டாம்.

## 43. ஆண், பெண் பருவம்

**ஆண்பிள்ளைப் பருவம் 5 :—1. சைசவம்—5 வரையில், 2. வாலிபம்—** 15 வரையில், 3. **கௌமாரம்**—30 வரையில், 4. **யௌவனம்—40 வரையில்,** 5. **வார்த்திகம்—40**க்குமேல்.

**பெண்பிள்ளைப் பருவம் 8:**—1. **பேதை—7** வரையில், 2. **பெதும்பை—** 9 வரையில், 3. **மங்கை — 12** வரையில், 4. **மடந்தை** — 16 வரையில், 5. **அரிவை** — 25 வரையில், 6. **தெரிவை** — 30 வரையில், 7. **பேரிளம் பெண்** — 40 வரையில், 8. **விருத்தை** — 40க்குமேல்.



## 44. ஜீவன் இருக்கின்ற ஸ்தானம்

இந்தத் தேகத்தில் **ஜீவன் இருக்கின்ற ஸ்தானம் 5,** அதில் முக்கிய ஸ்தானம் 2. அவை யாவை? கண்டம், சிரம். சிரத்திலுள்ளது பரமாத்மாவென்னும் சாமானிய ஜீவன். இது இறக்காது. கண்டத்திலுள்ளது ஜீவாத்மாவென்னும் விசேஷ ஜீவன்: இது இறந்துவிடும்.

மேற்படி தேகத்தில் பிரமபேதம் கீழும்மேலு மிருப்பதால், நாமடையவேண்டிய பத ஸ்தானங்கள் எவை என்ருல்:— அவை கண்டமுதல், உச்சி வரையில் அடங்கியிருக்கின்றன. மேற்படி பதங்களாவன :—**சொர்க்கபூர்வமாக சதாசிவ பத மீருகவுள்ளன.** இதற்குமேல் நாதாதி சுத்த மீருகவுள்ளன. **கைலாசபதிபதங்கள் உந்திக்குமேல்** கண்ட மீருக வுள்ளன. இது சாதாரண பாகம், **நரக இடமாவன :**— உந்தி முதல் குதபரியந்தம், **கர்மஸ்தானம் :**— குதமுதல் பாத மீருக உள்ளது. இவைகளில் பிரமாதிப் பிரகாசமுள்ளது. அனுபவிப்பது கண்டத்தில், இந்தத் தேகத்தில் எமனிருக்குமிடம் குதமாகிய நரக ஸ்தானத்திற்கு இடது பாகம். **மேற்படி தேகத்தில் ஆன்மா தனித்திருக்கும்; ஜீவன்—மனம் முதலிய அந்தக் கரணக் கூட்டத்தின் மத்தியிலிருக்கும்.**

**பிண்டத்தில் பூர்வமென்பது தலை, உத்தரமென்பது கால்.** பூர்வமெனபது பூர்வ சம்பந்தத்தால் வந்த பெயர். பூர்வஞானமென்பது நெற்றிக் கண்ணால் பார்த்தல், பிண்டத்திற்கு கிழக்கு—முகம், மேற்கு—கால், வடக்கு—வலது கை, தெற்கு — இடது கை; கொடிமரம் தொப்புளடி. மேற்படி மரத்தின் அளவு — உண்ணாக்கு, கோடி—புருவமத்திக்குள்ளிருக்கும் வபை; பலிபீடம்—தொப்புள், நந்தி — என்பது பசு, ஆணவ மலம். மூலாதாரத்தினது உள்ளங்கமே — சிவலிங்கம், வாய்—வாசல், புருவமத்தி—சபை, அறிவே—பதி; ஆதி—கால், அநாதி—தலை; கீழ்—தலை, மேல்—கால்.

**ஆதலால், பூர்வம், பூர்வபூர்வம், உத்தரம், உத்திரோத்தரம்** என நான்கு. இதில் பூர்வமென்பது, புறப்புறமாகிய நக்ஷத்திரம் போன்ற **இந்திரியக் காட்சி,** பூர்வபூர்வம், புறமாகிய சசிபோன்ற கரணக்காட்சி, உத்தரம் அகப்புறமாகிய பரிதிபோன்ற **ஜீவக்காட்சி.** உத்தரோத்தரம், அகமாகிய அக்கினி போன்ற ஆன்மக் காட்சி. ஆதலால், அகம், அகப்புறம்; புறம், புறப்புறம் என்னும் நான்குமே மேற்குறித்த பூர்வாதி உத்தரோத்தரமென வழங்குவது.

**சுவர்க்க நரகம் :**

**மனித தேகமே சுவர்க்கம் நரகம் இருக்கிற இடம்.** பிரமபதம், விட்டுணு பதம், ருத்திர பதம், மயேசுரபதம், சதாசிவபத முதலிய பதங்களின் இடம்— இந்த **மனித தேகத்தில்—கண்டம் முதல் உச்சி வரையில்,** இந்தப் பதங்களுக்குச் **சுவர்க்கம்** என்று பெயர். நரகம், நரகாதிகளுக்கிடம் — **உந்தி** முதல் குதபரியந்தம். இமயனிருக்குமிடம் குதத்திற்கு இடது பாகம்.

VALLALAR GROUPS



கிடம் — உந்தி முதல் குதபரியந்தம். இயமனிருக்குமிடம் குதத்திற்கு இடது பாகம்.

**கூடஸ்த பிரம ஐக்கியம் :**

**கேவல வேதாந்தத்தில்,** கூடஸ்த பிரம ஐக்கியத்தின் பொருள்;— **1. ஜீவசைதன்யம், 2. ஈசுர சைதன்யம். 3. பிரம்ம சைதன்யம், 4. கூடஸ்த சைதன்யம், 5. சர்வசாக்ஷி,** இவற்றிற்குப் பிரதி நாமம் — மேகாகாசம், ஜலாகாசம், கடாகாசம், தத்துவாகாசம். மகாகாசம் ஆக ஐந்து. 1 — தம்பப்பூச்சி முதல், மனுஷர்களில் மூடர் பரியந்தம் பரதந்திரர்கள், **ஜீவ சைதன்யம்** 2 — சுராசுரர் அறிவுடைய ஜீவர்கள் சுதந்திரர்கள். இவர்கள், **ஈசுரசைதன்யம்,** 3—காரியம், ரூபம், முதலியவற்ருேடு கூடிய சுத்ததேகி, **பிரம சைதன்யம்,** 4—காரண காரியம் ரூபாரூபம் முதலியவற்றுடனின்ற பிரணவதேகி **கூடஸ்த சைதன்யம்,** 5—காரணம் அரூபம் முதலியவாக நின்ற **ஞானதேகி சர்வசாக்ஷி யெனக் கொள்க.**

## 45. ஆணுக்குள் பெண், பெண்ணுக்குள் ஆண்

ஆணுக்குள் பெண்ணும் பெண்ணுக்குள் ஆணும் இருக்கும் விதம் எவ்வாறெனில் :—

**பிருதிவி** 1, அப்பு 2, தேயு 3, வாயு 4, ஆகாசம் 5, பிரகிருதி 6, ஆன்மா 7 என்னும் ஏழும் கூடி, சுக்கில சுரோணித சம்பந்த சப்த தாதுவாய், சிருஷ்டிக்குக் காரணமாயின. ஆதலால் ஆண்பாகம் சேராது பெண்ணுருவப்படாது; பெண்பாகஞ் சேராது ஆணுருவப்படாது. மேலும் ரூபபேதத்தைப் பெண், ஆண் என்பது அறியாமை. மேலும் அறிவினுயற்சி தாழ்ச்சியாலும், சிருஷ்டிக்குக் காரணமான வித்துத் தங்குவதற்கு க்ஷேத்திரமானதாலும், ஒருவாறு உருவத்தால் கொள்ளலாம். அனுபவத்தால் கொள்ளப்படாது. அறிவினுயற்சி — தாழ்ச்சி என்பது— ஜீவ அறிவாகிய — மன அறிவு பெண்ணிடத்தும்; ஆன்ம அறிவாகிய— அறிவு ஆணிடத்தும் உள்ளது. மேலும் மன அறிவு—புத்தியறிவு என்றும் சொல்லக்கூடும். ஆதலால், உருவங் குறிப்பது அவசியமல்ல. மேலும், ஆகாசத்தில் பிருதிவி தோன்றுவதுபோல், ஸ்திரீ பாகமாகிய பிருதிவியில் — ஆகாசமுந் தோன்றும், ஆனதால் அனுபவத்தில் தெரியும்.

## 46. பெண்களின் சமத்துவம்

**பெண்களுக்கு, யோகம்** முதலிய சாதனங்கள் அவசியம் கற்பிக்க வேண்டியது. மேலும் பேதமற்று அபேதமாய்ப் படிப்பு முதலியவையும் சொல்லிக்கொடுக்க வேண்டியது. தத்துவம் முதலியவற்றின் சொரூப ரூபாதிகளைத் தெரிவித்துச் சரளமாக்கிஞல், பின் தடையின்றி நம்முடைய துரிய ஆசிரம காலத்தில் ஒத்திருப்பார்கள். **"தெய்வந் தொழா அள்"** என்னும் தேவர் குறளால் இதை அறிக.



## 47. உரோமதத்துவமும், பிந்துஸ்தானமும்

**இந்த** மனித தேகத்தில் புருவ முதலாகிய இடங்களில் **உரோமம்** தோன்றி, நெற்றி முதலாகிய இடங்களில் உரோமம் தோன்ருதிருப்பதற்கு ஞாயம் யாதெனில் :—

**இத்தேகம்,** பாதாதி பிரமரந்திர பரியந்தம் வாயுவாலாகிய தேகம். மேற்படி வாயுவினுடைய பிருதிவி காரியமே தேக வடிவம். ஆதலால், வாயுவின் வர்ணம் செம்மை; கருமை நிற உரோமம் பிருதிவியின் கூறு. தேகத்தில் பிருதிவி வாயு இரண்டும் முக்கிய காரணமானதால், செம்மையும் கருமையுமாகிய உரோமம் உண்டாயிற்று; இது நிற்க. நரை உண்டாவது தத்துவக் கெடுதியால், இத்தேகத்தில் 27 இடங்களில் வாயுவில் பிருதிவி தங்கும். அவசியம் மேற்படி இடங்களில் ஆண்பாலுக்கு உரோமம் தோன்றும். மேற்படி இடங்கள் எவையெனில் : கபாலம் 1, புருவம் 2, கண் கீழ்இமை 2, கண் கீழிமை 2, மேலிமை 2, நாசிக்கு உட்புறம் 2 மீசை 1, மோவாய்க்கன்னம் 2. காதுக்குட்புறம் 1, இருதயம் 1, கைம்மூலம் 1, உந்தியின் மேல்ரேகை 1, அடிவயிறு 1, லிங்கத்தடி 1, புட்டத்தின் கீழ்ப்புறம் 1, துடை 1, முழந்தாள் 1, பாதத்தின் மேலிடம் 1, மேற்படி விரலின் மேலிடம் பலவும் 1, முதுகு 1, விலாப்புறம் 1, முழங்கைக்குக்கீழ் 1, கைவிரலின் மேற்புறம் 1 — ஆக 27. இவை அல்லாது மற்ற இடங்களில் தோன்றுவது தத்துவக் கெடுதி. தத்துவங்களின் உட்புற மலங்களே வாயுவின் பிருதிவி. ஆதலால், மேற்குறித்த இடங்களில் அக்கினியின் காரியமில்லாததினுல் உரோமம் உண்டாகின்றது. அக்கினி காரியப்பட்ட இடங்களில் உரோமம் தோன்றியும், தோன்ருமல் அருகியுமிருக்கின்றது.

**நெற்றியில்** தோன்ருதிருப்பது :—மேற்படி இடத்தில் ஆன்ம விளக்கம் விசேஷமுள்ளது. அதைப்பற்றி மேற்படி இடத்திற்கு **விந்துஸ்தானமென்றும், அறிவிடமென்றும், லலாடமென்றும், முச்சுடரிடமென்றும்,** முச்சந்திமூலமென்றும், **நெற்றிக் கண்ணென்றும், மஹாமேருவென்றும்,** புருவமத்தியென்றும் **சிற்சபா அங்கமென்றும்** பெயர். ஆதலால், **விந்துவென்பதே ஆன்மா.** விந்துவின் பீடம் அக்கினி. இந்த இரண்டினது காரியமே பிரகாசமாகிய அறிவின் விளக்கம். ஆதலால், உரோமம் அருகியிருக்கின்றது. பூர்வத்தில் விந்துவும், உத்தரத்தில் நாதமும் இருக்கின்றன. விந்து — ஆன்மா, நாதம் — பரமான்மா, நாதத்தோடு விந்து சேர்தலால், விந்து — சத்தியும், நாதம் — சிவமுமாகின்றன. **விந்துக்கு உத்திரஞாயம் — பூர்வ ஞாயமாவது —** எல்லாத் தத்துவங்களுக்கும், புறத்தும், அகத்தும், மற்றும் விளங்கி, தத்துவங்களைத் தன்வசப்படுத்தியும், தொழில்களைச் செய்வித்தும் தனித்துநின்றும், தன்ஞேடு தத்துவங்களைச் சேர்க்கின்றபடியால் **விந்து** — சத்தனுயும். **தத்துவங்கள்** — சத்தியாயுமிருக்கும். மேலும் ஆன்மாவுக்குச் சகல விளக்கமாகிய சாக்கிர ஸ்தானம் **லலாடம்.** ஆதலால், விசேடம் சிறந்தது. லலாடத்தில் மூக்கு நுனியாகிய புருவமத்தி, **இதற்கு அனுபவ சித்திகள் திரயோதசாந்தம் வரையிலுமுண்டு.**

VALLALAR GROUPS



**திரயோதசாந்தமாவது யாதெனில்:**—ஜீவசாக்கிரம், ஜீவசொப்பனம், ஜீவ சுழுத்தி ஆக 3. நிர்மல சாக்கிரம், நிர்மல சொப்பனம், நிர்மல சுழுத்தி ஆக 3. பரசாக்கிரம், பரசொப்பனம், பரசுழுத்தி ஆக 3. குரு சாக்கிரம், குரு சொப்பனம், குரு சுழுத்தி, குரு துரியம், குரு துரியாதீதம் ஆக 5. ஆகமொத்தம் 14, இதற்கு மேலுமுள. சுத்தசிவ சாக்கிரம், சுத்தசிவ சொப்பனம், சுத்தசிவ சுழுத்தி, சுத்தசிவ துரியம், துரியாதீதம் — இவை நேருங்கால் ஜீவசாக்கிராதி நீக்கப்படும். இவ்வள வனுபவமும் **பூர்வத்திலுள்ள அனுபவிகளால் குறிக்கப்பட்ட நிலைகளில் இல்லை.** ஒருவாறு குரு துரிய பரியந்தம் வேதாகமங்களாலும், **தத்துவராயர்** முதலிய மகான்க ளனுபவத்தாலும் குறிக்கப்படும். **அதற்கு மேற்பட்ட அனுபவம் சுத்தசன்மார்க்க சாத்தியம்.**

**மேலும் பெண்களுக்கு உரோமம் தோன்றாதிருப்பதற்குக் காரணம்:—**

ஆணிடத்தில் 3-ம் பெண்ணிடத்தில் 4-ம் ஆக இருப்பதால், மேற்படி பெண்களுக்குத் தலை, புருவம், இமைக்கீழ் மேல், மூக்கினுட்புறம், கைம்மூலம், உபஸ்தத்தடி.—இவைகள் தவிர மற்ற இடங்களில் உரோமம் தோன்றாது அருகி யிருக்கும். உரோமம் விசேஷம் மற்ற இடங்களில் உண்டாவது தத்துவக் கெடுதி. மேலும் உரோமம் தோன்றாதிருக்கிற இடங்களெல்லாம் விந்துவாகிய பிரகாசம் அதிகமாயிருக்கும். மேற்படி விந்துக்கள் மோவாய், மார்பு, ஸ்தானத்தின் கீழ்ப் புறம் இவைகளில் நிரம்பியிருக்கின்றன. அதனால் பெண்பாகம் உரோமம் இல்லை.

**பரமாத்மா, ஜீவாத்மா** வென்னும் இரண்டின் நித்தியா நித்தியங்களையும் பிண்ட பேதத்தில் உயர்வு தாழ்வையும் காரிய காரண சம்பந்தங்களையும் தெரி **வித்தல் யாதெனில்: -**

**சாமானியம் — விசேடம் என்று ஜீவன் இரண்டு.** இவற்றில் சிறந்தது சாமானியம். தாழ்ந்தது விசேடம்.

**ஜீவன் இரண்டென்ப தெவ்வாறெனில்:—**

**ஆன்ம காரணம்** சாமானியம், ஆன்ம காரியம் விசேஷம். சாமான்ய மென்பது—**ஆன்ம அறிவு;** விசேட மென்பது—**மன அறிவு.** இவை பூர்வோத் **தரமா யிருக்கின்றன.** பூர்வ மென்பது—லிங்க ஸ்தானம். உத்தர மென்பது—பிந்து ஸ்தானம். ஆதலால், சிருஷ்டிக்குக் காரணம் லிங்கம். ஆதலால் சாமானிய **ஜீவன் காரணப்பட விசேஷ ஜீவன் காரியப்படும்.** விசேஷ ஜீவ சம்பந்தமில்லாத **பக்ஷத்தில் சிருஷ்டி காரியப்படாது.** இது சாதாரண பாகம். அசாதாரண சம்புபக்ஷ **சிருஷ்டியில்,** சாமானியத்தைக் கொண்டே விசேடத்தை வெளிப்படுத்திக் **கொள்ளலாம்.** சாமானியம்—சந்தானம், விசேடம்—அதற்குள் அடங்கியிருக்கும். **பிரமாணம் யாதெனில், — அங்குலிகளில், நகத்திற்கு அடி,** சந்தானமும் வளர்ச்சி **விசேடமும் போல.**



**மேலும்,** நெற்றியில் உரோமம் உண்டாகாத வஸ்துக்களெல்லாம் ஆன்ம காரண அறிவு காரியப்பட்டது. மிருகாதிகளுக்கு உரோமம் உண்டானபடியால் ஆன்ம காரண அறிவு காரண காரணமாய் அருகி யிருக்கின்றது. எப்படியெனில்—சர்வேசுர னென்னும் நாமத்தின் பிரத்தி யேக ஆத்ம சைதன்னியமாகிய வஸ்து, எங்கும் பூரணமாய் இருப்பது இயற்கை யுண்மை ஏகதேசம். ஆதலால், கடவுளை, அறிவதற்கு ஆன்ம அறிவைக் கொண்டே அறியவேண்டும். ஷை அறிவு ஆன்ம வியாபக ஆலயமாகிய மனிதர் தேகத்தில், கடவுள் காரியப்படுவது உத்தமம்.

**கடவுள் மனித தேகத்தில் காரியப்படுதல் :—**

**இதன்றி,** கடவுள் ஆன்ம வியாபகமாகிய மனிததேகத்தில் காரியப் படுவது உத்தமமாக இருக்க, சமயமத ஏற்பாட்டில் **மகான்கள்** குழூஉக்குறி அடையாளங்களாகப் பெயரிட்ட, **விக்கிரக** பேதமாகிய சிலா, லோக, தாரு, தந்த, இஷ்டி முதலியவைகளில் கடவுள் காரியப்படுவது **சரியை, கிரியை யாதி பேதம் எட்டில்,** சரியையில் சரியை, கிரியையில் சரியை; இவ்விரண்டை யும் செய்கின்ற மந்தர்களினது ஞாயம். மேலும் அதில் தோன்றி அனுக் கிரகிப்பதும் ஜாலம். அருளுருவமான அறிவே, உருவங்கொண்ட சிவத்தை, அறிவாலே அறிவது உண்மை. மேலும் அனலுக்குச் சரியான கற்பூரம், பஞ்சு, கரி, காய்ந்த கட்டை முதலிய வஸ்துக்களில் அக்கினி சீக்கிரம் காரியப்படும். கதலி முதலிய வஸ்துக்களில் காரியப்படுவது தாமசம். அதுபோல் பக்குவ ஆன்மாக்களிடத்தில் கடவுளருள் வெளிப் பட்டால் **சுத்தமாதி** மூன்று தேகமும் அந்தருணமே வரும். பக்குவ மில்லா தவர்களுக்கு அருள் செய்தல், வாழையினிடத்தில் அக்கினி காரியப்படுவது போலாம். ஆதலால் கடவுளருள் வெளிப்படுவதற்கு அபக்குவிகள் தங்கள் செயற்கைக் குணங்களாகிய ராகத் துவேஷாதிகளை நீக்கல் வேண்டும். **சினம், வெகுளி** முதலியவற்றையும் நீக்க வேண்டும்.

### சினம் — வெகுளி

**சினம்** என்பது யாது? உள்வேக்காடு, புட ஞாயம் போல். இது தேகத்தைச் சீக்கிரம் நஷ்டம் பண்ணும். **வெகுளி** யென்பது:—மீசை துடித்தல், கண்சிவத்தல், கை முதலிய உருப்புக்கள் துடித்தல், வாய் குழறி மேல்விழுந்து கூவுதல்: இஃது ஆயுளை நஷ்டம் பண்ணும். ஆகையால், எவ் வகையிலும் கோபத்தின் பூர்வோத்தரமாகிய **சினம், வெகுளி** என்னும் கூற்றை ஒழித்தல் அவசியம்.

**இதுபோல்** மற்றக் கெடுதியாகிய **காமக் குரோதாதி** சம்பந்தங்களையும் நீக்கல் வேண்டும். காரணமென்பது:-கரண சம்பந்தமுடையது. கரணமென் பது:-ஒற்றுமை வேற்றுமைத் தொழிற் றன்மை உடையது-மட்குடத்தைப் போல். மேலும், இலக்ஷணம் = அடையாளம்; இலக்ஷியம் = அடையாளத்தை யுடையது. அங்கம் = இலக்ஷணம். ஆதலால் இலக்ஷணம்-இலக்ஷியம்-அங்கம்

VALLALAR GROUPS



காரணம் — கரணம் முதலிய சம்பந்தங்களு மொன்று மில்லாது, கெடுதியாகிய தத்துவங்களை அடக்கல் வேண்டும்.

அருட்பெருஞ்ஜோதி

## 48. உடம்பின் அருமை

**இந்த உடம்பை அலக்ஷியம் பண்ணாமல் பொன்னைப்போல் பார்க்க வேண்டும்.**

**தேகத்தைத் திறந்து வைத்திருத்தல் ஆகாது :**

**ஆண் பிள்ளையின்** தேகத்தில் மூன்று இடங்களில் சத்துண்டு. அவை 1. மண்டையின் மூளை, 2. கொப்பூழ், 3. இலிங்கத்தின் கீழ்ப்புறம். **பெண் பிள்ளைக்குத்** தேகத்தில் சத்து நான்கு இடங்களில் உண்டு. அவை 1. மண்டையின் மூளை, 2. ஸ்தனங்களின் கீழ், 3. கொப்பூழ், 4. குய்யம். தேகத்தைத் திறந்து வைத்திருத்தல் ஆகாது ; **சத்து காய்ந்துபோம்.**

## 49. காயமே கோயில்

**கிழக்கு** — முகம், மேற்கு — கால், வடக்கு — வலதுகை, தெற்கு — இடதுகை, கொடிமரம் — தொப்புள், கொடி மரத்தின் அளவு — உள்நாக்கு, பலி பீடம் — வயிற்றின் மேடு, நந்தி — ஆணவம் முதலிய மலங்கள் உள்ள பசு, சிவ லிங்கமே — மூலாதாரத்தின் உள்ளங்கம்.

**பூர்வ ஜென்மம் உத்தர ஜென்மம் :—**

**பூர்வ ஜென்மம்** என்பது — **கர்ப்பகோள வாசம். உத்தர ஜென்மம்** என்பது — **ஜனன காலம்.**

**கடவுள் மனித தேகத்தில் காரியப்படுதல் :—**

**கடவுள்** ஆன்ம வியாபகமாகிய மனித தேகத்தில் காரியப்படுவது உத்தமமாக இருக்க, சிலாவிக்கிரக பூத தாரு முதலியவைகளில் கடவுளை வெளிப்படுத்திக் கொள்வது **மந்த ஞாயம்.** அதில் கடவுள் தோன்றி அனுக்கிரகிப்பதாகச் சொல்லுவது **ஜாலம்.** காய்ந்த கட்டையினிடத்தில் அக்கினி அதிசீக்கிரம் பற்றுதல் போல், பக்குவர்களாகிய ஜீவர்களிடத்தில் கடவுள் அருள் வெளிப்பட்டால், சுத்தமாதி மூன்று தேக சித்தியும் அத்தருணமே வரும். பக்குவ மில்லாதவர்க்கு அருள் செய்தாலும், வாழையினிடத்தில் அக்கினி செல்வது போலவாம். ஆதலால், கடவுள் அருள் வெளிப்படுவதற்கு முன் அபக்குவர்கள் தங்கள் செயற்கையாகிய ராகத் துவேஷாதி அசுத்தங்களைப் போக்கிக் கொள்வது உத்தமம்.



## 50. சித்திவகை மூன்று

**சித்திவகை :—கருமசித்தி, யோகசித்தி, ஞானசித்தி என மூன்று வகை.**

### 1. கர்ம சித்தியாவது :—

**அணிமா**—துரும்பை மேருவாக்குகிறது : **மகிமா**—மேருவைத் துரும்பாக்குகிறது ; **கரிமா**—மேருவை ஒன்றுமில்லாமல் செய்கிறது ; **லகிமா**—ஒன்றுமில்லாத இடத்தில் அனேகங்களாகச் செய்கிறது ; **ஈசத்துவம்**—குளிகை வல்லபத்தா லெங்கும் செல்லுகிறது ; **பிராகாமியம்**—பரகாயப் பிரவேசம் ; **வசித்துவம்**—எழுவகைத் தோற்றமாகிய, 1. தேவ, 2. மானுஷ்ய, 3. நரக, 4. மிருக, 5. பக்ஷி, 6. ஊர்வன, 7. விருக்ஷம் முதலியவற்றைத் தன் வசப்படுத்துகிறது ;

**தேகத்தைக் கல்பசித்தி செய்து கொள்ளுதல் ;** அபரமார்க்கி ; சதாசிவாநந்த அனுபவம் ; சதாசிவ கால வரை ; **பிரேதத்தை உயிர்ப்பித்தல் ;** சித்தி காலம் : மூன்றேமுக்கால் நாழிகை முதல் மூன்றே முக்கால் வருஷத்திற்குள்.

### 2. யோக சித்தி விவரம்:—

**64. சித்திகளையும் தன் சுதந்திரத்தில் நடத்துகிறது.**

**சங்கல்ப குளிகை ;** பிராண கல்பதேகி; பிரம காலம்; பராபர மார்க்கி ; **சித்தி காலம், 12 வருஷ முதல் 108 வருஷத்திற்குள்;** புதைத்த தேகத்தை **நாசமடையாமுன் உயிர்ப்பித்தல்.**

### 3. ஞானசித்திகளின் விவரம்

**அறுபத்து நாலாயிரம் சித்திகளையும் தன் சுதந்தரத்தில் நடத்து** கிறது; 688 கோடி பேதமாகிய மகாசித்திகளையும் தன்னிஷ்டம்போல் நடத்துகிறது; **காலம் கடந்தது;** அடிநிலை, முடிநிலை, சுத்தகர்ம, சுத்த யோக, சுத்த ஞான **சித்தி வல்லபங்களைத் தன் சுதந்திரத்தால் நடத்துகிறது.**

### இந்து வேதாகமம் :

இந்து வேதாகமங்களில் மாத்திரந்தான் **ஏமசித்தி, ஞானசித்தி** முதலிய சித்திகளைச் சொல்லியிருக்கின்றது; மற்ற எந்தச் சமயங்களிலும் மேற்படி சித்திகளையும் **சாகாத கல்வியையும்** சொல்லவில்லை. ஒருவேளை அப்படி யிருக்கிறதாகக் காணப்படுமாகில், அது இந்து வேதாகமங்களில் சொல்லியிருப்பதின் ஏகதேசங்க ளென்பது உண்மை.

VALLALAR GROUPS



## 51. சகலர், பிரளயாகலர், விஞ்ஞானகலர்

1. **சகலர் :**—1. இயற்கையாகிய ஆணவம், 2. இயற்கையில் செயற்கையாகிய மாயை, 3. செயற்கையாகிய காமியம் அல்லது கர்மம்—**இம் மூன்றுமுள்ளவர்.**

2. **பிரளயாகலர் :**—1. இயற்கையாகிய ஆணவம், 2. இயற்கையில் செயற்கையாகிய மாயை—**இவ்விரண்டு முள்ளவர்.**

3. **விஞ்ஞானகலர்:—1. இயற்கையாகிய ஆணவ மாத்திரம் உள்ளவர்.**

**சகலர்—ஜீவர்கள். பிரளயாகலர்**—கல்ப தேகிகள். **விஞ்ஞான கலர்**—கலாதீதர்கள். சுத்தம் 9, அசுத்தம் 9, ஆக 18.

**ஜீவன் முக்தன்—ஞானசித்தன் :**

**ஜீவன் முக்தன்—மனோசாக்ஷி. ஞானசித்தன்—ரோமத்துக்கு ரோமம் சாக்ஷி.** எங்கும் சுற்றுதல் இவர் தொழில்—யாவுமாய் நிற்றலே.

## 52, தேக வகை மூன்று

**சுத்தமாதி** மூன்று தேக விவரம்:—**சுவர்ண தேகம், பிரணவ தேகம், ஞான தேகம்.**

1. **சுவர்ண தேக** விவரம்:—காரியரூபம், பரதேகம், பரவுணர்ச்சி, பர அறிவு, பரத்துவம், பொன்வண்ணம், 12-வயது பருவம்—நரை, திரை, பிணி, மூப்பு, மலம், ஜலம், வியர்வை, ஆகாரம், நித்திரை, தாகம், சாயை **முதலியன இல்லாமை,**—ரோம வளர்ச்சி தாழ்ச்சி இல்லாமை,—அபரஞ்சிமாற்று; கர்மசித்தி, கல்பதேகி, அபர மார்க்கி.

2. **பிரணவ** தேகம் :—காரிய காரண ரூபம், பரம்பர தேகம், பரம்பர உணர்ச்சி, பரம்பர அறிவு, பரம்பர தத்துவம். 16 முதல் 108 வரையில் மாற்று,—5 முதல் 8 வயது,—உரைபடாதது. தேகம் தோற்றும்—பிடிபடாது, சர்வ சித்தி, பிராண கல்பதேகி, பர அபர மார்க்கம்.

3. **ஞான தேகம்:**—காரண ரூபம், **எங்கும் பூரண வியாபகம்,** பராபர அறிவு, பராபர தத்துவம், அளவு கடந்த மாற்று. சப்தமய தரிசனம், சர்வ மகா சக்தி, சர்வ சுதந்திரம், உருவம் தோற்றியும் தோற்றாமலு மிருக்கும், **காலாதீதன்.**

**ஞானசிருஷ்டி :—**

**இறந்தவர்கள்** உயிர்பெற்று வரும்போது அது ஞான சிருஷ்டி ஆதலால், ஞானத்தோடு வருவார்களா ? முன்னிருந்த அறிவோடுதான் வருவார்களா ?



என்றால் :—இந்த மானிடதேகம் ஆண்டவரது சிருஷ்டி அன்று. **மாயா சிருஷ்டி.** முன்னிருந்த ஞான அஞ்ஞானத்தோடுதான் வருவார்கள். ஆனால் கிஞ்சித்து ஞான விசேஷம் உண்டாயிருக்கும். ஆதலால், மீள தரிசன விசேஷத்தால் மந்தம் நீங்கி ஞானம் விளங்கும்.

## 53. சுவர்ண தேகிகளின் ஆயுள்

**ஒரு மாற்றுள்ள** சுவர்ண தேகிகள் வயது—நாலு லக்ஷத்து முப்பத்தீராயிரம். (4,32.000)

**இரண்டு மாற்றுள்ள** சுவர்ண தேகிகள் வயது—எட்டு லக்ஷத்து அறுபத்து நாலாயிரம். (8,64,000)

**மூன்று மாற்றுள்ள** சுவர்ண தேகிகள் வயது—பன்னிரண்டு லக்ஷத்துத் தொண்ணூற்று ஆறாயிரம். (12.96,000)

**நான்கு மாற்றுள்ள** சுவர்ண தேகிகள் வயது—பதினேழு லக்ஷத்து இருபத் தெட்டாயிரம். (17,28,000)

**ஐந்து மாற்றுள்ள** சுவர்ண தேகிகள் வயது — நாற்பத்து மூன்று லக்ஷத்து இருபதாயிரம். (43,20,000)

**ஐந்து பூதங்களின்** பேதம் பன்னிரண்டு லக்ஷத்து இரண்டாயிரத்து எண்ணூற்று ஐம்பது கோடியாய் இருக்கின்றது. (12,02,850,00,00,000)

## 54. அணுபக்ஷ சம்புபக்ஷ அனுபவ விபரம்

**ஐந்து மாற்றுள்ள** சுவர்ணதேகி **பிரமன்** ; வயது — நாலு லக்ஷத்து முப்பத்தீராயிரம். (4,32,000)

**ஆறு மாற்றுள்ள** சுவர்ணதேகி **விஷ்ணு** ; வயது — எட்டு லக்ஷத்து அறுபத்து நாலாயிரம். (8,64,000)

**ஏழு மாற்றுள்ள** சுவர்ணதேகி **ருத்திரன்** ; வயது — பன்னிரண்டு லக்ஷத்துத் தொண்ணூற்று ஆறாயிரம். (12,96,000)

**எட்டு மாற்றுள்ள** சுவர்ணதேகி **மயேச்சுரன்** ; வயது — பதினேழு லக்ஷத்து இருபத்தெட்டாயிரம். (17,28,000)

**ஒன்பது மாற்றுள்ள** சுவர்ணதேகி **சதாசிவன்** ; வயது — நாற்பத்து மூன்று லக்ஷத்து இருபதினாயிரம். (43,20,000)

**இவர் அணுபக்ஷத்தார்.**

**அணுபக்ஷத்தில்** நாற்பத்து மூவாயிரத்து இருநூறு லக்ஷங்கோடி விந்து சக்தியின் அளவு ; அளவிறந்த கோடி நாதத்தின் அளவு.

VALLALAR GROUPS



அணுபக்ஷத்தில் பரவிந்து சுத்தமாயையைக் கடந்தது; பரநாதம் சுத்த மகா மாயையைக் கடந்தது.

சம்பு பக்ஷத்தில் பிரமன், விஷ்ணு, ருத்திரன், மயேச்சுரன், சதாசிவன், விந்து, நாதம், பரவிந்து, பரநாதம் என்பவற்றில் :—பிரமன், விஷ்ணு,—சுத்த மகா மாயையைக் கடந்த ஞான அனுபவ பேதம்; ருத்திரன் சித் அனுபவம், மயேச்சுரன், — **ஆனந்த** அனுபவம்; சதாசிவன் **சத்** அனுபவம்; விந்து — **சிதானந்த** அனுபவம்; நாதம்—**சதானந்த** அனுபவம்; பரவிந்து—**சச்சிதானந்த** அனுபவம்; பரநாதம்—**சிவானுபவம்.** இவை ஒருவாறு.

## 55. சிருஷ்டிகளும் - பக்ஷ பேதங்களும்

**சிருஷ்டிகள்** பக்ஷ பேதத்தால் அனந்த வகை. பக்ஷமாவன: அணுபக்ஷம், பரமாணுபக்ஷம், சம்புபக்ஷம், விபுபக்ஷம், பிரகிருதி பக்ஷம்—ஆக 5. இவற்றில் சம்பு, விபு—இவ் விரண்டிற்கும் அபக்குவ மில்லை. மற்ற மூன்றிற்கும் பக்குவா பக்குவமுள.

**மேற்படி பக்ஷ சிருஷ்டி விசித்திரங்க ளாவன :—**

**அணுபக்ஷ** அபக்குவ சிருஷ்டி, ஒஷதிகளாலும், பௌதிகங்களாலும், ஆகார மூலமாய், ஸ்திரி, புருஷ சம்பந்தத்தோடு உண்டாக்குவது. மேற்படி பக்குவ சிருஷ்டியாவது:—புருஷன் ஸ்திரீயைப் பார்ப்பதுபோல் தன் அஸ்தத்தால் ஸ்திரீயைத் தடவி ஊன்றி நோக்கிப் புருஷனோடு தேக சம்பந்தஞ் செய்வித்து உண்டாக்குவது. பரமாணுபக்ஷ அபக்குவ சிருஷ்டி :—தேகத்தைக் கரத்தால் பரிசித்து ஊன்றிப் பார்த்தவுடன் கரு தரித்தல். மேற்படி பக்ஷத்தில் பக்குவம்—கண்ணால் பார்த்தவுடனே புணர்ச்சி யன்றிக் கரு தரித்தல். சம்பு பக்ஷம்—வாக்கினால் சொன்னவுடன் கரு தரித்தல். பிரகிருதி பக்ஷத்தார்—சங்கல்பித்த மூன்றேமுக்கால் நாழிகைக்குள் பிண்டம் கீழ்த் தோன்றுதல். விபு பக்ஷ சிருஷ்டி—பார்த்தவுடன் திரண முதலானவற்றையும் நரனாகச் செய்வித்து அனேக விசித்திரங்கள் உண்டுபண்ணுவது. மேற்படி சிருஷ்டிகள் பல; வேதாகமங்களிலேயும் பலபட விரிந்தன.

**இந்து** வேதத்தின் முக்கியாமிசத்தைக் கவனிக்கவும். **கிருஸ்தவர்கள்** ஏழு நாளில் இந்த உலகத்தைப் படைத்ததாகச் சொல்லுவதின் உண்மை — அது வல்ல; யாதெனில்:—சில அனுபவ விஷயங்களை அது விரிக்கின்றது; கைநொடிப் பொழுதில் 60-ல் 7 பாகம் ஆகிய 7 கலையில் முடிந்தது. மேற்படி கலைக ளாவன:—பெண் பாகத்தில் 4, ஆண் பாகத்தில் 3—ஆக 7. ஒவ்வொரு கலையில் ஒவ்வொரு தாது அணுவாய்ச் சேர்ந்து, 7-வது கலையில் கரு சம்பூரணமாய்ச் சப்த தாதுவுங் கூடிய பிண்டமாகும்.

அருட்பெருஞ்ஜோதி

---

*இதற்குப் பிரமானம் :—

1. "அடர்மலத்தடையால் தடையுறும்."
2. "தடையுறுப் பிரமன் விண்டு."

— திருவருட்பா—6-ந் திருமுறை—பதிகம் 46. திருவடி நிலை, பாட்டு 3, 2.



## 56. தேகம் நீடிப்பதற்குத் தீபப் பிரமாணம்

**தேகம் நீடிப்பதற்குத் தீபப் பிரமாணம்:—1. அகல்—தேகம்; 2. எண்ணெய்—இரத்தம். 3, திரி—சுக்கிலம்; 4. பிரகாசம்—ஆன்மா ஆதலால்,**

**மேல் குறித்த தீபத்தினது** திரியைத் தூண்டிவிட்டாலும், காற்றுள்ள இடத்தில் வைத்தாலும், காற்றில்லா இடத்தில் வைத்தாலும், பெருந்தீபச் சமீபத்தில் சேர்த்தாலும், விட்டில், பிரமரம், மூஷிகம், மார்ச்சாலம் முதலிய அஜாக்கிரதையாலும், தீபம் நஷ்டமாகும்.

**புத்திமானிடத்தில் தீபத்தினது உபகரணங்களைக் கொடுத்து, ஒரு நாளைக்குத் தீபம் பார்க்கச் சொன்னால், புத்திவிசாலத்தால, மேல்குறித்த அஜாக்கிரதையின்றி, தகளிக்குச் சூடேறாமலும், எண்ணெயில் அழுக்கு ஏறாமலும், திரிக்குத் தூசு, இறுகல், தளர்ச்சி, பருமன் இவைகளில்லாமலும் சிறு திரி போட்டு, அடிக்கடி தூண்டாமலும், தீபத்தை மற்றொரு தினமு மிருக்கச் செய்விப்பான். மேல்குறித்த குற்றங்களோடு தீப மேற்றினால், பதினைந்து விநாடி அல்லது கணம்— இதில் சிட்டம் கட்டுவது இயற்கை. தூசு போக்கி வைத்தால் பதினைந்து நிமிஷத்திற் கொருவிசை சிட்டங்கட்டும். விசேஷ அறிவுடையவன் லோகம் முதலியவற்றில் தீபம் வையாது, வைர படிகங்களில் அமைத்த தீபத் தகளியில், மேல்குறித்த தீப உபகரணங்களைத் திராவகமாக்கி, சுத்தாக்கினியால்** பிரகாசமுண்டாக்குவான். அப்போது சிட்டமும், பிரகாச நஷ்டமும் நேரிடாது. **ஆதலால், நம்முடைய தேகத்தில் சுக்கிலமாகிய திரியை விசேஷம் தூண்டி, அடிக்கடி பெண்ணிடத்தாகிலும், வேறு தந்திரத்தாலாயினும், செலவு செய்து விட்டால், சுக்கிலமாகிய திரி போய் ஆயுளாகிய** பிரகாசம் நஷ்டமாய்விடும். **ஆனால் சிட்டத்தை மாத்திரம் நீக்க** வேண்டுமாதலால்—தொள்ளாயிரத்து அறுபது (960) நாழிகைக் கொருதரம் தேக சம்பந்தஞ்செய்து—ஆபாசப்பட்ட சிட்டமாகிய சுக்கிலத்தை—வெளிப்படுத்தி விட வேண்டும்: இது மந்தனுக்கு. அதிதீவிர பக்குவியாய், மேல் குறித்த வண்ணம் **கடவுளிடத்தில் இலக்ஷியமும், ஜீவர்களிடத்தில் தயவு** முடையவனுக்கு சிட்டம் போன்ற சுக்கிலாபாசம் நேரிடாது; **தேகம் நீடிக்கும்.**

**ஜாக்கிரதை:—**

**ஜீவன்** என்கிற தீபத்துக்குச் **சுக்கிலம்**—திரி; **இரத்தம்**—எண்ணெய். ஆகையால் சுக்கிலமாகிய திரியை விசேஷம் தூண்டிச் செலவு செய்துவிட்டால் ஆயுள் நஷ்டமாய்விடும். ஆனால் சிட்டத்தை மாத்திரம் எடுத்துவிட வேண்டியது. அதாவது 16 தினத்திற்கு ஒருதரம் தேக சம்பந்தஞ் செய்து ஆபாசப்பட்ட சுக்கிலத்தை வெளிப்படுத்திவிட வேண்டும். ஆசானுடைய அல்லது, ஆண்டவருடைய திருவடியில் சதா ஞாபக முடையவனுக்குக் கோசத் தடிப்புண்டாகாது. ஆகையால், தேகசம்பந்தம் ஏகதேசத்திற் செய்யலா மென்றது **மந்த தரத்தை** யுடையவனுக்கே யன்றி, அதிதீவிர பக்குவிக்கல்ல.

VALLALAR GROUPS



## 57. தேக நஷ்டத்தின் முக்கிய காரணங்கள்

இந்த உலகத்தில் மனிதர்களுக்குத் தேகம் சீக்கிரத்தில் நஷ்டம் அடைவதற்குக் காரணம் **இரண்டு**. அவையாவன:—**ஆகாரம், மைதுனம்**. ஆகாரத்தால் **ஒன்பது பங்கு** நஷ்டமும், மைதுனத்தால் **ஒருபங்கு** நஷ்டமும் உண்டாகிறது. எப்படியெனில்:—பிண்ட உற்பத்தியின் காலம் தொடங்கி இறந்துபோகிற பரியந்தம் ஆகாரம் உண்டு. இது இயற்கை. சிசு, வாலிபம், விருத்தாப்பியம்—இந்தப் பருவங்களில் மைதுனம் கிடையாது. கௌமாரம், யௌவனம்—இந்த இரண்டு பருவங்களில் மாத்திரம் மைதுனம் உண்டு. இந்தப் பருவங்களிலும், நோயாலும், துக்கத்தாலும், தரித்திரத்தாலும், பசியாலும், பயத்தாலும், வேறு அனந்தவகையால் உண்டாகும் துன்பங்களாலும், மைதுனம் தடைபடும். இந்தக் காலத்திலும் ஆகாரம் உண்டு. பொருந்தல் ஏகதேசம், நஷ்டமும் அப்படியேயிருக்கிறது. ஆகார விஷயத்தில், அதிக்கிரமம், அக்கிரமம், அஜாக்கிரதை, அசாதாரணம் இப்படிப்பட்ட உணவுகளை நீக்கி, **சுத்த சத்துவ ஆகாரங்களைப்** புசித்து, ஆயுள் விர்த்தி செய்துகொள்வது **சுத்த சன்மார்க்க** ஏற்பாடு.

**நம்மை நஷ்டஞ் செய்வன நான்கு. அவையாவன:—**

**ஆகாரம் 1, மைதுனம் 2, நித்திரை 3, பயம் 4,**—ஆகிய இந்நான்கிலும் அதிக ஜாக்கிரதையா யிருக்கவேண்டும். இந்த நான்கிலும் முக்கியமானவை:—**ஆகாரம், மைதுனம்**. ஆதலால், இவ்விரண்டிலும் அதனிலும் அதிக ஜாக்கிரதையோடு இருக்கவேண்டும். இந்த இரண்டிலும் **முக்கியமானது—மைதுனம்**. ஆதலால், இந்த விஷயத்தில் எல்லாவற்றைப் பார்க்கிலும்—அதிக ஜாக்கிரதையா யிருக்கவேண்டும். அவ்வாறு இராவிடில், **தேகம்** அதிசீக்கிரத்தில் போய்விடும்; பின்பு முத்தி அடைவது கூடாது. முத்தியடைவதற்கு **இம்மானிட தேகமே** தக்கதாயும், வேறு தேகத்தா லதை யடைவது அரிதாயும் இருப்பது—ஆதலால், எவ்விதத்தா லாயினும் தேகம் நீடித்திருக்கும்படி பாதுகாத்தல் வேண்டும்.

**துர் மரணங்கள் :**

**ஜீவர்களுக்கு**, வாந்தி பேதி, மாரடைப்பு, முதலியவற்றால் நேரிடும் துர் மரணங்கள், ஆகாரக் குற்றவாலும், மிகுதியாலும், அக்கிரம அதிக்கிரமத்தாலும், பொருந்தலாலும்—இவை போன்ற பலவகைக் கெடுதியாலும் உண்டாகின்றன.

## 58. இல் வாழ்வானுக்கு ஞாயம்

**மைதுனம் ஊற்றுக்கேணி ஞாயத்தை ஒத்திருக்கின்றது**. அதாவது, ஊற்றுக்கேணியை இடைவிடாமல் 10 தினம் இறைத்தால், அதன் வருவாய் குறைந்து, அதில் ஜலமில்லாமல் போய்ப் பிரயோஜனப்படாது. அன்றியும், இறைக்காத ஊற்றுக்கேணியிலுள்ள நீரிலழுக்கேறி, அதின் வருவாய் அடைபட்டு,



அதின் சுரப்பு நின்று விடும். பின்பு அந்தக் கேணியிலுள்ள ஜலம், சூரிய உஷ்ணத்தினால் கிரகிக்கப்பட்டு ஒன்றுமில்லாமல் போய்விடும்.

**இதுபோல் இடைவிடாது** மைதுனஞ் செய்தால், இந்திரியத்தின் வருவாய் குறைந்து, **அருமையாகக் கிடைத்திருக்கின்ற தேகம்**, அதிசீக்கிரத்தில் போய் **விடும்**. மைதுனம் எந்தக் காலத்தும் **இல்லா** திருத்தலினாலும் மேல்குறித்த ஊற்றுக்கேணி ஞாயத்தால் கேடுண்டு. அதாவது மைதுனம் எந்தக் காலத்திலுமில்லாதிருத்தலினால், இந்திரியத்தின் தன்மை கெட்டு, அதனால் அவ்விந்திரியத்தின் வருவா யடைப்பட்டு, மிகுந்திருந்த அவ்விந்திரியமும் உஷ்ணத்தினால் வற்றிவிடும், பின்பு தேகம் உடனே போய்விடும்.

## 59. ஞானம்

ஞான மென்பது — மூன்று வகைப்படும். அவை :—**உபாய ஞானம், உண்மை ஞானம், அனுபவ ஞானம்.**

**இவற்றின் தாத்பரியம் :—**

நக்ஷத்திரப் பிரகாசம்போல் தோன்றிய ஜீவ அறிவே — **உபாய ஞானம்.**

**சந்திரப்** பிரகாசம்போல் தோன்றி அறியும் ஆன்ம அறிவே—**உண்மை ஞானம் ;**

**எல்லா** வஸ்துக்களையும் தெரிந்து அனுபவவிக்கச் செய்கின்ற சூரிய பிரகாசம் போன்ற கடவு ளறிவே—**அனுபவ ஞானம்.**

ஒரு வஸ்துவை அதன் நாம ரூபமின்றிக் காண்பது இந்திரியக் காட்சி, இந்திரிய அறிவு; கூடமாக அறிதல் கரணக் காட்சி, கரண அறிவு; இன்னதென்று தெரிதல் ஜீவ காட்சி, ஜீவ அறிவு; எதையுந் தானாக அறிதல் ஆன்மக் காட்சி, ஆன்ம அறிவு; இதற்குத் தோன்றுமறிவு 1, தோற்றுமறிவு 1, தோற்றுவிக்குமறிவு 1, பதியறிவு 1. ஆக—4.

**ஆதலால்**, ஒரு வஸ்துவினிடத்தில் பற்றுதல் **அவா**; அதை **அனுபவிக்க** வேண்டுமென எழுந்தது **ஆசை**; அதன் மயமாதல் **காமம்**; அதைத் தன் வசப்படுத்த எழுவது **மோகம்**; எந்த வஸ்து விடத்திலும் மோக மாதிகளின்றி அவா மயமாய் நிற்றல் வேண்டும்.

**தன்னையும்** தனக் காதாரமான தலைவனையும் கூடஸ்தனையும் தெரிந்து, கொள்ளுதல் வேண்டும்.

**ஞானம் :—** பரஞானம் — அபரஞானமென இரண்டு.

1. **பரஞான மென்பது :—** முன், — சாத்திர ஞானம் அல்லது விசார ஞானம், வாசா கைங்கர்யம், சாதனம், வாச்சியார்த்தம்.

2. அபர ஞானமென்பது :— **பின்**, — அனுபவ ஞானம், சத்தியம், லக்ஷியார்த்தம். மேலும் **பரம் முன்**, **அபரம் பின்**; சாத்திரம் முன், அனுபவம்

VALLALAR GROUPS



பின்; சாதனம் முன், சாத்தியம் பின். ஆதி முதல் அந்தம் கடை, அநாதி — ஆதி அந்த மில்லாதது.

## 60. முக்குணம்

**முக்குண வகை :—**

**சத்துவம், ராஜசம், தாமசம்** என்று குணங்கள் 3. ஒவ்வொன்றிலும் 3 சேர்ந்து 9 ஆயின, இந்த 9-ம் சுத்தம் அசுத்தம் என்னும் பேதத்தால் 18 ஆயின.

**தானாக நிற்றல் சத்துவகுணம் 1;** ராகத் துவேஷ சம்பந்த முடையது **ராஜசம் 2;** சோம்பலாதி ஜீவ இம்சைக் கிடனுவது **தாமசம் 3.**

**ஆன்மாவின் செயற்கை — ரஜோ தமங்கள்.**

**ஆன்மாவின் இயற்கை — சத்துவம்.**

ஜனன—மரண ஏது செயற்கையா லுண்டாம்; இயற்கையால் சிவானுபவம் பெறலாம். இதை விரிக்கில், ஒவ்வொன்றும் மும் மூன்ருகும், அனந்தமுமாம்.

**அவஸ்தை முன்று :—**

அவஸ்தை மூன்று :— **ஜாக்கிரம், சொப்பனம், சுழுத்தி,** இவற்றில் உள்ளம் பித்த உஷ்ணத்தோடு கூடி லலாட ஸ்தானத்தில் நிற்பது **ஜாக்கிரம்; சொப்பன** மாவது : உள்ளம் வாத நாடியோடு கூடிக் கண்ட ஸ்தானத்தில் இருப்பது; **சுழுத்தி** யாவது : உள்ளம் சிலேத்தும நாடியோடு கூடி மார்பு ஸ்தானத்தில் நிற்பது.

**மும்மலங்கள் :—**

**1. ஆணவம், 2. மாயை, 3. கன்மம்** என மலம் மூன்று. இதில் பக்குவம் மூன்று, அபக்குவம் மூன்று — ஆக ஆறு. இவை ஒவ்வொன்றும் மும் மூன்ருக விரிதலின் 18 ஆம். இந்த கன்ம பேதத்தால் அருட்சத்தியின் சமூகத்தில் எழுவகைத் தோற்ற முண்டானது. மேற்படி கன்ம மலத்தால், சிருட்டி உண்டாகும் விவரம் ஒருவாறு: பக்குவ ஆணவம், பக்குவ மாயை— இவ்விரண்டினலும் **விஞ்ஞான கலா பேதம்.** அபக்குவ மாயை. ,அபக்குவ கன்மம். அபக்குவ ஆணவம் கூடியது — **தேவ நரக பைசாசங்கள்.** பக்குவ மாயை, அபக்குவ கன்மம் கூடியது—**ஜீவர்கள்.** அபக்குவ கன்மம், அபக்குவ கன்ம ஆணவம். அபக்குவ கன்ம மாயை—இவை கூடியது—**தாவர உயிர்கள்.** இதை விரிக்கில் பெருகும்.



**வாக்கு நான்கு என்பது — யாதெனில் :—**

**1. அபர வாக்கு. 2. பரவாக்கு, 3. துரிய வாக்கு, 4. அனுபவ வாக்கு.** இவற்றில் **அபரம்** - ஸ்தூல வாக்கு. **பரம்** - அசரீரி வாக்கு. **துரியம்** - அறிவில் விளங்குவது. **அனுபவம்** - யாவுமாய் விளங்கித் தோன்றுவது.

**தீக்ஷை என்பது — யாதெனில் :-**

தீ — மலம், க்ஷை - ஒழிவு. தீக்ஷை—மல ஒழிவு.

## 61. ஆணவமல நிவர்த்திக்கு வழி

**மனுஷ்ய** வல்லபத்தால் தனக்கிருக்கிற அசுத்தங்களை நிவர்த்தி செய்து கொள்ளக் கூடுமா வென்றால் :—

**இது நல்லது — இது கெட்டது** என்று பகுத்தறியும் ஞானத்தால், விஷய வாசனையில் காரணங்களைச் செல்லவொட்டாமல் தடுக்கக்கூடுமே ஒழிய, நிவர்த்திக் கக்கூடாது. அது ஆண்டவ ரருளால் சுத்ததேகம் பெற்றவர்களால்தான் முடியும். அது அருளொளி கிடைத்தால் அத்தருணமே சுத்தக் கரணமாய் நிற்கும். அசுத்தம் வருவதற்குக் காரணம் யாதெனில்—செம்பிற் களிம்பு இயற்கை—அது போல், ஆன்மாவிற்கு ஆணவம் இயற்கை. செம்பிலே களிம்பு இயற்கையாயுள்ள தைப் பரிசன வேதியினுல் நிவர்த்தித்து ஏமமாக்குவதுபோல், மாயா காரியமான இந்தத் தேகத்தின்கண் உள்ள ஆன்ம இயற்கையாகிய ஆணவ மலம் ஆண்டவ ரருளினுல் நிக்கப் பெற்று சுத்த உடம்பாக்கிக் கொள்ளலாம். ஆண்டவர் அருள் அடைவதற்கு நாம் இடைவிடாது, நன்முயற்சியின்கண் பழகுதல் வேண்டும்.

**இதற்குப் பிரமாணம் :—**

"ஓடாது மாயையை நாடாது நன்னெறி
ஊடா திருவென்றீர் வாரீர்
வாடா திருவென்றீர் வாரீர்."

*—6-த் திருமுறை—கீர்த்தனை 140—பாட்டு 96*

## 62. தர்மம்

**தர்மமென்பதற்குப் பொருள்:—ஜீவ** தர்மம், குல தர்மம், சாஸ்திர தர்மம், ஆசார தர்மம், ஆசிரம தர்மம், ஜாதி தர்மம் முதிலியவாக விரியும். இதில் அதி னுண்மை, அதின் தன்மை என இரண்டு. அதின் தன்மை யென்பது — அதின் சுபாவம், சுபாவமென்பது — இயற்கைக் குணம். அது வென்பது — **ஆன்மா.** ஆதலால், ஆன்மாவுக்கு இயற்கைக் குணம் — தயை : ஆன்மாவின் இயற்கை யென்பதே தர்மத்திற்குப் பொருள்; ஆன்மா இயற்கையோடு இருந்தால் சிவ மாகலாம். இதைப் பலவாகத் தர்மமென்று பெயரிட்டார்கள். அருள்வெளியாகிய ஆன்ம இயற்கையால் சிவானுபவத்தைப் பெறுவது உண்மை. இதற்கு வேதாகமங்

VALLALAR GROUPS



களில் பலபட விரிந்த நாமங்கள் அனந்தம். அவற்றில் சில:— அருட் சத்தி. அருள் வெளி, விருஷபம், தர்மதேவதை, அருநி யியற்கைக் குணம், பரஞானம், அகர வுகரம், அருள் நடம். அன்பு, ஆன்ம நெகிழ்ச்சி. ஆன்ம அசைவு, சுத்த தத்துவம், ஆன்ம அறிவின் பேதம்—என இதை விரித்தார்கள். அருள்வடிவாய்ச் சிவமாகிப் பின்னமின்றிப் பூரணமா யிருப்பது **நிரதிசயானந்தம்**. ஆனந்தமென்பது — சந்தோஷம். நிரதிசய மென்பது—ஆனந்த மின்மை. ஜீவர்களுக்குத் திருப்தி யின்பத்தை நேர்ந்தவரையில் செய்வது—**ஆனந்தானுபவம்**.

**கற்ப பேதம் என்பதன் பொருள் :—**

கற்ப பேத மென்பது கடவுள் இடபவாகனருருடராய் உலகத்திலெழுந்தருளிக் காட்சி கொடுத்தருளுங் காலம். இடப மென்பதற்குப் பொருள் —**தர்ம ஸ்வரூபம்**. தர்மமென்பது — **காருண்யம். தயவு. அருள்**. ஆதலால், அருள் வடிவமான ஆன்மாலய உலகமான தேசத்தின் அனுபவ ஞானம் தோன்றுதல்.

**பரோபகார மென்பது யாது ?**

**தேகத்தாலும்**, கரணத்தாலும், **இந்திரியத்தாலும்**, திரவியத்தாலும் ஆன் மாக்களுக்கு உபகரித்தல். திரவியம் நேராத பட்சத்தில், திரிகரண சுத்தியாய் **ஆன்மநேய** சம்பந்தமான தயா விசாரத்தோடு எல்லாச் சீவர்களினது வாட்டத் தைக் குறித்தும் பிரார்த்தித்தல்.

**எல்லா உயிரையும் பொதுவாய்ப் பார்ப்ப தென்பது : —**

**தனக்குள்ள** ஆகாரத்தைக் கொடுத்துவிட்டுத் தான் பட்டினி யிருப்பதல்ல. அப்படி இருந்தால் பாவம். வந்தவர்களின் பசி அறிந்து. தாங்காதவர்களாகில்— தனது ஆகாரத்தைக் கொடுத்தும், சகிப்பார்கள் ஆகில் — எவ்வகையிலாவது முயற்சித்தும் பசியைத் தணிக்கவும். அதற்கும் இடமில்லையாகில், பச்சாந் தாபத்துடன் கடவுளைப் பிரார்த்தித்து இன்சொல்லினால் இனிக்கச் செய்து தான் கெட்டிருப்பதே மேலான புண்ணியம்.

**அருட்பெருஞ்ஜோதி**

## 63. குளிகைமணி—ஒன்பது

**குளிகை மணி** ஒன்பதின் விவரம் :—**1. பரம்பரமணி**—அண்டத்தையும் அண்ட வஸ்துக்களையும் காட்டுவது. **2. பராபரமணி**—பிண்டத்தையும் பிண்ட வஸ்துக்களையும் காட்டுவது. **3. அரும்பெறன் மணி**—நினைத்ததை நினைத்தபடி அருளுவது. **4. ககனமா மணி** — விண்ணுலக வஸ்துக்களை ஆட்டி வைக்கும். **5. சரஒளி மணி** — மண்ணுலகையும் மண்ணுலக வஸ்துக்களையும் ஆட்டி வைக்கும். **6. கலைநிறை மணி**— எல்லா வுலகத்தும் உலாவுதல். **7. வித்தக**



**மணி** — சர அசுர வஸ்துக்களிடம் விளங்குவது. **8. சித்திசெய் மணி** — மகா சித்திகளை நடத்துவது. **9. வளரொளி மணி**—அழியாப் பெருவாழ்வு **அளிப்பது**.

அண்டமு மதன்மே லண்டமு மவற்றுள்
பண்டமுங் காட்டிய **பரம்பர மணியே**
பிண்டமு மதிலுறு பிண்டமு மவற்றுள
பண்டமுங் காட்டிய **பராபர மணியே**
நினைத்தவை நினைத்தவை நினைத்தாங் கெய்துற
அனைத்தையுந் தருமோர் **அரும்பெறன் மணியே**
விண்பத மனைத்து மேற்பத முழுவதுங்
கண்பெற நடத்துங் **ககனமா மணியே**
பார்பத மனைத்தும் பகரடி முழுவதுஞ்
சார்புற நடத்துஞ் **சரவொளி மணியே**
அண்டகோ டிகளெலா மரைக்கணத் தேதிக்
கண்டுகொண் டிடவொளிர் **கலைநிறை மணியே**
சராசர வுயிர்தொறுஞ் சாற்றிய பொருடொறும்
விராவியுள் விளங்கும் **வித்தக மணியே**
மூவரு முனிவரு முத்தருஞ் சித்தருந்
தேவரு மதிக்குஞ் **சித்திசெய் மணியே**
தாழ்வெலாந் தவிர்த்துச் சகமிசை யழியா
வாழ்வெனக் களித்த **வளரொளி மணியே**
நவமணி முதலிய நலமெலாந் தருமொரு
சிவமணி யெனுமருட் **செல்வமா மணியே**.

— அருட்பெருஞ்ஜோதி அகவல்

**நவநிலை என்பது :—**

**அனுபவ மார்க்கம்:** 1. விந்து; 2. நாதம்; 3. பரவிந்து; 4. பரநாதம்; 5. திக்கிராந்தம்; 6. அதிக்கிராந்தம்; 7. சம்மேளனம்; 8. சுத்தம்; 9.அதீதம். ஆக 9.

**ஒளி :—**

**1. பிண்டவொளி**; 2. அண்டவொளி; 3. ஆன்ம ஒளி; 4. அக்கினி ஒளி; 5. ஜீவவொளி; 6. சூரிய ஒளி; 7. மன ஒளி; 8. சந்திர ஒளி; 9. கண்ணொளி; 10. நட்சத்திர ஒளி—ஆக பத்து.

## 64. பஞ்ச மகா பாதகங்கள்

1. கள், 2. காமம், 3. கொலை, 4. களவு, 5. பொய் இவ் வைந்தும் கொடிய துக்கத்தை உண்டுபண்ணும். அவ்வைந்திலும் கொலை விசேஷ பாவம்.

VALLALAR GROUPS



பாவம். எனினும், 1. கள் உண்டவனுக்கு 2. காமம் உண்டாகாம விருக்காது, 3. கொலை செய்யத் துணிவு வாராமலிராது. 4. களவு செய்யாமலிரான், 5. பொய் பேச அஞ்சான். ஆகையால், இந்த ஐந்தையும் ஒழிக்கவேண்டியது அவசியம். இதில் ஒன்றை அடைந்தவனானாலும் அவனே மற்றவை தொடராமலிரா.

## 65. பஞ்ச கவ்யத்தின் உண்மை

**பஞ்ச கவ்யத்தின் உண்மை யாதெனில் :—**கோ மயம், கோ ஜலம், கோ கிருதம், கோ ததி, கோ க்ஷீரம்—இவை ஐந்து. இவற்றின் **குணம் :—** கோ மயத்தால்—பிருதிவி சுத்தி. கோ ஜலத்தால்—ஜல சுத்தி, கோ கிருதத்தால்—அக்னி சுத்தி. கோ ததியால்—வாயு சுத்தி, கோ பயசால்—ஆகாச சுத்தி, இது போல் பிண்டத்தில், பிருதிவியாகிய தேகத்திலுள்ள, குருக்களையும், அசுத்த மலங்களையும், கோ மயம் போக்கும்; நீர்க்கட்டு, கோவை முதலியவற்றை கோ ஜலம் போக்கும்; உஷ்ண ஆபாசம் முதலியவற்றை கோ கிருதம் போக்கும்; அதுபோல், வாயுவின் செடுப்பாகிய மலபந்த முதலியவற்றை கோ ததி போக்கும்; ஆன்மாவாகிய பிராணச் சோர்வை கோ க்ஷீரம் போக்கும்; மேலும் பசு மிருகத்தின் ஆகார மாகிய விருக்ஷத்தின் மூலாதி பலங்களே பஞ்ச கவ்யங்களாம்.

## 66. காயத்ரி

**காயத்ரி :—**கா—ய — த்ரி. **கா** — ஜல தத்துவமாகிய ஸ்தூல தேகம், பிரம ஸ்வரூபம். **ய**—வாயு தத்துவமாகிய சூக்ஷ்ம தேகம். விஷ்ணு ஸ்வரூபம். **ஆ**—அக்னி தத்துவமாகிய காரண தேகம், ருத்ர ஸ்வரூபம். **த்ரி** — மூன்று. அதாவது, மேற்குறித்த மூன்று தேகங்களின் ஸ்வரூப ரூப சுபாவ குணங்களை ஐயம் திரிபு மயக்க மின்றிக் கடந்தால், ஜனன மரண சாகரம் நீங்கி நித்தியர் ஆவோம். எப்படியெனில் :—காயத்திரி மந்திரத்திற்குப் பாதம் மூன்று. பாதம் ஒன்றுக்கு வர்ணம் எட்டு. ஆக மூன்று பாதத்திற்கும் வர்ணம் இருபத்து நான்கு. பாதம் மூன்று என்பதன் குறிப்பு ஜீவர்களுக்கு மலம் மூன்று.

**வருணம் இருபத்து நான்கு என்பதன் குறிப்பு :—**

**இரு=இரண்டு,—** 1. ஜீவகாருண்யம், 2. தத்துவ விசாரம் ஆகிய இரண்டையும்; **பத்து**=பற்று, பிடி, பற்றினுல்; **நான்கு**=நாலாகிய — 1. ஜீவ காருண்யம், 2. ஈசர பக்தி, 3. பாச வைராக்கியம், 4. பிரமஞானம் ஆகிய இவற்றை அடையலாம்.

**அடைந்து,** காயத்ரி மந்திரம் திரிமூர்த்தி ஸ்வரூபமாதலால், இதற்கு அதீத மான பிரமானுபவத்தைப் பெறலாம்.



மேலும். தத்துவ த்ரயங்களான மூன்று தேகங்களுக்கும் தத்துவம் யாதெனில்:—வர்ணம் இருபத்து நான்கு ஆதலால், ஸ்தூல தத்துவம் இருபத்து நான்கு. பாதம் மூன்று. காயத்ரி திரிமூர்த்தி ஸ்வரூபம், இவற்றுள் ஒன்றில் ஒன்றைக் கொடுக்க வந்தது ஒன்று; 3.+3.+1, ஆகிய இவற்றைச் சேர்க்க எழு (7) ஆகிறது. ஆதலால் சூட்சும தத்துவம் எழு. இதற்கு சக்தி மூன்று. அனுபவ சக்தி ஒன்று. சமத்துவம் ஒன்று, ஆக ஐந்து. ஆதலால் காரண தேக தத்துவம் ஐந்து. மேற்குறித்த முப்பத்தாறு தத்துவங்களையும் கடந்தால், அனுபவம் விளங்கும்.

**எப்படியெனில் :**— ஓதயாத்:—ஓ—ஆன்ம அறிவின்கண்; த—சத்துவ குணமயமாய்; த்—அருளனுபவம் பெற்று; யா—கிரமமாதல். ஆதலால் மேற்குறித்த காயத்ரியின் ஸ்வரூபானுபவத்தைப் பெறுதலாம்.

## 67. சூரியன், சந்திரன், அக்கினி—இவற்றின் கலைகள்

**ஏமம், கனகம்** என்பன சூரியனைக் குறிக்கின்றன, சூரியனிடத்தில் **பொன்** இருக்கின்றது.

**சூரியன், சந்திரன் :—**

**சூரியன்** ஆணாகவும், சந்திரன் பெண்ணாகவும். வலம் இடம், சத்தி சிவமு மாக வுடையது மருட்டேகம். வலம் சந்திரனாகிய சத்தியாயும், இடம் சூரியனாகிய சிவமாயும் இருப்பது அனுபவம் திரிசிய அனுபவத்திலுள்ள இடம் வலமாகவும், வலம் இடமாகவும் அனுபவம் தோன்றும்.

**சூரியன், சந்திரன், அக்கினி—கலைகள் :—**

**மேலும்,** சூரியன் அக்கினியோடு கூடிய அல திங்களும் 1, சந்திரன் அக்கினியோடு கூடியபோது பானுவும் 2, சூரியன் மதியோடு கூடியபோது பௌமனும் 3, சந்திரன் பானுவோடு கூடியபோது சௌமியனும் 4, சூரியன் சௌமியனோடு கூடியபோது குருவும் 5, சந்திரன் பௌமனோடு கூடியபோது பிருகுவும் 6, சூரிய சந்திரர்கள் அக்கினியோடு கூடியபோது மந்தனும் 7, தோன்றும். ஆக 7.

**மேற்படி** சூரியனுக்கு கலை 16. மேற்படி கலை 16-ல் சந்திரனுக்குக் கலை 4 போக இருப்பு கலை 12. சூரியன்—காரியவுருவன், சந்திரனுக்குக் கலை 16. மேற்படி கலை 16-ல் தாரகைகளுக்குக் கலை 4 போக, சூரியனுல் கொடுத்த 4 கலையுஞ் சேர்த்து சந்திரனுக்கு கலை 16. சந்திரன்—காரிய காரண உருவன்; சகலன் — சூரியன்; கேவலன் — சந்திரன். அனுபவத்தில் இடம் — வலம் போல் மாறும். பிரமத்துவம் சூரியனிடத்திலும், விஷ்ணுத்துவம் சந்திரனிடத்திலும் உள்ளன. அக்கினிக்குக் கலை 64. இப்போது எட்டுக் கலையோடு காரண உருவனாய் மற்றைக் கலைகளை உள்ளடக்கி நிறைந்து தீப்போல் எங்கு முடையவன். ஆக கலைகள் 96. மேற்படி 96 கலையே 96 தத்துவமாய்ப் பிண்ட வடிவாயிற்று.

VALLAR GROUPS



**அக்கினி கலை** 64-ன் குணங்கள் சைவத்தில் 64 திருவிளையாடல்களாகவும், உண்மை அடியார்கள் 63, அதீதம் ஒன்று ஆகவும் வழங்குகின்றன. சந்திர கலை 12-மே வைஷ்ணவபரத்தில் துவாதச ஆழ்வார்களாக வழங்குகின்றன. மற்ற 20 கலையும் கௌமாரம், பாசுபதம், மஹாவிரதம், சாத்தேயம், காணுபத்தியம், காபாலம், சௌரம், மகம்மதீயம், பௌத்தம், கிறிதுஸ்வம் முதலிய சமயங்களில் வழங்குகின்றன. இவற்றின் அனுபவங்களைக் குருமுகத்தில் அறிக.

**அமாவாசை பௌர்ணமி:—**

**மேற்குறித்த** சோம, சூரியர்கள் ஒன்றுபடுவது **அமாவாசை**, ஒன்றுபட்ட சோமன் ஒவ்வொரு கலையாகச் சூரியனிடத்திலிருந்து விடுபட்டு மேலேறிப் பகிரண்டத்தில் செல்லும்போது 64 கலையும் பூர்த்தியாய்ப் பிரகாசிப்பது **பௌணர்மி**. பகிரண்டத்திலிருந்து பிரமாண்டத்திற்கு வியாபகமாகும்போது, சூரிய உஷ்ணம், சோம கலையை ஒவ்வொன்றாகக் கிரகிக்க ஒரு கலையோடு பானுவுடன் சேர்தல் அமாவாசை. மேற்படி சோம கலையைப் பானு கிரகிக்காவிட்டால் இவ்வுலகம் ஜீவிக்காது. சூரியன் பிரமாண்ட ப்கிரண்ட வியாபகி. சந்திரன் பகிரண்ட பிரமாண்ட வியாபகி. சூரியன் வியாபகம் தோன்றாது, சந்திர வியாபகந் தோன்றும்.

**சந்திரன் மகிமை** வரலாறு:—ரூபாரூபி, காரிய காரணன், சோபாமாத்திரன், சுடாத தன்மை, கலை 12, தாரகை கலை 4, அர்த்த வடிவன், பிரமாண்ட பகிரண்ட வியாபகன், பச்சைவெண்மை கலந்த மேனி; மன அறிவு—சபை, மன ஒளியே—பதி.

**சூரியன் மகிமை** வரலாறு:—ரூபி, காரியன், ஒளிமாத்திரன், சுட்டுஞ் சுடாத தன்மை. கலை 16, வட்டவடிவன், பிரமாண்ட வியாபகி, பஞ்ச வர்ணம்; ஜீவ அறிவு—சபை, ஜீவ ஒளியே—பதி.

**பஞ்ச வர்ணங்க ளாவன :—**

| | | | | |
|---|---|---|---|---|
| 1. வெண்மை | = | ஆதிசத்தி | = | அனுக்கிரகம் |
| 2. பச்சை | = | பராசத்தி | = | திரோபவம் |
| 3- செம்மை | = | இச்சாசத்தி | = | சம்மாரம் |
| 4. கருமை | = | கிரியாசத்தி | = | ஸ்திதி |
| 5. பொன்மை | = | ஞானசத்தி | = | சிருஷ்டி. |

**அக்கினியின்** வரலாறு—அரூபி, காரணன், பிரகாச மாத்திரன், சுடுந் தனிமை, கலை 64, பூர்ண வடிவன், எங்கும் வியாபகி, சுவர்ணம்; ஆன்ம அறிவு—சபை, ஆன்ம ஒளியே—பதி.

## 68. மழை

**புகையின்** மூன்றாவது கலையின் சீதள சத்தியினால், மழையுண்டாகின்றது. இதுபோல் சூரிய கிரண உஷ்ண ஆவியாகிய புகை—ஔஷதிகளிலும், நீரிலும், பாரிலும். பொருப்பிலுமுள்ள திரவ சத்தியைக் கிரகித்து, வாயுமண்டலத்தில் சேர்த்து



மேலுங் கீழும உஷ்ணம் நிரம்ப, மத்தியிலுள்ள திரவ அணுக்கள் புழுங்கி நீராய், காலபேத வண்ணம் வாயுவால் பிரேரிக்கப்பட்டு அசைக்கும்போது கீழ் மேலுள்ள உஷ்ண வாயு தடிப்பு விலகும்போது மின்னலாகிய பிரகாசமும், நெருங்கி ஒன்றுபடும்போது சத்தமாகிய இடியும் அத்தொனியால் படலம்போல மூடியிருந்த காராகிய மேகம் விலகி வாயுவால் கலங்கியபோது, மழையும் உண்டாகும். இதன்றி, மேகம், கடல் ஜலத்தை உண்டு மழை பெய்வதென்பது பொய்.

**புறப்புற அமுதம் :—**

**அண்டத்தையும்** பிண்டத்தையும் ஒருங்கே வளர்ப்பது. **புறப்புற வமுதம்.** ஆதலால் அஃதே **கொள்ளல் வேண்டும்.** யாதெனில் :—**ஊற்று நீர், பொற்றலை, வாழை, தென்னை** முதலியவற்றின் பேரிலுள்ள **பனிஜலம், மழைஜலம்**—இவைகள் கொள்ளலாம்.

**குளிர்ந்த ஜலம் :—**

**சாதாரண ஜலங்** கொள்ளுவது கெடுதி. ஏனெனில் மேற்படி ஜலத்தில் மூன்று குணமுண்டு. எவை எனில் :—**விஷம், பூதம், அமுதம்.** இம்மூன்றும் ஒன்றாகவே இருக்கும், எப்படியெனில்:—மேல் பாகத்தில் சிலிர்ப்பாகிய விஷமும், அதனடியில் ஏகதேசம் சுடுகையுள்ள பூதமும். அதனடியில் விசேஷ உஷ்ணமுள்ள அமுதமும் கூடி ஒன்றாயிருக்கும். மேற்படி ஜலத்திற்கு குணங்கள் ஆவன : பூதஜலம்—தத்துவ விருத்தி செய்யும். அமுதஜலம்—பிராணசக்தி செய்யும். விஷஜலம்—தத்துவத் துரிசைப் போக்கும். ஆதலால் இடபேதத்தால் மேற்படி நீர்கள் தனித்தனியாகவுமுள்ளன ; ஒவ்வொன்றில் மும்மூன்றாகவும் விரியும்.

**காலங் கடந்து** குளிர்ந்த ஜலத்தில் குளித்து ஈர உடையுடன் இருப்பது தேகக் கெடுதி. குளிக்கவேண்டுமாகில், **வெந்நீரில்** குளிக்க வேண்டும்.

**வெந்நீர் :—**

**ஆதலால்,** மேற்படி சுத்தாமுதங் கிடையாத பக்ஷத்தில் இதர ஜலங்களைப் பச்சையாகக் கொள்ளப்படாது ; **வெந்நீராகக் கொள்ளுதல் வேண்டும்.** அந்நீரும், ஐந்து மூன்றும் — ஐந்து இரண்டுமாகக் காய்ச்சி, சர்க்கரை, வெல்லம், கற்கண்டு—இவைகள் சேர்த்துக் கொள்ளவும். நேராத பக்ஷத்தில், தென்னை, நாயுருவி, வாழை முதலிய வஸ்துக்களைச் சம்பந்தப் படுத்தியாவது, சூரிய கிரணத்தில் வைத்தாவது, சூரிய சாத்தால் பார்த்தாவது, சிகரத்தை உன்னியாவது, கொள்ளல் வேண்டுமே யல்லாது பச்சையாய்க் கொள்ளப்படாது.

**சனி நீராடு** என்று சொல்லுவது :— சனிபோன்ற கருமையான கருகிய நீரால் ஆடென்று சொன்னது. யாதெனில் :—வெந்நீர். ஒருவாறு ஊற்று நீர். இதன்றி—மற்றபடி— சொல்வது தெரியாமை.

VALLALAR GROUPS



## 69. தயவுக்குத் தடைகள் - ஜாதி, சமயங்கள்

சூரபத்மனுடைய யுத்தம் முழுமையும் சத்துவ சம்மாரமே. சுப்பிரமணியர், விநாயகர், மயிலின் மேலும் பெருச்சாளியின் மேலும் ஏறினார்களென்கிற தாத்பர்யம் வேறு. அது தெரியாமல் அந்தச் சுவாமிகளைத் திருவிழாக் காலத்தில் வாகனங்களின்மேல் ஏற்றுதல் தெரியாமை.

தத்துவ ஒழுக்கம் பற்றிச் சமயங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. தொழில் ஒழுக்கம் பற்றிச் சாதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. தயவை விருத்தி செய்வதற்குத் தடையாயிருப்பன — சமய ஏற்பாடு, ஜாதி ஏற்பாடு முதலிய கட்டுப்பாட்டு ஆசாரங்கள். அவையாவன:—ஜாதியாசாரம், குலாசாரம், ஆசிரம ஆசாரம், லோகாசாரம், தேசாசாரம், கிரியாசாரம், சாஸ்திராசாரம் முதலிய ஆசாரங்கள். ஆதலால், மேற்குறித்த ஆசாரங்கள் ஒழித்து, சுத்தசிவ சன்மார்க்க சத்திய ஞான ஆசாரத்தை வழங்கிப் பொதுநோக்கம் வந்தால், மேற்படி காருண்யம் விருத்தியாகிக் கடவுளருளைப் பெற்று, அனந்த சித்திமுத்திகளைப் பெறக்கூடுமே யல்லாது, இல்லாவிடில் கூடாது.

## 70. சந்நியாசம்—காவி வேஷ்டி

மூன்றாசைகளில் விசேஷம் பற்றுள்ளவர்களாகித் தயவில்லாத கடின சித்தர்கள் சந்நியாசம் பெற்றுக்கொள்ள வேண்டும். மேற்படி குற்றமற்றவர்களுக்குச் சந்நியாசம் வேண்டுவதில்லை.

சந்நியாசி காவிவேஷ்டி போடுவதற்கு ஞாயம் :—

தயவில்லாத கடின சித்தர்களாகையால் தத்துவாபாசமுள்ளது; தத்துவத்தை ஜெயித்து தயவை நடத்துவதற்கு யுத்தக் குறி, அல்லது அடையாளமாகத் தரிப்பது—காவி. வெற்றியான பிறகு அடைவது தயவு. ஆதலால் வெற்றிக் கொடி வெள்ளை.

தயவு வெள்ளை என்பதற்கு ஞாயம் :—

தயவென்பது தத்துவம், சத்துவ மென்பது சுத்தம், சுத்தமென்பது நிர்மலம், நிர்மல மென்பது வெள்ளை வருணம். வெள்ளை என்பது ஞானம், ஞான மென்பது அருள், அருளென்பது தயவு. தயவென்பது காருண்யம்.

நித்தியத் துறவென்பது :—

அறம், பொருள், இன்பம், வடு—இந்த நான்கையும் நித்தியம் நான்கு காலங்களிலும், செய்து அனுபவித்துப் பற்றற்று இருப்பதே நித்தியத்தை அடைவதற்கு ஏதுவாக இருக்கிறது.



## 71. வேதாகம புராணங்கள்

அப்பு தத்துவத்தின் குணம் நான்கிலிருந் துண்டானவையே நான்கு வேதமும்.

வேதம் — பதி லக்ஷணத்தை விளக்கும். ஆகமம் — பசு லக்ஷணத்தை விளக்கும். புராணம்—பாச லக்ஷணத்தை விளக்கும். இதிகாசம்—பக்தியை விளக்கும். ஸ்மிருதி — கர்மத்தை விளக்கும். மேலும் வேதம் — பதி, பசு, பாசத்தைச் சொல்லும். அதுபோல் ஆகமமும் சொல்லும். வேதம் என்பது: நான்கு மகா வாக்கியந்தான். மற்றவை அங்க உபாங்க சாங்கப் பிரத்தியாங்கங்கள். இவைகள் யாவும் மனமடங்கும் துவாரமாம்.

ஒருவன் ஆன்ம லாபம் பெறுவதற்கு இரண்டு மார்க்கம் உண்டு. ஒரு மார்க்கம் படியுள்ளது; ஒரு மார்க்கம் படி இல்லாதது எப்படியெனில்:—மெத்தை ஏற வழியிருப்பதுபோல். ஏறிவிட்டால் மேலிடமாகிய அரமியம் ஒன்றே. அவ்வழி ஆகமவழி—சோபான முடையது. வேதவழி—சோபானம் இல்லாதது. ஒருவன் ஆகமவழி செல்லாது வேதவழி போகக்கூடாது. ஏனெனில், ஜீவன் உபாசனை துவாரமாய் ஜீவத்துவங் கெட்ட இடத்தில் இரண்டற்று ஒன்றாகிய வேதவழி என்னும் அத்வைதம் நினைக்கும். வேதவழியான அத்வைதம் அனுபவம்; ஆகம வழியான துவைதம் விவகாரம். ஒன்றென விவகரிப்பவரிடத்தில் அனுபவமில்லை. உபதேச ரீதியில் சொல்லாது ஒன்றெனப்படவேண்டும்.

## 72. சமய நூல்களில் பிழை

சமய மத சாத்திரங்களில் அனேக இடத்தில் பிழைகள் இருக்கின்றன. அதற்குக் காரணம் அவற்றை இயற்றியவர்கள் மாயையின் சம்பந்தத்தை அடைந்திருந்தவர்கள். ஆகையால் முன்னுக்குப் பின் மறைப்புண்டு தப்புகள் நேரிட்டிருக்கின்றன. மாயையை வென்ற சுத்த ஞானிகளுக்கல்லாது மற்றவர்களுக்குப் பிழையற இயற்ற முடியாது. அந்தப் பிழைகள் சுத்தசன்மார்க்கம் விளங்குகிற காலத்தில் வெளிப்படும்.

## 73. புராணங்களின் உண்மை

1. பெரிய புராணத்திற் குறித்த 63 நாயன்மார்களும் தத்துவங்களே ஒழிய வேறல்ல. அதை அதை விசாரித்து அனுஷ்டித்தால், அது அது ஒவ்வொரு சித்தியைக் கொடுக்கும். கணபதி, சுப்பிரமணிய சுவாமிகளும் தத்துவங்களே தவிர வேறல்ல. புராணங்களின் இருதயமெல்லாம் தத்துவ சம்மாரமே. இதன் உண்மை சுத்தசன்மார்க்கத்தில் விவரமாய் வெளியாகும்.

2. தேவாரம் என்பது:— தேவ் — தயவு. ஆரம் — ஒழுங்கு: தயாவொழுங்கே தேவாரம்.

VALLALAR GROUPS



**3. திருவாசகம்** என்பது :- மெய்ப் பொருள் நிரம்பிய வார்த்தை, மெய்ப் பொருளைத் தரும் வார்த்தை.

**4 திருமந்திரமும் திருவாசகமும் :—**

**சாத்திரங்களிற் சிறந்தது திருமூலர் திருமந்திரம்.** இஃது மொத்தம் **எண்ணாயிரம்; தோத்திரங்களிற் சிறந்தது திருவாசகம்:** இவற்றை ஊன்றிப் பார்க்கவும்.

**5. வேதாரண்ய விவரம் :—**

**வேதாரண்யத்தில்** கதவு திறக்கப்பட்டதும் மூடப்பட்டதும் யாதெனில்:— வேதப் பொருளை மறைத்ததுந் திறந்ததும் எனக் கொள்க. உண்மையை **விளக்கினது**—திறந்தது, மறைந்தது—மூடியது.

**6. திருப்பாற்கடல் கடைந்த விவரம் :—**

**திருப்பாற்கடல் கடைந்து அமுதபானம் தேவர்கள் செய்யும்பொருட்டு விஷத்தை ருத்திரன் உட்கொண்டார் என்பதற்குப் பொருள் :—திருப்பாற் கடல் என்பது தேங்காய்.** அமுதமென்பது—அதன் ஜலம், தேங்காயின் பாலிலுள்ள எண்ணெயே **விஷம்;** மேற்படி எண்ணெயாகிய விஷத்தைப் போக்குவது முப்பூவாகிய **ருத்திரன்.** ஆதலால் தேங்காய்ப் பாலிலுள்ள விஷமாகிய எண்ணெயை முப்பூவால் போக்குவது **ருத்திரன் விஷம் சாப்பிட்டது.** மற்றக் கடல்கள் யாவும், இட்சு, மது முதலிய வஸ்துக்களே. இவ்வாறு அண்டத்திலும், பிண்டத்திலும், பௌதிகத்திலும், தாதுக்களிலும், ஒஷதியினும் கடல்கள் உள.

**7. நாராயணன் என்பதன் பொருள் :—**

**அப்பு**—தத்துவத்தின் அதிஷ்டான கர்த்தாவென்றும், அப்பு தத்துவத்தில் தோன்றினவன் என்றும், நரவிசேஷணப் பிறப்பை உடையோன் என்றும், நரனிற் றேன்றினோனென்றும், மாயா கோஷத்தை அல்லது நடப்பை உயிர்க்கு உண்டு பண்ணுவோன் என்றும், பகுதியின் சேட்டிப்பை உயிர்க்கு உண்டுபண்ணுவோன் என்றும், இன்ப சக்தியை உயிர்க்கு ஊட்டுவோன் என்றும் கொள்ளலாம். இன்னும் பலவேறு வகையிலும் கொள்ளலாம். **நாரம்**—ஜலத்தில், **அணன்**—உற்பத்தியானவன்; **நா** — மாயையினுடைய, **ரா** — கோஷம் — நடப்பு — வியாபாரத்தை, **ய**—உயிர்களுக்கு. **ண**—உண்டுபண்ணுகிறவன்; **நா**—பிரகிருதியினுடைய, **ரா**—சேட்டிப்பை, **நா**—ஆதி சக்தியினுடைய, **ரா**—இன்பத்தை.

**8. மகாவிஷ்ணு என்பது :—**

ஆகாரம் உண்டவுடனே ஜீரணமாய்ப் பால்வண்ணமாக ஆகாரப் பையில் வெண்மை நிறமாக இருப்பது **திருப்பாற்கடல்** என்றும், அதனடியில் உண்டாம் பசி—தீவிர சக்தியாகிய உஷ்ணம்—**வடவாமுகாக்கினி** என்றும், இரண்டிற்கும் மத்தியில் உண்டாகிய சீதளம்—**விஷ்ணு பள்ளிகொண்டது** என்றும் சொல்லுவது. **திருப்பாற்கடலில் விஷ்ணு பள்ளிகொண்டது இதுதான்.**



**9. வாமனவதாரம்— மாபலி :—**

காசிபர் — என்பது **மனம்.** இவரது பிள்ளையாகிய **மாபலிச்** சக்கரவர்த்தியாவது மனதின் மந்தம். அதில் உண்டாகிய சீதம் சாக்கிரத்திலும் சுழுத்தியிலும் நிறைந்து நின்றது. **உலகளந்த பெருமாள்** ஒரு கால் மேலும் ஒரு கால் கீழும் அளந்து ஓர் அடிக்கு இடமில்லாதிருந்தது.

**10. கருடன்மீது மகாவிஷ்ணு ஏறியது என்பது :—**

**க**—ஜலம், **ரு**—கருமை, **ட**—வெண்மை. ஆதலால், விளங்கா வெண்மையாகிய ஜலத்தின் பின் தோன்றும் செம்மைக்கு இடையில் உள்ள கருமையாகிய நீராவியே **விஷ்ணு.** ஆதலால், சீதவஸ்துக்களெல்லாம் **விஷ்ணு;** அணுத்துவமெல்லாம் **பிரமா;** உஷ்ணத்துவமெல்லாம் **ருத்திரன்.** இதுபோல் மற்றத் தத்துவங்களையும் அறியவும்.

**11. பிரம விஷ்ணுக்கள் அடி முடி தேடல் :—**

**பிரமா** அன்னமாகவும், **விஷ்ணு** வராகமாகவும் உருவங்கொண்டார் என்பதன் பொருள்;—பாச அறிவும் பசு அறிவும் ஆம். ஒரு பொருளைக் காணுந் தன்மையுடையது—பாச அறிவு. பசு அறிவாவது—பொறி புலன்களாலே அறியப்பட்டது—ஜீவ அறிவு. மலத்தில் அழுந்துவது பாசம். பகுத்தறிவது பசு. மேலுங் கீழுஞ் செல்லுதலால், பாதாளத்திலும் ஆகாசத்திலும் தேடினரெனச் சொன்னது. மேலும், ஒவ்வொரு வஸ்துவிலும் பதி பசு பாச லக்ஷணம் உண்டு.

**12. பிரமதேவனுக்கு தலை ஐந்து—நான்கு :—**

**பிரமதேவனுக்கு ஐந்து முகமாவன: 1. ஆணவம், 2. காமியம், 3. மாயை, 4. திரோதை, 5. மாமாயை.** இவைகளில் **ஆணவம்** என்னும் ஒரு தலை மாத்திரம் பரமசிவத்தினால் அரியப்பட்டது. பிரமதேவனது ஒரு சிரசை வெட்டும்பொருட்டுத் தோன்றின ருத்திரனுக்கு ஐந்து தலையாவன :—**இச்சை, ஞானம்,** கிரியை, **ஆதி, பரை** என்னும் **ஐந்துமாம்.**

**13. இராவணனுக்குத் தலை பத்து என்பது :—**

**இராவணன் பத்துத் தலையும் அகங்காராதிகள் என** அறியவும்.

**14. சரஸ்வதியை மூக்கறுத்தது :—**

**பிரமதேவன் பத்தினியாகிய சரஸ்வதியை மூக்கறுத்தது யாதெனில் :—** பிரமதேவனது சிரசில் ஒரு முகமாகிய அகங்கார தத்துவத்திற்கு உபகருவியாவது—அவரது பத்தினியாகிய சரஸ்வதி. மேற்படி கல்வியின் முகப்பை அல்லது முகத்தலையாகிய மூக்கை அறுத்தது என்பது — அடக்கியது. இல்லாவிட்டால், அபரஞானமே ஒழிய பரஞானம் வராது.

**15. வடுகநாதர் :—**

வடுகநாதர் விஷ்ணுவினுடைய தோலை உரித்துப் போர்த்துக் கொண்டது யாதெனில்:—மனத்தில் உண்டான மந்தத்தில் தோன்றின சீதமான விஷ்ணு அகம்

VALLALAR GROUPS



புறம் எங்கும் இருப்பதை, அப்படி எங்கும் பரவொட்டாது, உஷ்ண சக்தி விளங்கச் சீதபாகத்துக்குக் கவசம் போல் உட்பக்கம் இல்லாமல் மேற்புறமாகப் பரவியிருப்பது ருத்திரனுன வடுகநாதர் என்பது.

**16. தக்கன் - யாகம் :—**

**தக்கன்** என்பது:—**யான் ;** தக்கன் **யாகம்** என்பது :—**எனது**—என்று அகங்கரிக்கும் ஜீவபேதம், தக்கன் யாகத்தை அழித்தது என்பது ஜீவபோதத்தை அழித்தது.

**17. பைரவரும், வீரபத்திரரும் :—**

**வடக்கே பைரவர் இருப்பார் எனபது யாதெனில் :—**நமது பாதத்தின் கண் உஷ்ணசக்தி விளங்குவதுதான். சிரசிலே **வீரபத்திரராவது**—இச்சாசக்தி, இதைத் தென் திசையில் வீரபத்திரர் இருப்பதாக சொல்லுவது.

**18. சுரர் அசுரர் என்பதற்குப் பொருள் :—**

சுரர் என்பது :— அறிவுடைய ஜீவர்கள் முதல் வாசனுதி வஸ்துக்களெல்லாம் சுரர். அகங்காரி முதல் துர்க்கந்த வஸ்துக்களெல்லாம், பூமிக்குள் தோன்றுங் கந்தமூலம், அழுக்குடைய வஸ்து இவைகள் **அசுரர்.** மேலும், அறிவின் உயர்ச்சி தாழ்ச்சியால் **தேவ ரென்றும், மனித ரென்றும்** சொல்லப் பட்டதே தவிர, வேறு எந்தக் காரணத்தாலுமல்ல. ஆனுல் தயை விசேஷமிருக்க வேண்டுமென்பது அறிவு உயர்ச்சியில் அடங்கிவிட்டது.

**தேவர்களுக்கு** நான்கு **கையென்பது :—** தயையின் விசேஷதைக் குறித்துச் சொன்னதே தவிர வேறில்லை. **தயையே வடிவமாக இருக்கின்ற புண்ணிய தேகிகளே தேவர்கள்.**

**19. குண்டோதரனுக்கு அன்னமிட்டார் என்பதற்குப் பொருள் :—**

**குண்டோதரம்** என்பது :—துத்தநாகக் குடாக்கு ; **ஓதனமென்பது** — அன்னம் ; தரம் என்பது—பசியில்லாதவன் ; மேற்படி நாகத்தைச் சுண்ணஞ் செய்து பசியில்லாதவனுக்களிக்க **விசேஷ** பசி உண்டாகும். எப்படியெனில் :— நாகக் கொட்டையை மைபோ லாட்டி, நாகத்திற்குப் பிடிப்பித்துச் சிறு புடமாய்ப் பத்திட்டு எடுத்து, நாலிலொன்று சூதஞ் சேர்த்து, வட்டாக்கிக் கருந்துளசியால் கவசித்துச் சீலைமண் செய்து, புடமிடச் சுண்ணமாம். **இதுபோல்** மற்ற **திருவிளையாடல் முழுமையும்.** ஒருவாறு.

**20. சந்திரனுக்குத் தண்டனை :—**

**சந்திரனுக்கு இரண்டு தண்டனை** என்பது யாதெனிம் :—**கணபதியாகிய அவாவை** உல்லங்கனம் பண்ணினதால் சண்டாளத்துவம் நேரிட்டது.

**சந்திரனுக்குக் கலை குறையவும்—சிவன் சிரசில் தரித்துக் கொண்டதும்** யாதெனில் :— **தக்கனுகிய** ஜீவபோதத்திற்குப் **பெண்கள்** என்னும் உபகர



ணங்கள் 27. இவற்றை மனமாகிய சந்திரனுக்குக் கல்யாணம் என்னும் செயற் கையைச் செய்து, சமமாகப் பார்க்கும்படி தக்கன் சொன்னதைத் தடுத்து, கிருத் திகை உரோகிணியாகிய—ஆசை மோகம் இரண்டையும் பாராட்டி, மற்றப் பெண் களைச் சந்திரன் அலக்ஷியம் செய்தான். செய்யவே, தக்கனது சாபத்தால் பதினறு கலையின் கன்னியங் கெட்டு ஒவ்வொன்ருய்க் குறைய, பயங்கொண்டு பிரமாவாகிய—பாச அறிவினுடத்துச் சொன்னுன். பிரமன் தக்கனது பலத்தை எண்ணித் தன்னுல் முடியாது என்று பதியாகிய — சுத்த அறிவினிடத்தில் சொல்லும்படி செய்தான். அங்ஙனம் சொல்லலும், சிவமானது சந்திரனுகிய மனத்தின் வியா பாரக் கலைகளை ஒடுக்கி, ஒரு கலையான சுத்த மனத்தைத் தானுகிய அறிவின் சிரம் என்னும் பிரஞ்ஞையில் தரித்து, சாபம் வீண்போகாமல் ஏறியும் குறைந்தும் இருக்கும்படி செய்தது. இப்படிச் செய்யாவிட்டால் அனுபவம் வராது.

**21. அயக்கிரீவம் என்பதன் பொருள் :—**

**மாலின்** 10-வது அவதாரம், **அயக்கிரீவ அவதாரம்.** அயம் என்பதற்குப் பொருள் — பிராணவாயு, கிரீவம் என்பது — கழுத்து. ஆகவே அயக்கிரீவம் என்பது பிராணவாயுவையே கழுத்தாகக் கொண்டது. இப்படியே மற்ற அவதாரங்கள் என்பவற்றிற்கு வெவ்வேறு பொருள் உண்டு.

**22. மார்க்கண்டேய சரித்திர உண்மை :—**

**மார்க்கண்டர்க்காக** ருத்திரமூர்த்தி **இடது** காலால் **எமனை** உதைத்ததற்கு ஞாயம் :—

**மார்க்கண்டர்** என்பது :—மயக்கமாகிய மறைப் பென்னும் மரணத்தைத் **தவிர்த்தது.**

**ருத்திரன்** என்பது :—தனித்த **ஆன்ம** அறிவு.

**எமன்** என்பது :—மயக்கத்தைத் தரத்தக்க வெகுளி, **சினம்** முதலிய.

**இடது காலால்** எமனை யுதைத்த தென்பது :—இடது என்பது சந்திரகலை, **காலென்பது** பிராணவாயு; ஜனன மரணத்தை உண்டுபண்ணுவது சந்திர சூரிய **கதி.** ஆதலால், அஞ்ஞான பாசத்தால்—சினமாகிற கூற்றுவன் கட்ட, **விவேகி யென்னும் மார்க்கண்டன்** — ருத்திர னென்னும் ஆன்ம அறிவோடு கூடவே, **மேற்படி** ருத்திரன்—பிண்டநஷ்டஞ் செய்கின்ற இடகலையை மேலேற்றி, **குணங் களாகிய** சூலத்தால் கூற்றை யொழித்து, அருளாகிய சத்துவ மயமாய் நீடிக்கச் செய்வது — **எம சம்மாரம்.**

# 74. தத்துவம்

**தத்துவ மென்பது :—** தத் + த்வம் = தத்துவம். தத் — **அது.** அது வென்பது — **சிவம்; த்வம் — அதின்** தன்மை. **ஆதலால், தத்துவம்** என்பது **சிவத்தின் தன்மை.**

VALLALAR GROUPS



பூதம் என்பது:— பூ—த—ம்; பூ—அலர்ந்தது, த—தடித்தது, ம்—கலத்தல், ஆதலால், எங்கும் நிறைந்து அணுவாய்க் கலத்தல் **பூதம்**.

**பூதமென்பது** யாது ? அதனது சொரூப ரூப சுபாவங்களென்ன ?

**பூதம் என்பதற்குச் சப்தார்த்தம் :—**

பூ—மலர்ந்தது, பிரகாசம்; த—தடித்தது, காரியம்; ம்—அன்றியது, நிலை. இதற்குத் தாத்பர்யம்:—நிலைபெற்ற காரியப் பிரகாசம். பூத அக்கினித் தோற்றமென்றும் பெயர். பூத காரிய அக்கினி என்றும் பெயர். பூ என்பதில்—உகர உயிரும், தம் என்பதில்—அகர உயிரும் எண்ணில் 8-ம், 2-ம் ஆயின. ஆக தொகை 10. இந்தப் பத்து இடத்திலும் பூத காரிய அக்கினித் தோற்றம் உண்டு.

---

**தத்துவங்கள் தொண்ணூற்றாறின் விபரம் :**

| | |
|---|---|
| பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என பூதங்கள் | — 5 |
| வாக்கு, பாணி, பாதம், பாயுரு, உபஸ்தம் என கர்மேந்திரியங்கள் | — 5 |
| வசனம், கர்மம், கமனம், விசர்ஜனம், ஆனந்தம் என கர்மேந்திரிய விஷயங்கள் | — 5 |
| துவக்கு, சக்ஷு, சுரோத்திரம், ஜிஹ்வை, ஆக்கிராணம் என ஞானேந்திரியங்கள் | — 5 |
| சப்த, ஸ்பர்ச, ரூப, ரச, கந்தம் என தன்மாத்திரைகள் | — 5 |
| மனம், புத்தி சித்தம், அகங்காரம், உள்ளம் என அந்தக்கரணம் | — 5 |
| இடை = வலதுகால் பெருவிரலிலிருந்து இடது நாசி வரைக்குமிருப்பது. பிங்கலை = இடது கால் பெருவிரலிலிருந்து வலது நாசி வரைக்குமிருப்பது. சுழுமுனை = எல்லா நாடிகளுக்கும் ஆதாரமாய் மூலாதாரத்திலிருந்து நடு நாடியாய் சிரசு வரைக்குமிருப்பது. கண்டம் = தண்ணீர் சோறு முதலானவைகளை உண்ணுங்கால் விழுங்கச் செய்வது. அக்ஷிகள் = வலது கண்ணிலிருப்பது. காந்தாரி = இடது கண்ணிலிருப்பது. அத்தி = வலது காதிலிருப்பது. அலம்புடை = இடது காதிலிருப்பது. சங்கினி = உபஸ்தத்திலிருப்பது. குரு = அபானத்திலிருப்பது. | நாடிகள் — 10 |
| பிராணன், அபானன், வியானன், உதானன், சமானன் என வாயுக்கள் | — 5 |
| நாகன், கூர்மன், க்ருகரன், தேவதத்தன், தநஞ்சயன் என உப வாயுக்கள் | — 5 |
| அமராச்ரயம், விபஜனாச்ரயம், ஜலாச்ரயம், மலாச்ரயம், சுக்கிலாச்ரயம் என ஆச்ரயங்கள் | — 5 |
| அன்னமயம், பிராணமயம், மனோமயம், விக்ஞானமயம், ஆநந்தமயம் என கோசங்கள் | — 5 |
| மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தம், ஆக்ஞேயம் என ஆதாரங்கள் | — 6 |
| வாத, பித்த, சிலேஷ்மம் என தோஷங்கள் | — 3 |
| தரேஷணை, புத்திரேஷணை, வித்தேஷணை என ஈஷணாத்திரங்கள் | — 3 |
| ஸாத்விகம், ராஜஸம், தாமஸம் என குணங்கள் | — 3 |
| இராக, துவேஷ, காம, குரோத, லோப, மோக, மத, மாச்சர்ய, டம்ப, தர்ம, ஈர்ஷை, அசூயை, ஆங்கார, மமகாரங்கள் என துர்க்குணங்கள் | — 14 |
| நல்வினை, தீவினை என வினைகள் | — 2 |
| ஜாக்ரத், சுவப்ந, சுழுப்தி, துரியம், துரியாதீதம் என அவஸ்தைகள் | — 5 |
| ஆக தத்துவங்கள் | — 96 |



கல்லுக்குள் இருக்கிற நெருப்பு டஞ்சில் காரியப்படுவது போலாம். பத்துப் பொதுஸ்தானங்களாவன :—1. மண், 2. ஜலம், 3. அக்கினி, 4. காற்று, 5. வெளி, 6. பிரகிருதி, 7. மாயை, 8. சூரியன், 9. சந்திரன், 10. நக்ஷத்திரம் ஆக இடம் 10.

**பௌதிகமென்பது :**—லிங்கமாதி உபரசம் நூற்றிருபதுக்கும் (120), பாஷாணமாதி 64 பாஷாணங்கட்கும், சுக்காதி ஒஷதி மூலபத்திர பீசங்கட்கும் பெயர். இஃது ஒருவாறு பூதகாரிய தேகமாதி தத்துவங்கட்கும் பெயர். பௌ - தீ - அகம்—பௌதீகம். பௌ — மூடல், அகம் — உள், தீ — அக்னி. ஆதலால் தீயை உள்ளடக்கியது — பௌதீகம். தீ என்பது — **காரண உஷ்ணம்**.

## 75. ரசவாதம் - உபரசவாதம்

**ரசவாதம் 7; உபரசவாதம் 7 :**

**ரசவாத விவரம் :**—ஸ்பரிசவாதம், ரசவாதம், தூமவாதம், தாதுர்வாதம், வாக்குவாதம், அக்ஷிவாதம், சங்கல்பவாதம் ஆக 7. இவை முறையே — குரு சம்பந்தத்தால், ஓஷதி சம்பந்தத்தால், புகை வேதியால், பஞ்ச லோகங்களால், சொல்லால், பார்வையால், தியானத்தால்—செய்யப்படும்.

**உபரசவாத விவரம் :**—மந்திரவாதம், புரீஷவாதம், தூளனவாதம், வாயு பிரேரகவாதம், தேவாங்கவாதம், பிரவேச விசிரிம்பிதவாதம், தந்திரவாதம் ஆக 7. இவை முறையே—எழுத்துக்கள் சம்பந்தத்தால், மலமூத்திரத்தினால், பாததூளிகை சம்பந்தத்தால், சுவாச சம்பந்தத்தால், உபாசனையினால், பூததாதுவால், நிரேதுவாக —செய்யப்படும்.

## 76. ஔடதங்கள்

**1. இருமலுக்கு :—**

முசுமுசுக்கை மூலம் பசும்பாலில், உலர்த்தி ஊற வைத்து, உலர்த்தி யிடித்து, சூரணமாக்கிக் கியாழமாக்கிப் பாலில்கொள்ள, காலையில் மிளகு, சர்க்கரை, சிறுக சமன் சேர்த்துக்கொள்ள.

**2. தேகமெலிவு, ஈளை, சுக்கிலக் கெடுதிக்கு :—**

பொன்னாங்கண்ணி ஒரு பங்கு, கரிசாலை முக்கால்பங்கு, வேகவைத்து, நீர்வடித்து, மிளகுபொடிபோட்டு, நெய்விட்டு, சீரகத்தில் தாளித்துப் புரட்டிச் சாப்பிடவும்.

**3. நீர் கோர்வை, வாத பித்த, ஆபாசக்கெடுதி, மலபந்தம், சூலை இவற்றிற்கு :—**

சுக்கு பலம் 12, — சுண்ணாம்பில் 4 பலம் கவசித்து, மஞ்சளில் 4 பலம் கவசித்து, எருமைச் சாணத்தில் 4 பலம் கவசித்து, கவசங் கருகச் சுட்டு, எடுத்துச்

VALLALAR GROUPS



நசுக்கி, அரைப்படி ஜலத்தில் போட்டுக் காய்ச்சி, வீசம்படியாகச் சுண்டினபிறகு, பனங்கற்கண்டு நெய் இவைகளைக் கலந்து, இளஞ்சூடாகச் சாப்பிடவேண்டும்.

**4. தேக வலிவு — சரீர திடத்திற்கு :—**

**கெட்டி மிளகு** 20 பலம், — பேயன் வாழைக்கிழங்கு சாற்றில், 3 நாள், இளநீரில் 3 நாள், கரிசாலை சாற்றில் 3 நாள், பொன்னாங்கண்ணி சாற்றில் 3 நாள் பசுங்கோமயத்தில் 3 நாள், பசும்பாலில் 3 நாள், தனித்தனியே இரவில் ஊற வைத்துப், பகலில் நிழலில் காயவைத்து, தேய்த்து, புடைத்து, (முன்போல் ஊற வைத்து, தேய்த்து, புடைத்து) வைத்துக்கொண்டு, **5 மிளகு** அவ்வளவு கற்கண்டோடு சாப்பிடவும். சூடு அதிகமானால், **அருகம்வேர்** கியாழத்தில் பசு வெண்ணெய் சேர்த்துச் சாப்பிடவும். இவ்விதம் சிலவற்றில் ஊறவைத்துக் **கடுக்காயும்** கொள்ளலாம்.

**5. பஞ்ச கல்பம் :—**

**கஸ்தூரி** மஞ்சள், வேப்பம்பருப்பு, வெள்ளைமிளகு, கடுக்காய் தோல், நெல்லிவற்றல் இவைகளை அறைத்துப் பாலில் காய்ச்சி — நறுமணத்துடன் இறக்கித் தேய்த்துக் கொள்ளவும்.

**6. வேறு பஞ்சகல்பம் :—**

**கசகசா,** பாதம்பருப்பு, கொப்பரைத் தேங்காய், மிளகு, சீரகம் இவற்றைப் பாலில் அரைத்துக் காய்ச்சி, நறுமணத்துடன் இறக்கித் தேய்த்துக் கொள்ளவும்.

**7. நீலகண்ட மணி மாத்திரை :—**

**மாந்தாளிக்கள்ளி** — சதுரக்கள்ளி — வெள்ளெருக்குவேர் பட்டை, — இவைகளைச் சமன் எடையால் நிழலில் உலர்த்திக்கொண்டு ஐந்து பலம் குழித் தைலம் வாங்கிக்கொண்டு, சுரைக் குடுக்கையில் வைத்துக்கொண்டு, பெருங்காயம் — லிங்கம் — அபினி, — இந்த மூன்றும், ஒவ்வொரு பலம் கலுவத்திற்போட்டு பொடித்துக்கொண்டு, 1. குங்குமப்பூ — 2. கஸ்தூரி — 3. கோரோசனை — 4. பச்சைக் கற்பூரம் — 5. கூகைநீறு — இந்த ஐந்தும் வகைக்கு ஒன்றேகால் ($1\frac{1}{4}$) வராகனெடை சேர்த்து தைலத்தை விட்டு எட்டு ஜாமம் அரைத்து குன்றுமணிப் பிரமாணம் மாத்திரை செய்து மூங்கில் குழாயில் அடைத்து மண்குடத்தில் வைத்து, பூமிக்குள் நாற்பது (40) நாள் வைத்துப் பின்பு எடுத்து, விஷ்ணுவுக்குப் பூசை செய்து, தங்க டப்பியில் வைத்துக்கொண்டு, **வாந்திபேதி** கண்டவர்களுக்கு, மணிக்கு மூன்று, **மாத்திரை வீதம் தேனில் கொடுத்தால் வாந்திபேதி** நிற்கும்.

**ஜன்னி** வகைகளுக்கும் பிரயோகிக்கலாம், **நல்லபாம்பு** முதலிய **விஷ** திருஷ்டிகளுக்கும், தகுந்த அனுபானங்களில் பிரயோகிக்கலாம்.

**இந்த மாத்திரைக்கு விஷ்ணு** வைத்த பெயர் **பிரளயா கால ருத்திர மணி மாத்திரை.**

**சிவனிட்ட** பெயர் **நீலகண்ட மணி மாத்திரை.**

**இது** நாடியில் சொல்லியது.

---



## 77. வாட்டம் ஏன்?

**கவலை கூடாது. உள்ளும் புறமும் ஓர் துணையாக வள்ளல் இருப்பதால், வாட்டமடைவதற்குக் காரணமே இல்லை.**

## 78. கலியுக முடிவு

முதல் யுகத்திற்கு நாள் எட்டு, 2-வது யுகத்திற்கு நாள் ஆறு, 3-வது யுகத்திற்கு நாள் நான்கு, 4-வது யுகத்திற்கு நாள் இரண்டு, ஆகக் கூடிய நாள் 20-ம் கற்பம் முடிக்கக் கூடும் நாட்கள். $60 \times 60 \times 60 = 2,16,000$ நொடி — ஒரு நாள். அதாவது, நாள் ஒன்றுக்கு நாழிகை 60, நாழிகை ஒன்றுக்கு விநாடி 60, விநாடி ஒன்றுக்கு நொடி 60 என்றபடி. நாளிரண்டிற்கு 4,32,000 நொடி. இந்த 4,32,000 நொடியும் அத்தனை வருஷமாகக் கலியுகத்திற்குச் சொல்லியிருக்கிறது. ஆனால் இந்த கலியுகத்திற்கு வருஷம் **ஐயாயிரந்தான்.** முதல் யுகம் **களங்க மார்க்கம்;** இரண்டாவது யுகம் **திராவக மார்க்கம்;** மூன்றாவது யுகம் **நவநீத மார்க்கம்;** நாலாவது யுகம் **பஸ்ம மார்க்கம்.** ஆதலால் மேற்குறித்த பஸ்மத்தை மேற்குறித்த வருஷத்தில் முடித்து உட்கொண்ட புருஷனாகிய சித்தனுக்குக் **கலிபுருஷ னென்று** நாமம் வந்தது. மேற்படி பஸ்மத்தை இரண்டு தினத்தில் முடித்து கற்பங்கொண்டு தேக சித்தியைப்பெற்றுத் திரிசியப்படாமல் மேற்படி புருஷன் தனது சங்கல்ப விகல்பங்களால் இவ்வுலகத்தைத் தோன்றலாதி அசைவுகள் செய்வித்து ஆட்டுகின்றான். இந்த யுகம் முடிவதற்கு இன்னும் 27 வருஷம் இருக்கின்றது. இதற்குமேல் மேற்படி புருஷன் செயல் நடவாது; **ஞானசித்தன் செயல் உண்டாம்.**

(ஆங்கீரஸ௵ புரட்டாசி௴ 1872)

## 79. வேந்தாந்த தேசிகர் குறட்பா*

**குறட்பா**

மூன்றி லொருமூன்று மூவிரண்டு முந்நான்குந்
தோன்றத் தொலையுந் துயர்.

**இதற்கு உரை :—**

**1. பௌராணிக மத சித்தாந்தம் யாதெனில்:—**

**மூன்றில்** — பறவையில் — கருடனில்,
**ஒரு மூன்று** — திரிமூர்த்தி சொரூபராகிய எம்பெருமான், **விண்டு.**
**மூ விரண்டு — 6 :** ஷட்குணம். **ஷாட்குண்ணிய** பரிபூரணராய — கன்னி, **திருமகளென்னும்** பிராட்டியாரோடு.
**முந் நான்கு-12,** துவாதச அடியார்களாகிய **ஆழ்வாராதிகள்** சூழ,
**முன் னான்கு—5,** ஸ்ரீமத் பஞ்சாயுதபாணியாக,

* இஃது, உபதேசம் விரும்பிய ஓர் வடகலை வைணவர்க்குச் சுவாமிகள் வேதாந்த தேசிகர் இயற்றிய குறட்பாவுக்கு உரை விளக்கியவாறு எனத் தெரிகிறது.

VALLALAR GROUPS



**தோன்ற**—சேவை சாதிக்க,

**தொலையுந் துயர்**—துன்பம் நீங்கும்.

**இதன் கருத்து :—**

பறவை என்னுங் கருடாழ்வான்மீது, திரிமூர்த்தி சொருபராகிய எம்பெருமானுசிய **விண்டு**, ஷாட்குண்ணிய பரிபூரணராய்த் திருமகளென்னும் பிராட்டியாரோடு, துவாதச அடியார்களாகிய ஆழ்வாராதிகள்சூழ, ஸ்ரீமத் பஞ்சாயுத பாணியாக எழுந்தருளி, **கல்யாணகுணத்துடன் சேவை சாதிக்க**, நமது துன்பங்கள் **தொலையும்**. அன்றி,

## 2. அத்துவைதம்

**மூன்றில்** :—1. காரணம், 2. சூக்குமம், 3. தூலம் என்கிற மூன்று தேகத்தினுள்,

**ஒரு மூன்று**—1. **காரண தேகத்திற்குரிய — மூன்று தத்துவங்களின்** சொருப ரூப சுபாவங்களும்,

**மூவிரண்டு — 2. சூக்கும தேகத்திற்குரிய — ஆறு தத்துவங்களின்** சொருப ரூப சுபாவங்களும்,

**முந் நான்கு - 3. ஸ்தூல தேகத்திற்குரிய — பன்னிரண்டு தத்துவங்களின்** சொருப ரூப சுபாவங்களும்,

**தோன்ற**—ஐயந் திரிபு மயக்க மின்றித் தோன்ற—அத்தருணத்தே,

**துயர்**—பிறவித் துன்பம்,

**தொலையும்**—நீங்கும்.

**இதன் கருத்து :—**

**காரணம்**, சூக்குமம், தூலம் என்கிற மூன்று தேகத்தினுள் காரண தேகத்திற்குரிய மூன்று தத்துவங்களின், சொருப ரூப சுபாவங்களும், சூக்கும தேகத்திற்குரிய, ஆறு தத்துவங்களின் சொருப ரூப சுபாவங்களும், ஸ்தூல தேகத்திற்குரிய பன்னிரண்டு தத்துவங்களின் சொருப ரூப சுபாவங்களும், ஐயந் திரிபு மயக்க மின்றித் தோன்ற, அத்தருணத்தே பிறவித் துன்பம் நீங்கும் அன்றி,

## 3. சிவாத்துவைதம்

**ஒரு மூன்று மூவிரண்டு முந்நான்கு** — (3, + 6, + 12, = 21) இருபத்தொன்றினை,

**மூன்றில்** — மூன்றில். **கொடுக்கவந்த தொகையாகிய** 21 ÷ 3 = 7. **1. காலம், 2. நியதி, 3. கலை. 4. புருடன், 5. மாயை, 6. ராகம், 7. வித்தை**யென்னும்—ஏழு தத்துவங்களின் சொருப ரூப சுபாவங்களும்.

**தோன்ற—சந்தேகம், விபரீதம், அஞ்ஞானம்** அறத்தோன்ற,

**தொலையுந் துயர்**—துயர் தொலையும்.



**இதன் கருத்து :—**

3 + 6 + 12 = 21 இருபத்தொன்றினை, மூன்றில், — கொடுக்கவந்த தொகையாகிய (21 ÷ 3 = 7,) —1. காலம், 2. நியதி, 3. கலை. 4. புருடன், 5. மாயை, 6. ராகம், 7. வித்தையென்னும்—ஏழு தத்துவங்களின் சொருப ரூப சுபாவங்களும், சந்தேகம், விபரீதம், அஞ்ஞானம் அறத்தோன்ற துயர் தொலையும். அன்றி,

## 4. விசிஷ்டாத்துவைதம்

மூன்றில்—**சித்து, அசித்து, சிதசித்து** என்கிற தத்துவத் திரயங்களில்,

**1.** ஒரு மூன்று—**சித்தினிடத்து—இச்சை, அறிவு, தொழில்** என்கின்ற **மூன்று குணங்களும்**,

**2.** மூவிரண்டு — **அசித்தினிடமிருந்து — மயக்கமின்மை 1, திரிபின்மை 2, ஐயமின்மை 3, விசித்திரமின்மை 4, அசுத்தமின்மை 5, விகாரமின்மை 6**. என்கின்ற **ஆறு குணங்களும்**,

**3.** முந்நான்கு—**சிதசித்தினிடத்து**—அறிவு **1, கருணை 2, அன்பு 3 வாய்மை 4, நிராசை 5, தூய்மை 6, நிறைவு 7. ஒழுக்கம் 8, பொறை 9, செப்பம் 10, சால்பு 11, மறதியின்மை 12**, என்கின்ற **பனிரண்டு குணங்களும்**, ஆகக்கூடி சித்து அசித்து சிதசித்து என்னும் மூன்றின் குணங்களாகிய **இருபத்தொன்றின்** சொருப ரூப சுபாவங்கள், ஐயந் திரிபு மயக்க மின்றி,

**தோன்ற**—விளங்க,

**துயர் தொலையும்**—துன்பமாதிய **சகல கேவலங்கள் நீங்கும், சுத்தனுவோம்.**

**இதன் கருத்து :—**

**சித்து**, அசித்து, சிதசித்து என்சின்ற தத்துவத் திரயங்களில், **1. சித்தி**னிடத்து—**இச்சை**, அறிவு, தொழில் என்கிற மூன்று குணங்களும்; **2. அசித்தி**னிடத்து—மயக்கமின்மை 1, திரியின்மை 2, ஐயமின்மை 3, விசித்திரமின்மை 4, அசுத்தமின்மை 5, விகாரமின்மை 6, என்கின்ற **ஆறு** குணங்களும்; **3. சிதசித்தி**னிடத்து—அறிவு 1. கருணை 2, அன்பு 3, வாய்மை 4, நிராசை 5, தூய்மை 6, நிறைவு 7, ஒழுக்கம் 8, பொறை 9, செப்பம் 10, சால்பு 11, மறதியின்மை 12, என்கின்ற **பனிரண்டு** குணங்களும், ஆகக்கூடி **சித்து அசித்து சிதசித்து** என்னும் மூன்றின் குணங்களாகிய இருபத்தொன்றின் சொருப ரூப சுபாவங்கள், ஐயந் திரிபு மயக்க மின்றி **விளங்க**, **துன்பமாகிய** சகல கேவலங்கள் நீங்கும், **சுத்தனுவோம்**.

VALLALAR GROUPS



ஐயா அவர்கள் தமது அன்பர்களுக்கு
எழுதிய கடிதங்களில் கிடைத்த

# 80. திருநெறிக் குறிப்புகள்

## கடிதம் 1.*

திருச்சிற்றம்பலம்

அன்பு அறிவு இரக்கம் ஈஸ்வரபக்தி முதலிய நற்குணங்களாற் சிறந்த எனக்கு நற்றுணையாக விளங்கிய தங்கள் சமுகத்திற்கு வணக்கஞ் செய்து வரையும் விண்ணப்பம்.

தங்கள் சுபசரித்திர விவரங்களை அடிக்கடி கேட்டு மகிழ விருப்ப முள்ளவனாக இருக்கின்றேன்.

அன்புள்ள ஐயா, தாங்கள் ஆடிமீ 16௳ விடுத்த கடிதம் நேற்றைய தினம் வரக்கண்டு அதிலுள்ளவைகளை அறிந்துகொண்டேன். இனி, இதன் அடியில் எழுதும் வரிகளைச் சற்றே தயவுசெய்து பார்க்கத் தொடங்கினால் தங்கள் தோள்களே துணையாகக் கொண்டு பார்ப்பீர்களென்று நம்புகிறேன். சுந்தரமுதலி என்பவரும், கந்தமுதலி என்பவரும் பேரால் பெரியவர்களாகத் தோன்றினும். குணத்தால் குன்றிமணியிலும் சிறியவர்களாகக் காண்கிறார்கள்.

இவர், தற்காலத்திற் செய்த மோசம் தங்களுக்குச் சிறிது துன்பஞ் செய்வது. ஆனால், இது பெரிதல்ல, இனி உடனே, தங்களுக்கு உண்டுபண்ணிய நஷ்டத்துக்கு ஈடாக, இந்த இருவரும் மோசம்போய், நஷ்டப்பட—அதைக் கண்டு தங்களுக்கு நேரிடும் துன்பமே பெரிதாகக் காணுமென்று உண்மையாகச் சொல்லமாட்டுவேன்.

'மோசஞ் செய்தவர் நாசமடைவார்கள்'

என்கிற உலக வழக்கு வீண்போகாது. இது குறித்துத் தாங்கள் கிலேசப் படவேண்டுவதில்லை. தங்களுக்கு நடராஜப் பெருமான், ஒரு விதத்திலும் குறைவு வரச்செய்யார். இது சத்தியம். நான் அவ்விடம் வருமளவும், தாங்கள் தற்காலத்தி லிருக்கிறபடியே, ஓர் அலுவலில் இருக்கவேண்டும். நான் வந்த பின்பு, தங்கள் இஷ்டப்படியே நடத்திக் கொள்ளலாம். என் தேகம், மறையாம லிருக்குமாகில், எவ்விதத்திலும் தங்கள் கருத்தை நடராஜப் பெருமான் திருவடித் துணையைக் கொண்டு முடித்துவிப்பேன். இதில் சந்தேகம் வேண்டுவதில்லை.

என்னிடத்தில், தங்களுக்கு இருக்கின்ற பிரியம் எவ்வளவு, அதில் எண் மடங்கு தங்களிடத்தில் எனக்கு இருக்கின்றதென்று நான் சொல்வதென்ன! கடவுளுக்குத் தெரியும். ஆதலால் என்னிடத்தில் அவநம்பிக்கை வேண்டுவதில்லை, நான் வருவதற்குத் தடையென்னவென்றால், நமது நடராஜப் பெருமானைக் கேட்குந்தோறும், "நல்லது இன்னஞ் சற்றே பொறு. இன்னஞ் சற்றே இரு."

* இஃது அன்பர் ராயல் ஓட்டல் வேலு முதலியார் அவர்களுக்கு எழுதிய கடிதம்.



என்று உத்தரவாகிறது. இதை அசலார்க்குச் சொன்னால் நம்பார்கள். தங்கள் மட்டில் மாத்திரம் குறிப்பித்தேன். ஆனால் "இன்னஞ் சற்றே யிரு" என்றபடியால், இரண்டொரு மாதமாகக் காணுகின்றது. தாங்கள் அவசரப்பட வேண்டாம், இப்போது எவ்வளவு வருத்தப்படுகின்றீர்களோ, அதற்குப் பதின்மடங்கு சௌக்கியம் பின்பு கிடைக்கும். இது உண்மை! உண்மை!! உண்மை!!! நான் எவ்வகையாலும், இன்னும் இரண்டு மாதத்தில் வருகிறேன். அது பரியந்தம் பொறுத்திருக்க வேண்டும். சிவானுபவச் சொரூபியாகிய சுவாமி சிதம்பர சுவாமிகள், வெள்ளைவேட்டி திருச்சிற்றம்பல சுவாமிகள், ஓதுவா மூர்த்தி சுந்தரம் பிள்ளை இவர்களுக்கும் என் வந்தனம் குறிப்பிக்க மனமிருந்தால் குறிப்பிக்கலாம். இனி, தாங்கள் ஒன்றுக்கும் அஞ்சவேண்டாம். சதா நடராஜப் பெருமானைச் சிந்தித்துக்கொண்டு அலுவலை நடத்த வேண்டுமென்று பிரார்த்திக்கின்றேன். வந்தனம். வந்தனம்.

அருட்பெருஞ்ஜோதி

## கடிதம் 2.

அன்பறிவொழுக்கத்தாற் சிறந்து நமது கண்கள் போன்று விளங்கிய சிரஞ்சீவி இரத்தின முதலியாருக்கு சிவானுக்கிரகத்தால் தீர்க்காயுளும் சகல சம்பத்தும் சிவக்கியானமும் மேன்மேல் உண்டாவனவாக. இங்கு ம-ா-ா-ஸ்ரீ நாயக்கரவர்களும் யானும் க்ஷேமம். அங்கு தமது சுப சரித்திர விவரங்களை அடிக்கடி கேட்க விரும்புகின்றேன்.

தாம் மாசிமீ 24-ந் தேதி வரைந்து விடுத்த கடிதம் பங்குனி 2-ந் தேதி காணப்பட்டது, அக் கடிதத்தில் குறித்த வண்ணம் சிதம்பரத்தில் வசிப்பது சம்மதமானாலும் இது விஷயத்தில் வசிப்பது சம்மதமின்று. ஏனெனில், சிதம்பரத்தில் பச்சையப்ப முதலியார் பாடசாலை கிரமமல்லாததாகத் தற்காலத்தில் காணப்படுகிறது. அன்றியும் அவ்வலுவல் இராஜாங்க சம்பந்த அலுவலாக இருந்தால் நன்றாக இருக்கும். அவ்வாறின்றி ஒருமையில்லாத சில இந்துக்கள் சம்பந்தமானதாக விருக்கின்றது. சிதம்பரம் தற்காலத்தில் நமது உயிர்த்துணைவராகிய நடராஜப் பெருமானைப்பற்றி நாம் போவதற்கும், இரண்டொரு தினம் இருப்பதற்கும், தக்கதே யன்றி. வேறொரு வகையாலும் தக்கதாகத் தோன்றவில்லை. ஆயின், அது கலிகால வண்ணம் ஆகலின், இதனடியில் எழுதுஞ் சில வரிகளிற் குறித்த வண்ணத்தை முழுதும் நம்பவேண்டும். அதாவது, நான் இந்த மாதக் கடையிலாவது, சித்திரை மாத முதலிடை கடையிலாவது அவ்விடம் வருவேன். வந்த பின்பு என் கருத்தை வெளிப்படுத்துகிறேன். எந்த விதத்தாலும் தாம் என் சமீபத்திலிருக்க வேண்டுமென்றே இரவும் பகலும் எம்பெருமானைப் பிரார்த்திக்கின்றேன். என் பிரார்த்தனைப் பிரகாரம் இன்னுஞ் சில காலத்துள் கூட்டுவிப்பார் இதற்குச் சந்தேகமிராது. ஆதலின் அங்கு நான் வருமளவும் சகித்திருக்க

VALLALAR GROUPS



வேண்டும். சிவ பஞ்சாக்கரத்தை சதா கருத்தில் வைத்துக்கொண்டே காரியங்களை நடத்தவேண்டும். எவ்வகையிலும் என் தேகம் இருந்தால் சமீபத்திலிருக்கும்படி, சிவானுக்கிரகத்தால் செய்துக்கொள்ளுவேன், தாம் இது குறித்து சலனப்பட வேண்டாம். தேக முதலான கருவிகளைப் பக்குவமாகப் பாராட்டிக் கொண்டு வரவேண்டும். மேற்குறித்தபடி வருகிறேன், விண்ணப்பக் கலி வெண்பா, நெஞ்சறிவுறுத்தல் இவைகளை அங்கிருந்து, இங்கு வந்திருந்து பிரயாணப்பட் டங்கு வருகின்ற, பெரிய தமக்கையார் வசதில் சுமார் ஒரு மாதமாயிற்று கொடுத்தனுப்பினேன். அவாள், மத்தியில் கருங்களவால் கையில், மெய்யில் உள்ளவைகளெல்லாம் இழந்துவிட்டதாகக் கேள்விப்பட்டேன். அவாள் இன்னும் மத்தியில் பந்துக் களிடமாக இருக்கின்றார்கள் போலக் காணுகின்றது. ஆகலில், அவர்கள் அவ்விடம் வந்தவுடன், மேற்படி புத்தகங்களைச் சேர்ப்பித்ததும் அல்லாததும் உடனே அவசியம் எனக்குத் தெரியப்படுத்த வேண்டும். மற்ற சங்கதிகளெல்லாம் நான் அவ்விடம் வந்தபின்பு பேசிக் கொள்ளலாம் சிரஞ்சீவி.

3. அருட்குணங்களனைத்தும் அமைந்து என் நற்றுணையாய் விளங்கிய தங்கட்கு சிவ கடாக்ஷத்தால் தீர்க்காயுளும் திடதேகமும் சகல சம்பத்தும் மேன்மேல் விளைக,

வரைந்து விடுத்த நல்வாசகத்தைக் கண்ணுற் றறிந்தனன். குடும்ப கோஷம், பொது வேதம், மெய்ம்மொழிப் பொருள் விளக்கம், சன்மார்க்க விளக்கம் என்பவைகளை நூதனமாக ஏற்படுத்தக் கருதியபடி வரையாக் கடிதப் புத்தகம் மூன்றென்னிடத்தி லிருக்கின்றன. அவை யமையும். ஆகலில், அது விடயத்தி லுழைத்தல் வேண்டாம். நான் வருமதிக் கடையில் அங்ஙனம் போதுதற் குளங் கொண்டிருக்கின்றனன். இஃது உபாயமன்று, உண்மை.

அருணெறி செல்வோர்க்கும் அச்சுறுத்தத்தக்க இவ் வெய்ய பருவத்தின்கண் வான் பெயலறியா வன் னெறிப்பட்டு மெய்வருத்தங் கோடலொன்றோ! எவ்வகையானுங் களைகணின்றி, பசித்தாரது பசி நீக்குதற் பொருட்டே திருவருளாற் கிடைக்கும் பொருட் கருவியை அங்ஙனஞ் செலுத்தலின்றி இங்ஙனஞ் செலுத்தும் வெறுஞ் செயற்பாட்டிற் கொருப்படும் குறைமையுங் கோடற்கிடனும். ஆகலில், இது விடயத்தில் துணிந்துரைத்தற்கு சித்தமும் நாவும் செல்வன வல்ல. முன் குறித்தபடி வரற்குத் தடைநேரின், அன்றி துணிந்து வரைவல். இஃதென் கருத்து. பின்னர் தங்கள் கருத்தின்படி செய்க. இஃது உலகியற் பிழைத்த சிலர்க்கு வரைதல் போல் வரைந்ததன்று, உள்ளமுற்று வரைந்த தென்க. இதனை, நமது உள்ளன்பர்கட்குக் குறிக்க.

என்னையன்றித் தன்னையுங் கருதார், அன்றிப் பொன்னையுங் கருதாரென்று கருதப்படும் அன்பர்தாம், எனக்கு இருமையுந் தொடர்ந்த துணைவராக நினைக்கின்றேன். அன்றி, வேறென்னை நினைப்பேன்! சூழும் வண்ணம் சூழ்க. சிவ சிந்தனையும் ஜீவகருணையும் கைவிடாது ஓங்குக. வேறு விடயங்களைச் சந்தி செய்யும் பந்த சந்தி சத்தியாலே மாறாது விழித்திருக்க. சுபம் பெறுக.



4. *அன்புள்ள நம்மவர்களுக்கு அன்புட னறிவிப்பது,—ஒருவனைப் பற்றி அனந்தம் பேர்களுக்கு நன்மையுண்டாம், என்பதை யுண்மையாக நம்பியிருங்கள். என்னால் உங்களுக்கு நன்மை கிடைப்பது சத்தியம். நான் இன்னங் கொஞ்ச தினத்தில் திருவருள் வலத்தால் வெளிப்படுகின்றேன். அது பரியந்தம் பொறுத்திருங்கள். நான் மிகவும் சமீபத்தில்தானே வெளிப்படுவேன் அஞ்ச வேண்டாம். சாலையை லகுவாய் நடத்துங்கள்.

5. பிரம, விஷ்ணு, ருத்திராதிகளுடைய பதங்களும், அந்த கர்த்தாக்களும், அவர்களால் சிருஷ்டி, திதி, சங்காரம் செய்யப்பட்டு வருகிற தேகாதி பிரபஞ்சங்களும் அநித்தியம். ஆகலின், நித்தியமாகியும் என்றும் ஒரு தன்மையுள்ளதாகியும் சச்சிதானந்த வடிவமாகியும், அகண்ட பரிபூரண வஸ்துவாகியும் விளங்கிய சிவமே நமக்குப் பொருள். அன்றியும், தாய், தந்தை, குரு; தெய்வம், சினேகர், உறவினர் முதலியவர்களும் மேற்குறித்த சிவத்தின் திருவருளேயல்லது வேறில்லை.

நாம் பல ஜனனங்களையுந் தப்பி, மேலான இந்தப் பிறவி யெடுத்தது சிவத்தின் திருவருளைப் பெறுவதற்கே.

எவ்வகைப் பிரயாசத்தினாலாவது அந்த அருளை அடைய வேண்டும்.

அந்த அருள், எவ்வகையால் வருமென்றால் :—எல்லா உயிர்களிடத்திலும் தயவும், பிரபஞ்சத்தில் வெறுப்பும், சிவத்தினிடத்தில் அன்பும், மாறாது, நம்மிடமிருந்தால், அவ்வருள் நம்மை யடையும். நாமும் அதனை யடைந்து, எதிரற்ற சுகத்தி லிருப்போம். இது சத்தியம். இனி, மேற்குறித்த சாதனத்தை நாம் பெறுவதற்கு சிவ பஞ்சாக்ஷரத் தியானமே முக்கிய காரணமாக இருக்கிறது. ஆகலில், இடைவிடாது நல்ல மனத்தோடு அதனைத் தியானிக்க வேண்டும். அதனை இதனடியில் குறிக்கின்றேன்.

**ஓம் சிவாய நம :**

1 நானேயோ தவஞ்செய்தேன் சிவாயநம வெனப்பெற்றேன்
தேனாயின் னமுதமுமாய்த் தித்திக்குஞ் சிவபெருமான்
தானேவந் தெனதுள்ளம் புகுந்தடியேற் கருள்செய்தான்
ஊனாரு முயிர்வாழ்க்கை யொறுத்தன்றே வெறுத்திடவே.

—திருவாசகம்—திருவேசறவு

2 சிவாய நமவென்று சிந்தித் திருப்பார்க்கு
அபாய மொருநாளு மில்லை உபாயம்
அதுவே மதியாகு மல்லாத வெல்லாம்
விதியே மதியாய் விடும்.

—ஔவையார்—நல்வழி

இஃது பிரமோதூதஞ் ஐப்பசிமீ 1வ. சாலையை நடத்திவந்த புதுவை சதாசிவ செட்டியாருக்குப் பெருமான் திருக்கரத்தால் வரைந்தனுப்பியது.

VALLALAR GROUPS



3 நான் செய்த புண்ணியம் யாதோ சிவாய நமவென
ஊன்செய்த நாவைக்கொண் டோதப்பெற் றேன்எனை ஒப்பவரார்
வான்செய்த நான்முகத் தோனும் நிருநெடு மாலுமற்றைத்
தேன்செய்த கற்பகத் தேவனும் தேவருஞ் செய்யரிதே.

*—திரு அருட்பா—திருவருண்முறையீடு*

இதனைக் கண்டு தியானித்து வந்தால் பின்பு எல்லாம் விளங்கும்.
இதை மற்றவர்களுக்கு வாசித்துக் காட்டப்படாது.

**6. நான் சென்னப்பட்டணம் விட்டு இவ்விடம் வந்த நாள் தொடங்கி நாளது வரையில் பாடிய பாடல்கள் பல. அவைகளை முழுதும் எழுதிவைக்க வேண்டுமென்கிற லக்ஷியம் எனக்கு இல்லாமையால், அப்படி அப்படி சிதறிக் கிடக்கின்றன.** ஆயினும், அவைகளைச் சேர்ப்பிக்கச் சுமார் இரண்டு மாதம் பிடிக்கும். ஆகலால், நான் பங்குனி மாதம் அவசியம் வருகிறேன். வரும்போது கொண்டுவருகிறேன்: இது இண்மை. எவ்விதமாவது இரண்டு மாதத்திற்குள் தமது இடத்தில் இருக்கச் செய்கிறேன். குமாரசாமி பிள்ளை, சண்முகம்பிள்ளை, ரெட்டியார் இவாள் இடங்களில் தற்காலம் இருக்கின்ற பாடல்கள் சுமார் 50 க்கு உட்பட்டதாகவே இருக்கும். வெளிப்பட்ட பாடல்கள் பல பல. ஆகலால் மன்னிக்க வேண்டும். அன்புள்ள என் கண்மணிபோன்ற தாம், இனி இதனடியில் எழுதுகின்ற வண்ணம் செய்யப் பிரார்த்திக்கின்றேன். அதாவது, 'இந்தப் பாடல்கள் பங்கியில் அனுப்பி என்னிடம் சேருகின்ற பரியந்தம் நான் ஒருவேளை போஜனந் தான் செய்வேன்' என்று எழுதியதைப் பார்த்த பின்பு, நான் சாப்பிடுகிற சாதம் உடம்பில் பொருந்தவில்லை. பட்டினி கிடந்தவனைப்போல இருக்கிறேன். ஆதலால், என்னை நிம்மதி யுள்ளவனுக்க எண்ணங்கொண்டு, ஒருவேளை போஜனங் கொள்ளுகிற நிபந்தனையை நீக்கி உடனே தபாலில் எனக்குத் தெரிவித்தால் அல்லது நான் சலிப்பைத் தவிரேன். ஒருவேளை போஜனம் உள்ளவனுகவே யிருப்பேன். இது சத்தியம். என்மேல் ஆணை. நாம் மேற்குறித்த நிர்ப்பந்த ஏற்பாட்டைத் தவிர்த்து உடனே எனக்குத் தெரியப்படுத்த வேண்டும். இரண்டு மாதத்திற்குப் பின்பு பாடல்கள் அவசியம் சேரும்.

7, உய்வ தாமிது நங்குரு வாணையென் றுரைப்பேன்
சைவ மாதிசித் தாந்தத்து மறைமுடித் தலத்தும்
நைவ தின்றியாங் கதுவது வாயது நமது
தெய்வ மாகிய சிவபரம் பொருளெனத் தெளிவீர்.

*—6-ந் திருமுறை—பதிகம் 131—சமரச சித்தாந்தப் பரநெறி விளக்கம்*

**இங்ஙனம்** சிவபரம் பொருளை அனுபவித்தற்கு முக்கியம்.—**ஜீவகாருண்யம், பாசவைராகம், சிவபக்தி.** இவை கிடைத்தற்கு முதற்கருவி:—**சாதுக்கள் சார்பு.** ஆகலின், அவசியம் சாதுக்கள் சார்பு **வேண்டும்.** நல்லது,—சாதுக்கள் சார்பு தற்காலத்திற் கிடைப்பினும் கிடையாவிடினும், நம்மை யெழு பிறப்பென்னும் பெருங்கடலைக் கடப்பித்து பேரின்ப மென்னுங் கரையிலேற்றும் சைவப்பதியில் தெய்வப் புணையாக வாய்த்த திருமந்திரமாகிய **பஞ்சாக்கரத்தை,** இடைவிடாது சிந்தித்துக்கொண்டும், சிவபிரான் திருவடிகளை பாவித்துக்கொண்டும், வருவது முக்கியத்தினு முக்கியம். ஆகலின், நாம் அவசியம் பற்றவேண்டிய காரியம் இவை. மற்றவை யன்று.



8 சுவாமிகளுக்கு வந்தனம் தங்களுக்குத் தற்காலம் நேரிட்டிருக்கிற ஆபத்தைக் குறித்து, அஞ்சவேண்டாம் இந்த ஆபத்தால் தேக ஆனி நேரிடாது, **காலபேதத்தால் நேரிடினும்.** நான் தங்களை **எவ்விதத்தாலாயினும் திருவருள் வல்லபத்தைக் கொண்டு** திரும்பவும் பார்ப்பேன். **பேசிக்களிப்பேன். இது சத்தியம், இது சத்தியம்.** இந்த வார்த்தை யென்வார்த்தை யன்று. **திருச்சிற்றம்பலமுடையார்** செல்வப் பிள்ளை வார்த்தை. தேகத்திற்கு ஆனி வருவதாகக் கண்டாலும் அஞ்சவேண்டாம். வந்தால் வரட்டும், திரும்பவும், உடனே மிகுந்த விரைவில் என்னைப் பார்த்துப் பேசிக் களிப்பீர்கள். திருவருளாணையிது. சற்றுங் **கலங்க வேண்டாம்.**

9. தாங்கள் அஞ்சவேண்டாம். ''சிவாயநமவென்று சிந்தித் திருப்பார்க் கபாய மொருநாளுமில்லை — உபாயம் அதுவே மதியாகு மல்லாதவெல்லாம் விதியே மதியாய் விடும்'' என்ற **ஔவையார் திருவாக்கு சத்தியம்! சத்தியம்!! சத்தியம்!!!** ஆதலால், அதை இடைவிடாது சிந்தித்துக் கொண்டே வாருங்கள். **தங்கள் பிணிகள் பறந்தோடிப்போம். இதை நம்பவேண்டும்.** தாங்கள் பயப்படாது இருக்கவேண்டும்.

10. தாங்கள் தேக முதலிய கருவிகளை **ஜாக்கிரதையோடு வைத்துக் கொண்டும், சிவ** பஞ்சாக்ஷரியையும், **சிவபெருமான் திருவடிகளையும் இடைவிடாது** சிந்தித்துத் தியானித்து **வரவேண்டுமென்பது என் பிரார்த்தனை.** தங்களை ஒரு கணப்போதாயினும் மறந்தவனல்ல. தாங்கள் கூடியமட்டில் சர்வ **ஜாக்கிரதையோடும்** இப்போது இருக்கிறபடியே யிருங்கள். இன்னுஞ் சில காலத்துள், விசேஷ சவுக்கியம் சேருமென்று உண்மையாகச் சொல்லுகிறேன்.

11. அன்பு, அறிவு, கல்வி, கேள்வி முதலியவற்றில் சிறந்த தங்களுக்கு வந்தனம். தங்கள் சுபசரித்திர விபரங்களை அடிக்கடி கேட்க விரும்புகின்றேன்.

**தங்கள்** மனத்திலுள்ள குறிப்பை சிரஞ்சீவி சுந்தரம் பிள்ளையால் தெரிந்து கொண்டேன். தாங்கள் உலகநடை தெரிந்த விவகாரிகளாதலால், தாங்களே தங்கள் கருத்தின்படி செய்துகொள்வதில் யாதொரு விகற்பமும் நேரிடாதென்று நன்புகிறேன்.

**நான்** அது விஷயத்தில் பிரவேசிப்பதைப் பார்க்கிலும் தாங்கள் நேரே அவர்களை அழைத்து, ஒருமையோடு தங்கள் கருத்தின்படி ஏற்பாடு செய்துகொள்வது உத்தமமாகத் தோன்றுகிறது. தாங்கள் கருத்தின்படி செய்துகொள்வதற்கு நான் தடையானவனல்ல. ஆகவில், **யாவர்க்கும் மனது விகற்பமாகாதபடிக்கும், தயவு வேறுபடாதபடிக்கும், தங்கள் கருத்தின்படி நடத்தலாம்.**

12. **இவ்விடம்** கடிதம் அனுப்புந்தோறும், இந்தப் பிரகாரம் அனுப்புவது பிரயாசம் என்று, என் மனம் என்னை வருத்துகின்றது. இது நிற்க, இனி, தங்கள் கடிதத்திற்கு உத்தரம் எழுதுகிறேன். அதாவது, தங்கள் தமையனார் விஷயத்தில் தாங்கள் எத்தன்மையுடையவர்களாக இருக்கின்றீர்களோ அத்தன்மை நானும் உடையவனு யிருக்கின்றேன். சீரகத்தைக் கியாழம் செய்து அந்தக் கியாழத்தில்

VALLALAR GROUPS



ஊறவைத்து ஜாமம் சென்ற பின்பு எடுத்து உலர்த்தித் தூள்செய்து வைத்துக் கொண்டு, அந்தத் தூள் காசிடை எடுத்து அதில் பஸ்பம் அரிசியிடை வைத்து நெய்யில் குழைத்துச் சாப்பிடவேண்டும். பத்தியம் இச்சாபத்தியம். தலைமுழுக்கு பசு நெய்யில் முழுகவேண்டும். **ஆருதாரத்தில், அனுகதத்தில் சத்திசிவம், பத்திதழில், இருப்பதாகவே கொள்ளவேண்டும். இரண்டிதழ் ஆசனமாகக் கொள்ள வேண்டும். அன்றியும், பன்னிரண்டிதழில், எட்டிதழ் சத்தி யிருப்பு, இரண்டிதழ் சிவத்தினிருப்பு, மற்றை யிரண்டிதழ் மேலும் கீழும் அடை யிருப்பு:** இது இன்னுஞ் சிலநாள் சென்ற பின்பு தங்களுக்கு நன்ருக அனுபவப் படும்.

13. **"விண்படைத்த பொழிற்றில்லை அம்பலத்தான் எவர்க்கு மேலானு ன்ன்பருள மேவுநட ராஜன்"** எனல் வேண்டும். இது நிற்க, நான் தற்காலம் அவ்விடம் வருவதற்கு சமயமாகத் தோற்றவில்லை. ஆயினும், நமது தலைவராகிய கடவுளது திருவுளச் சம்மதிக்கு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். எந்த **இரவில்—எந்தப்பகலில் திருவுளச் சம்மத உத்தரம்** எனக்குக் கிடைக்கின்றதோ, அந்த இரவில் அந்தப் பகலில் பிரயாணப்படுவதற்கு யாதொரு தடையுமிராது. இரவும் பகலும் இதை நினைத்துக் கடவுளைத் தியானிக்கின்றேன். அவர் உத்தரத் தடையின்றி வேறு தடை யாதொன்றுமில்லை. **தாங்கள் தேக முதலியவற்றில் ஜாக்கிரதையுடையவராய் சிவத்தியான சகிதராக இருங்கள்.**

14. **இது விஷயத்தில்** தமக்கு விசேஷப் பிரயாசம் நேரிடச்செய்கிறேன். ஆயினும் அந்தப் பிரயாசம் சிவகடாக்ஷத்தால் நேரிட்டதாகலின், பின்பு, தமக்கும் எனக்கும் **தடைபடாத நிம்மதியையும் சத்துவ சந்தோடத்தையும்** உண்டு பண்ணு மென்கிற நிச்சயத்தினுல் நாணுது தெரிவிக்க நேரிட்டது. ஆனல், இது குறித்து விசேஷ முயற்சியும் பிரயாசமும் தமக்கு நேரிடுமே என்னசெய்வது என்கிற விசாரமும் ஒருபக்கம் உடையவனுகவே யிருக்கிறேன். இனி வேறு வகையாற் பலவாக விரிப்பதென்ன! **நானே தாமாகவும்—தாமே நானுகவும்—பழமை தொட்டு வந்த அபேத நேயத்தை எண்ணி,—மற்ற இடங்களில் கனவிலும் லக்ஷியஞ் செய்து குறிக்கப்படாத குறிப்பைத் தம்மிடத்தே குறித்தேன்.** இது எம்பெருமானுக்குச் சம்மதமாக விருக்கும். ஆகலில், தமக்கும் சம்மதமாக இருக்க வேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன்.

15. **தாம்** தம்முடைய தேகத்தை ஜாக்கிரதையாக உபசரித்து வரவேண்டும். **ஜாக்கிரதை** என்பது அருந்தல் பொருந்தல்களில் **மிதபோஜனம் மிதபோகம்.**

**மிதபோஜனமாவது:**—கோபம், விராகம், அலக்ஷியம், முயற்சி, விரைவு இவை முதலிய ஏதுக்களால் **குறைத்தல்,—விருந்து, சுவை, விருப்ப முதலிய ஏதுக்களால் ஏற்றல் இல்லாமல்** சமமாகப் புசித்தலாம்.

**மிதபோகமாவது:**—அதிபரிச்சயம், அதிஞாபகம் முதலிய ஏதுக்களால் இரவு பகல் தோற்ருது பொருந்தல் —விராகம், அலக்ஷியம் முதலிய ஏதுக்களால் **பொருந்தா திருத்தல்.** இவை இரணடுமின்றி '**மாதத்திரண்டு விசை** மாதரைப் புல்குவது' என்றபடி பொருந்தலாம்.



16. அரி பிரமாதிகளெத்துணையும் பெறுதற்கு அரியதாகிய **சிவ சம்பந்தத்தை,** முன்செய்த தவப்பயனுகப் பெற்றனம். அங்ஙனம் பெற்ற நாம், **சிவானந்தபோக** சாத்தியத்தைக் காலமுண்டாக அடைதல் வேண்டும். அதனை அடைதற்கு **சிவபஞ்சாக்ஷர** தியானமன்றி வேறு ஏதுக்கள் ஒன்றுமின்று. இஃது **திருவருளாணை.** என்னின், நாம் செல்லுங் காலமெல்லாம் சித்தசுத்தியோடு **சிவ பஞ்சாக்ஷர** தியானத்தில் சர்வ ஜாக்கிரதையைப் பெற்று, **வரவிற்கு ஒத்த செலவோடு வாழ்தல் வேண்டும்.** இஃதே நமது கடமை.

17. **ஐயா,** தற்காலத்தில் தங்கள் மனத்தில் நேரிட்ட சஞ்சலங்களை நிவர்த்திசெய்து, இனி ஒருகாலங்களிலும் வாராதவண்ணம் பாதுகாத்து, சதா சௌக்கியத்தைப் பெற்று சந்தோஷமடைய அனுக்கிரகிக்க வேண்டுமென்று, ஆண்டவனைப் பிரார்த்திக்கிறேன். தாங்களும், இரவும் பகலும் நமது ஆண்டவனை இடைவிடாமல் சிந்தித்துக்கொண்டு ஜாக்கிரதையோடு இருக்கவேண்டு மென்று தங்களையும் பிரார்த்திக்கின்றேன். நம்மைப்பெற்ற **தாயைப் பார்க்கிலும்** அனந்தங்கோடி பங்கு நம்மிடத்தில் **தயவுள்ளவன் நமது ஆண்டவன்.** ஆகலால், நமக்கு ஒருகாலத்திலும் குறைவு நேரிடாது. இது சத்தியம். ஆனல், நாம் **நம்பிக்கை தவருது இருக்க வேண்டும்.** இந்த விஷயத்தில் நான் விரித்துத் தங்களுக்குச் சொல்ல வேண்டுவதென்ன!

18. **தாங்கள் வரவுக்குத் தக்க செலவு** செய்துகொண்டிருக்க வேண்டும். பின்பு, இஷ்டப்படி எல்லாஞ்செய்ய நமது ஆண்டவன் அனுக்கிரகிப்பான். இதற்குச் சந்தேகம் இராது. இது உண்மை. இந்த உண்மை தங்களுக்குத்தான் தெரியும். ஆதலால், தங்கள்மட்டில் இது தெரிவித்தேன்.

ஐயா, நானே புத்திதெரிந்த நாள் தொடங்கி, இது பரியந்தமும். **இந்தப் பிண உடம்பும், இதற்குக் கொடுக்கின்ற பிண்ட துண்டங்களும் பெருஞ் சுமையாக இருக்கின்றதே!** ஐயோ, இது என்றைக்குத் தொலையும்? என்று எண்ணி எண்ணி இளைத்துத் துன்பப்படுகின்றவனுக இருக்கிறேன். அப்படிப்பட்ட இந்த நாய்க்கு, பணம் என்ன செய்ய? ஐயா, என்னைக் குறித்துத் தாங்கள் பண விஷயத்தில் பிரயாச மெடுத்துக் கொள்ளவேண்டாம்.

19. **நான், இத்திசைக்கண், வந்தபின், இங்ஙனமிருந்து** தங்களிடத்திற் போந்த சில பாடல்களில் ஒன்றும் வெளிப்படா திருத்தல் வேண்டும். என்னை யெனில், நான் இங்ஙனம் வந்த பின்னர் **சிதம்பர விஷயத்தில் தோத்திர மாலைகளுஞ் சாத்திர மாலைகளுமாகச் சுமார்—200 மாலைகள் செய்யப்பட்டிருக்கின்றன. அவைகள் வெளிப்படும்போது வெளிப்படுத்திக் கொள்ளலாம்.** இது நிற்க, முன்னோர் கடிதத்தில் நான் குறித்த பாயிரத்தை இன்னுஞ் சில தினஞ் சென்ற பின்னர் அனுப்புகிறேன். தற்காலம் என் நினைவு விரிதற்கின்மையால், தாங்கள் தேகத்தை ஜாக்கிரதையாகப் பாராட்டிக் கொண்டு வரவேண்டும்,

20. **தாங்கள்,** நமது சாமி அவர்களைக்கொண்டு உபசாந்தி செய்து கொண்டு அதிக உழைப்பெடுத்துக் கொள்ளாமல் ஜாக்கிரதையாக வரவேண்டும், **கடினமான ஔஷதங்களைக் கொள்ளவேண்டாம்.**

VALLALAR GROUPS



முசுமுசுக்கை சமூலங் கொண்டுவந்து இருமலுக்குப் பசும்பாலில் ஊற வைத்து உலர்த்தி இடித்துச் சூரணமாக வைத்துக்கொண்டு, நித்தியம் காலையில்,—தேயிலைத் தண்ணீர் காய்ச்சிச் சாப்பிடுவதுபோல்,—ஜலத்தில் போட்டு சுண்ட வைத்துப் பசும்பால், சர்க்கரை, மிளகுப்பொடி கலந்து, கொஞ்சம் கொஞ்சமாகச் சாப்பிட்டு வரவேண்டும். இதை சாமிகளுக்குத் தெரிவித்து, அவரைக்கொண்டு செய்வித்து சாப்பிட்டுக்கொண்டு வரவேண்டும். உத்தியோகம் தடையாயிருந்தால் அதைவிடுத்து தேசுத்தைப் பக்குவப்படுத்திக் கொள்ளுங்கள். தேகம் பக்குவ மான பின்பு சிவானுக்கிரகத்தால் உத்தியோகம் சம்பாதித்துக் கொள்ளலாம்.

**21.** தமது சுப சரித்திர விபரங்களை அடிக்கடி கேட்க விருப்பமுள்ள வனாக இருக்கிறேன்.

நான் வைகாசி மாதம் 30-தேதிக்குள்ளே அவ்விடம் வருவேன். அவசியம் தியாகராஜப் பெருமானையும், உன்னையும் காணவேண்டும் என்கிற விருப்பம் விசேஷமுள்ளவனாக இருக்கிறேன். ஆதலால், வருவது நிச்சயம் நிச்சயம். இது அன்றி, பகவத் பக்தியிற் சிறந்தவராகிய வரதாசாரிய சுவாமிகள் திருவையிந்திரபுரத்துக்கு வந்ததாகக் கேள்விப்பட்டேன். அந்தச் சுவாமிகளைச் சென்னபட்டணத்தில் தாம் கண்டால் ஒன்று சொல்லவேண்டுவது. அதென்ன வெனில்,

'பாலும் நீரும் போலும் பார்ப்பன சிநேகம்'
என்று நான் தெரிவித்ததாகத் தெரிவிக்க வேண்டும்.

**22.** கல்வி கேள்விகளிற் பயின்று, அன்பறி வொழுக்கங்களிற் சிறந்து அருளொடு கிளர்ந்த ஆக்கத்தினுயர்ந்த குணமணியாகிய தங்கட்கு:—அரிபிரமாதியர்கள் எத்துணையும் பெறுதற்கரியதாகிய சிவசம்பந்தத்தை. முன் செய்த தவப் பயனால் பெற்றனம். அங்ஙனம்பெற்ற நாம், சிவானந்தபோக சாத்தியத்தைக் காலமுண்டாக அடைதல் வேண்டும். அதனை அடைவதற்கு. சிவபஞ்சாக்ஷர தியானமின்றி. வேறு ஏதுக்கள் ஒன்றுமின்று. இஃது திருவருளாணை என்னின், நாம் செல்லுங் காலமெல்லாம். சித்தசுத்தியோடு சிவபஞ்சாக்ஷர தியானத்தில் இருத்தல் வேண்டும். வரவுக்கு ஒத்த செலவோடு வாழ்தல் வேண்டும். "செல்லும்போது செலுத்துவேன் சிந்தையை; வெல்லும்போது விடுவேன் வெகுளியை, இஃது நமது கடமை".

**23.** தாம் தடை செய்யவேண்டாம், எந்தக் காலத்தில்,—எந்த இடத்தில்,—எந்த விதமாக,—எந்த மட்டில்,—எதை—அனுபவிக்க வேண்டுமோ—அதை, அந்தக் காலம், அந்த இடம், அந்த விதம், அந்த மட்டும், பொருந்தப் பொசிப்பிக்கின்றது திருவருட் சத்தியாயிருந்தால்.—நமக்கென்ன சுதந்திரமிருக்கின்றது. எல்லாம் திருவருட் சத்தி காரியமென்று அதைத் தியானித்திருக்க வேண்டும். உண்மை இது. இதைக்கொண்டு தெளிந்திருக்க வேண்டும்.

**24** நாம் ஜாக்கிரதையாக நமது தேகத்தை உபசரித்து வரவேண்டும். இனி விசேடமான அலுவல் நேரிடுகிற பரியந்தம் இப்போது நேரிட்டிருக்கிற அலுவலைப் பார்த்துவர வேண்டும். என் எண்ணத்தின்படி ஆண்டவன் விரைவில்



தமக்கு விசேஷ சவுக்கியத்தை உண்டு பண்ணுவார் என்கிற நம்பிக்கையை யுடையவனாக இருக்கிறேன். தாம் இடைவிடாது பரமசிவமே பொருளெனக் கொண்டுப் பஞ்சாக்கரத்தையே சிந்தித்து வரவேண்டும்.

மருவாணைப் பெண்ணாக்கி யொருகணத்திற் சுண்விழித்து வயங்கு மப்பெண்
உருவாணை யுருவாக்கி யிறந்தவரை எழுப்புகின்ற வுறுவனேனும்
கருவாணையுற விரங்கா துயிருடம்பைக் கடிந்துண்ணும் கருத்தனேல்எங்
குருவாணையெமது சிவக்கொழுந்தாணை ஞானியெனக் கூறொணுதே—வாழ்க!

2-ந் திருமுறை—பதிகம் 100—அறநிலை விளக்கம்

**25.** சிரஞ்சீவி அன்பு, அறிவு, முதலிய சுபகுணங்களிற் சிறந்த தங்கட்கு, சிவானுக்கிரகத்தால் தீர்க்காயுளும், சகல சம்பத்தும், மேன்மேல் உண்டாவனவாக. அவ்விடம், இன்னும் சில தினத்தில் அவசியம் நான் வருவேன். வந்தபின்பு தங்கள் வருத்த மெல்லாம் சிவபெருமான் திருவருளால் நிவர்த்தி யாய் விசேஷ சவுக்கியம் நேரிடுமென்று துணிந்திருங்கள் ம-ா-ா-ஸ்ரீ திருவேங்கிட முதலியார் காலஞ் சென்றதைக் குறித்து விசாரப் படுகிறேன. ஆயினும், அது அரிபிரமாதிகளுக்கும் உள்ள காரியம. ஆதலால் புதிதல்ல வென்று துணிந்தேன். சிவபஞ்சாக்ஷர தியானத்தோடு ஜாக்கிரதையாக இருங்கள் அஞ்சவேண்டாம். சிரஞ்சீவி.

**26.** இரமலிங்க சுவாமி யென்று வழங்குவிப்பது என் சம்மதமன்று. என்னை,—ஆரவாரத்திற்கு அடுத்த பெயராகத் தோன்றுதலில்.—இனி அங்ஙனம் வழங்காமை வேண்டும்.

ஜீவகாருண்யமும் சிவானுபவமும் அன்றி, மற்றவர்களை மனத்தின்கண் மதியாதிருத்தல் வேண்டும். சிரஞ்சீவி சிரஞ்சீவி.

**27.** தாங்கள் சிவத்தியான சகிதராய் வரவுக்குத் தக்க செலவுசெய்து கொண்டு தேகத்திற்குத் திடமுண்டாகும்படி உபசரித்துக் கொண்டு ஜாக்கிரதை யோடு இருக்கவேண்டும். படிப்பிக்கிற விஷயத்தில் அதிக அதிக்கிரமப் பிரயாசை எடுத்துக் கொள்ளப்படாது,

**28.** தேகத்தைப் பக்குவமாகப் பாராட்டிக் கொண்டு சிவசிந்தையும் ஜீவகாருண்யமும் மாறுமல், ஜாக்கிரதையோடு இருப்பீர்களாக. இதை சமரச வேத சன்மார்க்க சங்கத்தவர் அல்லாதவர்களுக்கு வெளிப்பட வாசிக்கப் படாது. வேணும் சிரஞ்சீவி சிரஞ்சீவி.

**29.** தாம் தேக முதலிய கருவிகளைச் செவ்வனிருத்தி நடத்தமேண்டு மென்று எழுதுவது தவிர வேறொன்றும் எழுதுவது அவசியமாகத் தோற்றவில்லை. 'நமது சிவபெருமான் திருவடிகளையும். சிவ பஞ்சாக்ஷரியையும் இடைவிடாமல் தியானஞ் செய்து வரவேண்டுமென்பது ஒன்றே முக்கியம்' என்று தமது குறிப்பிற் காணப்பட்டது. ஆகலிற் குறித்தே வில்லை. ஜாக்கிரதையோடு இருக்க வேண்டும்.

VALLALAR GROUPS



30. என் எண்ணமொன்று இறைவன் எண்ணமொன்ருனல், அறிவறிந்த உமக்கு இவ்விஷயத்தில் இன்னும் விரிக்க வேண்டுவதென்ன! இருப்பது என் எண்ணம். 'கருத்தன்' எண்ணம் எவ்வண்ணமோ தெரிந்ததில்லை. தாம் தேக முதலிய கருவிகளை இயற்பட நடத்தல் வேண்டும். சிவத் தியானத்தோடு ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். நான் அவசியம் திருவருளை முன்னிட்டு சில காலத்தில் அங்ஙனம் வருவேன். துணிவு திண்ணம்.

31. சடமும் துக்கமும், அநித்தியமுமாகிய உலக போகத்தை விரும்புகின்ற மற்றவர்களைப் போல மயங்குதல் வேண்டாம்.

32. ஆகலில், சூழும் வண்ணம் சூழ்க, அன்றி, சிவசிந்தனையுஞ் சீவகருணையுங் கைவிடாது ஓங்குக. வேறு விடயங்களைச் சந்திசெய்யும், பந்த சந்தி சத்தியாலே மாருது விழித்திருக்க. சுபம் பெறுக.

33. தமதிதயம் சிவபெருமான் திருவடிக் கண்ணே யன்றிப் பிறவொன்றினும் பொருந்தாதிருத்தல் வேண்டுமென்றும் பிரார்த்திக்கின்றேன். தாம் உலகியற்கண் ஒழுகுங்கால் ''கழிநடை யொருவன் கட்பார்வைபோன் ளொழுகல் வேண்டும்'' என்றும் பிரார்த்திக்கின்றேன்.

34. உனக்கு முக்கியம் தெரிவிக்க வேண்டியது ஒன்று, என்னென்ருல்—''பழமை பாராட்டலும், கண்ணேட்டம் செய்தலும் சுற்றந் தழுவலும், அவசியம் சமுசாரிக்கு வேண்டும்''—என்பது நீ மாத்திரம் அடிக்கடி கவனிக்க வேண்டும்.

35. தங்கள் தேக விஷயத்தில் அதிகமாக ஜாக்கிரதையாக சிவத் தியானத்தை விடாமல் வரவுக்குத் தக்கபடி நடக்கவேண்டுமென்று மிகவும் கோருகிறேன்.

36. தேக முதலிய கருவிகளைக் கடைக்கணித்து வருக. சிவபிரான் திருவடித் துணையன்றி வேறு துணை நமக்கு இன்மையின் அவற்றை இடைவிடாது வினைக.

37. தங்கள் சுபசரித்திர விபவங்களை அடிக்கடி தெரிவிக்க வேண்டும் தாங்கள் சிவசிந்தனையை விடாமல் சர்வ ஜாக்கிரதையோடு லௌகீகத்தை நடத்திவர வேண்டும்.

38. புண்ணியப் பயனுல் பெற்ற தேகத்தைக் கூடியவரையில் ஜாக்கிரதையோடு பக்குவ மார்க்கத்தில் நடத்தவேண்டும்.



39 தாங்களும் சிவத்தியான சகிதர்களாய் தேக விஷயத்திலும் மற்றைக் குடும்ப விஷயத்திலும் சர்வ ஜாக்கிரதையோடு இருக்கவேண்டும்.

40. தாங்கள் 'சிவாய நமவென்று சிந்தித்திருப்பார்க்கு அபாயம் ஒருநாளு மில்லை : என்பதைக் கடைப்பிடிக்க வேண்டும்.

41. தாங்கள் தேக முதலிய கருவிகளை ஜாக்கிரதையாக நடத்திக் கொண்டு சிவத்தியான சகிதராக இருங்கள்.

42. தேகதிட முண்டாகும்படி உபசரித்துக் கொண்டு ஜாக்கிரதையாக தியானித்துக் கொண்டிருக்க.

43. தேக முதலிய கருவிகளைச் செவ்வையாக நிறுத்தி—பஞ்சாக்ஷரியும் திருவடியும் ஒன்றே நமது நேயம்.

44. செல்லும்போது செலுத்துவேன் சிந்தையை வெல்லும்போது விடுவேன் வெகுளியை.'

45. தியான மயமானல் பொசிப்பு மாறும்.

46 சுக்கிலம் மேலேற்றும் பழக்கத்திற்குப பத்தியம்; தூக்கம், சோம்பல் ஆகாது,

1. ஹிதமஹிதம் கெட — திரோதனம் கெடும்;

2. இருவினை யொப்பால் — மாமாயை பஞ்சகிருத்தியம் போம்.

3. முன்னிலையான அவன் அவள் அது நீங்கிப் பரமாகக் கண்டால் — கர்மம் கெடும்.

4. வடிவின் வாசனை கெட — மாயை நீங்கும்.

5. சிவானுபவம் மேலிட — ஆணவம் கெடும்.

6. கடவுளைக்காண உண்மையாக விரும்பில் அமுதகண்ணீர் மாறுமா? ஆகாரத்தில் இச்சை செல்லுமா?

7. 'இங்கு வந்திருக்கிறவர்களெல்லாம். அதிகாரம் பண்ண வந்திருக்கின்ருர்கள். நீ என்னைப்போல் ஏழை. தனிமையாய் ஜாக்கிரதையாய் இரு.

8. 'கவலை வேண்டாம். உள்ளும் புறமும் ஒரு துலையாக வள்ளல் இருக்க வாட்டம் ஏன்'?

9. அநித்திய மென்பது, அரிபிரமாதிகளுக்கு உள்ளது, முத்தியடையும் வரையில் தேகம் இருக்க வேண்டும்.

VALLALAR GROUPS



'உடம்பார் அழியின் உயிரார் அழிவார்
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவு மாட்டார்
உடம்பை வளர்க்கு முபாய மறிந்தேன்
உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே' —(திருமந்திரம்)

'துஞ்சினர் செத்தாரில் வேறல்லர்
எஞ்ஞான்றும் நஞ்சுண்பார் கள்ளுண்பவர். — (குறள்)

10. **தத்துவ ரூபம் :**—பூதமுதல் நாத தத்துவ மீருக உள்ள வெல்லாம் நாமல்ல வென்று அறியும் போதம்.

11. **தத்துவ தரிசனம் :**— தத்துவம் சடம். சடம் நம்மையறியாது; நாம் சித்துருவென்று அறியும் போதம்.

12. **தத்துவ சித்தி :**—சித்துருவினை மறைத்தது இ:தென்றோர்தல்.

13. **ஆத்ம ரூபம் :**—ஆணவமகன்று ஆசாரியனருளால் தன்னை யடைதல்.

14. **ஆத்ம தரிசனம் ;**—நாம் கித்துருவன் என்று மகிழ்தல்.

15. **ஆத்ம சுத்தி :**—செயலற்று ஈசனருல் அடைதல்.

16. **சிவ ரூபம் :**—சிவமாகத் தரிசித்தல்.

17. **சிவ தரிசனம் :**—உயிர் ஆனந்திப்பது.

18. **சிவ யோகம் :**—எல்லாந் தானக யோகு செய்தல்.

19. **சிவ போகம் :**—சிவத்தோடு **அத்துவிதமாகி** நிற்றல்.

---

47. 1. **மகா கற்பம் :**—மூலப் பிரகிருதியி லின்று உண்டாம் சிருஷ்டி முதல், பிரமாவின் ஆயுள் வரையில் ஏற்பட்டுள்ள காலம்.

2. **அவாந்தர கற்பம் :**—சதுர்முகப் பிரமனுடைய ஒரு நாட்குரிய காலம்.

இந்த இரண்டு கற்பத்தின் நடுவே ஒவ்வொரு **ஒடுக்க** முண்டாகிறது. அது **1. நித்தியம். 2. நைமித்திகம். 3. பிராகிருதிகம். 4. ஆதியந்தகம்** என நால்வகைத்தாம்:

1. **நித்தியப் பிரளயம் :**—மரணமே நித்தியப் பிரளயம்.

2. **நைமித்திகப் பிரளயம் :**—பிரமனுடைய கற்ப முடிவிலுண்டாகின்ற ஒடுக்கமெதுவோ அது, நைமித்திகப் பிரளயம்.

3. **பிராகிருதிகப் பிரளயம் :**— மகத்துவ முதல் விசேட பரியந்தம், ஒடுக்கத்தை யடைவது, பிராகிருதிகப் பிரளயம்.

4. **ஆதியந்திகப் பிரளயம் :**— தத்துவஞானத்தால் யோகிக்கு உண்டாகும் ஒடுக்கம், ஆதியந்திகப் பிரளயம்.

**அருட்பெருஞ்ஜோதி**

---



ஓம்

அருட்பெருஞ்ஜோதி

# 81. ஒஷதியின் குணுனுபவம்

## (அகராதி)

**திருச்சிற்றம்பலம்**

1 **அகத்தி** - வேக்காடு போம்.
2 அசோகு - குன்மம் போம்.
3 அதிங்கு - கால், கை, நோய் நீக்கம்; கர, பாத வியாதி நாசம்.
4 அத்தி - பெரும்பாடு போக்கி; உஷ்ண சமனி.
5 பேயத்தி - தம்பனை.
6 அமுக்கிரு - க்ஷயம் போக்கி; வாயு போக்கி; வங்கம், நாகம், சிந்தூரி.
7 அம்பளங்காம் - கல்லுப்புக் கட்டு.
8 அரக்காம்பால்-சிலேட்டுமம்போக்கி
9 அரசுக்கு - புத்திவர்த்தினி.
10 அரைக்கீரை - சுரம் போக்கும்; கருவங்க பற்பி.
11 அலரி - நடுக்கல் போக்கி.
12 அவிரிக்கு - லிங்கங் கட்டும்; சகல விஷம் போம்.
13 அழிஞ்சில் - விஷ மர்த்தனி.
14 ஷை மூலதைலம் - விரோசனி; லிங்க பந்தனி.
15 அழுகண்ணி - சூதபந்தனம்.
16 தொழுகண்ணி - துணித்த சதை கூடும்.
17 அனிச்சை - சொறிபோக்கி.
18 அஷ்டிமதுகம் - பிரமியங்கள் போம்.
19 **ஆகாச கருடன்** - சூத பந்தனம்; அண்ட வெண் கரு.
20 ஆடாதொடை - சுராரி.
21 ஆடுதின்னுப் பாளை - நாகபந்தனம்; புழுக்கொல்லி.
22 ஆதண்டை - பீனிஸம் போக்கி; சிரநீர் போக்கி.
23 குழலாதண்டை - சரக்கெல்லாம் கட்டும்.
24 செவ்வாதண்டை - சூதவங்கி.
25 ஆதளைக்காய் - சூதஞ் சாம்.
26 ஆமிரம் - வெடியுப்புக்கட்டும்.
27 ஆயில் - வாதம் போம்.
28 ஆலுக்கு - புழுக்கள் போம்.
29 ஆவாரை - ஈயச் செந்தூரி.
30 ஆற்றுமருது - வழலைபோக்கி.
31 மாட்டுச்செவி மருது - வெள்வங்க பற்பி.
32 குதிரைச்செவி மருது - கருவங்க பற்பி.
33 இங்குணம் - லிங்கமிறுகும்.
34 இச்சில் - குஷ்டம் போக்கி.
35 இரு கொள்ளு - சத்து ஆம்.
36 காட்டுக்கொள்ளு - காரங் கட்டும்.
37 நாட்டுக்கொள்ளு - சாரங்கட்டும்.
38 இதளை - சூலைபோம்.
39 இமிற்கிழங்கு - இருளை நீக்கி.
40 இருப்பவல் - மாகட்டி.
41 இரும்பிலி - கெந்தி தைலம்.
42 இருவாட்சி - ரத்த பித்தம் போக்கி.
43 இருவேலி - தாபத்தைப் போக்கும்.
44 இருள் - குடாரம் போக்கி.
45 பாலிருள் - சூத பந்தனம்.
46 இருள் வீடு - காந்த சத்து.
47 இலந்தை - கடுப்புப்போக்கி.
48 இலவம் பிசின் - சுக்கிலங்கட்டும்.
49 இரவு - அதிசார நீக்கம்.
50 இலுப்பை - விரணம்போக்கி.
51 மலையிலுப்பை - வாதம் போக்கி.
52 ஈகை - தாளக செந்தூரம்.

VALLALAR GROUPS



53 உகாய் - அப்பிரகஞ்சத்து.
54 உச்சிச்சில் - குதிரைப் பல்கட்டும்
55 உத்தாமணி - மாந்தம் போக்கி; பவள பற்பி; அய சிந்தூரி.
56 ஊமத்தை-சூத வெண்ணெயிறுக்கி.
57 எருக்கு - சன்னி போக்கி; க்ஷீர மாணம் போக்கி.
58 வெள்ளெருக்கு - சாரங்கட்டி.
59 எருமைக் கனைச்சான் - தேகசித்தி.
60 எலிச்செவி - நீர்ச் சுருங்கி.
61 எலுமிச்சை - பித்தம்போக்கி.
62 ஒட்டை - புதரி நீக்கம்.
63 ஒதி - விரண மாற்றும்.
64 ஒருகொம்பு - ரஜிதச்செம்பு.
65 ஓடமெட்டி - காய முறுதி.
66 ஓமை - தினவு போக்கும்.
67 ஓரிலைத் தாமரை - அழத்திபோம்.
68 கக்கரி - நீர் பெருக்கும்
69 கசப்புப் பசளை - சூதங்கட்டும்.
70 கஞ்சா - யோகி.
71 கஞ்சாங் கோரை - குளிர்போம்.
72 கடம்பு - பாஷாணபந்தனம்.
73 நீர்க்கடம்பு - நாக பந்தனம்; ஈயச் செந்தூரம்.
74 வெண்கடம்பு - சூத பந்தனம்.
75 கட்டுக்கொடி - உப்புக் கட்டு; சூத வெண்ணெய்க் கட்டு.
76 கட்டுமா - தாபம் போக்கும்.
77 கணம்பு - சிலை மெழுகாம்.
78 கண்டங் கத்தரி - சுவாச மர்த்தனி.
79 கப்பட்டி - குதிரைப் பல் மெழுகு.
80 கமுகு - பற்குறுதி.
81 கரிசாலை - பாண்டு மர்த்தனி; க்ஷய மர்த்தனி; வசீகரி.
82 கருங் காந்தள் - அறுத்த துண்ட மொன்றும்.
83 கருங்காலி - குஷ்டாரி.
84 வெண் கருங்காலி-நாகமணி பந்தனி
85 கருங் கொள் - உருக்கினமாதல்.
86 கரு நாயுருவி - கர்பார்த்த பிரசவம்.
87 கருநெல்லி - சகல சித்தி.
88 கரும்பு - கல்லடைப்புப் போக்கி; பசாசு போம்.
89 வெண்கரும்பு - க்ஷயம்போக்கி.
90 கல்செம்பு - சூத குரு.
91 கல்புகுவெள்ளி - காயசித்தி.
92 கல்லரளி - தங்கச் செம்பு.
93 கல்லாரை - சூதங் கல்லாம்.
94 கழற்கொடி - விரைவாத மர்த்தனி.
95 வெண்கழற்கொடி-குன்மமர்த்தனி.
96 கழுதை மான் புள்ளி - வெள்ளீயங் கட்டும்.
97 களவு தும்பை - மூலம் போக்கும்.
98 களாவிழுது - வெடியுப்புக்கட்டு.
99 கருப்பறுகு - காசம் போக்கி.
100 வெள்ளறுகு - மேகம் நீக்கி; சுரம் போக்கி.
101 பவளவறுகு - சுவாசம் போக்கி.
102 கற்றாழை - வங்க சிந்தூரி.
103 செங்கற்றாழை - சிந்தூரத்தாதி.
104 சாகோளி - சலங்கணீக்கி.
105 சீகக்ஷ காகோளி - திறமுண்டாக்கி.
106 காஞ்சிரம் - காயசித்தி.
107 காஞ்சொறி - கபகாரி.
108 பெருங்காஞ்சொறி - கபகாரி.
109 காட்டாத்தி - கிராணி நீக்கி.
110 காட்டாமணக்கு-அயலோக வங்கி.
111 காட்டுக் கருணை-கெந்தி வெள்ளை.
112 காட்டுத்தி - கண்டர் வெளுப்பாம்.
113 காட்டு வெந்தியம் - தாம்பர தங்க பற்பி.
114 காரெள்ளு - திலகமாம்.
115 காவட்டம்புல் - மந்தம்போக்கி.
116 கானல்மா - பித்தனைீறும்.
117 கிளிமூருக்கு - அயச் செந்தூரம்.
118 கீழாநெல்லி - சாமாலை போக்கி; பித்தம் போக்கி.
119 குப்பைமேனி - உப்புக்கட்டு.
120 குமிள் - சன்னி மர்த்தனி.
121 பெருங்குமிள் - சுரமர்த்தனி.
122 குருதிமாறிக்கு - துரிசுச் செம்பு.
123 குளிரி - உப்புக் கட்டி.
124 குளுந்தகொள்ளி - குக்குடாண்ட ஜனிதி.
125 குறட்டை-கோழை பீனஸம்போம்
126 குறிஞ்சி - மயிலிறகு சத்ரா[illegible].
127 குறிஞ்சூலி - அண்டமெழுகு.
128 குன்றிமணி - காரங்கட்டி.



129 கூகை நீறு - உஷ்ணம் போக்கி.
130 கொக்கிறகு - சாதிலிங்க மைனி.
131 கொடிக்கள்ளி - பாஷாணக்கட்டு; நாக மணல்; நாக பஸ்பம்.
132 இலைக்கள்ளி - பாஷாணஞ்சாம்.
133 திருகுகள்ளி - கெவுரி கட்டும்.
134 மான்செவிக்கள்ளி - நாகபற்பி; தாளகந்தனைமெழுகு.
135 கொடிக்கொத்தான் - பாஷாணங் கட்டும்.
136 கொடிதும்பை - சூதங்கட்டும்.
137 கொடிவேலி - சீதபேதி கட்டும்.
138 ஜை மூல தைலம் - லிங்கங் கட்டும்.
139 செங்கொடிவேலி - செந்தூராதி.
140 கொட்டைக்கரந்தை - வாக்குதாரி.
141 நாறுங்கரந்தை - காயசித்தி.
142 கொத்தான் - பித்தம்போக்கி.
143 கொம்மட்டி - வாதமாற்றும்.
144 கொன்றை - கிருமி மர்த்தனி.
145 கோடகசாலை - வயிறு புழுப்போம்.
146 கோரைக்கிழங்கு - தோஷாரி.
147 கோவை - ஜலக்கழிச்சலாற்றி.
148 தீங்கோவை - பரவிந்துபந்தனி.
149 சங்கங்குப்பி - குஷ்டம் போக்கி; கறப்பான் போக்கி.
150 சடைச்சி - விரியன் விஷம்போம்.
151 கப்புச் சடைச்சி-கண்டர் வெள்ளை.
152 சதுரக்கள்ளி - பாஷாண மைனி.
153 சத்திச்சாரணை - காரீய பற்பி; வாத நாசி.
154 சத்துகம் - உப்புக் கட்டு.
155 சர்க்கரை - தாகம் போக்கி; மயக்கம் போக்கி.
156 சரளம் - தங்க நீற்றி.
157 சற்பாக்ஷி - பாம்பு விஷம்போம்.
158 சன்னை - சிலைகட்டும்.
159 சாசி - பாம்பு, பக்ஷி கடிபோக்கி.
160 சாயாமரம் - மா வேதை.
161 சாறடை - திமிர்வாதமர்த்தனி.
162 சித்தாமுட்டி - சுரமர்த்தனி; சூதபந்தனி.
163 பேராமுட்டி - சர்வசுர மர்த்தனி.
164 சித்தீஞ்சில் - சிர தோஷம் போம்.
165 பேரீஞ்சில் - சுரங்கள்போம்.
166 சிவப்பு நெல்லி - காயமுத்தும்; காய மழுத்தும்.
167 சிவதை - விரோசனி.
168 சிறுகல்லு - கல்லுப்பு கட்டு.
169 சிறுநிலக்கு - நரைகள் போம்.
170 சிறு புள்ளடி - கெணங்கள் போம்.
171 சிறு விடுகொள்ளு-தண்ணீர் கட்டு.
172 பெருவிடுகொள்ளு - சாரநாசி.
173 சின்னக்கை - தைலத்தாதி.
174 சீந்தில் - காயசித்தி.
175 சீவகம் - கல்லுப்புக் கட்டு.
176 சுண்டைக்காய் - சுரங்கள்போம்.
177 சுவ சற்பாக்ஷி-இங்குலிகங்கட்டும்.
178 சுனை மரம் - சூத பந்தனம்.
179 செங்கத்தாரி - அயச்செப்பி.
180 செங்கழுநீர் - திரிதோஷம் போக்கி; வசீகரி.
181 செண்பகம் - மருக்கள் போக்கி; பருக்கள்போக்கி.
182 சிறு செண்பகம் - பித்தம் போக்கி.
183 செந்தாடுபாவை - தங்கச் செம்பு.
184 செந்திராய் - சூதச்செம்பு.
185 செப்பு நெருஞ்சில் - சிறுநீர் உஷ்ணம் போகும்.
186 செம்பரத்தை - சாதிலிங்கமைனம்.
187 செம்பல்லி - சூதங் கட்டும்.
188 செம்பை - தினவு போக்கி; சுரம் போக்கி.
189 செம்மரம் - தங்கச் செம்பு.
190 செம் முள்ளி-சிலேட்டும மர்த்தனி.
191 செருந்தி - பாஷாணங் கட்டும்.
192 செகுப்படை - சிலேட்டுமம் போம்; மேகம் போம்.
193 செஞ் சதுரக்கள்ளி-தங்க தாம்பரி.
194 செவ்வகத்தி - சாதிலிங்க மைனி.
195 செவ்வந்தி-சித்தப்பிரமை போக்கி.
196 குங்குமவந்தி - கோழைபோக்கி.
197 செவ்விறகு - அயச் செம்பு.
198 செழுமலர்க்கொன்றை-புழுநீக்கும்
199 பெருமலர்க்கொன்றை - கிருமி போக்கும்.
200 சேவகனர் கிழங்கு - கடிகை போக்கி.

VALLALAR GROUPS



201 சோனகப்பூ - பாதரஸமாம்.
202 ஞாழல் - தினவு போக்கி.
203 தகரை - மாந்தம் போக்கி.
204 தண்ணீர் விட்டான் - சிங்கி செம்பு.
205 தந்த சகுரி - இரும்புருக்கி.
206 தமனகம் - தம்பனே.
207 தலைச்சூடுவள்ளி - ரசங்கட்டும்.
208 தழுதாழை - வாதம் போக்கி.
209 தாமரை - கண்குளிர்ச்சி.
210 ஷை வளையம் - நஞ்சுமுறிச்சி.
211 ,, மணி - வசிகரி.
212 ,, தாது - மேகம் போக்கி.
213 ,, கிழங்கு - ஆண்மை உண்டாக்கி; சூத பந்தனி.
214 கற்ருமரை - லோகச் செம்பி.
215 வெண்டாமரை - சூதபந்தனி.
216 தாழை - சூதசுத்தி.
217 தாளிப்பனை - சலங்கள்போம்.
218 திப்பிலி - தாது விர்த்தி.
219 திமிசு - சாரங் கட்டு.
220 திராய் - சன்னி போக்கும்.
221 தில்லை - பாஷாணஞ் சாம்.
222 திலகம் - தொட்டிச் சிந்தூரம்.
223 தின்பு - சிலை கட்டு.
224 தும்பி - சூத பற்பி.
225 சிறுதும்பி - சோகம் தீர்க்கும்.
226 தும்பை - சுரங்கள் போக்கி; சில விஷம் போக்கி; சிரோரோகம் போக்கி.
227 பேய்த்தும்பை - தோஷம்போக்கி.
228 துரும்பு - சூதபற்பி.
229 துளசி - நாகத்தைச் சுன்னிக்கும். தோஷம் போக்கி.
230 கருந்துளசி - செந்தூரத் தாதி.
231 இடுக்காட்டுத்துளசி-இரைப்புநீக்கி
232 தூதுவளை - கபநாசி; அறிவு விர்த்தி.
233 தெற்கை - கிரிச்சம்போக்கி; சுளுக்கு போக்கி.
234 தென்னை - மருகைஷபோக்கி.
235 தென்னை பூ - உபரச பந்தனி; மல பந்தனி; சுரோணித பந்தனி; உஷ்ண மர்த்தனி.
236 தென்னை கோம் - காயசித்தி.
237 தென்னை பழம் - ஈடுமுறித்தல்; அறிவு விருத்தி.
238 தேக்கு - சிரங்கு நீங்கி.
239 தேட்கடை - சிரங்கு நீங்கி.
240 தேற்று - சல மலினுரி.
241 தேவதாளி - சூத பற்பி.
242 தாளி - இரைப்பு, இருமல் மூர்ச்சை போக்கும்.
243 நறுந்தாளி - சிலேட்டுமம் போம்.
244 நாகதாளி - நாகங் கட்டும்.
245 நச்சுப்பூலா - செந்தூர குருவாம்.
246 கந்தியாவட்டம் - கண்ணுக்காம்.
247 நரிமுருக்கு - க்ஷயம்போம்.
248 நல்லாரை-சூதவெண்ணெயிறுகும்
249 நளந்துவயம் - நாகசேந்தூரி.
250 நறும் பிசின் - நாகக் கட்டு.
251 நறு முருங்கை - நாகரச பந்தனம்.
252 நறு வெளி - நாக்குப் புண்ணுறும்.
253 நன்னுரி - தேகசித்தி.
254 நாகக்கொட்டை தைலம் - நாகங் கட்டும்.
255 நாக சிங்கி - நாக பந்தனம்.
256 நாகப்பாலை - தாம்பர செந்தூரம்.
257 நாணல் - துன்மாங்கிஷம் போக்கி.
258 நாயுருவி - மந்தாரி; குன்மகாரி.
259 ஷை லவணம் - சருவ வுபரச மர்த்தனி.
260 நாய் வேளை - மலங்கட்டும்.
261 நாவல் - விரணம் போக்கி; வங்கபற்பி.
262 நான்முகப்புல் - ஈய பற்பி.
263 நிலக்கடம்பு - அப்பிரகஞ் சத்து.
264 நிலச்சோதிக்கு-கண்டர்வெளுப்பு
265 நிலப் பனை - பாலையாம்; க்ஷயம் போக்கி; கரண ரோக மர்த்தனி
266 நிலவாகை - புழுக்கள் போக்கி.
267 நிலவுகாய் - சத்திறக்கி.
268 நீரரளி - அயச் செம்பி.
269 செவ்வரளி - தங்கச் செம்பி.
270 நீர்த்திப்பிலி - சன்னிபோக்கி.
271 நீர் முள்ளி - வீக்கம் போம்.
272 வெள்ளி நீர்முள்ளி - செம்பு குருவாகும்.
273 நீர்விரை - பைத்தியம் போகும்.



274 நெட்டி - நீரைக் கட்டும்.
275 நெபத்திகை - காயசித்தி.
276 நெய்ச்சிட்டி - சீத சுரம் போக்கி; குன்ம நாசி.
277 நெய்ம்ம மரம் - அரிதாரங் கட்டும்.
278 நெரிஞ்சில்—மூத்திரகிரிச்சமர்த்தினி
279 நெல்லி - கெந்திச் செம்பு.
280 நேர்வாளம் - பேதி.
281 நொச்சில் - கடுப்புப் போக்கி.
282 ஷை மூல தைலம் - லிங்கபந்தனி.
283 ,, பத்திரி - நீர்மர்த்தனி.
284 கருநொச்சி - கறப்பான் போக்கி; வங்க பற்பி.
285 பச்சை நாவி - சூதங் கட்டும்.
286 பதுமுகம் - பாலையாம்.
287 பருத்தி - பெரும்பாடு போக்கும்.
288 செம்பருத்தி - பித்தம் போம்.
289 பலாசு - பேதி யாற்றி.
290 முட்பலாசு - அரி தார நீறு.
291 பழுப்பாகல் - லிங்க பந்தனி.
292 பற்பாடகம் - சக்ஷாப்தம்.
293 பனை - வறுத்தி,
294 ஷை பூ - கப நாசி.
295 ,, குருத்து - க்ஷயம்போக்கி.
296 ,, மூலரசம் - சூத பற்பி.
297 ,, கிழங்கு - வறுப்பில் பற்பி; வறுத்தி.
298 பாகல்-பாஷாண தோஷ மர்த்தனி.
299 பாலிறில் - பாஷாணங் கட்டும்.
300 பாலை - சுளுக்குப் போக்கி.
301 திருகாமப்பாலை - பித்தாரி.
302 குடசப்பாலை - அதிசார மர்த்தனி.
303 வெட்பாலை - அயவங்கி; சூத சிந்தூரி.
304 பழப்பாலை - பித்தாரி.
305 பால்விழி - அயவங்கம்.
306 பாவட்டை - வாதம் போக்கும்.
307 பாற்பை - சவ்வீரங் கட்டும்.
308 பித்த ரோகினி - கண்டுறந்தி; கண் குளுத்தி.
309 பிரசூதிகை - வாயு ஹாரி.
310 பிரண்டை - வைர நீற்றி; சூத வெண்ணெய் பந்தனி.
311 பிரபுண்ரிகம் - அப்பிரகசத்து.
312 பிரமதண்டி - சூதங் கட்டும்,
313 பிரமி - வீக்கம், போக்கி; விரோசனி; வாத மர்த்தனி.
314 பிராமுட்டி - சாரஞ் சாம்.
315 பிறங்கு நாரி - வெடியுப்புக் கட்டும்; பொட்டிலுப்புக் கட்டும்.
316 பிறங்கை நாரிக்கு - கெவுரிக்கட்டு.
317 புங்கு - சூலை போம்.
318 ஷை பால் - ரண மாற்றி.
319 புல்லூரி - கருங்குட்டம்போம்.
320 புளிச்ச சிறுக்கீரை - சூதபந்தனம்; தாம்பர சிந்தூரி.
321 பிளிநறளை - திமிர் போக்கி.
322 புளியாரை - காய சித்தி : பித்த மர்த்தனி ; லவண சிந்தூரி ; அப்பிரேக சிந்தூரி.
323 புளிவஞ்சி - நாக ரசம்.
324 பனம்புளி - சாரங் கட்டும்.
325 புன்னை - விரண மாற்றும்: கிரந்திபோக்கி.
326 சுரபுன்னை - அரிதாரங் கட்டும்.
327 பூசபத்திரி - வசீகரி.
328 பூசனி - ஊறல் போக்கும்; வசீகரி.
329 பூதணக்கு - மால்தேவிக்கட்டு.
330 பூவரசு - சகல விஷ; குஷ்டம் போக்கி.
331 பூனைக்காஞ்சொறி - சிலேட்டும மர்த்தனி.
332 பூனைக்காலிப் பருப்பு - தம்பனி; சுக்கில பந்தனி.
333 சிறுபூனைக்காலி - நீரிறக்கி.
334 பெருங்கம்பி - வெள்ளியபற்பி.
335 பெருங்குரும்பை - பிறிவுக்காம்.
336 பெருங்குறிஞ்சி - கடுப்புப்போம்.
337 பெரு முள்ளங்கி - கிரிச்சரம் போக்கி.
338 சிறு முள்ளங்கி - கெந்திகட்டி.
339 ஆற்று முள்ளங்கி - சிலேட்டுமம் போக்கி.
340 சுவர் முள்ளங்கி - நாகபற்பி; உப்புக்கட்டி.
341 பெரு வாழை - ஈய செந்தூரி.
342 பேயன் வாழை - காய சித்தி.
343 ,, கிழங்கு - வழலைபோக்கி.

VALLALAR GROUPS



344 பேயன் பூ - சிந்தூரத்தாதி; வசிய சித்தி.
345 ஷை பத்திரி - உபரச பந்தனி.
346 ,, தண்டு - சர்வ விஷநாசி.
347 ,, பனி - உபரசாதி பவுதிக பந்தனி.
348 ,, லவணம் - சர்வ பவுதிக பந்தனி.
349 ,, பழம் - ஜீரணகாரி; மலம் போக்கி.
350 ,, காய் - குற்றம்போக்கி.
351 ,, பூ - சுக்கில பந்தி; சுரோணித பந்தி; மல பந்தி.
352 பேயன் மூலம் - மத நாசி.
353 இதர வாழைப்பூ - பெரும் பாடு போக்கி; பெரும் புழு போக்கி.
354 பேய்க்கடலை - கெந்திதைலம்.
355 பேய்க்கும்மட்டி - லிங்கங்கட்டும்.
356 பேய்க்கொள்ளு - சகல சத்துமாம்
357 பேய்ச்சுரை - விஷம் போம்.
358 பேய்த்துமிட்டி - பாஷாணங் கட்டும்.
359 பேய்த் துவரை - தாளக தைலம்.
360 பேய்ப் பீர்க்கு - கெந்தி தைலம்; கெந்தகத் தைலம்.
361 மற்றைப் பீர்க்கு - வாதசமனம்.
362 பேய்ப்புடல் - பித்தாரி.
363 பேராமல்லி - சுரங்கள் போக்கி.
364 சித்தாமல்லி - சலவை போக்கி.
365 பேர்சாரிபாதி - சூதபந்தனம்.
366 பைசாசப் பீர்க்கு - விஷம் போம்; பேதி.
367 பொடுதலை-வயிறு கடுப்பும்போம்; வெட்டை போம்; நீரொழுக்குப் போம்.
368 பொரும்பில் - விரணம் போக்கி.
369 பொற்றலை - காயசித்தி; சிந்தூராதி
370 பொன்மத்தை - சூதபந்தனம்.
371 கருமத்தை - கெந்திபந்தனம்.
372 பொன் வண்ணச்சாலி - தங்கமாம்.
373 பொன்னுங்கண்ணி - கண் ணொளி; உஷ்ண சமனி.
374 பொன்னுவாரை - ஈயசெந்தூரி.
375 மலை பொன்னுவாரை-வீரமெழுகு.
376 மஞ்சணத்தி - உப்புக் கட்டி.
377 மஞ்சிபத்திரம் - காந்தச் செம்பு.
378 மணத்தக்காளி - தணலாற்றி.
379 கருந்தக்காளி - கெந்திகட்டி.
380 மந்தாரை - பாஷாண மைனி.
381 மயிடவகம் - கெவுரிக்கட்டு.
382 மயூரசிகை - நாகபந்தனம்.
383 தாம்பரசிகை - சூத பந்தனம்.
384 மராமரம் - சூடங் கட்டு.
385 மரிதுடாரி - மால்தேவிபற்பி.
386 மருக்காரை - நசியத்துக்காம்.
387 மருதணி - அயச்செம்பி; கெந்தி கட்டி.
388 மருவகம் - தாகம் போம்.
389 மருள் - விரணாரி.
390 மலைமா - குடவனீறும்.
391 மலையத்தி - பேதிகட்டும்.
392 மல்லிகை - எண்ணெய் போக்கி.
393 கொடிமல்லிகை - தாரபற்பி.
394 ஆத்திமல்லிகை - மேனி அழகி.
395 மறிதொடரி - மால்தேவிபற்பி.
396 மாகாளி - மயக்கம் போம்.
397 மாஞ்சரோணி - கண் புகைச்சல் தீரும்.
398 மாதலை - அயமுருக்கி.
399 கொம்மட்டி மாதலை-சத்திபோக்கி.
400 மாமரம் - வாந்தி நிற்கும்.
401 மாவிலிங்கை - சன்னி நீக்கம்.
402 மான் செவிக்கள்ளி - நாகபற்பி; தாளகந்தலை மெழுகு.
403 முசுமுசுக்கை - க்ஷய மர்த்தனி; பவழ பஸ்பம்.
404 முடக்கொத்தான்-வாதம் போக்கி.
405 முடவாட்டுக்கால் - சவ்வீரங் கட்டும்.
406 முட்பலா - ஆண்மை.
407 முண்டிளி - சித்து.
408 முதியார் கூந்தல் - காரியபற்பி.
409 முத்தக்காசு - சுர தோஷம் போம்.
410 முத்துப் பூடு-மிர்த பக்ஷி சீவிக்கும்.
411 முத்துருக்கன்செவி - சூத பந்தனி.
412 முந்திரிப்பழம் - தோஷம் போக்கி.
413 புளிமுந்திரி - திரிதோஷம் போக்கி.
414 முருங்கை - கண் விரணம்போக்கி.



415 முருங்கை பூ - விந்து கட்டி. தாம்பர சுத்தி.
416 ஷை மூலம் - கட்டு டத்தி.
417 ,, பிசின் - விந்துகட்டி.
418 ,, பத்திரி - மலம் போக்கி.
419 ,, ஈர்க்கு - வாயுமர்த்தனி.
420 ,, வேர்ப்பட்டை - வங்கபற்பி.
421 புனல் முருங்கை - நாகங்கட்டி.
422 முல்லை - சோபந்தீரி.
423 முல்லைப்பேதம் - முத்தோஷம் போக்கி.
424 முளக்கரணை - கிரந்தி போம்.
425 முளிகாக்கு - கல்லுப்புக்கட்டு.
426 முள்முள்ளி விரை - சர்வ சரக்கு கட்டொடத்தி; தங்கச்சுன்னி.
427 முள்வெள்ளரி - கிரிச்சாரி.
428 முன்னை - மேக மர்த்தனி.
429 மூக்குறட்டை - பீனிச மர்த்தனி.
430 மூங்கிலரிசி - தோஷம்போம்.
431 மூங்கில் குருத்து - ரத்தம் போம்; வங்க வட்டை; வங்க பற்பி.
432 மூவிலைக்குருத்து - சூதமணி.
433 மேதை - மகாதோஷம் போம்.
434 மாமேதை - துஷ்டசுரம் போம்.
435 ரத்தமண்டலி - இரும்புருக்கி; பூரங்கட்டி.
436 ருதந்தி - சிலை தைலம்.
837 ரோம விருட்சி - சகல சித்தி.
438 லோத்திரம் - கண்ணுக்கினிது.
439 வெள்ளி லோத்திரம் - துரிசு குரு; துருசு குரு.
440 வஞ்சிக்கு - இடுப்புறுதி.
441 வட்டத் திரிப்பி - பேதிமர்த்தனி.
442 வலம்புரி - குளிதோஷம் போம்.
443 வல்லாரை - உடலந் தேற்றி; காமநாசி.
444 வழுதலை - சிலேட்டும மர்த்தனி.
445 சிறு வழுதலை-சுவாச காசமர்த்தனி
446 வறச்சுண்டி - நீரைக் கட்டும்.
447 வனமிட்டி - சாரங் கட்டும்.
448 வன்மறை - அரிதார வெள்ளை.
449 வன்னி - அயத் தாம்பரி; லவண சிந்தூரி.
450 வாகை - விரண நிக்கம்.
451 கருவாகை - கெந்தி பந்தனம்.
452 வாலுகம் - கடிகள் போகும்.
453 வாழை - பெரும்பாடு போக்கி.
454 வாழைக்கிழங்கு - உழலை போக்கி.
455 ஷை களிள் மூல சலம் - சர்வ வுபரச பந்தனி.
456 விடத்தேற்கு - சூத பற்பி.
457 விட்டுணுகாந்தி - சுரங்கள் போம்.
458 விலாமிச்சம் வேர் - பித்தாரி.
459 வில்வம் - சத்தி மர்த்தனி.
460 விளா - பித்தம் போக்கி.
461 குட்டிவிளா - தாகமடக்கி.
462 விருத்தி - சவுக்கார சுண்ணம்.
463 வெட்டிவேர் - தாபாரி.
464 வெட்புலா - உஷ்ணம் போம்.
465 நீர்ப்புலா - போக மிக்காம்.
466 வெண் கிலுகிலுப்பை - சூதபற்பி.
467 வெள்ள நாகணத்தி - விரோசனி.
468 வெள்ளுள்ளி - வாதம் போக்கி; தேக வலுவி; மூலம் போக்கி.
469 சருள்ளி - வேகம் போக்கி; பித்த நாசி; ரிதளி.
470 வெள்ளைக் காக்கணன் - விரோசனி; தங்கச் சுன்னி.
471 வெள்ளை யாமணக்கு - வாதம் போக்கி.
472 செவ்வாமணக்கு - சாதிலிங்க பந்தினி.
473 வெள்வேல் - விரணம் போக்கி.
474 கருவேல் - பல்லிறுக்கி.
745 வெற்றிலை - நாக நீற்றி; ஜீர்ணகாரி; சூத சுத்தி.
476 வேங்கை - கடி நீக்கம்.
477 வேம்பு - பித்தாரி.
478 பெருவேம்பு - வாதாரி.
479 நிலவேம்பு - சுராரி; சூதக நாசி; வாயுகாரி
480 சர்க்கரை வேம்பு - சுாயசித்தி.

VALLALAR GROUPS

# எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க !!

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

ஜீவகாருணியமே! ஒவ்வொரு மனித சகோதரரும் அவசியம் வேண்டிய திறவுகோல்!!

# உண்மை நெறி

## 1. இந்திரிய ஒழுக்கம்

1. கொடியசொல் செவி புகாது நாதம் முதலிய தோத்திரங்களைக் கேட்டல்
2. அசுத்த பரிசமில்லாது தயாலண்ணமாகப் பரிசித்தல்.
3. குரூரமாகப் பாராதிருத்தல்.
4. உருசி விரும்பா திருத்தல்.
5. சுகந்தம் விரும்பா திருத்தல்.
6. இன்சொல்லாடல்.
7. பொய் சொல்லா திருத்தல்.
8. ஜீவஹிம்சை நேரிடுங் காலத்தில் எவ்வித தந்திரத்தினாலாவது தடை செய்தல்.
9. பெரியோர்கள் எழுந்தருளியிருக்கும் இடங்களுக்குச் செல்லுதல்.
10. ஜீவ உபகார நிமித்தமாய் சாதுக்கள் வாசஸ்தானங்களிலும், திவ்விய திருப்பதிகளிலும் சஞ்சரித்தல்.
11. தன் முயற்சியில் கொடுத்தல் எடுத்தலாதி செய்தல்.
12. மித ஆகாரஞ் செய்தல்.
13. மித போகஞ் செய்தல்.
14. மல ஜல உபாதிகளைக் கிரமமாய் ஒழித்தல்.
15. கால பேதத்தாலும் உஷ்ண ஆபாசத்தாலும் தடைநேர்ந்தால் ஓஷதி வகைகளாலும் பௌதிக மூலங்களாலும், சரபேத அஸ்தபரிச தந்திரத்தாலும் மூலாங்கப் பிரணவத் தியான சங்கற்பத்தாலும் தடை தவிர்த்துக் கொள்ளல்.
16. (மந்த தானுக்கு) சுக்கிலத்தை அக்கிரமாதிக்கிரமத்தில் விடாது நிற்றல்.
17. (தீவிர தானுக்கு) எவ்வகையிலும் சுக்கிலம் வெளிப்படாமை நிறுத்தல்.
18. இடைவிடாது கோசத்தைக் கவசத்தால் மறைத்தல்.
19. இதுபோல் உச்சி, மார்பு முதலிய அங்கங்களையும் மறைத்தல்.
20. சஞ்சரிக்குங் காலத்தில் காலில் கவசம் தரித்தல்.
21. அழுக்காடை உடுத்தா திருத்தல், முதலியன.

## 2. கரண ஒழுக்கம்.

மனதைச் சிற் சபையின் கண்ணே நிறுத்தல்; அதாவது முதலில் புருவ மத்தியில் நிற்கச் செய்தல்.
மனதைத் துர் விஷயத்தைப் பற்றா திருக்கச் செய்தல்.
பிறர் குற்றம் விசாரியா திருத்தல்.
தன்னை மதியா திருத்தல்.
செயற்கைக் குணங்களால் உண்டாகும் கெடுதிகளை நீக்கி இயற்கையாகிய சத்துவ மயமாதல்.
பிறர்மேல் கோபியா திருத்தல்.
தனது சத்துருக்களாகிய தத்துவங்களை அக்கிரமத்திற் செல்லாது கண்டித்தல், முதலியன.

## 3. ஜீவ ஒழுக்கம்

ஆண்மக்கள், பெண்மக்கள் முதலிய யாவர்களிடத்திலும், சாதி, சமயம், மதம், ஆசிரமம், சூத்திரம், கோத்திரம், குலம், சாஸ்திர சம்பந்தம், தேசமார்க்கம், உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்னும் பேதம் நீங்கி எல்லவுருந் தம்மவர்களாய்ச் சமத்திற் கொள்ளுதலாம்.

## 4. ஆன்ம ஒழுக்கம்

…னே முதல் எறும்பு ஈருகத் தோன்றிய சரீரங்களிலுள்ள ஜீவான்மாவே திருச்சபை யாகவும், அதனுள் பரமான்மாவே பதியாகவும் கொண்டு யாதும் நீக்கமற எவ்விடத்தும் பேதமற்று எல்லாந் தானாக நிற்றலாம்.

---

இவ்வாறு நின்றால் 1. ஏமசித்தி, 2. சாகாக்கல்வி, 3. தத்துவ நிக்கிரகஞ் செய்தல், 4. கடவுள் நிலையறிந்து அம்மயமாதல், ஆகிய நான்கு புருஷார்த்தங்களும் கைகூடும்.

---

☞ இத்துடன், இடந் தனித் திருத்தல், இச்சை யின்றி நுகர்தல், ஜெப தபஞ் செய்தல், தெய்வம்பராவல், பிற உயிர்க்கு இரங்கல், பெருங்குணம் பற்றல், பாடிப் பணிதல், பத்தி செய்திருத்தல், முதலிய நற் செய்கைகளில் பலகால் முயன்று முயன்று பழகிப் பழகி இருத்தல் வேண்டும்.

---

குறிப்பு:—திரு அருட்பிரகாச வள்ளலார் தமது மாணவர்களுக்கு "இந் நெறியைப் பெற்று உய்யுங்கள்" என்று உபதேசித் தருளியது பிரசித்தம்.

VALLALAR GROUPS



## ஓம்

அருட்பெருஞ்ஜோதி

பொற்பங் கயத்தின் புதுநறவும் சுத்த சலமும் புகல்கின்ற
வெற்பந் தரமா மதிமதுவும் விளங்கும் பசுவின் தீம்பாலும்
நற்பஞ் சகமும் ஒன்றாகக் கலந்து மரண நவை தீர்க்கும்
கற்பங் கொடுத்தாய் நின்றனக்குக் கைம்மா றேது கொடுப்பேனே.

—திருவருட்பா—6வது திருமுறை—பதிகம் 90, பாட்டு 9

அருட்பெருஞ்ஜோதி

# விண்ணப்பம்

திருச்சிற்றம்பலம்

திருவருட்பிரகாச வள்ளலார் திருவடிகள் வாழ்க

அப்பாநான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்
ஆருயிர்கட் கெல்லாம் நான் அன்புசெயல் வேண்டும்
எப்பாரும் எப்பதமும் எங்கணும் நான்சென்றே
எந்தைநின தருட்புகழை யியம்பியிடல் வேண்டும்
செப்பாத மேல்நிலைமேல் சுத்தசிவ மார்க்கம்
திகழ்ந்தோங்க அருட்ஜோதி செலுத்தியிடல் வேண்டும்
தப்பேது நான்செயினும் நீபொறுத்தல் வேண்டும்
தலைவ! நினைப் பிரியாத நிலைமையும்வேண் டுவனே.

சற்சபைக்குரியார் தம்மொடுங்கூடித் தனித்தபே ரன்பும்மெய் யறிவும்
நற்சபைக்குரிய ஒழுக்கமும் அழியா நல்லமெய் வாழ்க்கையும் பெற்றே
சிற்சபைநடமும் பொற்சபைநடமும் தினந்தொறும் பாடிநின் றாடித்
தெற்சபை யுலகத்து உயிர்க்கெலாம்இன்பம் செய்வதென் இச்சையாம் எந்தாய்.

கருணையே வடிவாய்ப் பிறர்களுக் கடுத்த கடுந்துய ரச்சமாதிகளைத்
தருணம்நின் அருளால்தவிர்த்து அவர்க்கு இன்பம்தரவும் வன்புலை கொலை
ஒருவிய நெறியில் உலகெலாம் நடக்க உஞற்றவும் அம்பலந்தனிலே [இரண்டும்
மருவியபுகழை வழுத்தவும் நின்னை வாழ்த்தவும் இச்சைகாண் எந்தாய்.

தங்கமே யனையார் கூடியஞான சமரச சுத்தசன் மார்க்கச்
சங்கமே கண்டு களிக்கவும் சங்கம்சார் திருக்கோயில் கண்டிடவும்
துங்கமேபெறும் சற்சங்கம் நீடூழி துலங்கவும் சங்கத்தில் அடியேன்
அங்கமே குளிர நின்றனைப்பாடி யாடவும் இச்சைகாண் எந்தாய்.

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

எல்லாம் செயல்கூடும் என்னாணை அம்பலத்தே
எல்லாம் வல்லான்றனையே யேத்து.

அருட்பெருஞ்ஜோதி

## ஓம்

அருட்பெருஞ்ஜோதி

திருவருட் பிரகாச வள்ளலார் திருவடிகள் வாழ்க

# குரு வணக்கம்

'எல்லாம் செயல்கூடும் என்னாணை அம்பலத்தே
எல்லாம் வல்லான்றனையே யேத்து'

என்று எம்மனோர்க்கு எடுத்துக் காட்டிய இன்பப் பெருவாழ்வே! தேவரீர் திருவடிகள் என்றும் வாழ்வதாக!! அல்லாமலும் எல்லாமுடைய அருட்பெருஞ் ஜோதி அற்புதக் கடவுளே இயற்கை உண்மையரெனவும், அவரது திருமாளி கையை யடையுந் திறவுகோல் ஜீவகாருண்யமொன்றே யெனவும் எமக்கறிவித்த எம்பெருமானே !

இது தொடங்கி எக்காலத்தும் சுத்தசன்மார்க்கத்தின் முக்கிய தடை களாகிய சமயங்கள், மதங்கள், மார்க்கங்கள் என்பவற்றின் ஆசார சங்கற்ப விகற்பங்களும்; வருணம் ஆசிரமம் முதலிய உலகாசார சங்கற்ப விகற்பங்களும்; எங்கள் மனத்திற் பற்றுவண்ணம் தேவரீர் திருவருள் பாலித்தருளல் வேண்டும். அத்துடன் சுத்தசன்மார்க்கத்தின் முக்கிய லட்சியமாகிய ஆன்மநேய ஒருமைப் பாட்டுரிமை எங்களுக்குள் எக்காலத்தும், எவ்விடத்தும், எவ்விதத்தும், எவ்வ ளவும் விலகாமல் நிறைந்து ஜீவகாருண்யம் தழைத்து ஓங்கி வளரச் செய்வித் தருளல் வேண்டும்.

அகத்தே கருத்துள்ள எம்மனோரனைவரையும் ஜகத்தே திருத்திச் சன் மார்க்க சங்கத்து அடைவித்து, இகத்தே பரத்தைப்பெற்று மகிழ்விக்கவே இந்த யுகத்தே திருவவதாரஞ்செய்த எமது மெய்த் தந்தையாரே !

தேவரீர் பெருங்கருணை ஆட்சிக்கு வந்தனம்! வந்தனம்!!

கள்ளவா தனையைக் களைந்தருள் நெறியைக் காதலித் தொருமையிற் கலந்தே
உள்ளவா றிந்த உலகெலாம் களிப்புற் றோங்குத லென்றுவந் துறுமோ !
வள்ளலே யதுகண் டடியனே னுள்ளம் மகிழ்தலென் றேவெனத் துயர்ந்தேன்
ஒள்ளியோய் நினது திருவுள மறிந்த துரைப்பதென் னடிக்கடி யுனக்கே.

அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை